வீ. கி. அபஞசியெவ்

# விஞ்ஞானக் கம்யூனிசத்தின் அடிப்படைகள்

கற்பனைவாதப் போக்குகளிலிருந்து
விஞ்ஞானச் சித்தாந்தத்துக்கு

•

மனித குலத்தின் பல நூற்றாண்டுக் காலக்
கனவு நனவு ஆகிறது

•

தேசிய விடுதலைப் புரட்சியும்
சோஷலிசமும்

•

சமுதாயம் தனி மனிதனுக்கு—
தனி மனிதன் சமுதாயத்துக்கு

•

சமத்துவம், சோதரத்துவம், இன்பம்
மற்றும் உலக சமாதானத்திற்காக

வீ. கி. அபனாசியெவ்

# விஞ்ஞானக் கம்யூனிசத்தின் அடிப்படைகள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

NEW CENTURY BOOK HOUSE (P) LTD.
Rs. 5-50
MADRAS-98

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

**В. Г. Афанасьев**

ОСНОВЫ НАУЧНОГО КОММУНИЗМА

*на тамильском языке*

**V. G. Afanasyev**

FUNDAMENTALS OF SCIENTIFIC COMMUNISM

*in Tamil*

© Издательство «Прогресс», 1977
© தமிழ் மொழிபெயர்ப்பு முன்னேற்றப் பதிப்பகம், 1983

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

A $\frac{10504-216}{014(01)-83}$ 688—82 0302030000

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . . . . . . . . . . 5

அத்தியாயம் ஒன்று. வெறும் கற்பனையிலிருந்து விஞ்ஞானத்துக்கு . . . . . . . . . . . . . . 9

அத்தியாயம் இரண்டு. தற்போதைய சகாப்தத்தின் தன்மை. சோஷலிச நாடுகளின் அமைப்பு உலக வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணியாக மாறுதல் . . . . . . . . . . . . . . 54

அத்தியாயம் மூன்று. தற்போதைய முதலாளித்துவமும் புரட்சி இயக்கமும். . . . . . . . . 85

அத்தியாயம் நான்கு. தேசிய விடுதலைப் புரட்சி 119

அத்தியாயம் ஐந்து. உலகப் புரட்சி நிகழ்முறையும் சமாதான சகவாழ்வும் . . . . . . . . 156

அத்தியாயம் ஆறு. சோஷலிசம் கம்யூனிசத்தின் முதல் படி . . . . . . . . . . . . . 174

அத்தியாயம் ஏழு. கம்யூனிசக் கட்டுமானத்தின் விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகம் . . . . . 199

அத்தியாயம் எட்டு. பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் அமைப்பது—கம்யூனிசக் கட்டுமானத்தில் முக்கியமானது . . . . . . . . . . . 224

அத்தியாயம் ஒன்பது. புதிய சமூகத்தின் மனிதன் 255

- 5 MAR 19

## முன்னுரை

உலக மக்கள் அனைவரும் வசதியாக வாழ வகை செய்யக் கூடிய நிலையில் இன்று நம் புவிக்கோள் இருக்கிறது. இயற்கைச் சக்திகள் மீது மனிதனுடைய ஆதிக்கமும், உற்பத்தி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சியும் எட்டியுள்ள தரத்தைப் பார்க்கும் போது, உலகின் எல்லா மனிதர்களுடைய பொருளாயத தேவைகளையும் உளத் தேவைகளையும் நிறைவேற்றுவது சாத்தியம் ஆகி இருக்கிறது.

ஆனால் நடப்பில் நாம் காண்பது என்ன? வயது வந்த உலக மக்களில் அனேகமாகப் பாதிப் பெயர் எழுதப் படிக்க அறியாதிருப்பது ஏன்? சோஷலிஸ்டு அல்லாத உலகின் பத்தில் ஒன்பது பெயர் வயிறுர உண்ண வகை அற்றிருப்பது ஏன்? விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அற்பச் சிறுபான்மையின் நலன்களுக்காக மனித குலத்தின் குருதி பொருளற்ற போர்களில் ஆறுகளாகப் பெருக்கப்பட்டு வந்ததற்கும் இன்னமும் அவ்வப்போது பெருக்கப்பட்டு வருவதற்கும் பொறுப்பாளி யார்? யாருடைய குற்றத்தால் அணுக்கரு வெடிப்பின் மிகக் கொடிய கார்மேகம் உலகின் மேல் கவிந்திருக்கிறது, அதன் நிழல் மனிதர்களின் முகங்களை ஏக்கம் கொள்ளச் செய்கிறது? படுகோரமான வெப்ப அணுக்கரு யுத்தத்துக்கு ஆயத்தங்கள் செய்வதில் பேரளவான செல்வ வளங்கள் செல விடப்படுவதற்குப் பொறுப்பாளி யார்? இயற்கையின் சிறந்த ராடைப்பாக விளங்கி, மிக மிகப் பல்வகையான படைப்புத் திறன்களை இயல்பாக நிறையப் பெற்றுள்ள **மனிதன்,** உலகின் கணிசமான பகுதியில் இந்தத் திறன்களைச் செயல் படுத்துவதற்கான வாய்ப்பை இழந்திருப்பது மட்டும் இல்லா

மல் சுரண்டலாலும் சமுதாய அநீதியாலும் நசுக்கப்பட்டு, பட்டினியாலும் நோய்களாலும் நொந்து, வேலையின்மை, வறுமை, விலைவாசி ஏற்றம் ஆகியவற்றின் இடுக்கிகளில் அகப் பட்டுத் திணறுவதற்குப் பொறுப்பாளி யார்? தங்கள் நாகரி கத்தைப் பெருமையுடன் பறைசாற்றும் அனேக நாடுகளில் தோலின் கரு நிறம் மனிதனது மதிப்புக் குறைவுக்கு அடை யாளமாகக் கருதப்படுவதற்கு யார் பொறுப்பாளி? மனித குலத்தின் பெரும் பகுதியின் மீது வெட்கக் கேடான காலனி யாட்சி நுகம் பூட்டப்பட்டிருந்ததற்குப் பொறுப்பாளி யார்? இதன் விளைவுகள் பதிற்றுக் கணக்கான நாடுகளின் மக் களுடைய வாழ்க்கையை இன்றளவும் துயர் நிறைந்ததாகச் செய்து வருகின்றனவே.

இவற்றுக்கு எல்லாம் பொறுப்பாளி முதலாளித்துவம். ஏழ்மைக்கும் செல்வத்துக்கும் இடையே ஏற்றத்தாழ்வை அது கடைசி எல்லைவரை கொண்டு சென்றிருக்கிறது, யுத்தத் தையும், காலனியாட்சி வழிப்பறியையும் இனவெறியையும் அரசாங்கக் கொள்கையின் தரத்துக்கு உயர்த்தி இருக்கிறது, அளவிட முடியாத பொருள், உழைப்பு வளங்களை ஒரு சில ஏகபோக உரிமையாளர்களின் நலன்களுக்காகப் பயனின்றிச் செலவிட்டு வருகிறது, உழைப்பாளியை இழிவுபடுத்தி இருக் கிறது, புத்தம் புதிய விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை உழைப்பாளிக்குத் தீங்கு விளைக்கும் வகையில் அடிக்கடி கையாண்டு வருகிறது.

மனித சமுதாயத்தின் வசம் உள்ள பெரு வளங்களை யும் உற்பத்தித் திறன்களையும் நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப சிறந்த சாதனைகளையும் உழைப்பாளிகளின் நலன்களுக் காகப் பயன்படுத்துவதற்குக் குறிப்பிட்ட சமூக நிலைமை கள் இன்றியமையாதவை ஆகும். சுரண்டுவோர் நிலவும் அமைப்பை ஒழிப்பதும் உலகில் புதிய சமூகத்தை நிலைநாட்டு வதும் அவசியம். இன்பமும் விடுதலையும் மெய்யான மனிதத் தன்மையும் உள்ள வாழ்க்கையை எல்லா மனிதர்களும் வாழ் வதற்கு வகை செய்வதே இந்தச் சமூகத்தின் தலையான ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும்.

இந்தப் புதிய சமூகமாக விளங்குகிறது கம்யூனிசம். அதைப் பற்றியும் அதன் உருவாக்கத்தையும் வளர்ச்சியை

யும் பற்றியும் முழுமையான விளக்கம் தரும் விஞ்ஞானம் விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தம் எனப்படுகிறது.

விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தம் என்பது முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கான வழிகளையும் சாதனங்களையும் பற்றியும், புதிய கம்யூனிச சமூகத்தை நிறுவுவதற்கான விதிகளைப் பற்றியும், மனிதனுடைய சர்வாம்ச வளர்ச்சிக்கு வேண்டிய பொருளாதார, சமுதாய, உள நிலைமைகளைப் பற்றியும் விவரிக்கும் விஞ்ஞானம் ஆகும்; சிக்கலான சமுதாய உறுப்பமைவு என்ற வகையில் கம்யூனிச சமூகத்தைப் பற்றிய விஞ்ஞானம் ஆகும்; சமூக நிகழ்முறைகளை அறிவார்ந்த, நோக்கப் பொருத்தமுள்ள விதத்தில் மனிதர்களின் நலன்களுக்காகச் செலுத்துவதைப் பற்றிய விஞ்ஞானம் ஆகும்.

*உழைப்பாளி மனிதனின் நலமே சமூக வளர்ச்சியின் குறிக்கோளாக விளங்கும் ஒரே சமூகம் கம்யூனிச சமூகம். மனிதனது ஒருங்கிசைந்த சர்வாம்ச வளர்ச்சியும் அவனுடைய எல்லா வாழ்க்கைச் செயல்களதும் ஆக முழுமையான சுதந்திர வெளிப்பாடும் எந்த (பொருளாதார, சமுதாய, அரசியல்) நிலைமைகளில் மட்டுமே சாத்தியமோ, அவற்றை விளக்கிக் காட்டுகிறது விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தம்.*

*ஆனாலும் மனிதனின் மலர்ச்சிக்கான நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு முன்னால் பழைய சமுதாய அமைப்பை—முதலாளித்துவத்தை—அகற்றுவது அவசியம். முதலாளித்துவத்தின் அழிவு, அதற்கு இயல்பான புறநிலை விதிகளதும் அதன் உள் முரண்பாடுகளதும் செயல்பாட்டின் விளைவு என்ற முறையில் வரலாற்றுப் போக்கில் தவிர்க்க முடியாதது என்று விஞ்ஞானக் கம்யூனிசம் காட்டுகிறது. முதலாளித்துவத்திற்குக் குழி பறித்து அதைக் கவிழ்த்தும் புரட்சிச் சக்திகளை அது வெளிப்படுத்துகிறது. சோஷலிசப் புரட்சி ஒன்றுதான் பழைய முதலாளித்துவ அமைப்பை ஒழிக்க வல்லது என்று அது அறிவுறுத்துகிறது.*

*விஞ்ஞானக் கம்யூனிசத்தின் இன்னொரு முக்கியமான பணியாவது, கம்யூனிச சமூகம் உரு ஆவதற்கு வேண்டிய விதிகளை ஆராய்வதும், சிக்கலான சமுதாய உறுப்பமைவு என்ற நோக்கில் இந்த சமூகத்தையே ஆராய்வதும் ஆகும். புறநிலை விதிகளின் செயல்பாடு காரணமாகவே சமூகம் வளர்ச்சி அடைகிறது. ஆனால் முடிவாகப் பார்க்கும் போது,*

சட்டங்களைப் பயன் விளையும் விதத்தில் கையாள்வது மனிதர்களையே, சமுதாய நிகழ்ச்சிகளின் உட்பொருளை ஆழ்ந்து அறிய அவர்களுக்கு உள்ள திறனையும், அவர்களுடைய குறிக்கோள் முனைப்பையும், ஒழுங்கமைப்பையுமே சார்ந்திருக்கிறது. இவ்வாறு, சமூகத்தின் வளர்ச்சி சிக்கலான வலைப் பின்னலாக, புறநிலை விதிகளதும் அகநிலைக் காரணியினதும் பரஸ்பரப் பாதிப்பாகக் காட்சி அளிக்கிறது.

உழைப்பாளி வெகுஜனங்கள் புறநிலை விதிகளை அறிந்து அவற்றின் செயல்பாட்டுக்கான பொறி அமைப்பைத் தெரிந்து கொண்டால், விதிகளை மனிதனுடைய நலன்களுக்குக் கூடிய வரை அதிகப் பயன்தரும் முறையில் கையாளுவதை நோக்கமாகக் கொண்டு மனிதர்களின் ஒழுங்கமைப்பு இயங்கினுல், சமூக வளர்ச்சிக்குரிய புற நிலைமைகளதும் அகநிலைக் காரணியினதும் ஒருமை சாத்தியம் ஆகும்.

இந்தக் காரணத்தால் ஏற்படுகிறது விஞ்ஞானக் கம்யூனிசத்தின் இன்னெரு முக்கியப் பணி. அதாவது, மனிதர்களுடைய அகநிலைச் செயல்பாட்டையும் புறநிலை விதிகளின் தேவைகளையும் ஒத்திசைவிப்பதற்கான வழிகளையும் சாதனங்களையும் தீர்மானிப்பது. சமூகத்தின் இயக்கத்தை இந்தப் போக்குகளுக்கு இணங்கச் செலுத்தவும் முறைப்படுத்தவும் விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தம் மனிதர்களுக்கு உதவுகிறது, ஏதேனும் ஒரு குறிக்கோளை அடைவதற்கான வழியில் உள்ள தடைகளை வெளிப்படுத்துகிறது, இந்தத் தடைகளை நீக்குவதற்கு உதவுகிறது. வேறு சொற்களில் கூறினுல், அறிவார்ந்த, குறிக்கோள் முனைப்புள்ள தலைமைக்கு, சமூக நிர்வாகத்துக்கு, கம்யூனிசக் கட்டுமான நிர்வாகத்துக்கு உரியநிகழ்முறையை விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தம் ஆராய்கிறது.

மொத்தத்தில் மார்க்சிய-லெனினியம் போலவே விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தமும் வெற்றிடத்தில் தோன்றிவிடவில்லை. மனித குலத்தின் சிறந்த அறிவாளிகளால் பல நூற்றுண்டுகளாகப் பேணி வளர்க்கப்பட்ட சென்றகாலக் கம்யூனிசக் கருத்துக்களை அது மரபுரிமையாகப் பெற்றிருக்கிறது. எனவே, கடந்த காலக் கம்யூனிசச் சிந்தனையின் வரலாற்றைச் சுருக்கமாகவாவது பார்வையிடுவது, வெறும் கற்பனையிலிருந்து விஞ்ஞானமாக அது வளர்ந்த வழியை ஆராய்வது இன்றியமையாதது ஆகும்.

- 5 MAR 1985
MADRAS

## அத்தியாயம் ஒன்று

# வெறும் கற்பனையிலிருந்து விஞ்ஞானத்துக்கு*

### 1. கற்பனை சோஷலிசமும் வரலாற்றில் அதன் இடமும்

16ம்-18ம் நூற்றுண்டுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் நிலப்பிரபுத்துவத்தின் இடத்திற்கு வந்தது முதலாளித்துவம். விளைவாக உற்பத்தியும், தொழில்நுட்பமும் இயற்கை இயல் அறிவும் விரைவான பெரு வளர்ச்சி அடைந்தன. சிறு கைத்தொழில் பட்டறைகளின் இடத்தில் தோன்றின ஆலைகளும் தொழிற்சாலைகளும் கனிகளும் சுரங்கங்களும். மனிதத் தசைகள், நீர், காற்று ஆகியவற்றின் சக்தி நீராவியின் பெரு விறலுக்கும் பிறகு மின் ஆற்றலுக்கும் இடத்தை விட்டுக் கொடுத்து விலகிக் கொண்டது. ஆனாலும் உழைப்பாளியின் நிலைமையை முதலாளித்துவம் எளிதாக்கவில்லை. சுரண்டலானது அடிமைச் சொந்தக்கார அமைப்பிலும் நிலப்பிரபுத்துவ அமைப்பிலும் இருந்த அதே அளவு கொடியதாகவும் மனிதத்தன்மை அற்றதாகவும் இருந்தது. விளைவாக வெகுஜனங்களின் அதிருப்தி வளர்ந்து கொண்டு போயிற்று, வர்க்கப் போராட்டம் மேலும் மேலும் தீவிரம் ஆயிற்று. இந்தச் சமுதாய மாற்றங்கள் சமூகத்தின் உளவாழ்வைப் பாதிக்காமல் இருக்க முடியவில்லை. நடப்பில் இருந்த சமூக அமைப்பு முறைகளுக்குத் திரளான வெகுஜனங்களின் எதிர்ப்பு சோஷலிச போதனைகளில் வெளியிடப்பட்டு வந்தது. இவற்றின் மையக் கருத்தாக இருந்தது மனி

---

* ஐரோப்பிய மொழிகளில் இந்தப் பொருளைக் குறிக்க வழங்கும் *Utopia* (உடோபியா) என்பது, இல்லாத என்று பொருள்படும் ''உ'', இடம் என்று பொருள்படும் ''டோபோஸ்'' என்ற கிரேக்கச் சொற்களின் அடியாக உருவாயிற்று. இல்லாத இடம் என்பது இதன் நேரான அர்த்தம்.

தாபிமானக் கருத்து—மனிதன் மீது மரியாதையும் கவனிப்பும் காட்டப்பட வேண்டும் என்ற கருத்து.

ஐரோப்பாவில் முதலாவது கற்பனை சோஷலிஸ்டுகளில் ஒருவராக விளங்கியவர் ஆங்கில அரசதந்திரியும் சிந்தனையாளரும் ஆன தாமஸ் மோர் (1478-1535).

முதலாளித்துவம் உருவாகி வந்த மிக மிகத் தொடக்கக் காலத்திலேயே அதன் சுரண்டல் தன்மையைத் தெளிவாகக் காணத் தாமஸ் மோருக்கு முடிந்தது. உழைப்பாளி மக்களுக்கு உண்மையில் மனிதத்தன்மை வாய்ந்த வாழ்க்கைக்கு வகை செய்ய முதலாளித்துவ சமூகம் திறனற்றது என்பதையும், தங்களுடைய சொந்த லாபங்களை மட்டுமே தற்காத்துக் கொள்ளும் பணக்காரர்களின் சதியே முதலாளித்துவம் என்றும் அவர் கண்டு கொண்டார்.

தனியார் சொத்துரிமை நிலவும் வரை, பெரும்பாலோரின் உழைப்பால் படைக்கப்படும் செல்வம் ஒரு சிலரின் கைகளில் சேரும் வரை, மனிதர்களின் சமத்துவமும் இன்பமும் அவர்களுடைய உடல், அறிவுப் பண்புகளின் வளர்ச்சியும், அதே போல சமுதாய நீதியும் சமூக விவகாரங்களின் அறிவுக்கு உகந்த நிர்வாகமும் அசாத்தியம் என்ற முடிவுக்குத் தமது உடோபியா என்ற நூலில் வந்தார் தாமஸ் மோர். அவர் ஆற்றிய பெருந் தொண்டு இது.

தனியார் சொத்துரிமையை ஒழிக்கும் கருத்தை முன் வைத்த தாமஸ் மோர், ஜனநாயக முறையில் நிர்வகிக்கப்பட்ட, ஒழுங்கமைந்த ஒரே சமூகத்தின் சித்திரத்தைத் தீட்டினார். தன் உறுப்பினர்கள் எல்லோருடையவும் கூட்டுச் சொத்துரிமையையும் கூட்டு உழைப்பையும் இந்த சமூகம் அடிப்படையாகக் கொண்டிருந்தது என்று அவர் வருணித்தார்.

யாரும் அறியாத உடோபியா என்ற தீவில் இந்த சமூகம் அமைந்திருந்ததாகக் கற்பனை செய்தார் தாமஸ் மோர். அதில் மனிதர்கள் பணத்தின் ஆதிக்கத்தை அறிந்திருக்கவில்லை, பணக்காரர்களின் ஒடுக்கு முறையை அனுபவிக்கவில்லை. அவர்கள் எல்லோரும் சேர்ந்து உழைக்கிறார்கள், உடல் உழைப்பிலும் அறிவு உழைப்பிலும் ஒரே மாதிரி ஈடுபடுகிறார்கள். சோம்பேறிகளை அவர்கள் பொறுப்பதில்லை. தங்கள் உழைப்பின் பயன்களை அவர்கள் சமூகப் பண்டசாலைகளில் சேர்த்து விடுகிறார்கள், தங்களுக்கு வேண்டியவற்றை

எல்லாம் அதிலிருந்து இலவசமாகப் பெறுகிருர்கள். தேவைக்கு ஏற்ற வினியோகம் என்ற கம்யூனிசக் கோட்பாட்டின் புரிவைத் தாமஸ் மோர் நெருங்கிஞர். ஆனல் தேவையை பெரிதும் அளவறுத்ததாக, மிக மிக இன்றியமையாததாக மட்டுமே அவர் விளக்குகிருர்.

இத்தாலியில் நடந்த மக்கள் விடுதலை இயக்கத்தின் பிரபலத் தலைவர்களில் ஒருவரும் இத்தாலியக் கற்பனைவாதி யுமான தொம்மாஸோ கம்பனேல்லா *(1568-1639)* வருங் கால சமூகத்திற்கு சூரிய நகரம் என்று பெயரிட்டார். தாமஸ் மோரின் உடோபியா தீவினர் போலவே சூரிய நகர வாசிகளும் சுரண்டலையும் பணத்தின் ஆதிக்கத்தையும் அறியார். சமூக முன்னேற்ற நோக்கங்களின் பொருட்டு சமூக விவகாரங்களை அறிவுக்கு உகந்த முறையில் நிர்வகிப்பதற்கு விஞ்ஞானத்தைப் பயன்படுத்தக் கம்பனேல்லா செய்யும் முயற்சி பெரிதும் மதிப்புள்ளது. அவரது கற்பனை நகரின் தலைமை ஆளுநர் அறிவியல்களில் விரிவான தேர்ச்சியும் வளமான நடைமுறை அனுபவமும் பெற்ற விஞ்ஞானியாகச் சித்திரிக்கப்படுவது தற்செயல் அல்ல.

தனியார் சொத்துரிமையும் சுரண்டலும் இல்லாமல் சமூகத்தை ஒழுங்கமைக்கும் முறையை முதன் முதலில் வகுத்த தாமஸ் மோர், தொம்மாஸோ கம்பனேல்லா இருவரதும் கருத்துக்கள் நிலப்பிரபுத்துவக் கொள்கைவாதத்தை விமர்சிப்பதில் மகத்தான பங்கு ஆற்றியதோடு சோஷலிசச் சிந்தனையின் அடுத்து வந்த வளர்ச்சி மீது குறிப்பிடத் தக்க பாதிப்பு ஏற்படுத்தின.

### 18ம் நூற்றுண்டின் கற்பனைவாதிகள்

பிரான்சில் கற்பனை சோஷலிசத்தின் புரட்சிகரமான திருப்பத்துக்கு அடிகோலியவர் ழான் மெலியே *(1664-1729)*. அனேகமாகத் தம் வாழ்நாள் முழுவதையும் ழான் மெலியே நாட்டுப்புறத்தில் கழித்தார். விவசாயிகளின் மிகக் கொடிய வறுமையையும் துன்பங்களையும் நிலப்பிரபுக்களுக்காக அவர்கள் செய்து வந்த கடுமையான அடிமை உழைப்பையும் அங்கே அவர் கண்ணுரக் கண்டார். **மரண** சாசனம் என்ற தலைப்புள்ள பெரிய கையெழுத்துப் பிரதியை அவர் விட்டுச் சென்ருர். அவரது மரணத்துக்குப் பல ஆண்டுகள் பின்னரே அது

வெளியிடப்பட்டது. நிலப்பிரபுத்துவச் சுரண்டலும் முடியரசு முறைகளும் சர்ச்சும் இந்த நூலில் இரக்கமின்றிக் கண்டனம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒடுக்குவோர் தங்கள் சலுகைகளையும் நலங்களையும் தாமாக விரும்பி விட்டுவிட மாட்டார்கள் என்பதை மூான் மெலியே நன்முக அறிந்திருந்தார். ஆகையால்தான், நிலவும் அமைப்பு முறைகளைப் புரட்சியின் மூலம் ஒழித்துத் தீர்க்கும் படி மக்களை அறைகூவி அழைத்தார். ஆனால் வருங்கால சமூகத்தை ஒழுங்கமைப்பதற்காக ஓரளவாவது வகுக்கப்பட்ட திட்டம் எதையும் மூான் மெலியே தரவில்லை.

கம்யூனிசக் கருத்துக்களை முறையாக வகுப்பதில் கணிசமான முன்னேற்றம் கண்டவர் பிரெஞ்சுச் சிந்தனையாளரான **காபிரியேல் மாபிலி** *(1709-1785)* ஆவார். ஒவ்வொரு குடிமகனுக்கும் ''அதிகத்திலும் அதிகமான மகிழ்ச்சிகளும் இன்பங்களும்'' கிடைக்க வகை செய்யும் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை அவர் பரப்பினார். இந்த சமூகம் தனியார் சொத்துரிமையை ஒழிப்பதன் மூலமே பெறப்பட முடியும் என்றார் அவர். உடைமைகள் பங்கிடப்பட்டது ஆகப் பெரிய தீங்கு, ஏனெனில் அது மனிதர்களைச் சீர்கெடுத்து ஆதாயம் பெறும் பேராசையைத் தூண்டிவிட்டது என்று காபிரியேல் மாபிலி கருதினார். ஒடுக்கப்பட்டவர்களுக்குப் புரட்சி செய்யும் உரிமை உண்டு என்று ஒப்புக்கொண்ட அதே சமயத்தில், தனியார் சொத்துரிமையால் விளைந்த இழிவான பழக்கங்களிலிருந்து மனிதனை மீட்பதற்கு எல்லாவற்றிலும் ஏற்ற வழி ஜனநாயகக் குடியரசால் செயல்படுத்தப்படும் சீர்திருத்தங்களே என்று காபிரியேல் மாபிலி எண்ணினார். மாபிலியின் கருத்துப்படி இந்தக் குடியரசு இணைக்கும் கணு, தனியார் சொத்துரிமையும் சுரண்டலும் நிலவும் சமூகத்திலிருந்து கம்யூனிச சமூகத்துக்கு மாறுவதற்கான கட்டம்.

காபிரியேல் மாபிலியிலிருந்து தொடங்கி, ''புதிய சமூகத்தை எப்படி அடைவது—புரட்சிப் பாதை மூலமா அல்லது சீர்திருத்தப் பாதை மூலமா?'' என்ற கேள்வி மனித குலத்தின் சமுதாய வரலாற்றுச் சிந்தனைக்கு முன் எழுந்தது.

அஞ்சாதவர்களும், மக்களுக்குத் தங்களை அர்ப்பணித்துள்ளவர்களும் சுரண்டலையும் செல்வத்தையும் நெஞ்சார

வெறுப்பவர்களுமான சதியாலோசனைக்காரர்களின் குழுவால் செயல்படுத்தப்படும் புரட்சி, நிலவும் அமைப்பு வன்முறையால் ஒழிக்கப்படுவது என்ற திட்டவட்டமான பதிலை, கம்யூனிசத்தை அடையும் வழிகள் பற்றிய கேள்விக்கு அளித்தார்கள் பிரெஞ்சுப் புரட்சியாளர் கிராஹ் பபேவும் (1760-1797) பபேவியர்கள் என்று வழக்கமாக அழைக்கப்படும் அவருடைய தரப்பாளர்களும்.

நாடு முழுவதற்கும் பொதுவான கம்யூனின், ''சமமானவர்கள் குடியரசின்'' பொருட்டு விவசாயிகள் நடத்திய புரட்சி இயக்கத்துக்குத் தலைவராக இருந்தார் கிராஹ் பபேவ். எழுச்சி நடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் கருத்துக்கு வாழ்க்கையே பபேவியர்களைத் தூண்டி விட்டது. மாபெரும் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியை (1789-1793) அவர்கள் நேரில் கண்டு அதில் பங்காற்றி இருந்தார்கள். இந்தப் புரட்சி சுரண்டலை ஒழிக்கவில்லை, அதன் வடிவங்களை மாற்ற மட்டுமே செய்திருந்தது என்பதை மிக விரைவில் அவர்கள் புரிந்து கொண்டார்கள். முதலாளித்துவப் புரட்சியின் இடத்தில் புதிய, மக்கள் புரட்சி வர வேண்டும் என்று வலியுறுத்தினார்கள் பபேவியர்கள். இந்தப் புரட்சியின் விளைவாக மக்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள், புரட்சி சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவார்கள், ''சமமானவர்கள் சமூகத்தை'' அமைப்பார்கள். இந்த சமூகத்தில் பணக்காரர்களோ ஏழைகளோ இருக்க மாட்டார்கள், யாரும் சொத்தைத் தனதாக்கிக் கொள்ள மாட்டார்கள், ஒவ்வொருவரும் தங்கள் திறமைகளுக்கு ஏற்பப் பொது நன்மைக்காக உழைப்பார்—இவ்வாறு கூறினார்கள் பபேவியர்கள்.

பபேவியர்களின் சிந்தனைக்கு இணங்க, கம்யூனிசம் என்பது உயர்ந்த ஒழுங்கமைப்பும் மையப்பாடும் கொண்ட சமூகம். நாடு பரவிய அளவுகளில் ஒன்றிணைந்த கூட்டுச் சொத்துரிமையை அது அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

### 19ம் நூற்றாண்டின் கற்பனை சோஷலிஸ்டுகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலாளித்துவம் உழைப்பாளி மக்களுக்குப் பயங்கரமான ஏழ்மையையும் தொழிற்சாலைக் கடுங்காவல் சிறையில் சக்திக்கு மீறிய வேலையையும் விதித்தது. அதே சமயம், பாட்

டாளி வர்க்கத்தையும் அது தோற்றுவித்தது. நாளடைவில் இது முதலாளித்துவ சமூகத்தின் ஆகப் பெருந்தொகையான வர்கள் அடங்கிய வர்க்கம் ஆகி விட்டது. முதலாளித்துவ அமைப்பு முறைகளை மறுத்து முதலில் தன்னுணர்வின்றிக் கிளம்பிய எதிர்ப்பு உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையே வர்க்கப் போராட்டம் தீவிரம் ஆகும் நிலைக்கு இட்டு வந்தது. இந்தப் போராட்டம் வரலாற்று முன்னேற்றத் தின் மிக முக்கியத் தலையூற்றும் உள்ளடக்கமும் ஆகிவிட்டது.

முதலாளி வர்க்கத்துடன் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தையும் முதலாளித்துவக் கூலி அடிமைத்தனத் துக்கு அதன் தன்னுணர்வற்ற எதிர்ப்பையும் பிரதிபலித்தன 19ம் நூற்றாண்டின் சோஷலிஸ்டுகளான அன்ரீ சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே, ராபர்ட் ஓவன் ஆகியோரின் போதனைகள்.

**அன்ரீ குளோட் சான்-சிமோன் த ருவ்ருவா** (1760-1825) பிரெஞ்சு உயர் குடியில் பிறந்தார். ஆனால், ஒடுக்கப் பட்டவர்களின் ஆவேசம் பொங்கும் காவலராகச் செயல் படுவதிலிருந்து அவரை இந்த விஷயம் தடுக்கவில்லை. சான்-சிமோன் மனிதனையும் அவனுடைய தேவைகளையும் திறமை களையுமே வருங்கால சோஷலிச சமூகத்தின் மையமாக மதித் தார். பெரும்பாலான மனிதர்களுக்கு அதிகத்திலும் அதிக மான இன்ப வாழ்க்கைக்கு வகை செய்வதும், தங்கள் தேவை களின் நிறைவேற்றத்துக்கும் தங்கள் எல்லாத் திறமைகள தும் வளர்ச்சிக்கும் அதிகபட்ச வாய்ப்புக்களை அவர்களுக்கு அளிப்பதுமான சமூக அமைப்பே சாலச் சிறந்தது என்று அவர் கருதினார்.

வருங்கால சோஷலிச சமூகத்தைச் சுதந்திரமான சங்க மாக சான்-சிமோன் கற்பனை செய்தார். இயற்கையின் மீது கூட்டாக, உணர்வு பூர்வமாகப் பாதிப்பு நிகழ்த்துவதற்காக வும் எல்லோருடைய நல்வாழ்வுக்கும் வளப் பெருக்கத்துக் கும் வகை செய்வதற்காகவும் மனிதர்கள் இந்தச் சங்கத்தில் சேர்ந்தார்கள். இந்த சமூகத்தில் ஒவ்வொருவனும் திற மைக்கு ஏற்ப வேலை செய்து உழைப்புக்கு ஏற்ப ஊதியம் பெற்றான். சுரண்டலோ, பெரும்பாலோர் மீது சிறுபான்மை யினரின் ஆதிக்கமோ இங்கே இல்லை. மனிதர்கள் மேல் நிர் வாகம் நடத்துவதற்கான செயல்கள் சமூகத்தின் எல்லா வேலை களையும் நிர்வகிப்பதற்கான செயல்களாக மாறி விட்டன.

வருங்கால சமூகம் பற்றிய மேதை வாய்ந்த பல அனுமானங்கள் செய்த போதிலும் சமூக வளர்ச்சியின் பொருளியல் அடிப்படைகளை சான்-சிமோன் காணவில்லை. ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்கும் இடையே அமைதியான ஒத்துழைப்பு என்ற கருத்தை அவர் பரப்பினார். மக்களால் தமக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஆட்சி அதிகாரத்தை இன்றியமையாத அரசியல் மாற்றங்கள் செய்வதற்குப் பயன்படுத்துமாறு அரசர்களைத் ''தூண்ட'' அவர் முயன்றார். சான்-சிமோன் வர்க்கப் போராட்டத்திற்கு அஞ்சினார், புரட்சியை மறுத்தார். எல்லா மனிதர்களுக்கும் இடையே சோதரத்துவம் என்ற கருத்தின் பிரசாரத்தையும் மேலிருந்து செயலாக்கப்படும் சீர்திருத்தங்களின் மந்திர சக்தியையும் அவர் முதன்மையாக நம்பி இருந்தார்.

இன்னொரு பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கற்பனைவாதி **பிரான்சுவா மரீ ஷார்ல் ஃபூரியே** (1772-1837) ஆவார். பணக்காரராய் இருந்து நொடித்துப்போன வர்த்தகரின் புதல்வரான இவரது யாவற்றிலும் வன்மை மிக்க அம்சம் முதலாளித்துவ அமைப்பின் விமர்சனம் ஆகும். முதலாளித்துவ அமைப்பினதும், ''பணத் தெய்வத்துக்கு'' விலைப்பட்டு இந்த அமைப்பைத் தாங்கிப் பேசி இதற்கு நகாசு செய்பவர்களதும் பாசாங்கையும் பொய்மையையும் படு குத்தலாக எள்ளி நகையாடுகிறார் ஃபூரியே. ஏழைகளைச் சூறையாடுவதும் செல்வர்களை மேலும் பணக்காரர்கள் ஆக்குவதும் மட்டுமே செய்துவரும் முதலாளித்துவ சமூகத்தின் பொருளாதார, அரசாங்கப் பொறி அமைப்பை அவர் அம்பலப்படுத்துகிறார்.

சமுதாய முரண்பாடுகள் கூர்மை ஆவதன் விளைவாக மக்கள் புரட்சி நிகழக் கூடும் என்பதையும், அது முதலாளித்துவத்தைத் துடைத்து ஒழித்து விடும் என்பதையும் ஃபூரியே நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார். ஆனால் புரட்சியிடமும் வெகுஜனங்களின் சுதந்திரமான அரசியல் போராட்டத்தினிடமும் அவர் அச்சம் கொண்டிருந்தபடியால் ''சமுதாய ஒருங்கிசைவு'' ஆதிக்கம் செலுத்தும் புதிய அமைப்பை நிலைநாட்டுவதற்கான சமாதானப் பாதையை வகுத்தார். ஒருங்கிசைந்த சமூகம் பலாங்குகள் என்று தம்மால் பெயரிடப்பட்ட உற்பத்திச் சங்கங்களாகப் பாகுபட்டிருக்கும் என்று

ஃபூரியே கற்பனை செய்தார். 1600-1700 பெயர் கொண்ட பலாங்கு உறுப்பினர்கள் பலான்ஸ்தெர் எனப்பட்ட ஒரு பிரமாண்டமான மாளிகையில் வசித்தார்கள். அவர்கள் அங்கேயே வேலை செய்தார்கள், சாப்பிட்டார்கள், ஓய்வு கொண்டார்கள். அவர்கள் முதன்மையாக விவசாயத்தில் ஈடுபட்டார்கள், கணிசமாகக் குறைந்த அளவே தொழில் துறையில், பெரும்பாலும் குடிசைத் தொழிலில் உழைத்தார்கள். பலாங்கு உறுப்பினர் தம் திறமைகளுக்கு ஏற்ப வேலையைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். தம் செயலை விருப்பம் போல மாற்றிக் கொள்ள அவருக்கு வாய்ப்பு இருந்தது. அவருடைய ஒருங்கிசைந்த வளர்ச்சி இதனால் பெறப்பட்டது.

இருந்தாலும், புதிய சமூகத்தையும் அதை அடைவதற்கான வழியையும் பற்றிய ஃபூரியேயின் எண்ணங்கள் கற்பனைவாதத்தின் வரம்புகளுக்கு வெளியே போகவில்லை. உடைமையாளர்கள், உடைமை அற்றவர்கள் ஆகிய இரு வகையினருடைய நலன்களின் ஒருங்கிசைவு குறித்த ஃபூரியேயின் எண்ணம் கற்பனைவாதப் போக்கு கொண்டிருந்தது. பலாங்குகளில் தனியார் சொத்தும் அதன் உரிமையாளர்களான முதலாளிகளும் இருப்பதை அவர் அனுமதித்தார். பலாங்கு உறுப்பினர்களுடைய உழைப்பின் உற்பத்திப் பொருள்கள் உழைப்புக்கும் திறமைக்கும் மட்டும் இன்றி மூலதனத்துக்கும் ஏற்பப் பகிர்ந்து கொள்ளப்படும் என்று அவர் கருதினர். வர்க்கங்களின் ஒருங்கிசைவையும் மூலதனம், உழைப்பு, திறமை ஆகியவற்றின் நெருங்கிய ஒன்றிப்பையும் பெறுவது இம்மாதிரிப் பங்கீட்டின் மூலமே சாத்தியம் ஆகும் என்றார். தனியார் சொத்துரிமையையும் பணக்காரர்களாகவும் ஏழைகளாகவும் சமூகம் பாகுபட்டிருப்பதையும் ஃபூரியே ரத்து செய்யவில்லை என்பது இதனால் புலப்படுகிறது. புதிய சமூகத்தை அடைவதற்கான வழிகள் பற்றிய ஃபூரியேயின் எண்ணங்களும் கற்பனைத் தன்மை உள்ளவை. சோஷலிசக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதன் மூலம், முதலாளித்துவ சமூகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சீர்திருத்தி மாற்றுவதன் மூலம் இதை அடைவது சாத்தியம் என்று அவர் கருதினர்.

ஆங்கிலக் கற்பனைவாதி ராபர்ட் ஓவன் (1771-1858) தொழிலாளி வர்க்க இயக்கத்தில் செயல்முறைப் பங்கு ஆற்றிய முதலாவது சோஷலிஸ்டு கற்பனைவாதி. தம் நாட்டுத் தொழிலாளர்களின் பிரபல போதகராக அவர் திகழ்ந்தார்.

நியூலஞர்க்கில் பெரிய நெசவுத் தொழிற்சாலையின் நிர்வாகியாக வேலை செய்து வந்த போதே தொழிலாளர்களின் பொருளியல் அன்ருட வாழ்க்கை நிலைமைகளை ஓவன் மேம்படுத்திஞர். இங்கிலாந்தில் அப்போது வழக்கில் இருந்த 13-14 மணி நேரத்துக்குப் பதில் 10.5 மணி நேரமாக வேலை நாளைக் குறுக்கிஞர், உலகிலேயே முதன் முதலாகத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக மதலையர் இல்லங்களும் தோட்டப் பள்ளிகளும் ஏற்படுத்திஞர், எடுத்துக்காட்டான பள்ளிக்கூடம் திறந்தார், மருத்துவ உதவி நிதி ஏற்படுத்திஞர். பின்னர், தமது சோஷலிசக் கருத்துக்களுக்காக அதிகாரிகள் சமூகத்தால் நிராகரிக்கப்பட்ட ஓவன் தொழிலாளி வர்க்கத்தின் நேரடியான சூழலில் முப்பது ஆண்டுக் காலம் வேலை செய்து தொழிலாளர்களின் பாட்டை எளிதாக்க முழு மூச்சாக முயன்ருர். தொழிலாளர்களின் உரிமைகளைக் காப்பதற்காக விரிவான சமூக இயக்கத்தை அவர் ஒழுங்கமைத்தார். குழந்தைகளதும் மாதர்களதும் உழைப்பு பயன்படுத்தப் படுவதைக் குறுக்கும் முதலாவது சட்டம் இங்கிலாந்தில் ஏற்கப்பட்டதில் அவரது முயற்சிகள் பெரும் பங்கு ஆற்றின.

ராபர்ட் ஓவன் முதலாளித்துவ அமைப்பைக் கடுமையாக நிந்தித்தார். ஆனுல், முதலாளித்துவத்தின் சமுதாய முரண்பாடுகள் மனித உணர்வின் அறியாமையாலும் தவற்ருலும் ஏற்பட்ட விளைவு என்று எண்ணிஞர். கல்வி பரவியதும் மனிதர்கள் தங்கள் பார்வைகளைப் புது சமூகத்தின் பக்கம் செலுத்துவார்கள், மனிதனுடைய வாழ்க்கைக்கும் ஒழுக்க நெறிச் செவ்வைப்பாட்டுக்கும் மிகச் சிறந்த நிலைமைகளை அது ஏற்படுத்தும் என்பதைக் காண்பார்கள் என்று அவர் நம்பிஞர்.

இந்த சமூகத்தை உருவாக்குவதில் முதன்மையான தடை தனியார் சொத்துரிமை என்று ஓவன் எண்ணிஞர். தனியார் சொத்துரிமையுடன் ஒப்பு நோக்கில் பொதுச் சொத்துரிமைக்கு உள்ள மேம்பாடு புரிந்து கொள்ளப்படும் காலம் வரும் என்று அவர் உறுதியாக நம்பிஞர். உடைமைகளின் பொதுமையும் உழைப்பின் பொதுமையும்—இவையே ராபர்ட் ஓவனுடைய அறிவுக்கு உகந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள். ஆனுலும் அவர் வர்க்கப் போராட்டத்துக்கு அஞ்சிஞர். உழைப்

பாளிகளின் இடையருது வளர்ந்து வரும் வறுமையின் நிலைமைகளில் சமூக வாழ்க்கை வன்முறையால் சீர்குலைக்கப் படுவது முற்றிலும் சாத்தியம் ஆதலால் அதைத் தவிர்ப்பது இன்றியமையாதது என்று கருதினர். கம்யூனிச அடிப்படை யில் சமூக வாழ்வைச் சீர்திருத்துவதற்கான திட்டங்களை முன்வைத்தார்.

இந்தக் காலப் பகுதியில் சிறந்த தத்துவவாதியும் சமூக ஊழியருமாக விளங்கினர் ராம் மோகன் ராய் (1772-1833). அன்னிய ஆதிக்கம் நிலை பெற்றதனுல் இந்தியர்களின் விரிவான வட்டாரங்களில் இயல்பாக மூண்ட ஆத்திரம் அவருக்கும் உண்டாயிற்று. தாய்நாட்டின் பின்தங்கிய நிலையைப் போக்கு வதற்குப் பாடுபடுவதே தம் முதன்மைப் பணி என்று ராம் மோகன் ராய் எண்ணினர். கல்வியே முன்னேற்றத்துக்கு உத வும் அடிப்படைச் சாதனமாக அவருக்குப் பட்டது. பெரு முயற்சி செய்து இந்தியர்களுக்காக முதலாவது நவீனப் பள்ளி திறக்க அவர் ஏற்பாடு செய்தார். வங்க மொழியில் ஷோம் பாத் கௌமுதீ என்ற முதலாவது இந்திய நாளிதழை வெளி யிட்டார். பின்னர் பாரசீக மொழியில் மிராத் உல் அஹ்பார் என்னும் செய்தித்தாளைப் பிரசுரித்தார்.

தாம் வகுத்த சர்வப் பொதுவான மத-தத்துவக் கோட் பாட்டுக்கு இணங்க, பிரம சமாஜம் என்ற சங்கத்தை ராம் மோகன் ராய் நிறுவினர். இந்து மதத்திற்கும் நிலப்பிரபுத் துவ அமைப்புக்கும் உரிய சாதிப் பிரிவினை, விதவைகளின் உடன்கட்டை ஏறல் (சதி), சிறு வயதில் மணம் செய்வது முதலிய பழக்கங்களைப் பிரம சமாஜம் எதிர்த்தது. இந்தியா வில் ஐரோப்பியக் கல்வியைப் பரப்புவதையும் இயந்திரத் தொழிலுக்கும் விஞ்ஞானத்துக்கும் ஊக்கம் அளிப்பதையும் அது ஆதரித்தது. உண்மையான உயர் கல்வி பெற்றதாக இந்தியாவை உருவாக்குவதைத் தாயகத்தின் சுதந்திரப் போராட்டத்துடன் ராம் மோகன் ராய் இணைக்கவில்லைதான். எனினும் புறநிலையாகப் பார்க்கும் போது அவருடைய செயல் கள் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக இருந்தது போலவே காலனியாட்சி ஒடுக்கு முறைக்கும் எதிராக இருந்தன, பிரம சமாஜம் மதச் சங்கத்தின் தன்மையையும் கொண்டிருந்தா லும், இந்தியாவில் புது மாதிரியில் அமைந்த முதலாவது சமூக நிறுவனம் இதுவே.

இந்திய முதலாளித்துவத் தேசியவாதத்தின் முன்னோடியாக இருந்தார் ராம் மோகன் ராய்.

தலைசிறந்த வங்காளி எழுத்தாளரான **பங்கிம்சந்திர சட்டோபாத்தியாயரின்** .(1838-1894) படைப்புக்கள் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் சமூக அரசியல் கருத்துக்களை உருவாக்குவதில் கணிசமான பங்கு ஆற்றின. பிரிட்டிஷ் காலனி ஆட்சியால் இந்திய சமூகத்தின் பொருளாதார, சமுதாய, அரசியல், பண்பாட்டு வாழ்க்கைக்கு ஏற்பட்ட நாசகரமான விளைவுகளைத் தம்முடைய புனைவிலக்கியப் படைப்புக்களிலும் பொது விஷய நூல்களிலும் அவர் சித்திரித்தார். காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடுவதன் அவசியத்தை பங்கிம்சந்திரர் வலியுறுத்தினார். சாதாரண மக்களின் துன்ப துயரங்களை அவர் ஆழ்ந்த அனுதாபத்துடன் விவரித்தார். காலனியாட்சி அரசாலும் நிலச் சொந்தக்காரர்களாலும் வட்டிக் கடன் முதலாளிகளாலும் வர்த்தகர்களாலும் விவசாயிகள் சுரண்டப்படுவதை எதிர்த்தார். விவசாயிகளுக்குச் சாதகமாக நிலம் மறுபங்கிடப்பட வேண்டும் என்ற கருத்துக்குத் தம்முடைய சில நூல்களில் அவர் நெருங்கி வந்திருக்கிறார்.

இந்தியச் சிந்தனையாளர், மனிதாபிமானி, மதச் சீர்திருத்தவாதி, சமூக ஊழியர், தேசபக்தர், ஜனநாயகவாதி **சுவாமி விவேகானந்தர்** (1863-1902) இந்திய **மறுமலர்ச்சி** எனப்பட்டதன் கொள்கைவாதியாக விளங்கினார். தேசிய சுதந்திரமும் சமுதாய வளவாழ்வும் பெறுவதற்கு இந்தியா செய்து வந்த முயற்சிகளை உருவகப்படுத்தியது இந்த **மறுமலர்ச்சி**. சுவாமி விவேகானந்தர் ஒடுக்குமுறையையும் இன வெறியையும் எதிர்த்தார், சமுதாய நீதியில் நம்பிக்கை கொண்டிருந்தார், ''தாழ்ந்த வர்க்கங்களின்'' செயல்பாட்டினால் அது வரும் என்று எண்ணினார்.

முன் காணாத சமுதாயப் புரட்சி முதிர்ந்து கொண்டிருந்த ருஷ்யா, தேசிய விடுதலையும் சமுதாய நீதியும் பெறுவதற்கான வழிகளைத் தேடிக் கொண்டிருந்த முன்னணி இந்தியர்களின் கவனத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவுக்கு முன்பே ஈர்க்கத் தொடங்கி இருந்தது. நாளுக்கு நாள் மிகுந்து கொண்டு போன நிகழ்ச்சிகளின் உலக முக்கியத்துவத்தை அவர்களில் சிலர் அப்போதே உணர்ந்தார்கள்.

பெரும்பாலும் ருஷ்யாவில்தான் ''அடுத்த புரட்சி'' நிகழும் என்றும் ''அது புது யுகத்தைத் தொடங்கி வைக்க வேண்டும்,'' அப்போது உலகத்தில் ''சூத்ரொ ராஜ்'' (உழைப்பாளிகளின் ஆட்சி) நிலைநாட்டப் பெறும் என்றும் தீர்க்கதரிசி போன்று முன் மொழிந்தார் விவேகானந்தர்.

**ருஷ்யாவில் சோஷலிஸ்டுக் கற்பனைவாதிகள்**

கற்பனை சோஷலிசக் கருத்துக்கள் ருஷ்யாவிலும், சிறப்பாக ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகளான அ.இ. ஹெர்ட்சன், நி.க. செர்னிஷேவ்ஸ்கி ஆகியோரின் படைப்புக்களில் வளர்ச்சி அடைந்தன.

**அலெக்சாந்தர் இவானவிச் ஹெர்ட்சன்** *(1812-1870)* பெயர்பெற்ற ருஷ்ய எழுத்தாளரும் தத்துவவாதியும் ஆவார். தம் நூல்களில் அவர் முதலாளித்துவத்தைக் கடுமையாக விளாசினார். ருஷ்யாவில் சோஷலிசத்தின் வெற்றியில் திட நம்பிக்கையை வெளியிட்டார். மேற்கு நாடுகளுக்கு மாறாக ருஷ்யா மக்களுக்குப் புதிய இழப்புக்களையும் துன்பங்களையும் ஏற்படுத்தும் முதலாளித்துவத்தை ஒரு புறம் விட்டு முன்னேறி, விவசாயிகளின் **ஒப்ஷீனா** (சமுதாயம்) மூலமாக சோஷலிசத்தை அடையும் என்று அவர் எண்ணினார்.

ஹெர்ட்சனின் சிந்தனைக்கு இணங்க, சோஷலிசம் விவசாயிகளுக்கு உரியது, மனிதர்கள் ஒருவர் மேல் ஒருவர் ஆழ்ந்த நம்பிக்கையும் மரியாதையும் கொண்டிருக்கும் சமூகம். மரபு வழி வந்த உறவுகளைக் குலைக்கும் முதலாளித்துவம் ருஷ்ய **ஒப்ஷீனாவிலும்** புகுந்து விட்டது என்பதையும் முதலாளித்துவத்தோடு கூடவே தொழிலாளி வர்க்கம் தோன்றி இருக்கிறது என்பதையும் அவர் காணவில்லை. சமூகத்தில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் பாத்திரத்தையோ அவர் விளக்கவே இல்லை.

மாபெரும் ருஷ்ய எழுத்தாளரும் சிந்தனையாளருமான **நிக்கலாய் கவ்ரீலவிச் செர்னிஷேவ்ஸ்கி** *(1828-1889)* போன்று கம்யூனிச சமூகத்தின் சித்திரத்தை அவ்வளவு உளத்தில் பதியும்படியும் நம்பகமாகவும் தீட்டியவர், அதை அடைவதற்கான வழிகள் பற்றிய சரியான புரிவுக்கு அவ்வளவு நெருங்கி வந்தவர் சோஷலிஸ்டு கற்பனைவாதிகளில் வேறு ஒருவரும் இல்லை எனலாம்.

செர்னிஷேவ்ஸ்கி தமக்குள் உருவகப்படுத்திக் கொண்ட

வருங்கால சோஷலிச சமூகம், ''உற்பத்திச் சங்கங்களைச்'' சேர்ந்த மனிதர்களாலேயே நிர்வகிக்கப்படும் ஒன்றித்த கூட்டமைப்பு. இந்தச் சங்கங்கள் சுரண்டலிலிருந்து விடுபட்டவை, எல்லோரும் கட்டாயமாக உழைக்க வேண்டும் என்ற விதி கொண்டவை. புதிய சமூகத்தில் உழைப்பின் உயர்ந்த உற்பத்தித் திறனுக்கும், அந்த அடிப்படையில் மக்களின் வள வாழ்வுக்கும் வகை செய்பவையான பெரிய இயந்திரத் தொழில் துறை, தொழில்நுட்பம், விஞ்ஞானம் ஆகியவற்றின் வளர்ச்சி மீது செர்னிஷேவ்ஸ்கி பெருத்த கவனம் செலுத்தினர். தங்கள் விதிக்குத் தாங்களே எசமானர்களாக விளங்கும் இந்த சமூகத்தின் மனிதர்கள் சேர்ந்து உழைப்பார்கள். அதோடு உழைப்பில் அவர்களுக்கு உதவ இயந்திரங்கள் வரும். தங்கள் கூட்டு உழைப்பால் அவர்கள் நிலத்தை மாற்றி அமைத்து, பூத்துக் குலுங்கும் தோட்டம் ஆக்கி,வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அதில் அனுபவிப்பார்கள்.

ஆம், விவசாயிகளின் ஒப்ஷீனு மூலமாகவே ருஷ்யா சோஷலிசத்துக்கு வரும் என்று ஹெர்ட்சன் போலவே செர்னிஷேவ்ஸ்கியும் எண்ணினர். அவருடைய கருத்தின்படி, ஒப்ஷீனுவின் கூட்டு ஏற்பாட்டுக் கோட்பாடுகள் நகரத்துக்கும், இயந்திரத் தொழில் துறைக்கும், கொண்டுவரப்பட வேண்டும். ஆனாலும் ஒப்ஷீனு சோஷலிசத்தின் தயாரான வடிவம் என்று அவர் நினைக்கவே இல்லை. வர்க்கங்களுக்கு இடையே தானக ஏற்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சோஷலிசம் நிறுவப்படலாம் என்ற எண்ணத்திற்கு அவர் இடமே கொடுக்கவில்லை. செர்னிஷேவ்ஸ்கி சோஷலிசத்தின் வெறும் சித்தாந்த கர்த்தராக மட்டும் இருக்கவில்லை, நடைமுறைப் புரட்சியாளராகவும் இருந்தார். மக்கள் புரட்சியால்தான் சோஷலிசம் வளர்ச்சி அடையும் என்று அவர் உறுதி கொண்டிருந்தார். புதிய சமூக அமைப்பின் பொருட்டு ஜாருக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் எதிராகப் போராட ஆவேசம் நிறைந்த அறைகூவல் அவருடைய நூல்களில் ஒலிக்கிறது.

**வரலாற்றில் கற்பனை சோஷலிசத்தின் இடம்**

சோஷலிஸ்டு கற்பனைவாதிகள் ஆற்றிய தொண்டு என்ன? கற்பனை சோஷலிசத்தின் முக்கியத்துவம் யாது? முதலாவதாக, சோஷலிஸ்டு கற்பனைவாதிகள் முதலாளித்துவ அமைப்பின் ஆழ்ந்த விமர்சனத்தைத்

தந்தார்கள், அதன் கேடுகளை அம்பலப்படுத்தினார்கள், முதலாளித்துவம் அழிவதும் அதன் இடத்தில் புதிய, கம்யூனிச சமூகம் நிலை பெறுவதும் இன்றியமையாதவை என்பதை நிரூபிக்க முயன்றார்கள். புதிய சமூகம் நிறுவப்படுவதற்கு, தனியார் சொத்துரிமை ஒழிக்கப்பட்டு, கூட்டான சமூகச் சொத்துரிமை ஏற்படுவது அவசியம் என்று அவர்களில் பெரும்பாலோர் வலியுறுத்தினார்கள். சமூகச் சொத்துரிமை தான் உண்மையான விடுதலைக்கும் சமத்துவத்துக்கும் அடிப் படையாக விளங்க முடியும் என்றார்கள் அவர்கள். சுரண்டு வோர் சமூகத்துக்கு முடிவு கட்டுவதற்கான வழிகளையும் சாத னங்களையும் பற்றிய கேள்வியை அவர்கள் எழுப்பினார்கள்.

இரண்டாவதாக, வருங்கால சமூகத்தின் சில தன்மை களை சோஷலிஸ்டு கற்பனைவாதிகள் முன்கண்டார்கள். இவ்வாறு செய்கையில் அவர்கள் ஆழ்ந்த மனிதாபிமான உள்தூண்டல்களை அடிப்படையாகக் கொண்டார்கள். புதிய சமூகத்தில் உண்மையான மனித மாண்புடன் வாழ்வதற்கும் தனது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும் செவ்வைப் படுத்துவதற்கும் ஏற்ற நிலைமைகள் மனிதனுக்கு ஏற்படுத்தப் பட வேண்டும் என்பதே அவர்களுடைய முக்கியக் கவலை யாக இருந்தது.

மூன்றாவதாக, சமூக நிகழ்முறைகள் உணர்வுபூர்வமாக, ஒரு முனைப்பாட்டுடன் இயக்கப்படுவது பற்றிய பிரச்சினையை முதன்முதலில் எழுப்பியவர்கள் சோஷலிஸ்டு கற்பனைவாதி களே. சமூகச் சொத்துரிமை நிலை பெற்று, திட்டப்படி ஒழுங் கமைக்கப்பட்ட ஒன்றித்த பொருளாதாரம் ஏற்பட்டால் தான் இவ்வாறு இயக்கப்படுவது சாத்தியம் ஆகும் என்று அவர்களில் பலர் கருதினார்கள்.

கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ், விளதீமிர் இலியீச் லெனின் ஆகியோரால் பிற்பாடு விஞ்ஞான நோக்கில் தீர்க்கப்பட்ட பிரச்சினைகளில் பலவற்றை சோஷலிஸ்டு கற் பனைவாதிகள் எழுப்பினார்கள். ''அவர்களின் மேதை எண் ணற்ற விஷயங்களை முன்னறிந்து கூறியது, அவை சரியே என்று நாம் இப்போது விஞ்ஞான வழியிலே நிரூபித்து வரு கிறோம்''* என்று எழுதினார் லெனின். கற்பனை சோஷலிசம்,

* வி. இ. லெனின், **என்ன செய்ய வேண்டும்?** முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1976, பக்கம் 42.

சிறப்பாகப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் கற்பனைவாதம் மார்க்சியத்தின் கொள்கைவாதத் தலையூற்றுக்களில் ஒன்றுகவும் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் நேரான முன்னேடியாகவும் இருந்தது தற்செயல் அல்ல.

சோஷலிஸ்டு கற்பனைவாதிகளின் நூல்களை விஞ்ஞானக் கம்யூனிசத்தை நிறுவியவர்கள் உயர்வாக மதித்தார்கள். அதே சமயம் அவர்கள் வரலாற்று நோக்கில் குறுகிய பார்வை கொண்டிருந்ததைப் புலப்படுத்தினார்கள், எல்லாவற்றையும் ஒரே மட்டத்துக்குக் கொண்டு வரும் அவர்களுடைய நயமற்ற போக்கையும் பொதுவான துறவு மனப்பான்மையையும் சோஷலிசத்தை அடைவதற்கு அவர்கள் கூறிய வழிகள், சாதனங்களின் நடைமுறைப் பயனின்மையையும் சுட்டிக் காட்டினார்கள். கற்பனைவாதிகளில் பலர் வர்க்கப் போராட்டத்துக்கும் புரட்சிக்கும் எதிரிகளாக இருந்தார்கள்.

சோஷலிஸ்டு கற்பனைவாதிகளின் கண்ணேட்டங்கள் குறுகியவையாக இருந்ததற்குக் காரணங்கள் அந்தக் காலத்து சமூக வரலாற்று நிலைமைகளில் அடங்கி இருந்தன. சமூக உறவுகளின் முதிர்ச்சி இன்மை, தன் வரலாற்றுச் செயல் நோக்கத்தை இன்னும் உணராதிருந்த பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி இன்மை ஆகியவை இந்த நிலைமைகள். ''முதலாளித்துவ உற்பத்தியின் முதிர்ச்சி அற்ற நிலைமைக்கும் முதிர்ச்சி அற்ற வர்க்க உறவுகளுக்கும் ஏற்றவையாக இருந்தன முதிர்ச்சி அற்ற சித்தாந்தங்களும்'' என்று எழுதினார் எங்கெல்ஸ்.*

இதற்கிடையே காலம் முன்னே சென்றது, முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் ஆழமாயின, பாட்டாளி வர்க்கம் புரட்சிப் போராட்டத்தில் வளர்ந்து உரம் பெற்று சமுதாய வளர்ச்சியை நிர்ணயிக்கும் சக்தியாக மாறிற்று. புரட்சிகர வர்க்கங்களுக்குச் செயலாற்றுவதற்கு நம்பகமான வழிகாட்டியாக விளங்கக் கூடிய சித்தாந்தத்தை உருவாக்கும் பணியை வரலாறே சமுதாய இயலுக்கு முன் வைத்தது. தன் சிறந்த பிரதிநிதிகளான கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ் ஆகியோரின் வடிவில் சமூக இயல் இந்தப் பணியை நிறைவேற்றி

---

* பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 446.

யது: விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தம் உருவாக்கப் பட்டது.

## 2. சோஷலிசம் கற்பனையிலிருந்து விஞ்ஞானமாக மாறுதல். கா. மார்க்சும் பி. எங்கெல்சும்

கார்ல் மார்க்ஸ் *(1818-1883)*, பிரெடெரிக் எங்கெல்ஸ் *(1820-1895)* இருவரதும் விஞ்ஞான, புரட்சிச் செயல் சென்ற நூற்றுண்டின் நாற்பதுக்களில் ஜெர்மனியில் தொடங்கியது. அது முதலாளித்துவத்தின் தீவிர வளர்ச்சிக் காலம். பல ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் முதலாளித்துவம் அப்போது நிலையாக வேரூன்றி இருந்தது. புதிய வர்க்கமான இயந்திரத் தொழில் பாட்டாளி வர்க்கம் வளர்ச்சி அடைந்து புரட்சிப் போராட்டப் பாதையில் அடி வைத்திருந்த காலமும் அதுவே. நிலப்பிரபுத்துவத்தை வெற்றி கொண்ட முதலாளி வர்க்கம் தான் ஏற்படுத்திய தனியார் சொத்துரிமைக் கோட்பாடுகளின் வெற்றியையும் மாற்ற முடியாத தன்மையையும் நம்பி இருந்தது.

முதலாளி வர்க்கத்தின் ஆட்சிக்கு முடிவே வராது என்று தோன்றியது. ஆனுல் இந்தக் காலத்தில் தான், 1848ம் ஆண்டில் முழங்கின **கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையின்** சொற்கள். கா.மார்க்சும் பி.எங்கெல்சும் இதில் முதலாளித்துவத்துக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கி இருந்தார்கள். தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ சமூகம் சுரண்டலும் அடிமைத்தனமும் இல்லாத சமூகத்துக்கு இடத்தை விட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் மனித குலம் மாபெரும் கம்யூனிசப் புரட்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும் அவர்கள் சான்று காட்டினுர்கள். இந்த நூல் வெளியானதுடன் கற்பனை சோஷலிசத்தின் காலம் முடிந்து விஞ்ஞான சோஷலிசத்தின் காலம் தொடங்கியது.

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ் ஆகியோரின் விஞ்ஞான சோஷலிசம் கற்பனை சோஷலிசத்திலிருந்து முதன்மையாக வேறுபடுவது எதில் என்றுல், அது வெறும் ஊகப் புனைவுகளையும் நல் விருப்பங்களையும் ஆதாரமாகக் கொள்ளாமல், நடப்பு எதார்த்தத்தை, சமூக வளர்ச்சிக்கான விதிகளதும் மனிதத் தன்மையினதும் விஞ்ஞானப் புரிவைச் சார்ந்திருப்பதில்தான்.

### முதலாளித்துவத்தின் இடத்துக்கு சோஷலிசம் புரட்சி மூலம் வருவது தவிர்க்க முடியாதது

தொழில் துறையில் யாவற்றிலும் வளர்ச்சி பெற்றிருந்த நாடுகளில் விறல் மிக்க பொருளாதாரத்தை நிறுவிய முதலாளித்துவம் உற்பத்திச் சக்திகளின் அமோகமான வளர்ச்சியைத் தன்னுடன் கொண்டு வந்தது. நிலப்பிரபுத்துவப் பிரிவினை வரம்புகளை அழித்து அது சுரண்டல் முறையை உலகம் முழுவதிலும் பரப்பியது. காலனிகள் ஆகி விட்ட நாடுகளின் மக்களுக்கு அதைச் சிறப்பாகக் கடினமும் சீரழிப்பதுமாகச் செய்தது. உற்பத்திச் சக்திகளின் விரைந்த அதிகரிப்பு உற்பத்தி வளர்ச்சிக்கு மிகப் பலத்த தூண்டுகோலான முதலாளித்துவ லாபத்துடன் இணைந்திருந்தது. லாபத்துக்கான போட்டியில் முதலாளி உற்பத்தியை விரிவாக்குகிறான், இயந்திரங்களைச் செவ்வைப் படுத்துகிறான், தொழில் துறையிலும் விவசாயத்திலும் இயந்திர நுணுக்கத்தை மேம்படுத்துகிறான். ஆனால் இந்தச் செயல்கள் தோற்றுவித்த சக்திகளே முதலாளித்துவ அமைப்பை அழியும் அபாயத்தில் வைத்து விட்டன.

முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாட்டை மார்க்சும் எங்கெல்சும் வெளிப்படுத்தினார்கள். உற்பத்திச் செயல் முறையின் சமூகத் தன்மைக்கும் உரித்தாக்கிக் கொள்வதன் தனி முதலாளித்துவ வடிவத்துக்கும் இடையில் உள்ள முரண்பாடு இது. முதலாளித்துவத்தில் உற்பத்தி துலக்கமாகத் தென்படும் சமூகத் தன்மையைக் கொண்டிருக்கிறது. பெரிய தொழில் நிலையங்களில் குவிந்திருக்கும் பத்து லட்சக் கணக்கான உழைப்பாளி வெகுஜனங்கள் இந்த உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இந்த லட்சோப லட்சம் ஆட்களுடைய உழைப்பின் பயன்களைப் பெரும் உடைமையாளர்களின் சிறு குழு தனக்கு உரியது ஆக்கிக் கொள்கிறது. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே நிலவும் இந்தத் திண்ணமான முரண்பாடு நெருக்கடிகளையும் வேலையின்மையையும் ஏற்படுத்துகிறது, முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே சமரசப்படுத்த முடியாத வர்க்கப் போராட்டத்தைத் தூண்டி விடுகிறது. விளைவாக சோஷலிசப் புரட்சியும் முதலாளித்துவத்தின் இடத்திற்கு சோஷலிசம் வருவதும் நிகழும்.

இவ்வாறு, சோஷலிசப் புரட்சி வரலாற்றுப் போக்கில் தவிர்க்க முடியாதது ஆகி விடுகிறது, ஏனெனில், முதலாளித்துவ உற்பத்தியில் உள்ள முரண்பாடு என்ற திண்ணமான பொருளாதார அடிப்படையை அது கொண்டிருக்கிறது. உற்பத்தி உறவுகளின் சமூகத் தன்மையே தனியார் முதலாளித்துவச் சொத்துரிமை ஒழிக்கப்படுவதையும், சமூகப் பொதுவான, கூட்டுச் சொத்துரிமை நிலைபெறுவதையும் கோருகிறது.

இவ்வாறு, சமூக வளர்ச்சியின் புறநிலை விதிகளையும் முதலாளித்துவத்தின் எதார்த்தமான இயக்க இயலையும் அதற்கு இயல்பான உள் முரண்பாடுகளையும் பகுத்து ஆராய்ந்ததன் பயனாக, முதலாளித்துவத்தின் இடத்திற்கு சோஷலிசம் வருவதற்கான **இன்றியமையாத** ஒரே சாதனம் சோஷலிசப் புரட்சியே என்ற முடிவுக்கு கா.மார்க்சும் பி.எங்கெல்சும் வந்தார்கள். வர்க்க நலன்களின் ''ஒருங்கிசைவைப்'' பெறுவதன் அடிப்படையில் முதலாளித்துவத்தை சோஷலிசமாக மாற்றுவதற்கான சீர்திருத்தப் பாதை சாத்தியம் என்ற சோஷலிஸ்டு கற்பனைவாதிகளின் மருள் இதனாலேயே அகற்றப்பட்டு விட்டது. மனிதன் வாழ்ந்து வளர்ச்சி அடையும் சமுதாயச் சூழலின் உண்மையான இயல்பை வெளிப்படுத்தவும், மனிதனுடைய நலன்களுக்காக இந்தச் சூழலை மாற்றுவதற்கான வழிகளைக் காட்டவும் மட்டும் இன்றி, மனிதனுடையவே இயல்பையும் சமூக உறவுகளின் தொகுப்பில், அவன் எதைச் சேர்ந்தவனோ அந்த சமுதாய உலகின் வரம்புகளுக்குள் அவனுடைய இடத்தையும் புலப்படுத்தவும் வரலாற்றின் பொருள்முதல்வாதப் புரிவின் துணையால் கா. மார்க்சுக்கும் பி.எங்கெல்சுக்கும் இயன்றது.

**மனிதனின் இயல்பும் அவனது வளர்ச்சியின் போக்குகளும்**

ஒவ்வொரு மனிதனும் உயிரியல் பிராணி என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை. ஆனால் உயிரியல் அடிப்படை மனிதனுடைய இயல்பு முழுவதையும் உள்ளடக்கவில்லை. மனிதனை உருவாக்குவதற்கு இயற்கை குறித்த உயிரியல் பொருளை அளித்தது என்பதில் சந்தேகம் இல்லை, எனினும் இந்தப் பொருள் மனித உறுப்புயிராக மாறியது சமுதாய வகைப்பட்ட காரணிகளின், முதன்மையாக உழைப்பு உற்பத்திச்

செயலின் விளைவு ஆகும். ஒரு குறித்த அர்த்தத்தில் உழைப்பே மனிதனைப் படைத்தது என்று எழுதினர் பி. எங்கெல்ஸ். மனித உடலின் உறுப்பு அமைப்பிலும் உழைப்பு பருவடிவம் பெற்றிருக்கிறது. மனிதன் மனிதனுக இருப்பதற்குக் காரணம், அவன் உழைக்கவும் சிந்திக்கவும் பேசவும் வல்லவன், உழைப்புக் கருவிகளை உற்பத்தி செய்யவும் அவற்றின் உதவியால் சுற்றும் உள்ள உலகின் மீது, இயற்கையின் மீது பாதிப்பு விளைக்க வல்லவன், உழைப்புச் செயல் முறையில் மற்ற மனிதர்களோடு சமூக உறவுகள் ஏற்படுத்திக் கொள்ள வல்லவன் என்பதே.

கோட்பாட்டளவான மனிதனின், காலத்திற்கும் இடத்துக்கும் வெளியே பொதுப்படையாக நிலவும் மனிதனின் வழிபாட்டைக் கா.மார்க்சும் பி. எங்கெல்சும் ஏற்க மறுத்து விட்டார்கள். அவர்களுடைய எண்ணப்படி மனிதன் எப்போதும் பருப்பொருளானவன், வரலாற்றுப் போக்கில் வரையறுக்கப்பட்ட சமுதாய முழுமையான சமூக உருவாக்கத்தின், குறிப்பிட்ட சமூக ஒன்றிணைப்பான வர்க்கத்தின், தேசிய இனத்தின், கூட்டத்தின் உறுப்பினன். சமூகத்தின் பொருளியல், உற்பத்திச் செயலும் உற்பத்தியின் போது உருவாகும் பொருளாதார உறவுகளும் மனிதன் யார் ஆவான்—அடிமையா, அடிமைச் சொந்தக்காரனு, விவசாயியா நிலப்பிரபுவா, தொழிலாளியா முதலாளியா என்பதை வரையறுக்கின்றன.

மனிதன் எதைச் சேர்ந்தவனே அந்த சமூகச் சூழல் பல வகையான பண்புகளையும் நடத்தைகளையும் செயல்களையும் எண்ணங்களையும் விருப்பங்களையும் தேவைகளையும் திறமைகளையும் பிற உள இயல்புகளையும் (சுபாவம், மனப்பாங்கு, உணர்ச்சிகள், வழக்கங்கள் முதலியன) அவனிடம் தோற்றுவிக்கிறது. இந்த எல்லாப் பண்புகளும் ஒன்று சேர்ந்து, பரஸ்பரம் செயல்பட்டு, பருப்பொருளான மனிதனை முழுமையானவனுக உருவாக்குகின்றன.

ஒரே சூழலில், ஒரே சமூகத்தில், மனிதத் தனித்தன்மைகளின் பல்வகைப்பாடு நிலவுவது ஏன்? ஒரு குறிப்பிட்ட தனிநபர் உருவகப்படுத்துபவை சமுதாய முழுமையின் எல்லாப் பண்புகளுமாக இல்லாததும், உருவகப்படுத்துபவற்றையும் அவர் ஒரே அளவில் உருவகப்படுத்தாததும் ஏன்?

இங்கே விஷயம் முதன்மையாக என்ன என்றால், ஒவ்வொரு தனி மனிதரும் பருப்பொருளான சூழலின் (''நுண் சூழலின்'') நிலைமைகளிலும் வளர்ச்சி அடைகிறார். செய்தொழிலின் சிறப்பும் வகையும், உற்பத்திக் குழு அல்லது பிற வகைக் குழுவின் சிறப்புத் தன்மைகள், குடும்பம் முதலியன இந்தச் சூழலைச் சேர்ந்தவை. தனி நபர் மேல் பொது சமுதாயச் சூழலின்—பொருளாதார மற்றும் இதர சமூக உறவுகள், சமூகத்தின் உள வாழ்வு ஆகியவற்றின்—பாதிப்பு எதன் வழியாகப் பிரதிபலித்துப் பின்னடிக்கிறதோ அந்தப் பட்டகையாக விளங்குவது ''நுண் சூழலே'' ஆகும். ''நுண் சூழலை'' உருவாக்கும் சூழ்நிலைகள் மிகப் பல வகையானவை ஆதலால் தனி நபர்களும், அவர்கள் ஒரே சமூகத்தில் ஒரே பொது சமுதாயச் சூழலில் வாழ்ந்து வேலை செய்த போதிலும் பல வகையானவர்களாக இருக்கிறார்கள்.

இவ்வாறு, ஒவ்வொரு திட்டவட்டமான மனிதனுடைய பண்புகளும் விரிவான சமுதாயச் சூழலால் ''நுண் சூழல்'' மூலமாக வரையறுக்கப்படுகின்றன. மனிதனது வளர்ச்சிக்கு உரிய பொது விதிகள் இதில் வெளிப்படுகின்றன. மனிதனுடைய வாழ்க்கை முறை, கா. மார்க்ஸ் எழுதியது போல, ''குல வாழ்க்கையின் அதிகச் சிறப்பான அல்லது அதிகப் பொதுவான வெளிப்பாடாக விளங்குகிறது.''*

மனிதன் சூழலின் விளைபொருள் என்று வலியுறுத்திய மார்க்சிய மூல ஆசான்கள் தனி நபரை சமூகத்தில் கரைத்து விடவில்லை. மனிதன் சமூகத்தால், சூழ்நிலைகளால் உருவாக்கப் படுகிறான், ஆனால் அவனும் தன் உழைப்பாலும் அரசியல் செயலூக்கத்தாலும் சமூகத்தையே உருவாக்குவதோடு கூடத் தன்னைத் தானேயும் உருவாக்கிக் கொள்கிறான். சூழல் மீதும் சமூகத்தின் மீதும் பாதிப்பு நிகழ்த்தும் மனிதனின் சக்தியும், அதனால் தனி நபரின் சுதந்திரமும் கூட, சமுதாய முன்னேற்றத்தின் அளவுக்கு ஏற்ப அதிகரித்துக் கொண்டு போகின்றன.

மனிதனுடைய சமுதாய இயல்பை வெளிப்படுத்திய பின், வரலாற்று முன்னேற்ற நிகழ்முறையில் அவனுடைய

---

* கா. மார்க்சும் பி. எங்கெல்சும், நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 119 (ருஷ்யனில்).

வளர்ச்சியின் முக்கியப் போக்கையும் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் காட்டினார்கள். அதாவது, பல்வேறு பண்புகளேயும் வாழ்க்கைச் செயல்களேயும் இடைவிடாமல் வளப்படுத்திக் கொள்வது, சமூகத்தின் முன்னேற்றத்துடனும் சமூக உறவுகளின் செவ்வைப்பாட்டுடனும் பொருளியல், உளவியல் பண்பாட்டின் முன்னேற்றத்துடனும் தொடர்பு கொண்ட வளர்ச்சி. மனித வாழ்க்கையின் எல்லாச் செயல்களதும் கட்டற்ற வளர்ச்சியையும் ஆக முழுமையான வெளிப்பாட்டையும் பெறுவது, அவற்றின் ஆக உயர்ந்த ஒருங்கிசைவைப் பெறுவது, சமூகத்தின்—எனவே மனிதனதும்—நலன்களுக்காக அவற்றை ஆகச் சிறந்த, நிர்ப்பந்தம் அற்ற (இயல்பான) முறையில் பயன்படுத்துவது—இதுவே மனிதகுல வரலாற்று வளர்ச்சியின் போக்கு. இந்தப் போக்கு கம்யூனிசத்தில் தான் முழு அளவில் வெளிப்படும், ஏனெனில் அப்போதுதான் மனித சக்திகளின் வளர்ச்சி தொடங்கும், மனித இயற்கைக்கு ஆக அதிகம் தகுந்தவையும் பொருந்துபவையுமான நிலைமைகள் உருவாகும். ஆளும் வர்க்கங்களின் பொருளாதாரச் செல்வச் செழிப்பும் உழைப்பாளிகளின் ஏழ்மையும் முதலாளித்துவத்தின் நிலைமைகளில் நிலவுகின்றன. கம்யூனிசம் நிலைபெற்றதுமோ, அவற்றின் இடத்தில் "செல்வச் செழிப்புள்ள மனிதனும் மனிதனின் செல்வச் செழிப்புள்ள தேவையும் நிலவும். செல்வச் செழிப்புள்ள மனிதன் அதே சமயத்தில் மனிதனுக்குரிய வாழ்க்கைச் செயல்கள் மேலும் மேலும் முழுமையான அளவில் தேவைப்படும் மனிதன், எவனுடைய சொந்த நிறைவேற்றம் உள்ளார்ந்த அவசியமாக, தேவையாகச் செயல்படுகிறதோ அந்த மனிதன்"* என்று எழுதினார் கா. மார்க்ஸ்.

**உழைப்பாளியின் விடுதலை—தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணி**

சமரசப்படுத்த முடியாத வர்க்கங்கள் நிலவும் சமூகத்தில் சமுதாய நோக்கில் எதிர் எதிரான துருவங்களில் உள்ள இரண்டு மனிதர்கள்—சுரண்டும் மனிதனும் உழைப்பாளி மனிதனும்—தனியார் சொத்துரிமையின் அடிப்படையில் உருவாகிறார்

---

* கா. மார்க்சும் பி. எங்கெல்சும், நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 125 (ருஷ்யனில்).

கள் என்று கா. மார்க்சினதும் பி. எங்கெல்சினதும் வரலாற்றுப் பகுத்தாய்வு காட்டியது. இந்தத் துருவ முனைப்பு சிறப்பான கடுமையுடன் வெளிப்படுவது முதலாளித்துவ சமூகத்தில். அங்கே முதலாளி அனுகூலங்கள்—லாபமோ திருப்தியோ—பெறுவதற்கு உதவும் பொருளாக உழைப்பாளியை நடத்துகிறான். தொழிலாளியைப் பொருளாதாரப் பொறி அமைப்பில் உரிமையற்ற திருகாணியாக மாற்ற மூலதனம் முயல்கிறது.

ஆனாலும் உழைப்பாளி மனிதன், தொழிலாளன், முதலாளித்துவ சமூகத்தில் பல சாதனைகள் புரிந்திருக்கிறான். முதன்மையாக அவனுடைய முயற்சிகளால் இயற்கை வெல்லப்பட்டிருக்கிறது, விறல் மிக்க உற்பத்திச் சக்திகள் நிறுவப்பட்டிருக்கின்றன. முன்னர் காணப்படாத பொருளியல், உளவியல் செல்வங்களைப் படைக்க இவை வாய்ப்பு அளித்திருக்கின்றன. எதன் குறிக்கோளும் நோக்கமும் உழைப்பாளியே தானோ, அந்த சமூகத்தை உருவாக்குவதற்கு வேண்டிய முதலாவது நிலைமை இதனால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் மனிதனும் அவனது உழைப்பும் விடுதலை பெறுவதற்கு வேண்டிய இரண்டாவது நிலைமையையும் ஏற்படுத்துவது—உழைப்பையும் மனிதனையும் முதலாளித்துவச் சொத்துரிமை உறவுகளிலிருந்து விடுவிப்பது—தொழிலாளியின் கடமை என்று வலியுறுத்தினார் கா. மார்க்ஸ். தொழிலாளி வர்க்கம் இயற்கையை வசப்படுத்தி விட்டது. இப்போது அது மனிதனை வசப்படுத்த வேண்டும். சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றவும் அதன் மூலம் மனிதனை வசப்படுத்தவும் ஒடுக்குமுறையிலும் சுரண்டலிலுமிருந்து அவனை விடுவிக்கவும் முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட சமுதாய சக்தி தொழிலாளி வர்க்கம்தான். சோஷலிசப் புரட்சியின் வாயிலாக உழைப்பாளியை விடுவிப்பதும் முதலாளித்துவத்தை ஒழிப்பதும் உண்மையான மனிதத்தன்மை உள்ள சமூகத்தை—சோஷலிசத்தை—நிலைநாட்டுவதும் தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் வரலாற்றுப் பணி ஆகும். ''சோஷலிச சமூகத்தை நிறுவப் போவது என்ற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள பாத்திரத்தை விளக்கியது தான் மார்க்சின் போதனையில் முக்கியமானது''* என்று எழுதினார் வி. இ. லெனின்.

* வி. இ. லெனின், நூல் திரட்டு, முதற் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கம் 20.

உழைப்பாளியையும் மனித குலத்தையும் விடுதலை பெறச் செய்யும் மகத்தான பணி தொழிலாளி வர்க்கத்திற்கே உரியது என்ற முடிவுக்குக் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் வந்தது எதனுல்?

முதன்மையாக எதனுல் என்ருல், தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ சமூகத்தில் எல்லாவற்றையும் விடப் புரட்சி கரமான வர்க்கம் என்பதனுல். உற்பத்திச் சாதனங்கள் மீது தனியார் சொத்துரிமை அற்றது அது. முதலாளித்துவ சமூகத்தில் எல்லாவற்றிலும் அதிகமாகச் சுரண்டப்படும் வர்க்கம் அதுவே. உடைமை இல்லாததால் அது முதலாளிக்காக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறது. உழைக்கும் கரங்களும் உழைக்கும் திறமையுமே தொழிலாளியின் ஒரே செல்வம். ஆகையால்தான் அவனுடைய விதியும் அவனுடைய குடும்பத்தினர், உற்ருர், உறவினர் ஆகியோரின் விதியும் கண்ணற்ற தற்செயல் வாய்ப்பை—அவனது உழைப்புக்கு, வேலை செய்யும் கரங்களுக்குத் தேவை இருக்கிறதா என்பதை—சார்ந்திருக்கின்றன.

ஆனுல் இந்தக் காரணத்தினுலேயே தொழிலாளி வர்க்கம் தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் ஒழிப்பதில் வேறு எந்த வர்க்கத்துக்கும் இல்லாத அளவு அக்கறை கொண்டிருக்கிறது. அது எல்லாவற்றிலும் புரட்சிகரமான, முதலாளித்துவத்துடன் சமரசப்படவே முடியாத வர்க்கம் என்று இதற்கு அர்த்தம். முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்ட சோஷலிசப் புரட்சி தொழிலாளி வர்க்கத்தின் ஜீவாதார நலன்களைப் பொறுத்த காரியம், அதன் உளமார்ந்த குறிக்கோளும் பணியும் ஆகும்.

பொருளாதாரத்தின் முற்போக்குள்ள வடிவமான பெரிய இயந்திர உற்பத்தியுடன் தொடர்பு கொண்டிருப்பதாலும் தொழிலாளி வர்க்கம் எல்லாவற்றிலும் புரட்சிகரமான வர்க்கம் ஆகும். இந்த உற்பத்தி வருங்காலத்துக்கு உரியது, எனவே தொழிலாளி வர்க்கம் உற்பத்தியின் வருங்காலத்துடன், மனித குலம் அனைத்தினதும் வருங்காலத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கத்துக்கு ஆதரவாக இருக்கிறது வெகுஜனங்களின் சக்தி, முதலாளித்துவ சமூகத்தின் எண்ணிக்கை பெருத்த வர்க்கங்களில் ஒன்றின் சக்தி.

ஆயினும் விஷயம் இது மட்டும் அல்ல. உற்பத்தி வளர்ச்சியின் நிலைமைகளே தொழிலாளி வர்க்கத்தை எல்லாவற்றிலும் ஒழுங்கமைந்த, எல்லாவற்றிலும் கட்டுப்பாடு உள்ள, எல்லாவற்றிலும் **உணர்வு பூர்வமான** வர்க்கம் ஆக்குகின்றன. தொழிலாளர்கள் பெரும் பெரும் குழுக்களாக ஒன்று சேர்ந்து வேலை செய்கிறார்கள். ஆகவே, முதலாளி வர்க்கத்துடன் போராட்டத்தில் ஈடுபடும் போது, ஒழுங்கமைப்பு, மிகக் கண்டிப்பான கட்டுப்பாடு ஆகியவற்றின் அவசியத்தை அவர்கள் வெகு விரைவில் உணரத் தொடங்குகிறார்கள். தங்களுடைய வேலை நிலைமைகளும் வாழ்க்கை நிலைமைகளும் எங்குமே கடினமானவை, ஒரே சுரண்டலாளி—முதலாளி—எங்கும் தங்களுக்கு எதிரியாக இருக்கிறான் என்பதை அவர்கள் கண்டு கொள்கிறார்கள். இந்தக் காரணத்தால் தொழிலாளர்களிடம் வர்க்கச் சுய உணர்வு ஏற்பட்டு வளர்ச்சி அடைகிறது. உற்பத்தி அடையாளப்படி மட்டும் இன்றி தேசிய அடையாளப்படியும் பின்னர் சர்வதேசிய அடையாளப்படியும்கூட ஒன்று சேரும் ஆர்வமும் அவர்களிடம் தோன்றி வளர்கிறது. தொழிலாளி வர்க்கம் தனது நிறுவனங்களை அமைக்கிறது. இவையாவன: கூட்டுறவுக் கழகங்கள், தொழிற் சங்கங்கள், காப்பீட்டு நிதிகள் ஆகியவையும் முடிவில் அரசியல் கட்சியும். தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தை இந்தக் கட்சி வழிகாட்டி நடத்துகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் வேலை நிலைமைகளும் வாழ்க்கை நிலைமைகளும் முன்னணிப் புரட்சிக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் திறனை, முற்போக்குச் சித்தாந்தத்தில் தேர்ச்சி பெறும் தகுதியை அதற்கு அளிக்கின்றன. இந்தச் சித்தாந்தத்தைச் செப்பமாக முறைப்படுத்துவதற்கு வேண்டிய நேரமோ, சாதனங்களோ, போதிய நூலறிவோ தொழிலாளர்களிடம் இல்லை என்பது உண்மையே. எனவேதான் தொழிலாளர் இயக்கத்தில் சோஷலிச உணர்வைப் புகுத்துவதும் சோஷலிசத்தைத் தொழிலாளர் இயக்கத்துடன் இணைப்பதும் என்ற பணி எதிர்ப்படுகிறது. இந்த முக்கியப் பணியையே நிறைவேற்றுகிறது தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி.

தனது ஆதர்சங்களைச் செயல்படுத்துவதற்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தனித்து இருக்க

வில்லை. தாங்களும் சுரண்டலால் துன்பப்படுபவையான மற்ற வர்க்கங்களும் வகுப்புக்களும் இந்தப் போராட்டத்தில் அதனுடன் நெருக்கமாக இணைந்து செயல்படுகின்றன. உழைக்கும் விவசாயிகள், கம்மியர்கள், நகரின் சிறு முதலாளிகள், உழைக்கும் அறிவுஜீவிகள் ஆகியோர் இவற்றைச் சேர்ந்தவர்கள். **விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றிப்புக்குக்** கா. மார்க்சும் பி. எங்கெல்சும், பின்னர் வி.இ. லெனினும் சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் தந்தார்கள். புரட்சியை நிறைவேற்றி சோஷலிசத்தைக் கட்டி அமைக்கும் பணியை மேற்கொண்டிருக்கும் சமுதாய சக்தியை இந்த ஒன்றிப்பில் அவர்கள் கண்டார்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் தேசிய இன வரம்புகளுக்குள் அடைபட்டு விடுவதில்லை, **சர்வதேசியத்** தன்மையை மேற்கொள்கிறது என்பதை அழுத்திக் கூறுவது அவசியம். தொழிலாளி வர்க்கத்தின் இயல்பு எத்தகையது என்றால், மக்கள் இனங்களுக்கு இடையே பகைமை உண்டாக்கும் வகையான நலன்கள் அதற்கு இல்லை. உலகு பரவிய அளவில் ஒன்றிணைந்த முதலாளி வர்க்கத்துக்கு எதிராக சர்வதேசிய ஒற்றுமையை, தனியார் சொத்துரிமையும் சுரண்டலும் உள்ள சமூகத்துக்கு எதிராக மக்கள் இனங்களின் ஒன்றித்த போராட்டத்தை அது நிறுத்துகிறது.

**சமுதாய நிகழ்முறைகள் செலுத்தப்படக் கூடியவை**

சமூக வளர்ச்சி விதிகள் கா. மார்க்சாலும் பி. எங்கெல்சாலும் கண்டறியப் பட்டதனுல் தனி மனிதனுடையவும் மனித குலத்தினுடையவும் நலன்களுக்காக சமூக நிகழ்முறைகளை விஞ்ஞான முறையில் செலுத்துவதற்கான திறவுகோல் கிடைத்தது. நாம் மேலே பார்க்கப் போவது போல, தனியார் சொத்துரிமை ஒழிந்து சமூகச் சொத்துரிமை நிலைபெற்ற பின்பே இவ்வாறு செலுத்துவது சாத்தியம் ஆகும்.

முதலாளித்துவத்தின் இடத்தில் சோஷலிசம் போராட்டம் இல்லாமல் தானுக வந்து விடாது. முதலாளித்துவத்தின் அழிவும் நியாயமான சமூக அமைப்பு நிலைபெறுவதும் புறநிலை விதிகளின் செயல்பாட்டின் விளைவு மட்டும் அல்ல, மனிதர்களின் அகநிலையான நடவடிக்கைகளின் விளைவும் ஆகும். உணர்வு பூர்வமாக, குறிக்கோள் முனைப்புடன் சமூ

கம் மாற்றி அமைக்கப்படுவதன் விளைவு ஆகும் அது. முதலாளித்துவத்தை ஒழிப்பது, புதிய, சோஷலிசச் சமூகத்தை நிறுவும் வேலையைத் தொடங்குவதற்கு இன்றியமையாத நிபந்தனை ஆகும்.

ஒப்பு நோக்கில் பெரிய அளவில் உற்பத்தியைச் செயல்படுத்தும் எந்த சமூகத்துக்கும் நிர்வகிப்பது அவசியமாக இயல்பானது என்று கா. மார்க்சும் பி. எங்கெல்சும் செய்த வரலாற்றுப் பகுப்பாய்வு காட்டியது. எனவே, முதலாளித்துவத்தின் நிலைமைகளிலும் அது இடம் பெற்றுள்ளது.

கா. மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''ஒப்பு நோக்கில் பெரிய அளவில் செய்யப்படும் நேரடியாகச் சமூகத் தன்மை கொண்ட அல்லது கூட்டான எந்த உழைப்புக்கும் பெரிய அல்லது சிறிய அளவில் நிர்வாகம் தேவைப்படுகிறது. இது தனி நபர்களின் வேலைகளுக்கு இடையே இசைவை ஏற்படுத்தி, உற்பத்தி உறுப்பமைவின் சுதந்திரமான பகுதிகளின் இயக்கத்திலிருந்து வேறுக மொத்த உறுப்பமைவின் இயக்கத்திலிருந்து தோன்றும் பொதுச் செயல்களை நிறைவேற்றுகிறது. தனியாக வயலின் வாசிப்பவன் தன்னைத் தானே இயக்கிக் கொள்கிறுன். இசைக் குழுவுக்கோ, இயக்குநர் தேவைப்படுகிறுர்.''*

அதே சமயம், முதலாளித்துவத்தில் நிர்வாகத்தின் செயற்களம் அளவறுத்ததாக, குறுகியதாக இருப்பதை அவர்கள் அழுத்திக் காட்டினுர்கள். ஒரு நாட்டிலோ அல்லது நாடுகளின் தொகுப்பிலோ தனித் தனித் தொழிலகங்களின் அல்லது பொருளாதாரத்தின் முழு முழுத் துறைகளுடைய வேலையைக் கூட எடுத்துக்காட்டான முறையில் சீரமைத்த போதிலும் சமுதாய பொருளாதார நிகழ்முறைகளையும் சமூகம் அனைத்தினுடைய வளர்ச்சியையும் இயக்கி நடத்த முதலாளித்துவ வர்க்கம் திறன் அற்றது. இதற்குக் காரணம் தனியார் சொத்துரிமையின் ஆதிக்கமும் சந்தையின் ஒழுங்கீனமும், அராஜகம் மற்றும் போட்டியின் விதிகளும் ஆகும். சமூகம் முழுவதன் வளர்ச்சியும் குறிக்கோள் முனைப்புடன் திட்டப்படி இயக்கப்படுவதை இவை அசாத்தியம் ஆக்குகின்றன.

---

* கா. மார்க்சும் பி. எங்கெல்சும், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 342 (ருஷ்யனில்).

சோஷலிசப் புரட்சி வெற்றி அடைந்து, தனியார் சொத்துரிமை அகற்றப்பட்டு, தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் உற்பத்தி சமூகமயமாக்கப்பட்ட பிறகே சமுதாய நிகழ்முறைகள் விஞ்ஞான நோக்கில் இயக்கப் படுவது சாத்தியம் ஆகும். சோஷலிசப் பாங்கில் மாற்றி அமைப்பது நிறைவு பெறும் போதுதான் ஒழுங்கீனம் அகற்றப் பட்டு உற்பத்தி, சமூக வாழ்வின் மற்ற துறைகள் ஆகிய வற்றின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு வகை செய்யப்படுகிறது.

சோஷலிஸ்டு கற்பனைவாதிகள் வெறுமே எழுப்ப மட்டும் செய்த அடிப்படைப் பிரச்சினைகளை கா. மார்க்சும் பி. எங்கெல்சும் கண்டிப்பான விஞ்ஞான அடிப்படையில் தீர்த் தார்கள் என்பதைக் காண்கிறோம். முதலாவதாக, முத லாளித்துவத்தின் அழிவும் சோஷலிசத்தின் வெற்றியும் தவிர்க்க முடியாதவை என்பதை, வெறும் ஊகப் புனைவுகளின் பேரில் இன்றி, சமூக வளர்ச்சிக்குரிய உண்மையான விதிகளின் அடிப் படையில், முதலாளித்துவத்தின் எதார்த்தமான இயக்க இயலைப் பகுத்து ஆராய்ந்ததன் மூலம் அவர்கள் காட்டினார் கள். இரண்டாவதாக, மற்ற உழைப்பாளி வெகுஜனங்களுடன் ஒன்று சேர்ந்து முதலாளித்துவத்தை ஒழித்து, புதிய, சோஷலிச சமூகத்தை நிலைநாட்டுவதைக் கடமையாகக் கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் மகத்தான வரலாற்றுப் பணியை அவர்கள் புலப்படுத்தினார்கள். மூன்றாவதாக, முத லாளித்துவத்தை ஒழிப்பதற்கும் புதிய சமூகத்தை நிலை நிறுத்துவதற்கும் ஏற்ற வழியை—வர்க்கப் போராட்டத்தையும் சோஷலிசப் புரட்சியையும்—அவர்கள் காட்டினார்கள். நான்கா வதாக, மனிதனுடைய சமுதாய இயல்பையும் சமூக உறவுகளின் தொகுப்பில் அவனுடைய இடத்தையும் வெளிப்படுத்தி, மனிதனுடைய வளர்ச்சிப் போக்கைப் புலப்படுத்தினார் கள். கம்யூனிச சமூகம் தானே குறிக்கோள் அல்ல, உழைப் பாளிக்கு விடுதலை அளித்து அவனது சர்வாம்ச வளர்ச்சிக்கு வகை செய்வதற்கான சாதனம் மட்டுமே என்றும், மனிதனே கம்யூனிசத்தின் இறுதிக் குறிக்கோள் என்றும் தெளிவுபடுத் தினார்கள். ஐந்தாவதாக, சமுதாய நிகழ்முறைகள் செலுத்தப் படக் கூடியவை, மனிதர்களின் சித்தத்துக்குக் கட்டுப்படு பவை, புரட்சி வாயிலாக முதலாளித்துவத்தைக் கவிழ்த்தி, சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிறுவுவதும் சமூக

வளர்ச்சியை உணர்வுபூர்வமாக, குறிக்கோள் முனைப்புடன் செலுத்தும் செயல்முறையே, முதலையின் உண்மையான ஆட்சிக்குத் தனி மனிதனையும் மனித குலத்தையும் இட்டுச் செல்லும் செயல்முறையே ஆகும் என்று அவர்கள் நிரூபித்தார்கள்.

விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தத்தின் இன்னும் ஒரு சிறப்பியல்பையும் குறிப்பிடுவது அவசியம். அதுதான் புரட்சிச் செயலுடன், நடைமுறையுடன் அதன் பிரிக்க முடியாத தொடர்பு.

### சித்தாந்தத்துக்கும் புரட்சிச் செயலுக்கும் உள்ள ஒற்றுமை

சோஷலிஸ்டு கற்பனைவாதிகளுக்கு மாறாக, கா. மார்க்சும் பி. எங்கெல்சும் சித்தாந்தவாதிகளாக மட்டும் இல்லாமல், தொழிலாளி வர்க்கத்தின், உழைப்பாளி மக்கள் அனைவரதும் வளர்ந்து கொண்டு வந்த புரட்சி இயக்கத்தின் தலைவர்களாகவும் இருந்தார்கள். ஒடுக்கப்பட்ட வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் நிலைகளில் இருந்து கொண்டு கா. மார்க்சும் பி. எங்கெல்சும் உருவாக்கிய சித்தாந்தம், முதலாளித்துவத்துடனும் மனிதனைத் தாழ்த்தி விகாரப்படுத்திய சமுதாய நிலைமைகளுடனும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தில் அதன் ஆன்மிக ஆயுதமாகவும், மனிதனின் பொருட்டு மனிதனால் நடப்பு நிலைமை மாற்றி அமைக்கப்படுவதற்கு உதவும் விறல் மிக்க கருவியாகவும் விளங்குகிறது.

விஞ்ஞானத்தை மட்டும் இன்றி, சமூக வரலாற்று நடைமுறையையும் வெகுஜனங்களின் புரட்சிச் செயலையும் ஆழ்ந்து ஆராய்ந்து பொதுமைப்படுத்தியதன் விளைவு ஆகும் விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தம். வெகு ஜனங்களின் புரட்சிச் செயலிலோ, இந்த சித்தாந்தத்தின் கர்த்தர்கள் ஊக்கத்துடன் நேர்முகமாகப் பங்கு கொண்டார்கள்.

கா. மார்க்சும் பி. எங்கெல்சும் 1847ம் ஆண்டில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தை நிறுவினார்கள். தனித்தனியே சிதறி இருந்த கம்யூனிஸ்டுக் குழுக்களை ஒன்றுபடுத்துவதும், தொழிலாளர்களுக்கு அரசியல் கல்வி புகட்டுவதும் கம்யூனிசக் கருத்துக்களைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு உதவுவதும் சங்கத்தின் பணிகளாக வைத்துக் கொள்ளப்பட்டன. சங்கம் கேட்டுக் கொண்டதன் பேரில் கா. மார்க்சும் பி. எங்கெல்சும்

கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையை எழுதினார்கள். இதனால் விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தத்தின் பிறப்பு பிரகடனம் செய்யப்பட்டது. இது வெறும் சித்தாந்த ஆவணமாக மட்டும் இல்லாமல், உலகின் முதலாவது கம்யூனிஸ்டுக் கட்சியின் முதலாவது செயல்திட்டமாகவும் விளங்கியது. புதிய போதனை யின் சாரத்தை வெறுமே விளக்கியதோடு நில்லாமல், மனிதனுடைய விடுதலைக்கான போராட்டத்திற்காக ஒன்று சேரும்படியும் புரட்சி மூலம் முதலாளித்துவத்தை ஒழிக்கும் படியும் அது உழைப்பாளிகளை அறைகூவி அழைத்தது.

நிர்ணயகரமான தருணத்தில் பாட்டாளி வர்க்கம் போதிய வலிமை உள்ளதாக இருந்து வெற்றி பெற வல்லது ஆவதற்கு, தனது தனிப்பட்ட அரசியல் கட்சியை அது நிறுவ வேண்டும் என்று கா. மார்க்சும் பி. எங்கெல்சும் அறிக்கை யில் எழுதினார்கள். இந்தக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கும், கம்யூனிசக் கருத்துக்களைத் தொழிலாளர்களிடையே பரப்பும், அவர்களுடைய நடை முறைப் புரட்சிப் போராட்டத்தை ஒழுங்கமைத்து வழி காட்டி நடத்தும் என்று அவர்கள் விளக்கினார்கள்.

கா. மார்க்சும் பி. எங்கெல்சும் 1864 செப்டெம்பரில் முதலாவது அகிலத்தை நிறுவினார்கள், அதை வழிகாட்டி நடத்தினார்கள். தொழிலாளர்களின் சர்வதேசக் கழகமான இது ஐரோப்பாவின் அனேக நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி களை உலகில் முதல் தடவையாக ஒன்றிணைத்தது. 1872ல் ஆண்டு வரை தொடர்ந்து நிலவி வந்த முதலாவது அகிலம், முதலாளித்துவத்துக்கு எதிராகப் புரட்சிப் போராட்டத் துக்கு ஆயத்தங்கள் செய்வதற்காகத் தொழிலாளி வர்க்கத் தின் சர்வதேச நிறுவனத்திற்கு அடி கோலியது.

உழைப்பாளி மக்களின் புரட்சி நடவடிக்கைகளைக் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் ஆழ்ந்த கவனத்துடன் நோக்கி வந்தார்கள். உதாரணமாக, 1848-1849ம் ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பாவில் நடந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகளின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, முத லாளித்துவக் குடியரசு உழைப்பின் மீது மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டும் என்று தொழிலாளி வர்க்கம் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கக் கூடாது என்று அவர்கள் எழுதினார்கள். முதலாளித்துவப் புரட்சியை அடுத்துப் பாட்

டாளி வர்க்கப் புரட்சி நடக்கலாம் என்றும் அதுதான் உழைப்பாளிக்கு விடுதலை தரவல்லது என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். புரட்சிகளின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்திய தன் விளைவாக, முதலாளித்துவ அரசு இயந்திரத்தை உடைப்பது இன்றியமையாதது என்ற முடிவுக்குக் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் வந்தார்கள். முதலாளி வர்க்கத்தின் ''உடைபட்ட'' அரசு இயந்திரத்தின் இடத்துக்கு எதைக் கொண்டு வருவது என்ற கேள்விக்கு விடையை நடைமுறை, வெகு ஜனங்களின் புரட்சி அனுபவம் கா. மார்க்சுக்கும் பி. எங்கெல்சுக்கும் அளித்தது. பாரிஸ் நகரின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் 1871ம் ஆண்டில் உலகின் முதலாவது பாட்டாளி வர்க்கப் புரட்சியை நிறைவேற்றி, உழைப்பாளிகளின் அரசை—பாரிஸ் கம்யூனை—நிலைநாட்டி, வருங்கால அரசின் முன் மாதிரியை அளித்தது. பழைய சமூகத்திலிருந்து புதியதற்குப் பரிணமிப்பைச் செயல்படுத்த வல்லது அந்த அரசு.

அழுகிப் பதன் கெட்டுப் போன மூலதனத்தின் பழைய உலகுக்கு முடிவு கட்டி விட்டு உழைப்பாளியின் ஆதிக்கத்தை நிலைநாட்டப் பாரிஸ் கம்யூன்காரர்கள் நடைமுறையில் முயற்சி செய்தார்கள். மனிதனை மனிதன் சுரண்டும் வழக்கத்தை ஒழித்து விட்டு, எல்லோருக்கும் உழைப்பு கட்டாயம் என்பதை நிலையான கோட்பாடாக உயர்த்த விரும்பினார்கள். ஆனால் பல காரணங்களால், முதன்மையாக ஒழுங்கமைப்பிலும் சித்தாந்தத்திலும் பாட்டாளி வர்க்கத்தின் முதிர்ச்சி இன்மை காரணமாகவும் வலுவான கட்சியும் விவசாயி வெகு ஜனங்களோடு தொடர்பும் இல்லாததாலும் கம்யூன் தோல்வி அடைந்ததது. ஆயினும், விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தத்துக்கும் நடைமுறைக்கும் அதன் முக்கியத்துவம் மதிப்பிட முடியாதது.

## 3. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் வளர்ச்சியில் லெனின் காலக்கட்டம்

**விஞ்ஞானக் கம்யூனிசத்தின் படைப்புத் தன்மை**

மொத்தத்தில் மார்சியம் எப்படியோ, அப்படியே விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தம் வளர்ச்சி அடைந்து வருகிற, படைப்புத் தன்மை உள்ள விஞ்

ஞானம் ஆகும். நடப்பு நிலையை ஆராய்வது, முதலாளித்துவ உலகிலும் சோஷலிச உலகிலும் நடக்கும் நிகழ்முறைகளை ஆழ்ந்து சோதித்து அறிவது, புரட்சி நடைமுறையின் அடிப்படையில் சித்தாந்த முடிவுகளை வளர்ப்பது, செப்பம் செய்வது ஆகியவை விஞ்ஞானக் கம்யூனிசத்துக்கு இயல்பான பண்புகள்.

முதலாளித்துவம் ஏற்றம் பெற்றுக் கொண்டிருந்த நிலைமைகளில் தோன்றியது விஞ்ஞானக் கம்யூனிசம். ஆனால் 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வரலாற்று நிலைமைகள் மாறிவிட்டன. முதலாளித்துவம் வளர்ந்து தனது கடைசிக் கட்டமான ஏகாதிபத்தியத்தை அடைந்து விட்டது. பொருளாதார, சமுதாய முரண்பாடுகள் ஏகாதிபத்தியத்தின் நிலைமைகளில் முன் ஒருபோதும் இல்லாத அளவு கூர்மை அடைந்தன. புதிய நிலைமைகளின் காரணமாக முதன்மையான சமுதாயப் பிரச்சினைகளின் தீர்வுக்குப் புதிய அணுகுமுறையை மேற்கொள்வதும் மார்க்சியத்தைப் படைப்பு நோக்குடன் வளர்ப்பதும் அவசியம் ஆயின. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்தினுடைய புது அனுபவத்தையும், தேசிய விடுதலை இயக்கம், ஜனநாயக இயக்கங்கள் ஆகியவற்றின் அனுபவத்தையும் மிக நவீன விஞ்ஞான-தொழில்நுட்பச் சாதனைகளையும் பொதுமைப்படுத்துவது இன்றியமையாததாக இருந்தது.

சர்வதேசப் புரட்சி இயக்கத்தின், சிறப்பாகத் தொழிலாளர் இயக்கத்தின் மையம் 19ம் நூற்றாண்டின் முடிவிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ருஷ்யாவுக்கு மாறலாயிற்று. அங்கே முதலாளித்துவம் விரைவாக வளர்ந்து வந்தது, தொழிலாளி வர்க்கம் உருவாகிக் கொண்டிருந்தது. இதன் கருவாக விளங்கிற்று இயந்திரத் தொழிற்சாலைப் பாட்டாளி வர்க்கம். உழைப்பாளி மக்கள் கொடுமையாகச் சுரண்டப்பட்டு, உரிமைகள் இன்றி இருந்தது, தேசியச் சிறுபான்மையினரின் ஒடுக்கப்பட்ட நிலை, நிலப்பிரபுத்துவ பண்ணையடிமை முறையினதும் தந்தை வழி ஆட்சி முறையினதும் மீதமிச்சங்கள், நாடு உலக முதலாளித்துவத்தைச் சார்ந்திருந்தது—இவை எல்லாம் ருஷ்யாவை ஐரோப்பிய ஏகாதிபத்திய அமைப்பு அனைத்தினுடையவும் முரண்பாடுகளது சந்திப்பு மையம் ஆக்கி இருந்தன. மார்க்சியம், விஞ்ஞானக் கம்யூனிசம் ஆகியவற்றின் படைப்புத் தன்மையுள்ள அடுத்த

வளர்ச்சி, ருஷ்ய, சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின், உழைப்பாளிகள் எல்லோருடையவும் மாபெரும் தலைவரான **விளதீமிர் இலியீச் லெனினது** *(1870-1924)* பெயருடன் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கிறது.

மார்க்சியத்தின் வளர்ச்சியில் வி. இ. லெனினுடைய செயல் மிக மிகப் பெரிதும், பல வகைப்பட்டதுமாக இருப்பதால் கம்யூனிசக் கருத்துக்களின் வளர்ச்சியில் ஒரு முழுக் கட்டமாக அது விளங்குகிறது.

**விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தகர்த்தர்**

வி. இ. லெனினுடைய சித்தாந்தச் செயல் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்துடனும் சோவியத் யூனியனில் சோஷலிசக் கட்டுமான நடைமுறையுடனும் பிரிக்க முடியாதபடி இணைந்திருந்தது. லெனின் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தத்தை வளர்த்தார், ஏராளமான புதிய சித்தாந்தப் பிரச்சினைகளை எழுப்பி அவற்றுக்குத் தீர்வு கண்டார், இவற்றோடு நில்லாமல், விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கோட்பாடுகளை நடைமுறையில் செயல்படுத்துவதற்கும் வழிகாட்டி வந்தார். சோவியத் யூனியனில் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டி அமைப்பதற்கான திட்டம் வி. இ. லெனினது தலைமையில் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயலாக்கி வந்த மக்களுக்கும் கட்சிக்கும் தம் வாழ்நாளின் முடிவுவரை தலைமை தாங்கி நடத்தி வந்தார் லெனின்.

சமூகத்தைப் புரட்சி மூலம் மாற்றி அமைக்கும் உடனடியான பணியை, முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தைக் கட்டி அமைக்கும் பணியை, புதிய வரலாற்றுக் காலக் கட்டம் தொழிலாளி வர்க்கத்தின் முன்னும் அதன் மார்க்சியக் கட்சியின் முன்னும் வைத்தது. ஆகையால் தான், சமூக வளர்ச்சிக்கு உரிய விதிகளையும் முதன்மையாக ஏகாதிபத்தியத்தின் இயல்பையும் அதன் மிகக் கூர்மையான முரண்பாடுகளையும் பகுத்து ஆராய்வதிலும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளையும் சாதனங்களையும் திட்டமிடுவதிலும் வி. இ. லெனின் சிறப்பாக நிறையக் கவனம் செலுத்தினர். சோஷலிசப் புரட்சி பற்றிய சித்தாந்தத்தை அவர் வளர்த்தார். தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிச இயக்கத்தோடு கூடவே தேசிய விடுதலை இயக்கத்தையும் பல வகையான ஜனநாயக

இயக்கங்களையும் உள்ளடக்கிய நவீன உலகப் புரட்சி நிகழ்முறை சம்பந்தமான பிரச்சினைகளை விரிவாக விளக்கினார்.

தேசிய விடுதலை இயக்கத்தின் பல பிரபலத் தலைவர்கள் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் மிகப் பெருத்த முக்கியத்துவத்தை மறுபடி மறுபடி குறிப்பிட்டிருக்கிறார்கள். தங்களது கொள்கைவாத அரசியல் நோக்கின் மீது அது பாதிப்பு விளைத்ததாகவும் தங்கள் மக்களுடைய போராட்டத்தின் வரலாற்று ரீதியான வருங்கால வாய்ப்பைப் புரிந்து கொள்ளத் தங்களுக்கு அது உதவியதாகவும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். உதாரணமாக, ஜவாகர்லால் நேரு லெனினை ''சகாப்தத்தின் தலைசிறந்த மனிதர்'' என்று குறிப்பிட்டு, லெனினது படைப்புக்களை—மார்க்சின் நூல்களைப் போலவே—பயின்றது வரலாற்றையும் தற்கால வாழ்க்கையையும் புதிய ஒளியில் காணத் தமக்கு உதவியதாகச் சொல்லுகிறார்.* மார்க்சியம் ''நம் கால சமுதாய நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள நமக்கு உதவி, செயல் ஆற்றுவதற்கான, மீட்சிக்கான வழியைக் காட்டுகிறது'' என்றும் அவர் எழுதி இருக்கிறார்.**

உழைப்பாளியே வி. இ. லெனினது கவனத்தின் மையமாக எப்போதும் இருந்து வந்தான். அவனுடைய விடுதலைக்கும், அவன் தன்மதிப்பும் வளர்ச்சியும் பெறுவதற்கும் ஏற்ற வழிகளைத் தேடுவதிலேயே அவருடைய கவனம் ஈடுபட்டிருந்தது. லெனினுடைய நோக்கில் புதிய சமூகம் தானே குறிக்கோளாக இருக்கவில்லை, மனிதனுடைய விடுதலைக்கும் செவ்வைப்பாட்டுக்கும் ஏற்ற நிலைமையாக, சாதனமாக மட்டுமே இருந்தது. பொருளாதாரத்தையும் விஞ்ஞான, தொழில் நுட்பச் சாதனைகளையும் உழைப்பாளிக்குத் தொண்டாற்றும்படி எப்படி வைப்பது, சமுதாய உறவுகளை உழைப்பாளிகளின் நலன்களுக்கு ஏற்ப எப்படிச் செவ்வைப்படுத்துவது, மனிதனுடைய அறிவு முழு மலர்ச்சி பெறவும், அவனுடைய அளவற்ற படைப்பு வாய்ப்புக்கள் அதிகபட்ச வளர்ச்சி பெற்று வெளிப்படவும் வகை செய்யும் விதத்தில் சமூகத்தின்

---

* J. Nehru, *The Discovery of India*, New-York, 1946, p. 13.

** J. Nehru, *Autobiography*, London, 1949, p. 592.

ஆன்மிக வாழ்வை எப்படி ஒழுங்கமைப்பது என்பதிலேயே அவர் அக்கறை செலுத்தி வந்தார்.

சோஷலிசப் புரட்சி பற்றிய சித்தாந்தம் வி. இ. லெனினுடைய ஆராய்ச்சிகளில் மிக முக்கியமான இடம் வகிக்கிறது. விஞ்ஞானக் கம்யூனிசத்துக்கு ஆகப் பெரிய பங்களிப்பாக விளங்கிற்று இது. அரசியல் ஆட்சி அதிகாரத்துக்காகவும் சமுதாய விடுதலையின் பொருட்டும் முதலாளித்துவத்துக்கு எதிராக நடத்திய போராட்டத்தில் உழைப்பாளிகளுக்குக் கொள்கைவாத ஆயுதம் பூட்டியது இந்த சித்தாந்தம்.

**வி. இ. லெனின் சோஷலிசப் புரட்சி பற்றிய சித்தாந்தத்தை வளர்த்தல்**

முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாட்டை— உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உரித்தாக்கிக் கொள்வதன் தனியார் வடிவத்துக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை — வி. இ. லெனின் முதன்மையாக வெளிப்படுத்தி, ஏகாதிபத்தியத்தின் நிலைமைகளில் இந்த முரண்பாடு முன் ஒருபோதும் இல்லாத அளவு கூர்மை அடைகிறது என்று சான்று காட்டினார். ஏகாதிபத்தியத்தில் ''உற்பத்தியானது மிக விரிவான அளவில் சமூகமயமாக்கப்படுவதற்கு இட்டுச் செல்கிறது'' என்று எழுதினார் லெனின். ஆனால் வினியோகத்தின் தனியார் சொத்துரிமைக் கோட்பாட்டை அது கடைப்பிடித்து வருகிறது. தனியார் பொருளாதார, தனியார் சொத்துரிமை உறவுகளோ, ''உள்ளடக்கத்துக்குப் பொருந்தாமல் போய்விட்ட மேல்தோல் தான். உள்ளடக்கம் தவிர்க்க முடியாதபடி அழுகித் தீர வேண்டும்... ஆயினும் அது தவிர்க்க முடியாதபடி நீக்கப்பட்டு விடும்.''* இதனால் தெரிவது என்ன என்றால் ஏகாதிபத்தியம் சோஷலிசப் புரட்சிக்கு முந்திய கட்டம் என்பதாகும். ஏகாதிபத்தியத்தின் நிலைமைகளில் சோஷலிசப் புரட்சி சாத்தியம் மட்டும் அல்ல, இன்றியமையாததும் தவிர்க்க முடியாததும் கூட. அது இன்றைய உடனடிப்பணியாகத் தொழிலாளி வர்க்கத்துக்கு முன் நிற்கிறது.

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, இரண்டாம் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கங்கள் 39, 205.

தனியாக எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு நாட்டில் சோஷலிசத்தின் வெற்றி முதன் முதலில் சாத்தியம் என்ற லெனினது உரை சோஷலிசப் புரட்சி பற்றிய லெனினுடைய சித்தாந்தத்தின் யாவற்றிலும் முக்கியமான பகுதியாக விளங்குகிறது. இந்த முடிவுக்குச் சான்றுகள் காட்டுகையில், முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சி மிக மிக ஒருசீரின்றி பாய்ச்சல்களில் நிகழ்வதை லெனின் அடிப்படையாகக் கொண்டார். முன்பு பின்தங்கி இருந்த சில நாடுகள் பொருளாதார, அரசியல் துறைகளில் முன்னணி நாடுகளை எட்டிப் பிடித்து முந்தியும் விடுகின்றன. சக்திகளின் சமநிலை குலைகிறது, மோதல்கள் ஏற்படுகின்றன, முதலாளித்துவ நாடுகளின் ஒன்றித்த அணி பலவீனம் அடைகிறது. விளைவாக உலக முதலாளித்துவத்தின் நிலைகள் பலம் குன்றுகின்றன. ஏகாதிபத்தியச் சங்கிலியை அதன் ஆகப் பலவீனமான கணுவில் ஊடறுப்பதற்கு ஏற்ற வாய்ப்பு தோன்றுகிறது.

வி. இ. லெனின் எழுதினார்: ''முதலாளித்துவத்தின் வளர்ச்சி வெவ்வேறு நாடுகளில் ஆக உயர்ந்த அளவு ஒருசீரின்றி நடைபெறுகிறது. பண்ட உற்பத்தியில் வேறு விதமாக இருக்கவும் முடியாது. இதனால் பெறப்படும் மறுக்க முடியாத முடிவு, சோஷலிசம் ஒரே நேரத்தில் எல்லா நாடுகளிலும் வெல்ல முடியாது என்பதாகும். முதன் முதலில் அது ஒரு அல்லது சில நாடுகளில் வெற்றி பெறும். மற்றவை கொஞ்ச காலத்துக்கு முதலாளித்துவ அல்லது முதலாளித்துவத்துக்கு முந்திய நிலையில் இருந்து வரும்.''*

சோஷலிசப் புரட்சி பற்றிய மார்க்சிய சித்தாந்தத்தை விரிவாக்குகையில் வி. இ. லெனின் தம் காலத்து உலகின் மிகச் சிக்கலான காட்சியைக் கணக்கில் எடுத்துக் கொண்டார்: முதலாளித்துவ நாடுகள் மட்டும் இன்றி, முதலாளித்துவ ஜனநாயகத் தன்மை கொண்ட நோக்கங்கள் இன்னமும் நிறைவேறாத முதலாளித்துவத்துக்கு முந்திய நாடுகளும் காலனி நாடுகளும் இருந்தன, ஒவ்வொரு நாட்டிலும் மிக மிக வெவ்வேறான வர்க்கங்களும் சமுதாயக் குழுக்களும் இத்தகைய பிறவும் இருந்தன. இந்த நிலையை அடிப்படையாகக்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 133 (ருஷ்யனில்).

கொண்டு, ஏகாதிபத்தியக் காலக்கட்டத்தில் ''தூய'' சோஷலிசப் புரட்சிகள் நிகழ முடியாது என்ற முடிவுக்கு அவர் வந்தார். ஓர் இடத்தில் ஒரு படை அணிவகுத்து, ''நாங்கள் சோஷலிசத்தை ஆதரிக்கிறோம்'' என்று சொல்லும், இன்னோர் இடத்தில் இன்னொரு படை அணிவகுத்து, ''நாங்கள் ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கிறோம்'' என்று சொல்லும்— இதுவே சமுதாயப் புரட்சியாக விளங்கும் என எண்ணக் கூடாது என்று எழுதினார் லெனின். இந்த மாதிரித் ''தூய'' சமுதாயப் புரட்சியை எதிர்பார்ப்பவர் அதை ஒருபோதும் காண மாட்டார். அவர் சொல்லளவில் மட்டுமே புரட்சியாளர், செயலில் அல்ல. ''ஒடுக்கப்பட்டவர்கள், அதிருப்தி கொண்டவர்கள் அனைவரதும் எல்லா விதமானவர்களதும் வெகுஜனப் போராட்டத்தின்''* வெடிப்பு என்று புரட்சி நிகழ்முறையை உருவகப்படுத்தினார் வி. இ. லெனின். தொழிலாளர் இயக்கத்தையும் விவசாயிகள் இயக்கத்தையும் தேசிய விடுதலை இயக்கத்தையும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான வெவ்வேறு வித ஜனநாயக இயக்கங்களையும் உள்ளடக்கி இருக்கிறது இந்த நிகழ்முறை.

எந்த நாட்டிலும் ஏற்படும் எல்லா விதமான புரட்சி வெடிப்பும் சோஷலிச வெடிப்பாக இருக்க வேண்டும் என்று வி. இ. லெனின் கருதவே இல்லை. ஆனால் அனேக நாடுகளில் இத்தகைய வாய்ப்பு இருப்பதையும் அவர் மறுக்கவில்லை. முதலாளித்துவத்துக்கு முந்திய கட்டத்தில் உள்ள நாடுகளிலும் காலனிகளிலும் அல்லது நிலப்பிரபுத்துவ மீத மிச்சங்கள் வலுவாய் இருக்கும் நாடுகளிலும் முதலாளித்துவ ஜனநாயக மாற்றங்கள் இன்னும் நிறைவு பெறாத நாடுகளிலும், சோஷலிசப் புரட்சிக்கு முன்னர் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியோ, தேசிய விடுதலைப் புரட்சியோ நடக்கக் கூடும். சாதகமான நிலைமைகளில் இது சோஷலிசப் புரட்சியாக வளர்ச்சி பெறும். வெற்றி பெற்ற சோஷலிசம் மற்ற நாடுகளில் நிலவும் போது, முதலாளித்துவத்துக்கு முந்திய கட்டத்தில் உள்ள நாடுகளில் முதலாளித்துவம் அற்ற வளர்ச்சி சாத்தியம் என்ற கருத்தையும் வி.இ.லெனின் வெளியிட்டார்.

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 54 (ருஷ்யனில்).

## உலக முழுவதன் கம்யூனிஸ்டுகளுடைய தலைவர்

வி. இ. லெனின் புரட்சிகரக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியவர். தொழிலாளி வர்க்கத்தின் யாவற்றிலும் உணர்வு பூர்வமான, யாவற்றிலும் ஒழுங்கமைந்த படைப் பிரிவாக விளங்கும் கட்சிதான் முன்னணிப் புரட்சி சித்தாந்தத்தாலும் புரட்சி இயக்கத்தின் போர்த்தந்திரத்தாலும் செயல்தந்திரத்தாலும் அதை ஆயுதபாணி ஆக்குகிறது என்று வி. இ. லெனின் கருதினார். கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் ருஷ்யாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் முதலாளித்துவத்தை ஒழித்து, உலகின் முதலாவது சோஷலிச அரசை நிறுவினார்கள்.

வி. இ. லெனின் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்துக்குத் தலைவராய் இருந்ததோடு உலகு அனைத்தின் உழைப்பாளிகளுடைய தலைவராகவும் திகழ்ந்தார். சமூக-சீர்திருத்த வாதத்தின் துரோகத் தன்மையை அம்பலப்படுத்திய வி. இ. லெனின் கம்யூனிச இயக்கத்தின் சர்வதேச இயல்பை வலியுறுத்தி அனைத்துலக அளவில் கம்யூனிஸ்டுச் சக்திகளை ஒன்றுபடுத்துவதற்காகப் போராடி வந்தார்.

1917ம் ஆண்டு அக்டோபர் புரட்சியினது வெற்றியின் செல்வாக்கினால் புதிய கம்யூனிஸ்டுக் குழுக்களும் கட்சிகளும் ருஷ்யாவில் தோன்றி வலுவடைந்தன. இவை மூன்றாவது அகிலத்தின் முதல் (சட்ட அமைப்புக்) காங்கிரசுக்காக இளம் சோவியத் அரசின் தலைநகரான மாஸ்கோவில் 1919ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2 முதல் 6ந் தேதிவரை கூடின. மூன்றாவது அகிலம் உலகக் கம்யூனிச இயக்கத்தில் சிறந்த பங்கு ஆற்றியது.

இந்தியப் புரட்சியாளரான மானவேந்திர நாத் ராய் (எம். என். ராய்) இந்தியாவில் மறைமுகப் புரட்சிக் குழுக்களின் நடவடிக்கைகளில் பங்காற்றிக் கொண்டிருந்த பிறகு, நாடு கடந்து ஜப்பானிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் மெக்சிகோவிலும் தங்கி இருந்தவர், மெக்சிகோ கம்யூனிஸ்டுக் கட்சியின் உரிமைச் சீட்டு பெற்று நாடுகடந்த புரட்சியாளர்களின் மையமான பெர்லின் வழியாக கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் பிரதிநிதியாக 1920ம் ஆண்டில் மாஸ்கோவை அடைந்தார். கிழக்கு நாடுகள் கமிஷனின் தலைவர்களில் ஒருவராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார்.

காங்கிரஸ் வேலை முடிந்த பிறகு எம். என். ராய் தாஷ்கெந்து சென்றார். இந்தியக் கம்யூனிஸ்டுகளின் முதலாவது நாடுகடந்த குழுவை அமைப்பதில் இங்கே அவர் பங்கு எடுத்துக் கொண்டார்.

நாடுகடந்த கம்யூனிஸ்டுக் குழுக்களை ஒழுங்கமைப்பதில் எம். என். ராயுடன் சேர்ந்து பெரும் பங்கு ஆற்றினார் ஏ. முகர்ஜி. இவர் பெர்லினில் இருந்த இந்தியப் புரட்சிக் கமிட்டியின் பிரதிநிதியாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் கலந்து கொண்டார்.

இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கம் பற்றியும், நாட்டில் நிலவிய பொருளாதார, அரசியல் நிலைமை பற்றியும் நூல்களையும் சிற்றேடுகளையும் கட்டுரைகளையும் எம். என். ராயும் ஏ. முகர்ஜியும் இருபதுக்களில் வெளியிட்டு வந்தார்கள். இந்த எல்லாப் பிரசுரங்களும் சட்ட விரோதமான மறைமுக வழிகளில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. அந்நாட்டில் மார்க்சியத்தைப் பரப்புவதிலும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவ முன்னேற்பாடுகள் செய்வதிலும் இவை பெருத்த பங்கு ஆற்றின.

1922ம் ஆண்டில் பம்பாய் கம்யூனிஸ்டுகளின் ஒரு குழுவினர் ஸ்ரீபாத அமிர்த டாங்கே (எஸ். ஏ. டாங்கே)யின் தலைமையில் ''தொழிலாளர் அச்சகம்'' நிறுவினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையும் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூல ஆசான்களது பிற படைப்புக்களும் இந்தியாவில் முதல் தடவையாக இந்த அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டன. இந்தியாவின் முதலாவது மார்க்சிய வார ஏடான சோஷலிஸ்டு என்பதை டாங்கே அப்போதுதான் ஆங்கில மொழியில் வெளியிடத் தொடங்கினார்.

இந்தியாவில் மார்க்சியத்தைப் பரப்புவதிலும் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நிறுவனத்தை அமைப்பதிலும் எம். என். ராயின் செயல் மிகுந்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. ஆனாலும், கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தேசிய, காலனிப் பிரச்சினையில் வி. இ. லெனினுடன் அவரது கருத்து வேற்றுமையில் சிறப்பாக வெளிப்பட்ட, கீழை நாடுகளில் புரட்சி பற்றிய மதிப்பீட்டில் அவர் கொண்டிருந்த குறுகிய குழுக் கண்ணோட்டங்கள், விடுதலை இயக்கத்தில் தேசிய முதலாளி வர்க்கத்தின் பாத்திரத்தை அவர்

மறுத்தது முதலியவை இருபதுக்களில் இந்தியாவில் உருவான கம்யூனிஸ்டுக் குழுக்கள் சரியான போக்கை மேற்கொள்ளத் தடையாக இருந்தன. இந்தியத் தேசிய இயக்கத்தில் இடதுசாரிச் சக்திகளின் பொதுக் கூட்டணி அமைவதற்கும் இவை இடர் விளைத்தன.

எம். என். ராய், பிற ''இடதுசாரியினர்'' ஆகியோரின் இடதுசாரிக் குறுங்குழுவாதத் தவறுகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் வி. இ. லெனின் விமர்சித்தார். அரசியல் நோக்கில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைக்கும் கருத்தை அவர் வெளியிட்டு, கிழக்கு நாடுகளில் இந்தக் கருத்தைக் கம்யூனிஸ்டுகள் செயல்படுத்த வேண்டும் என்று தாம் நினைப்பதாகக் கூறினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் கூட்டான போராட்டம் நடத்தும் நோக்கங்களுக்காகத் தேசிய முதலாளித்துவ, சிறு முதலாளித்துவக் கட்சிகளுடன் ஒத்துழைப்பதும் அவற்றுடன் செயல்தந்திர ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்வதும் இயக்கத்தின் தரத்துக்கும் கடமைகளுக்கும் ஏற்ப வரலாற்றுப் போக்கில் அவசியமாய் இருந்தன. அன்னிய ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராடி வந்த ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை ஒற்றுமைப்படுத்தும் பயனுள்ள வடிவமாகவும் தங்கள் சமுதாய விடுதலைக்கான போராட்டத்தில் உழைப்பாளி வெகுஜனங்களை ஒன்று திரட்டும் சாதனமாகவும் அவை விளங்கின.

இளம் தேசிய அரசுகள் சோஷலிசத்தை அடைவதற்கு முதலாளித்துவம் அல்லாத வழி சாத்தியம் என்ற கருத்தின் உட்பொருளை எம். என். ராய் புரிந்து கொள்ளவில்லை. தேசிய விடுதலைப் புரட்சி சோஷலிசப் புரட்சியாகத் தாமதம் இன்றி வளர்வதற்குக் கம்யூனிஸ்டுகள் வகை செய்ய வேண்டும் என்று அவர் எண்ணினார். நடப்பிலுள்ள சமுதாய, அரசியல் சூழ்நிலைக்குப் பொருந்தாத, முதிர்ச்சியோ எதார்த்தமோ இன்றிச் செயற்கையாக வலிந்து எழுப்பப்பட்ட கோஷங்கள், அவற்றின் விளைவாகப் போர்த்தந்திரத்திலும் செயல்தந்திரத்திலும் அகநிலைப் போக்கும் முன்னே பாயும் போக்கும்—தேசிய விடுதலை இயக்கத்தில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைக்கும் லெனினது கொள்கை

யிலிருந்து செய்யப்படும் இடதுசாரிக் குறுங்குழுப் பிறழ்ச்சிகளின் இயல்பான பண்புகள் இவை.

முடிவில் எம். என். ராயின் அரசியல் தவறுகள் கம்யூனிச இயக்கத்திலிருந்து அவரை விலக வைத்து விட்டன.

மூன்றாவது அகிலம் உலகக் கம்யூனிஸ்டுகளுடைய சக்திகளை மார்க்சிய-லெனினியக் கொள்கைவாத அடிப்படையில் ஒன்றிணைத்தது, புதிய வரலாற்றுச் சூழ்நிலைமைகளில் தொழிலாளர் இயக்கத்தின் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் விரிவாக வகுத்தது, இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாகி வளர உதவி புரட்சிப் போராட்ட அனுபவத்தால் அவற்றுக்கு வளம் கூட்டியது, எல்லா வகைகளையும் வண்ணச் சாயல்களையும் உடைய சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துச் சோர்வின்றிப் போராட்டம் நடத்தியது. தேசிய விடுதலை இயக்கத்தின் மீதும், ஜனநாயகத்துக்காக விரிவான வெகுஜனங்கள் நடத்திவந்த போராட்டத்தின் மீதும் கம்யூனிஸ்டு அகிலம் செல்வாக்கு செலுத்தியது, சமாதானத்திற்காக மக்கள் நடத்திய போராட்டத்தின் மையத்தில் இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் தலைவர்கள் வி.இ. லெனினை அறிந்திருந்தார்கள், ஆழ்ந்து மதித்தார்கள்.

### மார்க்சியத்தின் தூய்மைக்காகப் போராடியவர்

லெனினுடைய பெயர் பாட்டாளி வர்க்கப் புரட்சிகள், சோஷலிசம், முன்னேற்றம் ஆகியவற்றின் சின்னம், உலகம் கம்யூனிசத்துக்கு மாற்றி அமைக்கப்படுவதன் சின்னம் ஆயிற்று. லெனினியம் ஆழ்ந்த சர்வதேசத் தன்மை உள்ள போதனை, நவீனக் காலக் கட்டத்தின் மார்க்சியம் ஆகும்.

மார்க்சிய சித்தாந்தத்தின் தூய்மைக்ாகவும், முதலாளித்துவக் கொள்கைவாதத்துக்கும் அதன் துணைவர்களுக்கும் எதிராகவும், மார்க்சியத்தைத் திரித்து பொய்மைப்படுத்தி முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்காக அதைப் பயன்படுத்த முயலும் சந்தர்ப்பவாதத்துக்கும் திருத்தல்வாதத்துக்கும் எதிராகவும் வி. இ. லெனின் அலுப்பு சலிப்பு இன்றிப் போராடி வந்தார்.

மார்க்சியத்தின் பால் பகைமையுள்ள போக்குகளுக்கு—வலதுசாரி, இடதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கு—எதிராக

வி. இ. லெனின் நடத்திய போராட்டம் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தம், நடைமுறை ஆகியவற்றின் வளர்ச்சியில் மிகப் பெரிய பங்கு ஆற்றியது.

வலதுசாரி சந்தர்ப்பவாதம் அல்லது திருத்தல்வாதம் ''குட்டி முதலாளித்துவச் சீர்திருத்தவாதம், அதாவது நல்லவையாக ஒலிக்கும் ஜனநாயக, ''சமூக''-ஜனநாயகச் சொற்றொடர்களிலும் வலுவற்ற விருப்பங்களிலும் மறைந்துள்ள முதலாளி வர்க்கத்துக்கு அடிவருடல்''* என்று வி.இ.லெனின் சித்திரித்தார். திருத்தல்வாதம் முதலாளித்துவச் சீர்திருத்தவாதக் கருத்துக்களை மார்க்சியத்தின் இடத்தில் புகுத்துவதன் வாயிலாக மார்க்சியத்தின் புரட்சித் தன்மையைப் போக்கி விடுகிறது. வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டத்தையும், சோஷலிசப் புரட்சியையும் பற்றிய மார்க்சியப் போதனையைத் திருத்தல்வாதம் மறுக்கிறது, கட்சியையும் சோஷலிசக் கட்டுமானத்திற்குரிய வழிகளையும் பற்றிய மார்க்சியப் போதனையைத் திரிக்கிறது. 20ம் நூற்றூண்டில் திருத்தல்வாதம் எல்லா சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சிகளிலும் பரவி இருந்ததால் அதன் அபாயம் இன்னும் அதிகம் ஆயிற்று.

இடதுசாரி சந்தர்ப்பவாதம் சீர்திருத்தவாதக் கருத்துக்களைப் பரப்புவதில்லை என்பது அதற்கும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கும் உள்ள வேறுபாடு. மாறாக, அது புரட்சிச் சொற்றொடர்களில் மறைந்து கொள்கிறது, ஆனால் வரலாற்று நிலைமைகளைப் பகுத்து ஆராய்வதில் கொஞ்சங்கூட அக்கறை எடுத்துக் கொள்வதில்லை, வர்க்கச் சக்திகளின் உண்மையான ஒப்புநிலையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

எதிரெதிரானவை போலத் தோன்றினாலும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கும் இடதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கும் இடையே பொதுவான தன்மைகள் நிறைய உள்ளன. அவை யாவன: ஒரே மாதிரியான குட்டி முதலாளித்துவ வர்க்கத் தன்மை, மார்க்சியத்தின் பாலும் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தின் பாலும் பகைமை. வலதுசாரியினரின் சீர்திருத்தவாதமும் இடதுசாரியினரின் அதிதீவிரப் புரட்சி ஆவேச

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 44, பக்கம் 101 (ருஷ்யனில்).

மும்—இது உண்மையில் துர்ச்சாகசப் போக்கு—இரு சாராரிடமும் பாட்டாளி வர்க்க ஒழுங்கமைப்பும் கட்டுப்பாடும் இல்லாததும் புரட்சிச் செயலுக்கும் சோஷலிசத்துக்கும் மிகப் பெரிய தீங்கு விளைக்கின்றன. ஏனென்றால் உழைப்பாளி மக்கள் முதலாளி வர்க்கத்துக்குச் சரண் அடையும் படி, தோல்வி அடையும் படி அவை வேண்டுமென்றே சூழ்ச்சி செய்கின்றன.

சந்தர்ப்பவாதத்துடன் லெனின் நடத்தி வந்த போராட்டத்தின் அனுபவம் தற்கால சந்தர்ப்பவாதத்துடன் கம்யூனிஸ்டுகள் நடத்தி வரும் போராட்டத்தில் அவர்களுக்கு இன்றும் ஆயுதமாக உதவுகிறது.

### வி. இ. லெனினுக்குப் பிறகு விஞ்ஞானக் கம்யூனிசத்தின் வளர்ச்சி

வி. இ. லெனினுக்குப் பிறகு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் முயற்சிகளாலும் பல உலக நாடுகளின் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் முயற்சிகளாலும் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தம் வளர்ச்சி அடைந்து வந்தது, தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது.

சோ.யூ.க. கட்சியின் ஆவணங்களில் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தம் வளர்ச்சி பெற்று திண்ணமும் ஆழமும் ஆகிறது. இந்த சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்கள் தற்கால வரலாற்றுச் சூழ்நிலைக்கும், புரட்சிப் போராட்டத்தின் திண்ணமான நடைமுறைக்கும், சோஷலிசத்தினதும் கம்யூனிசத்தினதும் கட்டுமானத்துக்கும் ஏற்பத் திறமையுடன் பயன்படுத்தப்படுகின்றன.

தற்போதையக் காலக் கட்டத்தின் தன்மையும் அதன் முரண்பாடுகளும், தற்காலத்தின் முக்கியப் புரட்சிச் சக்திகள், புதிய உலக யுத்தத்தை மூளாமல் தடுப்பதற்கான வாய்ப்பு, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும், தற்கால நிலைமைகளில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதற்கான வடிவங்களின் பல்வகைப்பாடு, சோஷலிசக் கட்டுமானத்துக்கு உரிய பொது விதிகள், வளர்ச்சி பெற்ற சோஷலிசம், சோஷலிசம் கம்யூனிசமாக வளர்வது, பொருளாதார, சமுதாய நிகழ்முறைகள் விஞ்ஞானப் பாங்கில் இயக்கப்படுவது,

கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தை நிறுவுவதற்கான வழிகள், கம்யூனிச சமூக உறவுகளின் உருவாக்கம், புது மனிதனைப் பயிற்றி வளர்ப்பது முதலியவை போன்ற பிரச்சினைகளுக்குக் கட்சி ஆவணங்களில் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

ஒரு விஷயத்தைக் குறிப்பிடுவது அவசியம்: விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கோட்பாடுகளைச் செயல்படுத்துவதிலும், புரட்சிப் போராட்டத்திலும் புதிய சமூகத்தின் கட்டுமானத்திலும் மிகப் பெருத்த அனுபவத்தைத் திரட்டிக் குவித்துள்ள சோ.யூ.க. கட்சி, விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தத்தில் மற்ற கம்யூனிஸ்டு,தொழிலாளர் கட்சிகளின் பங்களிப்பை உயர்வாக மதித்து அவற்றின் படைப்புச் சாதனைகளைத் தனது சித்தாந்த, நடைமுறை வேலையில் பயன்படுத்திக் கொள்கிறது.

339099

ஏ. கிராம்ஷீ, ப. தல்யாத்தி, கி. திமித்ரோவ், எம். தொரேஸ், வி.பீக். கி. கோட்வால்டு ஆகியோரதும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வேறு பல பிரபலத் தலைவர்களுடையவும் ஆராய்ச்சிகள் சித்தாந்த நோக்கில் சிறந்த மதிப்பு வாய்ந்தவை.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1975ம் ஆண்டு டிசம்பரில் தன் நடவடிக்கைகளின் அரை நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. மார்க்சிய-லெனினியக் கொள்கைவாதத்தின் அடிப்படையில் அமைந்த தொழிலாளி வர்க்க அரசியல் கட்சி நிறுவப்பட்டது இந்திய மக்களின் புரட்சி இயக்கத்தினதும் விரிவான தேசிய விடுதலைப் போராட்டத்தினதும் வளர்ச்சியில் திருப்பு முனையாக விளங்கியது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு முழுவதும் சுதந்திரத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் இந்திய மக்கள் நடத்திவந்த வீரப் போராட்டத்துடன் நெருக்கமாக இணைந்திருக்கிறது. விடுதலைப் போராட்டத்தில் மகத்தான அரசியல், கொள்கைவாத, நடைமுறைப் பங்களிப்பு நிகழ்த்தியது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி. கம்யூனிஸ்டுகள் நாட்டின் பூரண சுதந்திரக் கோரிக்கையை முதன்முதலில் கிளப்பினார்கள், தேசிய விடுதலை இயக்கத்தில் சோஷலிச, சர்வதேசியக் கருத்துக்களைப் புகுத்தினார்கள், விடுதலை இயக்கத்தில் வலிமை மிக்க இடது

சாரியை உருவாக்கவும் தங்கள் விடுதலைக்காக இந்திய மக்கள் நடத்திவந்த போராட்டத்தைத் தீவிரப்படுத்தவும் உதவினர்கள்.

சுதந்திரக் காலப் பகுதியில் அடுத்து வந்த முப்பதுக்கு மேற்பட்ட ஆண்டுகளில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி இந்திய மக்களுக்குப் புது வாழ்வு கிடைப்பதற்காகச் சலிப்பின்றிப் போராடி வந்திருக்கிறது. இடதுசாரி, ஜனநாயகச் சக்திகளின் ஒற்றுமைக்காகவும், தீவிர முற்போக்குள்ள சமுதாய பொருளாதார மாற்றங்களுக்காகவும், முடிவில் சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகபோக எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சியின் பணிகளது நிறைவேற்றத்துக்காகவும் அது போராடி வந்துள்ளது. தனது வளர்ச்சியில் வலதுசாரிச் சீர்திருத்தவாதக் கண்ணோட்டங்களையும் இடதுசாரிக் குறுங்குழுவாதக் கருத்துக்களையும் தவிர்த்து வரும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் சரியான அரசியல் கொள்கைப் போக்கிற்காக இந்தக் காலமெல்லாம் போராடி வந்திருக்கிறது.

மார்க்சிய-லெனினியத்துக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கும் விசுவாசம் கடைப்பிடித்து வரும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முக்கியமான படைப்பிரிவாக விளங்கி வருகிறது.

கம்யூனிஸ்டுகளின் சர்வதேசக் கருத்தரங்குகளுடைய நடவடிக்கை விவரங்களும் கூட்டுத் தீர்மானங்களும் மதிப்பிட முடியாத சித்தாந்த முக்கியத்துவம் கொண்டவை. 1969ல் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு, 1976ல் பெர்லினில் நடந்த ஐரோப்பியக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மகாநாடு முதலியன இத்தகைய கருத்தரங்குகள்.

சோ.யூ.க. கட்சி, சோஷலிஸ்டு நாடுகளின் பிற ஆளும் கட்சிகள் ஆகியவற்றின் ஆவணங்களில், தற்போதையக் காலக் கட்டத்தில் மார்க்சிய-லெனினியத்தின் வெற்றி நம்பிக்கையூட்டும் விதத்தில் காட்டப்பட்டிருக்கிறது, சோஷலிச சமூகத்தை நிறுவுவதில் பெறப்பட்ட அனுபவம் ஆழ்ந்து பகுத்தாராயவும் பொதுமைப்படுத்தவும் பட்டிருக்கிறது, வளர்ச்சி பெற்ற சோஷலிசத்தின் சர்வாம்சத் தன்மைச்

சித்திரிப்பு தரப்பட்டிருக்கிறது, அது கம்யூனிசமாக வளர்வதற்கான வாய்ப்புக்களும் திண்ணமான வழிகளும் காட்டப்பட்டிருக்கின்றன.

விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தம் தொழிலாளி வர்க்கத்தினதும் எல்லா உழைப்பாளிகளுடையவும் நலன்களை ஒத்திசைந்த முறையில் வெளியிட்டு வருகிறது. முதலாளித்துவக் கொள்கைவாதத்துடன், முதன்மையாக ஏகாதிபத்தியத்தின் கொள்கைவாத அரசியல் ஆயுதம் ஆகி விட்ட கம்யூனிச எதிர்ப்புடன் சமரசப்படுத்த முடியாத போராட்டத்தில் அது வளர்ந்து வருகிறது. சோஷலிசத்தைப் பற்றி அவதூறுகள் பரப்புவது, கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய கொள்கையையும் நோக்கங்களையும் மார்க்சிய போதனையையும் மாருட்டம் செய்வது—இதுவே கம்யூனிச எதிர்ப்பின் பிரதான உள்ளடக்கம் ஆகும். கம்யூனிசக் கருத்துக்களோடு போராடுவதில் முதலாளி வர்க்கம் மிகப் பேரளவான சாதனங்களைப் பயன்படுத்துகிறது, ஆனாலும் இந்தக் கருத்துக்களின் கவர்ச்சியை வாழ்க்கையே நிரூபித்து வருகிறது. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் உலகின் நேர்மையுள்ள மனிதர்கள் ஆர்வத்துடன் முயற்சி செய்து வருகிறார்கள்.

# அத்தியாயம் இரண்டு

## தற்போதைய சகாப்தத்தின் தன்மை. சோஷலிச நாடுகளின் அமைப்பு உலக வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணியாக மாறுதல்

இன்று சோஷலிசம் வெறும் விஞ்ஞானமாக, சித்தாந்தமாக மட்டும் இருக்கவில்லை. உலகின் விரிவான பரப்புக்களில், சோவியத் யூனியனிலும் அனேக பிற நாடுகளிலும் அமைக்கப்பட்டுள்ளதும் மேலும் அமைந்து வருவதுமான எதார்த்தத்தில் நிலவும் சமூகம் இது. நாம் வாழ்ந்து வரும் சகாப்தம், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மனிதகுலம் மாறிச் செல்லும் சகாப்தமேதான்.

### 1. தற்போதைய சகாப்தத்தின் தன்மை

மொத்தத்தில் மனித சமுதாயம் தனது வளர்ச்சியின் ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் பல்வேறு சமூக பொருளாதார அமைப்புகளும் முறைகளும், வெவ்வேறான வர்க்கங்களும் சமுதாயக் குழுக்களும், தேசிய இனங்களும் அரசுகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தும், ஒன்றையொன்று பாதித்தும், ஒன்றுடனொன்று போராடியும் வரும் அசாதாரணச் சிக்கல் நிறைந்த காட்சியை அளிக்கிறது. உதாரணமாக, தற்கால மனித சமுதாயத்தை எடுத்துக் கொள்வோம். அதன் மூன்றில் ஒரு பகுதி சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டி அமைத்து வருகிறது. எஞ்சிய மூன்றில் இரண்டு பகுதிகளோ, சோஷலிஸ்டு அல்லாத நாடுகளில் வசிக்கின்றன. இந்த நாடுகளில் சில வளர்ச்சியடைந்த முதலாளித்துவ — ஏகாதிபத்திய நாடுகள், சில தேசிய சுதந்திரத்தைப் போராடிப் பெற்றுள்ளவை, வேறு சிலவோ முதலாளித்துவத்துக்கு முந்திய வளர்ச்சிக் கட்டத்தில் இருந்து வருபவை. தன் வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் காலக்கட்டத்தில்

மொத்தத்தில் சமூகத்தின் இந்த நிலையே ''சகாப்தம்'' என்ற சொல்லில் வெளியிடப்படுகிறது.

சகாப்தம் என்ற சொல்லில் மனிதகுல வரலாற்றின் பல்வகைப்பாடு அடங்கியுள்ளது. ஒவ்வொரு சகாப்தத்திலும் ''இயல்பானதை''யும் ''வேற்றுனதை''யும் வி. இ. லெனின் வேறுபடுத்தி ஆராய்ந்தார். தவிர, இயல்பானதைப் பகுத்து ஆராய்வதில் அவர் இடைவிடாது தனிப்பட்ட கவனம் செலுத்திஞர். வரலாற்று நிகழ்ச்சிகளில் இந்த இயல்பானதை, புற நிலையாக முதன்மையானதை, அடிப்படையானதைத் தேடிக் காண்பது, அதாவது குறிப்பிட்ட காலக் கட்டத்தில் மனித குல வளர்ச்சியில் ஆதிக்கம் வகிக்கும் போக்கைத் திட்டமாகத் தெரிந்து கொள்வது, இந்தப் போக்கை வெளியிடுவதாக, கொண்டு செல்வதாக விளங்கும் வர்க்கத்தைச் சுட்டிக் காட்டுவது, ஒரு திண்ணமான வரலாற்றுச் சகாப்தத்தைச் சரியாக வரையறுப்பது என்று அர்த்தப்படும். வி. இ. லெனின் எழுதிஞர்: ''குறிப்பிட்ட சகாப்தத்தின் தனித் தனி வரலாற்று இயக்கங்கள் எந்த மாதிரி விரைவுடனும் எத்தகைய வெற்றியுடனும் வளர்ச்சி அடையப் போகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள நம்மால் முடியாது. ஆனல் ஒரு சகாப்தத்தின் பிரதான உள்ளடக்கத்தை, அதனுடைய வளர்ச்சியின் பிரதானத் திசையையும் அப்போதைய சகாப்தத்தின் வரலாற்றுச் சூழ்நிலையின் பிரதானச் சிறப்புக்களேயும் தீர்மானித்து அந்த சகாப்தத்தின் மையத்தில் உள்ள வர்க்கம் எது என்பதைத் தெரிந்து கொள்ள நமக்கு முடியும், நாம் தெரிந்து கொண்டிருக்கிறேம்...''*

### தற்போதைய சகாப்தத்தின் முக்கிய உள்ளடக்கம்

முதலாளித்துவக் கொள்கைவாதிகள் தங்கள் வர்க்க நலன்களின் வரம்புகளுக்குள் அடைபட்டிருக்கிருர்கள். அறிதலுக்கான விஞ்ஞான முறைகளே அவர்கள் அறியார். ஆகையால் நம் காலத்துச் சமூக நிகழ்ச்சிகளின் பல்வகைப்பாட்டையும் சிக்கலேயும் புரிந்து கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லே. நம்முடைய சகாப்தத்தின் தன்மையை நிர்ணயிப்பது, தற்போதைய மனித குலம் எங்கே

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 26, பக்கம் 142 (ருஷ்யனில்).

போகிறது என்று தீர்மானிப்பது சாத்தியம் இல்லை என்றும், ஏனெனில் சமூக நிகழ்ச்சிகள் வரையறைக்கு உட்படாதவை, நிலையற்றவை என்றும், புறநிலையான, ஒருதலைச் சார்பற்ற மதிப்பீட்டுக்கு அப்பாற்பட்டவை என்றும் அவர்களில் சிலர் சொல்லுகிருர்கள்.

தற்போதைய சகாப்தத்தின் தன்மை தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களால், முதன்மையாக அணு ஆற்றலின் கண்டு பிடிப்பினுல் நிர்ணயிக்கப்படுவதாக நிரூபிக்க முதலாளித் துவ சமூகவியல் நிபுணர்களின் இன்னொரு குழு முயன்று வரு கிறது. தற்போதைய சகாப்தத்தின் மையமாக இவர்கள் கருதுவது வேறு எதையும் அல்ல... அணு குண்டை. சகாப் தத்தை இவர்கள் ''தொழில்நுட்ப யுகம்'', ''அணு யுகம்'', ''அணு குண்டின் யுகம்'' என்று குறிக்கிருர்கள். தொழில் நுட்பமும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களும், சிறப்பாகத் தற்போதைய விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் நிலை மைகளில் சமூக வளர்ச்சியில் மிகப் பெருத்த பங்கு ஆற்று கின்றன என்ருலும் சமூகத்தின் வளர்ச்சியை அவற்றுக்குள் அடக்குவது கூடாது. வரலாற்று நிகழ்முறை மீது தனது பாதிப்பைத் தொழில்நுட்பம் தானுக அல்ல, சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கும் உற்பத்தி உறவுகளின் வாயிலாக விளைக் கிறது. தற்போதைய சகாப்தத்தைப் பகுத்து ஆராயும் போது இந்த உறவுகளையும் இவற்றின் பின் நிலவும் வர்க்கச் சக்திகளையுமே முதன்மையாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

சமூக வளர்ச்சிக்கு உரிய விதிகளை ஆராய்ந்து அறிந்த தன் பயனுக, தற்போதைய சகாப்தத்தின் தன்மையைப் புலப்படுத்த மார்க்சிய-லெனினியத்துக்கு முடிந்தது. உலக வரலாற்றில் தொடங்கியுள்ள புதிய சகாப்தத்தின் உள்ளடக் கம் ''முதலாளித்துவமும் அதன் தடங்களும் அழிக்கப்படு வதும் கம்யூனிச அமைப்பு முறையின் அடிப்படைகள் நிறுவப் படுவதுமே...''* என்று எழுதினுர் வி. இ. லெனின். இந்தப் புதிய சகாப்தத்தின் கொடி ஏந்தி முன் செல்வது சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் என்றும் உரிமையுடன் கருதிய வி. இ. லெனின், இந்த வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை உலகில்

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 41, பக்கம் 425 (ருஷ்யனில்).

முதன் முதலாக நிலைநாட்டிய அக்டோபர் சோஷலிசப் புரட்சியுடன் இந்த சகாப்தம் தொடங்குவதாகக் கூறினார். மேலும் மேலும் புதிய மக்கள் இனங்களும் அரசுகளும் சோஷலிச வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றும் என்று வி. இ. லெனின் உறுதியாக நம்பினார்.

தற்போதைய சகாப்தம் பற்றிய லெனினது வரையறுப்பு சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்திட்டத்தில் மேற்கொண்டு சர்வாம்ச வளர்ச்சி பெற்றது. சோ. யூ. க. க. செயல்திட்டம் கூறுவதாவது: ''முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதை முக்கிய உள்ளடக்கமாகக் கொண்ட தற்போதைய சகாப்தம் எதிரெதிரான இரண்டு சமூக அமைப்புக்களின் போராட்ட சகாப்தம், சோஷலிச, தேசிய விடுதலைப் புரட்சிகளின் சகாப்தம், ஏகாதிபத்தியம் தகர்ந்து வீழ்ந்து காலனியாட்சி அமைப்புக்கு முடிவு கட்டப்படும் சகாப்தம், மேலும் மேலும் புதிய மக்கள் இனங்கள் சோஷலிசப் பாதைக்கு மாறுவதும் அனைத்துலக அளவில் சோஷலிசமும் கம்யூனிசமும் வெற்றி பெறுவதும் நிகழும் சகாப்தம். சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் அதன் முதன்மைப் படைப்பான சோஷலிச நாடுகளின் உலக அமைப்பும் தற்போதைய சகாப்தத்தின் மையமாக விளங்குகின்றன.''

தற்போதைய மனித சமூக வளர்ச்சிப் போக்கு அனைத்திலும் மக்கள் இனங்களின் புரட்சிகர விடுதலைப் போராட்ட நடைமுறையாலும் தற்போதைய சகாப்தம் பற்றிய இந்த வரையறுப்பு உறுதி செய்யப்படுகிறது. நம் காலத்தின் நிர்ணயகரமான நிகழ்ச்சிகளை அது பிரதிபலிக்கிறது. இவையாவன நாடுகளின் பெரிய குழுவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதும், சோஷலிசம் விறல் மிக்க உலக அமைப்பாக மாறி இருப்பதும், முதலாளித்துவம் நெருக்கடி நிலைமையில் இருப்பதும், காலனியாட்சி அமைப்பு தகர்ந்து வீழ்ந்து விட்டதும்.

### அக்டோபர் புரட்சி— தற்போதைய சகாப்தத்தின் தொடக்கம்

ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சி நடந்தேறிய நாளான 1917ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ந் தேதி (புதிய நாட்கணக்குப்படி நவம்பர் மாதம் 7ந் தேதி) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிப்பு நிகழும் சகாப்தத்தின் தொடக்கமாக வரலாற்றில் இடம் பெற்று விட்டது.

புதிய சமூகத்தை நிறுவுவதற்கான உரிமையைப் போராடிப் பெறுவது மிக மிகக் கடினமானதாக இருந்தது. எதேச்சாதிகாரத்துடனும் நிலப்பிரபுக்களுடனும் முதலாளிகளுடனும் நடந்த கடும் போராட்டம் ருஷ்யாவின் உழைப்பாளி மக்களுடைய கணக்கற்ற சிறந்த புதல்வர்களின் உயிர்களைக் கொள்ளை கொண்டது. தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கவும் ஒழுங்கமைக்கவும் சுரண்டுவோர் அமைப்புக்கு எதிராக அவர்களைப் போராட்டத்தில் இட்டுச் செல்லவும் பேரளவான ஆற்றலையும் உழைப்பையும் கம்யூனிஸ்டுக் கட்சி செலவிட்டது. கட்சியின் தலைமையில் புரட்சியை நிறைவேற்றுவதற்கு முன் ருஷ்யாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் கடுமையான போராட்டப் பயிற்சி பெற்றுர்கள். அக்டோபர் புரட்சியால் பெற்ற மகத்தான நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, உலகின் முதலாவது உழைப்பாளிகள் அரசைக் காக்கும் பொருட்டு அவர்கள் இன்னும் பெரிய முயற்சிகள் செய்யவும் அளவற்ற தியாகங்கள் புரியவும் வேண்டி இருந்தது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி சுரண்டலும் ஒடுக்குமுறையும் கொண்ட அமைப்பைத் தகர்த்து வீழ்த்தியது, பொருளாதார, சமுதாய, அரசியல் அடிமைத் தளைகளிலிருந்து திரளான வெகுஜனங்களின் விடுதலையைத் தொடங்கிவைத்தது, முதலாவது உலக யுத்த ஆழ் கிடங்கிலிருந்து நாட்டை வெளியேற்றியது, இவற்றோடு கூடவே முதலாளித்துவ உலகையும் அது அடித்தளம் வரையில் ஆட்டி உலுக்கியது.

ஒரு நாட்டில் வெற்றி பெற்ற அக்டோபர் புரட்சி அதோடு கூட உலக வரலாற்றுப் போக்கு அனைத்தின் மீதும் நிர்ணயகரமான பாதிப்பு விளைத்தது. அது அனேக சமுதாயப் பிரச்சினைகளை எழுப்பி அவற்றுக்கு வெற்றிகரமாகத் தீர்வும் கண்டது. இந்தப் பிரச்சினைகள் சோஷலிஸ்டு அல்லாத நாடுகளின் உழைப்பாளி வெகுஜனங்களுக்கு இன்றளவும் எதிர் நிற்கின்றன. மார்க்சிய-லெனினியத்தின் மெய்மைக்கு அது நடைமுறைச் சான்ருகத் திகழ்ந்தது, முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தின் விலை மதிப்பற்ற அனுபவத்தால் எல்லா நாடுகளதும் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளி மக்களுக்கும் வளம் கூட்டியது, மனித குலம் புதிய,

சோஷலிச சமூகத்தை அடைவதற்கான வழியை வகுத்தது. உலகின் மீது முதலாளித்துவத்தின் ஏகபோக ஆதிக்கத்துக்கு அது முடிவு கட்டி, முதலாளித்துவ அமைப்பு, சோஷலிச அமைப்பு என்ற எதிரெதிரான இரண்டு அமைப்புக்களாக உலகைக் கூறு போட்டது.

அக்டோபர் புரட்சி வெற்றி அடைந்ததும் முதலாளித்துவம் பொது நெருக்கடிக் காலப் பகுதியில் பிரவேசித்தது. முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளும் கூர்மை ஆனதுடனும், முதலாளித்துவச் சுரண்டலுக்கான வட்டாரம் குறுகியதுடனும் தொடர்புள்ளது இந்த நெருக்கடி. உலகு அனைத்தின் உழைப்பாளிகளதும் புரட்சிப் போராட்ட வாய்ப்புக்களும் தேசிய விடுதலை இயக்கங்களின் வாய்ப்புக்களும் விரிவடைந்தன, ஏனெனில் முதலாவது தொழிலாளி வர்க்க அரசின் வடிவில் வலிமை மிகக் கூட்டாளியையும் நம்பகமான துணைவனையும் அவை பெற்றன.

ருஷ்யாவில் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றது சர்வதேசத் தொழிலாளர் இயக்க வளர்ச்சிக்குச் சக்தி மிக்க தூண்டுதலாக விளங்கியது. அதன் நேரான பாதிப்பினால் உலகின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த பற்பல நாடுகளின் உழைப்பாளி மக்கள் சுரண்டுவோரை எதிர்த்துப் போராட எழுந்தார்கள். ஜெர்மனியிலும் ஆஸ்திரோ-ஹங்கேரியிலும் பிற நாடுகளிலும் புரட்சிகள் வெடித்தன. ஐரோப்பிய, அமெரிக்கப் பாட்டாளி மக்களுடைய வெகுஜனப் புரட்சிப் போராட்டங்கள் விரிவாக மூண்டன.

வி. இ. லெனினால் நிறுவப் பெற்ற கட்சியை உதாரணமாகக் கொண்டும் அதனுடைய வெற்றியின் பாதிப்பாலும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் பதிற்றுக் கணக்கான மார்க்சியக் கட்சிகள் தோன்றின. மூன்றாவது, கம்யூனிஸ்டு அகிலத்தில் இவை நிறுவன நோக்கிலும் கொள்கைவாத நோக்கிலும் ஒன்றிணைந்தன. மூன்றாவது அகிலம் தற்போதையக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்துக்கு அடி கோலியது, முதலாளி வர்க்கத்துடன் புரட்சிப் போராட்டம் நடத்துவதற்கு உலகனைத்தின் கம்யூனிஸ்டுகளுக்கும் சிறந்த பயிற்சிக் களமாக விளங்கியது.

அக்டோபர் புரட்சி காலனிகளதும் சார்பு நாடுகளதும் மக்களைத் தட்டி எழுப்பியது. தேசிய விடுதலைப் புரட்சிகளின்

விறல் மிக்க அலை இந்த நாடுகளில் விரைவாகப் பரவியது. ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பு தகர்ந்து சிதறுவதற்கு இது அடி கோலியது. ஒடுக்கப்பட்ட மக்களின் முழு விடுதலைக்கான நிலைமைகள் இதனுல் உருவாயின.

நாம் காண்பது போல, அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் விளைவாக அல்லது அதன் நேரான செல்வாக்கினுல் தற்போதைய சகாப்தத்தின் பிரதான புரட்சிச் சக்திகள் உருவாகி வருகின்றன. முக்கியமானது, ஏகாதிபத்தியத்துக்குக் குழி பறித்து அதை அழிப்பதற்கான ஒன்றித்த உலகப் புரட்சி நிகழ்முறையில் இவற்றை ஒன்றிணைப்பதற்கு அடி கோலப் பட்டு விட்டது என்பதாகும்.

**உலகப் புரட்சி நிகழ்முறையும் அதன் முக்கிய இயக்கு சக்திகளும்**

தற்போதைய உலகப் புரட்சி நிகழ்முறை—மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குச் செல்லும் நிகழ்முறை — ஏகாதிபத்தியத்துடன் நடக்கும் போராட்டத்தின் ஒன்றித்த பெருக்காக விளங்குகிறது. இதில் பின்வருவன கலக்கின்றன:

சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிறுவி வரும் சோஷலிச நாடுகளின் மக்களுடைய முயற்சிகள்;

முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கம்;

தேசிய விடுதலை இயக்கம், ஏகாதிபத்தியத்தையும் நவீன காலனியாதிக்கத்தையும் எதிர்த்தும் தேசிய அரசுரிமை, பொருளாதார சுதந்திரம், சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றின் பொருட்டும் ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தும் போராட்டம்.

இந்த இயக்கங்கள் ஒவ்வொன்றிலும் குறித்த வர்க்கங்களும் சமூக வட்டாரங்களும் பங்கு கொள்கின்றன. ஒவ்வோர் இயக்கமும் தனக்குரிய திண்ணமான பணிகளை நிறைவேற்றுகிறது, அவற்றின் நிறைவேற்றத்துக்காகத் திட்டவட்டமான முறைகளையும் சாதனங்களையும் பயன்படுத்துகிறது. ஆனுலும் இந்த எல்லா இயக்கங்களும் ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரத்தைப் பெயர்க்கின்றன, மனித குலம் இன்பம் நிறைந்த கம்யூனிச வருங்காலத்தை அடைவதற்கு வழி கோலுகின்றன. தற்காலத்துப் புரட்சிச் சக்திகளின் ஒற்றுமையே சமாதானம், முன்னேற்றம், சோஷலிசம் என்னும் மாபெரும் செயல்களின் வெற்றிக்கு உத்தரவாதம் ஆகும்.

சோஷலிச அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் மக்கள் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிறுவி வருகிறார்கள், புதிய அமைப்பின் மேம்பாட்டை நடைமுறையில் காட்டி வருகிறார்கள். அவர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கிறார்கள், சமாதானத்தையும் சோஷலிசத்தையும் சமூக முன்னேற்றத்தையும் காத்துப் போராடுகிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் சாதகமான சர்வதேச, உள்நாட்டு நிலைமைகளை (உலக அரங்கில் சக்திகளின் ஒப்புநிலை சோஷலிசத்துக்கு அனுகூலமாக மாறி இருப்பது, விரிவான வெகுஜனங்கள் முதலாளித்துவ எதார்த்தத்தின் மேல் ஆழ்ந்த அதிருப்தி கொண்டிருப்பது ஆகியவையும் பிறவும்) பயன்படுத்தியவாறு, ஏகபோகங்களின் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை எதிர்த்தும் விரிவான ஜனநாயக அடிப்படை மாற்றங்களுக்காகவும் தீவிரமாகப் போராடி வருகிறது.

காலனியாட்சி ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற்றுவிட்ட நாடுகளின் மக்கள் அரசியல் சுதந்திரத்தையும் பொருளாதாரச் சார்பின்மையையும் வலுப்படுத்துவதற்காகவும் வளவாழ்வும் சமுதாய முன்னேற்றமும் பெறுவதற்காகவும் விடாப்பிடியாகப் போராடி, மூலப் பொருள்களுக்கும் தொழிலாளிகளுக்கும் விற்பனைச் சந்தைகளுக்குமான தலையூற்றுக்களும் இராணுவத் தாக்கு தளங்களும் ''பீரங்கி இரைக்'' கான ஊற்றுக்கண்களும் ஏகாதிபத்தியத்துக்குக் கிடைக்காதவாறு செய்து வருகிறார்கள். முதலாளித்துவம் அழிவதற்கான நிகழ்முறையை, மனிதகுலம் சோஷலிசத்துக்குச் செல்லும் நிகழ்முறையை விரைவுபடுத்தவும் அவர்கள் உதவி வருகிறார்கள்.

## 2. சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும்

**சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் தோற்றம்**

ஏற்கெனவே மேலே கூறப்பட்டுள்ளது போல, 1917ம் ஆண்டில் ருஷ்யாவில் நடந்தேறிய அக்டோபர் புரட்சியின் விளைவாக உலகின் முதலாவது சோஷலிச நாடு உருவாயிற்று. 1921ம் ஆண்டில் மங்கோலிய மக்கள்

குடியரசு அமைந்தது. சோவியத் யூனியன் மக்களது உதவியால் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையை அது பின்பற்றியது. மத்திய, தென்கிழக்கு ஐரோப்பாவையும் ஆசியாவையும் சேர்ந்த அனேக நாடுகள் இரண்டாவது உலக யுத்தத்துக்கு பிறகு முதலாளித்துவ அமைப்பிலிருந்து பிரிந்து விட்டன. இந்த நாடுகளின் மக்கள் விடாது நடத்திய போராட்டத்தினதும் புரட்சியினதும் விளைவாக முதலாளித்துவத்தின் ஆதிக்கத்திலிருந்து மீட்சி பெற்று சோஷலிசக் கட்டுமானப் பாதையில் அடி வைத்தார்கள். மேற்கு அரைக் கோளத்தில் சோஷலிசத்தின் முதலாவது கலங்கரை விளக்கம் பிற்பாடு எரியத் தொடங்கியது. கியூபா குடியரசும் சோஷலிச நாடுகளின் நட்பு மண்டலத்தின் உறுப்பாளி ஆயிற்று. சோஷலிச நாடுகளின் உலக அமைப்பில் பெரியவையும் சிறியவையுமான பதினைந்து அரசுகள் தற்போது உறுப்பாளிகளாக இருக்கின்றன. ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றின் மிகப் பெரிய நிலப் பரப்புக்களில் பரவியுள்ளன இவை. நவீனத் தொழில் துறை கொண்ட வளர்ச்சி பெற்ற அரசுகளாக இவற்றில் பெரும்பாலானவை குறுகிய காலப் பகுதியில் மாறிவிட்டன. அவற்றின் உழைப்பாளிகளுடைய வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்ந்திருக்கிறது, விஞ்ஞானமும் பண்பாடும் விரைந்த வளர்ச்சி பெற்றுள்ளன.

எந்த நாடும், அதன் வளர்ச்சித் தரம் எத்தகையது, அது எங்கே அமைந்துள்ளது, அதனுடைய நிலப்பரப்பின் அளவுகள் என்ன, அதன் மக்கள் தொகை யாது என்பதைச் சாராமல், சோஷலிசத்தை அடைவதற்கான வழி இப்போது, சோஷலிச சக்திகளின் இடையறுத அதிகரிப்பு நிகழும் சகாப்தத்தில் திறந்திருக்கிறது. காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுவிட்ட அனேக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் மக்கள் சமாதான, முன்னேற்றப் பாதையில், சோஷலிசப் பாதையில் செல்வது தங்கள் நோக்கம் என்று இப்போது அறிவித்து வருகிறுர்கள்.

### அரசுகளுக்கு இடையே உறவுகளின் புதிய மாதிரி

நலன்கள், குறிக்கோள்களின் பொதுமையாலும் சர்வதேச சோஷலிச ஒருமைப்பாட்டின் நெருக்கமான தொடர்புகளாலும் ஒன்றுக இணைந்துள்ள, விடுதலையும் அரசுரிமையும் பெற்ற மக்களுடைய சமுதாய,

பொருளாதார, அரசியல் நட்பு மண்டலமாக விளங்குகிறது சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு. அரசுகளுக்கு இடையே பொருளாதார, அரசியல் உறவுகளின் பண்பளவில் புதிய மாதிரி இது. இந்த நாடுகளின் பொருளாதார, அரசியல், கொள்கை வாத நலன்களது ஆழ்ந்த பொதுமையின் அடிப்படையில் ஏற்பட்டவை இந்த உறவுகள். சோஷலிச நாடுகளது நட்பு மண்டலத்தின் பொருளாதார அடிப்படை உற்பத்திச் சாதனங்கள் சமூகச் சொத்தாக இருப்பது ஆகும். தொழி லாளி வர்க்கத்தினுடையவும் அதன் மார்க்சியக் கட்சி களுடையவும் தலைமையில் மக்கள் ஆட்சி அதன் அரசியல் அடிப்படையாக விளங்குகிறது. மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டம் அதன் கொள்கைவாத அடிப்படை ஆகும்.

பெரிய, சிறிய அரசுகளின் முழு சமத்துவம், ஒன்றுக் கொன்று உள் விவகாரங்களில் தலையிடாமை, தேசிய அரசுரி மைக்கும் பிரதேச முழுமைக்கும் மதிப்பு, பொருளாதாரப் பரஸ்பர உதவி, சமூக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நெருங்கிய ஒத்துழைப்பு—சோஷலிச நாடுகளுக்கு இடையே நிலவும் உறவுகளின் அடிப்படைக் கோட்பாடுகள் இவை.

நவீனத் தொழில்களை நிறுவுவதிலும் பொருளாதார வளர்ச்சியில் பெருத்த வேகங்களை அடைவதிலும் உழைப் பாளி மக்களிடன் பொருளியல் நல்வாழ்வையும் பண்பாட்டுத் தரத்தையும் மேம்படுத்துவதிலும் தேர்ச்சியாளர்களையும் விஞ்ஞான ஊழியர்களையும் பயிற்றுவதிலும் பொருளா தாரத் துறையில் சோஷலிச நாடுகள் ஒன்றுக்கொன்று உதவி வருகின்றன.

சோஷலிச அமைப்பைச் சேர்ந்த நாடுகளுக்குள் உற் பத்தித் துறையில் நேர்முக ஒத்துழைப்பு வளர்ந்திருக்கிறது. தேசியப் பொருளாதாரத் திட்டங்கள் ஒத்திசைவிக்கப்படு வது, உற்பத்தியில் தனித்துறைப் பாகுபாடும் கூட்டுறவும் ஏற்படுத்தப்படுவது ஆகியவற்றில் இது வெளிப்படுகிறது. முழுமையான சுயவிருப்பத்தையும் சமத்துவத்தையும் அடிப் படையாகக் கொண்டு இவை செயல்படுத்தப்படுகின்றன. உற்பத்தித் துறையில் நேர்முக ஒத்துழைப்பு இரு தரப்பு ஒப் பந்தங்களின் வடிவிலும் 1949ம் ஆண்டில் நிறுவப் பெற்ற

பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சில் வாயிலாகப் பல தரப்பு வடிவிலும் நடைபெறுகிறது. இக்கவுன்சில் சோஷலிச நாடுகளின் சர்வதேசப் பொருளாதார நிறுவனம். கவுன்சில் உறுப்பு நாடுகள் சோஷலிசப் பொருளாதார ஒன்றிணைவுக் கான நீண்டகாலச் செயல்திட்டத்தைத் தற்போது நிறை வேற்றி வருகின்றன. சோஷலிச் நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு அவற்றின் மூலப் பொருள், ஆற்றல் வளங்களை யாவற்றிலும் அறிவார்ந்த முறையில் பயன்படுத்த வாய்ப்பு அளிக்கிறது. உதாரணமாக, சோவியத் யூனியன், செக்கோஸ் லொவாக்கியா, போலந்து, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் துருழ்பா (நட்பு) என்னும் பிரமாண்டமான பெட்ரோலியக் குழாய்ப் பாதை அமைக்கவும் செயலாக்கவும் பட்டிருக்கிறது. பெட்ரோலி யம் எடுக்கப்படும் இடமான வோல்காப் பிரதேசத்திலிருந்து ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வரை போடப்பட்டுள்ள இந்தப் பாதையின் நீளம் 4,500 கிலோமீட்டர். ஒன்றித்த மின்னுற்றல் அமைப்பான மீர் (சமாதானம்) நிறுவவும் இயக்க வும் பட்டிருக்கிறது. ஐரோப்பாவின் அனேக சோஷலிச நாடு களுக்குப் பயன்படுகிறது இது. பயனுள்ள கனியங்களைத் தோண்டி எடுக்கவும் உபயோகிக்கவுமான தொழிலகங்கள் கூட்டாக நிறுவப்படுகின்றன. சோஷலிச நாடுகளுக்கிடையே சரக்குப் பரிமாற்றம் இடைவிடாமல் அதிகரித்துக் கொண்டு போகிறது.

சோஷலிச நாடுகளின் விஞ்ஞான தொழில்நுட்ப ஒத் துழைப்பு மேலும் மேலும் விரிவான அளவில் நடந்துவரு கிறது. விஞ்ஞான ஆராய்ச்சிக் கல்லூரிகளின் ஒத்துழைப்பு பரந்த அளவில் தொடர்கிறது. சில நாடுகளின் தேர்ச்சியாளர் களுக்கும் விஞ்ஞான ஊழியர்களுக்கும் யாவற்றிலும் அதிகச் சாதக நிலைமைகள் உள்ள வேறு நாடுகளில் கல்விப் பயிற்சியும் நடைமுறை வேலைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பு விஞ்ஞானத் தேட்டங் களை விரைவுபடுத்தவும் விஞ்ஞான தொழில்நுட்ப ஊழியர் களையும் சாதனங்களையும் யாவற்றிலும் அறிவார்ந்த முறை யில் பயன்படுத்தவும் வாய்ப்பு அளிக்கிறது.

சோஷலிச நாடுகளின் அரசியல், கொள்கைவாத ஒத் துழைப்பு விரிவாகி வருகிறது. சர்வதேச வாழ்விலும் உள்

நாட்டின் வாழ்விலும எதிர்ப்படும் மிக முக்கியமான சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் கூட்டான கொள்கையை வகுக்க இது வாய்ப்பு அளிக்கிறது. ஏகாதிபத்தியப் பிற்போக்குக்கு எதிராகவும் சமாதானத்துக்கும் சோஷலிசத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் ஆதரவாகவும் முதலாளித்துவக் கொள்கைவாதத்தையும் திருத்தல்வாதத்தையும் எதிர்த்தும் கூட்டாகப் போராடுவதும் இதனால் சாத்தியம் ஆகிறது. அரசாங்க, கட்சிப் பிரதிநிதிக் குழுக்களின் பரிமாற்றம், நட்பார்ந்த பேச்சுவார்த்தைகள், தகவல் பரிமாற்றம், பல்வேறு பிரச்சினைகள் குறித்த மகாநாடுகள் ஆகியன இதற்கு உதவுகின்றன.

சோஷலிச நாடுகளின் இராணுவ ஒத்துழைப்பு பெருத்த முக்கியத்துவம் உள்ளது. சோஷலிச நாடுகளின் மக்கள் பெற்றுள்ள நலன்களைக் காக்கும் நம்பகமான கேடயமாக விளங்கும் வார்சா உடன்படிக்கை நிறுவனத்தை மேற்கொண்டு வலுப்படுத்துவதிலும் செவ்வைப்படுத்துவதிலும் இந்த ஒத்துழைப்பு வெளிப்படுகிறது.

சோஷலிச நட்பு மண்டல நாடுகள் பண்பாட்டுத் துறையிலும் விரிவாக ஒத்துழைக்கின்றன. ஒவ்வொரு தேசிய இனத்தின் பண்பாட்டையும் வளர்க்கவும் பரஸ்பரம் வளம் கூட்டவும் இது உதவுகிறது.

### ஒற்றுமையை வலுப்படுத்துவது மிக முக்கியப் பணி

சோஷலிச நாடுகள் மேற்கொண்டு வெற்றிகள் பெறுவதற்குக் கட்டாயமாகத் தேவைப்படும் நிபந்தனை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் ஒற்றுமையை மேற்கொண்டு வலுப்படுத்துவதாகும். தேசியவாதத்தையும் பெருவல்லரசு நாட்டு வெறியையும் கடைப்பிடிப்பது இந்த ஒற்றுமைக்குப் பொருந்தாது. தேசியவாதமும் பெருவல்லரசு நாட்டு வெறியும் சோஷலிச நாடுகளது நட்பு மண்டலத்தின் நலன்களுக்கும் உலகக் கம்யூனிச இயக்கத்தின் நலன்களுக்கும் கேடு விளைக்கும்.

சோஷலிச நாடுகளது நட்பு மண்டலத்தின் உருவாக்கமும் வளர்ச்சியும் நீடித்த, சிக்கலான நிகழ்முறை. அது சிக்கலாய் இருப்பதற்கு முதல் காரணம், பொருளாதாரம், சமுதாய

வாழ்க்கை, பண்பாடு ஆகியவற்றின் வெவ்வேறு வளர்ச்சித் தரங்களும், வெவ்வேறு கடந்தகால வரலாறுகளும் மரபுகளும் மக்களுடைய பழக்க வழக்கங்களும் உள்ள நாடுகள் இந்த நட்பு மண்டலத்தில் சேர்ந்திருப்பது ஆகும். அது சிக்கலாய் இருப்பதற்கு மற்ெருரு காரணம், மனித குல வரலாறு இதற்கு முன் அறிந்திராத வகையான உறவுகள் நாடுகளுக்கு இடையே உருவாக்கப்பட்டு வருவது ஆகும். புதியதும் முன் அறியப்படாததுமான எதுவும் கடினமும் சிக்கலும் உள்ளதாக இருப்பது இயல்பே. சோஷலிச நாடுகளுக்கு இடையே உறவுகளில் முரண்பாடுகள் சில வேளைகளில் தோன்றுகின்றன, புதிய சிக்கலான பிரச்சினைகள் எழுகின்றன. மிகுந்த சிக்கலும் பல்வகைப்பாடும் கொண்ட நடப்பு வாழ்க்கையிலிருந்து பிறக்கின்றன இந்தப் பிரச்சினைகள். மார்க்சிய-லெனினியத்தின் படைப்புத்தன்மையுள்ள அடிப்படையில், அனுபவத்தையும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வதன் வாயிலாக இவை தீர்க்கப்படுகின்றன.

சோஷலிச சர்வதேச உறவுகளின் உருவாக்கம் தொடர்கிறது. சோஷலிச நாடுகளது கூட்டுக் கழகத்துக்கு வேண்டிய திண்ணமான அடித்தளம் நிறுவப்பட்டு விட்டது. அவற்றின் ஒத்துழைப்புக்கும் பரஸ்பர உதவிக்கும் உரிய பல்வேறு வடிவங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. உலக அரங்கில் அவற்றின் கூட்டு நடவடிக்கைகளின் வளமான அனுபவம் திரட்டப்பட்டுள்ளது.

மார்க்சிய-லெனினியத்துக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கும் விசுவாசம் உலக சோஷலிச நாடுகளது நட்பு மண்டலத்தின் வெற்றிகரமான வளர்ச்சிக்கும் சர்வதேச நிகழ்ச்சிகளின் போக்கு மீது அதன் செல்வாக்கின் அதிகரிப்புக்கும் உத்தரவாதம் அளிக்கிறது. அதே சமயம் மார்க்சிய-லெனினியத்திலிருந்தும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திலிருந்தும் பிறழ்வது சோஷலிசக் குறிக்கோளுக்கும் மக்களின் உண்மையான தேசிய நலன்களுக்கும் கடுமையான தீங்குகள் விளைக்கும் அபாயத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

## 3. உலக வளர்ச்சியின் விறல் மிக்க சக்தி

### சகாப்தத்தின் அடிப்படை முரண்பாடு

சோஷலிச சக்திகளுக்கு எதிர் நிற்கின்றன உலக முதலாளித்துவ சக்திகள். எதிரெதிரான இந்த சமூக அமைப்புக்களுக்கு இடையே நிலவும் முரண்பாடு தற்போதைய சகாப்தத்தின் அடிப்படை முரண்பாடாக விளங்குகிறது.

உழைப்புக்கும் மூலதனத்துக்கும், தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள முரண்பாடு முதலாளித்துவ அமைப்பின் அடிப்படையான வர்க்க முரண்பாடாக இருந்தது, இருந்து வருகிறது என்பதை முதலில் குறிப்பிடுவது அவசியம். எதிரெதிரான சமூக அமைப்புக்களிடையே நிலவும் முரண்பாடு, உழைப்புக்கும் மூலதனத்துக்கும், தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள முரண்பாட்டின் வளர்ச்சி ஆகும். தற்போதைய சகாப்தத்தினுடைய அடிப்படை முரண்பாட்டின் வர்க்கத் தன்மை, மிக முக்கியமான சிறப்புப் பண்பு இதில்தான் அடங்கி இருக்கிறது.

சோஷலிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு உலக வளர்ச்சிப் போக்கு அனைத்தின் மீதும் மிகப் பெரிய பாதிப்பு விளைக்கிறது. காலனியாட்சி நுகத்திலிருந்து விடுபட்டவையும் தங்கள் வழியைப் போதிய தெளிவுடன் இன்னும் வரையறுக்காதவையுமான நாடுகளின் பெரிய குழு உலகில் இன்னும் இருந்து வருவது சகாப்தத்தின் முரண்பாட்டினது சர்வப் பொதுத் தன்மை பற்றிய முடிவை மாற்றவில்லை, ஏனெனில் இந்த நாடுகள் மூன்றுவது சக்தியாக, சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் நடுவில் உள்ள இடைப் பகுதியாக விளங்கவில்லை. இரண்டு தரப்புக்களில் ஒன்றுடன் இவை இணைந்திருக்கின்றன, அல்லது அதன்பால் ஈர்க்கப்படுகின்றன.

எதிரெதிரான சமூக அமைப்புக்களுக்கு இடையே உள்ள முரண்பாடு இயங்குகிற, விசையுள்ள தன்மை கொண்டிருக்கிறது. அதோடு (அதன் மற்றொரு மிக முக்கியமான சிறப்பு இதில் அடங்கியுள்ளது) மேலே போகப் போக, உலக அரங்கில் சக்திகளின் ஒப்புநிலை சோஷலிச சக்திகளுக்கு சாதகமாகவும் ஏகாதிபத்திய சக்திகளுக்குப் பாதகமாகவும் மாறிக்

கொண்டு போகிறது. சக்திகளின் ஒப்புநிலை சோஷலிச சக்திகளுக்குச் சாதகமாக மாறுவதற்குக் காரணங்களாவன: சோஷலிச நாடுகளது உலக அமைப்பு மேலும் வலுவும் வளர்ச்சியும் அடைவதும் அதனுடைய பொருளாதார, இராணுவ விறல் அதிகரிப்பதும்; உலக முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமாவதும் அதன் எல்லா முரண்பாடுகளும் கூர்மை அடைவதும், சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கங்கள் ஏற்றம் பெறுவது; தேசிய விடுதலை இயக்கம் ஏற்றம் பெறுவதும் ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பு தகர்ந்து சிதறுவதும்; ஜனநாயக இயக்கங்கள், முதன்மையாக மக்கள் இனங்களின் சமாதானப் போராட்டம், வெகுஜன அளவில் விரிவாக நடப்பது. சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு தற்போதைய சகாப்தத்தின் எல்லாப் புரட்சி சக்திகளதும் ஈர்ப்பு மையமாக விளங்குகிறது. தங்கள் போராட்டத்தின் வெற்றிக்கு வாய்ப்பு அளிக்கும் மகத்தான பொருளியல், அரசியல், உளவியல் அடித்தளத்தை இந்தப் புரட்சி சக்திகள் சோஷலிச நாடுகளின் உலக அமைப்பிலேயே பெற்றிருக்கின்றன.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், சமாதானம், சோஷலிசம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் பொருட்டும் போராடி வரும் சக்திகள், முதன்மையாக சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு, உலக நிகழ்முறையின் பிரதானத் திசையையும் பிரதான உள்ளடக்கத்தையும் பிரதானச் சிறப்புகளையும் இன்று தீர்மானிக்கின்றன.

சமூக வளர்ச்சிக்கு உரிய சிறிதளவேனும் முக்கியமான எந்த ஒரு பிரச்சினைக்கும் வெற்றிகரமாகத் தீர்வு காண்பது சோஷலிச நாடுகளது உலக அமைப்பு செயலூக்கத்துடன் பங்கு கொள்ளாமல் இன்று இயலாது. தவிரவும், சோஷலிச நாடுகளது உலக அமைப்பு மேலும் மேலும் வெற்றிகள் பெறுவதற்கு ஏற்ப, மனித குலத்தின் பொருளாதார, அரசியல், கொள்கைவாத வாழ்வில் அதன் பங்கு மேலும் மேலும் அதிகரிக்கும் ஆற்றலுடன் வெளிப்பட்டு வருகிறது.

முதலாளித்துவ நாடுகளின் உலக அமைப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அறவே தள்ளி விடலாம் என்று இதற்கு அர்த்தம் அல்லவே அல்ல. ஏகாதிபத்தியத்திடம் பெருத்த பொருளாதார, அரசியல், இராணுவ ஆற்றல்

இருக்கிறது. பல்வேறு மக்கள் இனங்களதும் அரசுகளுடைய வும் விவகாரங்களில் தலையிடவும் பிற்போக்கு ஆட்சிமுறை களை அவற்றின் மேல் சுமத்தவும் புரட்சிச் சக்திகளையும் முன் னேற்றச் சக்திகளையும் நசுக்கவும் இந்த ஆற்றல் அதற்கு இன்னமும் இடம் அளிக்கிறது. எனினும், ஏகாதிபத்தியம் எந்த முறைகளையும் சாதனங்களையும் கையாண்டாலும் சரியே, வரலாற்று முன்னேற்றத்தின் போக்கையும் சோஷ லிச நாடுகளது உலக அமைப்பின் இடையருது அதிகரித்து வரும் செல்வாக்கையும் தடுக்கும் நிலையில் அது இல்லை.

**உதாரணத்தின் புரட்சிக்குத் தூண்டும் சக்தி**

சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு தனது உதாரணத்தின் சக்தியால் உலகைப் புரட்சிக்குத் தூண்டுகிறது, மனித குலம் சோஷ லிச வருங்காலத்தை நோக்கி முன்னேற உதவுகிறது. உலக வளர்ச்சிப் போக்கின் மீது அதனுடைய பாதிப்பு முதன்மை யாக இதில் வெளிப்படுகிறது. வி. இ. லெனின் கூறினர்: ''சோஷலிசத்தினிடம் உதாரண சக்தி இருக்கிறது... கம்யூ னிசத்தின் முக்கியத்துவத்தை நடைமுறையில், உதாரணத் தின் வாயிலாகக் காட்ட வேண்டும்.''*

சுரண்டலையும் எல்லா வகையான ஒடுக்கு முறையையும் ஒழிப்பதற்கும், பொருளாதார, பண்பாட்டுப் பின்தங்கிய நிலைமையைப் போக்குவதற்கும், சமூகத்தை உண்மையான ஜனநாயக முறையில் ஒழுங்கமைப்பதற்கும், உழைப்பாளி களுக்கு நிலையான வசதியுள்ள வாழ்க்கைக்கு வேண்டிய நிலை மைகளை ஏற்படுத்துவதற்கும், தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், உழைக்கும் விவசாயிகளுக்குச் சாதக மாக நிலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், மனிதர்களுக்கு இடையிலும் மக்கள் இனங்களுக்கு இடையிலும் உண்மை நட்பையும் தோழமையையும் நிலைநாட்டுவதற்கும், சமா தானத்துக்கு வகை செய்து அதை நிலைப்படுத்துவதற்கும் உலக மக்களுக்குச் சிறந்த உதாரணமாக விளங்குகிறது சோஷலிசம்.

முதலாளித்துவத்துடன் பொருளாதாரத் துறையில் போட்டியை சோவியத் யூனியன் தொடங்கிய நிலைமைகள்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 75 (ருஷ்யனில்).

மிக மிகப் பாதகமாய் இருந்தன (பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய நிலை, முதல் உலக யுத்தத்தாலும் உள்நாட்டுப் போராலும் ஏற்பட்டிருந்த சீரழிவு, பொருளாதாரச் சூழ டைப்பு), எனினும் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளிலிருந்து சோவியத் யூனியனின் பின்தங்கிய நிலை சோவியத் மக்கள் அனைவரதும் முயற்சிகளால் நீக்கப்பட்டு விட்டது. உலகத் தொழில் துறை உற்பத்தியில் சோவியத் யூனியனின் பங்கு 1917ம் ஆண்டில் 4 சதவிகிதத்துக்குக் கொஞ்சமே அதிகமாய் இருந்தது என்றால், 1978ம் ஆண்டில் சோவியத் யூனியனின் தொழில் துறை உலகத் தொழில் துறை உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கை அளித்தது. அனேக முதலாளித்துவ நாடுகளில் நடந்தது போல, சொந்த மக்களையும் பிற மக்கள் இனங்களையும் சுரண்டியதாலும் சூறையாடியதாலும் அல்ல, மக்களின் தன்னலம் அற்ற உழைப்பின் விளைவாகவும் சோஷலிசப் பாங்கில் பொருளா தாரத்தை நிர்வகிப்பதில் இருந்த மேம்பாடுகளைப் பயன் படுத்தியதாலும் இந்த வெற்றிகள் பெறப்பட்டன என்பதை அழுத்திக் கூறுவது அவசியம்.

மற்ற சோஷலிச நாடுகளும் பொருளாதாரக் கட்டு மானத்தில் பெருத்த வெற்றிகள் அடைந்தன.

சமுதாய அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உலக மக்கள் இனங்களுக்கு ஒளி வீசும் உதாரணமாகத் திகழ்கிறது சோஷலிசம். மெய்யாகவே, எங்கே, வேறு எந்த சமூக அமைப்பில், சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுடையவும் அரசியல் சமத்துவம் பெறப்பட்டிருக்கிறது, சமூக உறுப்பினர் ஒவ்வொருவரும் உற்பத்திச் சாதனங்களின் கூட்டு உடைமை யாளராக இருந்து கொண்டு ஆட்சி அதிகார உறுப்புக் களுக்கு மற்றவர்களைத் தேர்ந்தெடுக்கவும் தாம் தேர்ந் தெடுக்கப்படவும் உரிமை பெற்றிருக்கிறார்? எங்கே, வேறு எந்த சமூக அமைப்பில், தொன்று தொட்டு வரும் விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும், உழவர்கள் தங்கள் நலன்களுக்காகவும் சமூகத்தின் நலன்களுக்காகவும் பாடுபடு வதற்கு வகை செய்ய முடியும்? மனித குல வளர்ச்சியின் யாவற்றிலும் சிக்கலுடன் கூர்மையும் உள்ள பிரச்சினைகளில் ஒன்றான தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, எண்ணிக்கையில் பெரியவையும் சிறியவையுமான மக்கள்

இனங்களின், தோலின் வெவ்வேறு நிறங்கள் கொண்ட மனி தர்களின் சமத்துவத்தைப் பெறுவது, எங்கே, வேறு எந்த சமூக அமைப்பில் முடியும்?

பண்பாட்டுக் கட்டுமானத் துறையிலும் உலகம் முழுவதற் கும் உதாரணமாக விளங்குகிறது சோஷலிசம். உதாரண மாக, 80 சதவிகிதம் மக்கள் எழுத்தறிவு இல்லாதவர் களாக இருந்த பின்தங்கிய ருஷ்யா உயர்ந்த முன்னணிப் பண்பாடு பெற்ற நாடு ஆகிவிட்டது. உளப் பண்பாட் டின் அளவிட முடியாத செல்வ வளங்களை சோஷலிசம் உழைப்பாளி மனிதனின் தொண்டில் ஈடுபடுத்துகிறது. முதலாளித்துவத்தைப் பொறுத்த வரையிலோ, மிகப் பெரும் திரளான உழைப்பாளி வெகுஜனங்களுக்கு, சில வேளைகளில் மிக மிகத் தொடக்கக் கல்வி கூடப் பெறும் வாய்ப்பு இல்லாதபடி அது செய்து விடுகிறது. எல்லாவற்றி லும் பணக்கார முதலாளித்துவ நாடான அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கூட 16 வயதுக்கு மேற்பட்ட 2 கோடி 30 லட் சம் குடிகள் எழுதவோ படிக்கவோ அறியாதிருக்கிறார்கள்.

நபர்வாரிப் பொருள் உற்பத்தியில் சோவியத் யூனியன் யாவற்றிலும் வளர்ச்சி மிக்க நாடுகளுக்கு இன்னமும் பிந்தி இருக்கிறது என்பது உண்மையே. ஆனால், சிறிது காலம் கழிந்ததும் இந்தக் குறையும் நீக்கப்பட்டு விடும். மனிதச் செயல்களின் நிர்ணயகரமான துறை ஆகிய பொருள் உற் பத்தித் துறையில் முதலாளித்துவத்தின் மீது சோஷலிசம் இதன் மூலம் வெற்றி பெறும். சோஷலிசம் பொருளாதார வளர்ச்சி வேகங்களில் முதலாளித்துவத்தை முந்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த வெற்றி குறித்த நம்பிக்கை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, 1971—1978ம் ஆண்டு களில் தொழில்துறைப் பொருள் உற்பத்தி அதிகரிப்பின் ஆண்டுச் சராசரி வேகங்கள் பொருளாதார பரஸ்பர உதவிக் கவுன்சில் உறுப்பு நாடுகளில் வளர்ச்சி பெற்ற முதலாளித் துவ நாடுகளில் இருந்ததை விட இரண்டு மடங்குக்கும் மேல் அதிகமாக இருந்தன, அவற்றின் விகிதங்கள் முறையே 7.7 சதவிகிதமும் 3.4 சதவிகிதமுமாக இருந்தன. விண்வெளி ஆராய்ச்சி, அணுக்கரு பௌதிகம், கணிதம், மின்னணுவியல், வானொலித் தொழில்நுட்பவியல், உலோகத் தொழில், ராக் கெட் இயந்திர இயல், விமானக் கட்டுமானம் முதலிய

வற்றில் சோவியத் யூனியன் தற்போது முன்னணி இடங்களை வகிக்கிறது.

சோஷலிச நாடுகளில் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சி வேதனை இல்லாமலும் ஒரு சீராகவும் நடந்து வருகிறது என்று சொல்வது சரியாகாதுதான். புதிய சமூகத்தை, சிறப்பாக சோஷலிசப் பொருளாதாரத்தை, அதுவும் கடந்த காலத்தில் பெரும்பாலும் பின்தங்கி இருந்த நாடுகளில் நிறுவுவது மட்டு மீறிச் சிக்கலான காரியம். இந்தச் சிக்கலான புதிய காரியத்தில் முறைகளும் இடர்களும் எதிர்ப்படுவது சகஜம். தவறுகள் நேர்வது தவிர்க்க முடியாதது. எனினும், கம்யூனிஸ்டுக் கட்சிகளால் தலைமை ஏற்று நடத்தப் பெறும் சோஷலிச நாடுகளின் மக்கள் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்துகிறார்கள், குறைகளையும் இடர்களையும் அகற்றுகிறார்கள், பொருளாதாரத்தையும் சமூக வாழ்க்கை முழுவதையும் விஞ்ஞான அடிப்படையில் நிர்வகிக்க வெற்றிகரமாக முயன்று வருகிறார்கள்.

### உலக சோஷலிசமும் தொழிலாளர் இயக்கமும்

உலக அரங்கில் சக்திகளின் ஒப்புநிலை சோஷலிசத்துக்குச் சாதகமாக மாறியதை ஒட்டி முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தினதும் உழைப்பாளிகள் அனைவருடையவும் புரட்சி இயக்கம் விரிவாக நடப்பதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாயிற்று. சோஷலிச நாடுகளின் அமைப்பு தனது உதாரணத்தால் உழைப்பாளிகளின் அறிவுகளைப் புரட்சிக்குத் தூண்டி, முதலாளித்துவத்துக்கு எதிராகவும் சமாதானத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்குமாகவும் ஜனநாயகமும் சோஷலிசமும் வெற்றி பெறுவதற்காகவும் போராட அவர்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. ஒரு புறம், பொருளாதார, அரசியல், உள வளர்ச்சி குறித்த பிரச்சினைகள் சோஷலிச நாடுகளில் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன. மறுபுறம், ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குக் கொள்கையாலும், ஆழ்ந்த பொருளாதார நெருக்கடியும் பண வீக்கமும் வேலையின்மையும் ஆயுத உற்பத்திப் போட்டியும் கொண்ட சூழ்நிலையாலும் இதன் பெரும்பகுதிச் சுமை தங்கள் மேல் சார்வதாலும் மிக மிக விரிவான உழைப்பாளி வெகுஜனங்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். இந்தக் காரணங்களால் தொழிலாளர் இயக்கத்தின் சமுதாய

அடித்தளம் விரிவடைகிறது. மேலும் மேலும் அதிக எண்ணிக்கை கொண்ட உழைப்பாளிகள் — விவசாயிகள், நகரச் சிறு முதலாளிகள், முற்போக்குள்ள அறிவுஜீவிகள் ஆகியோர்—சமுதாயப் புரட்சி ஒன்றே ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து தங்களுக்கு விடுதலை அளிக்க வல்லது என்றும் சோஷலிசப் பாதையிலேயே தாங்கள் தங்கள் உண்மையான இன்பத்தைப் பெற முடியும் என்றும் நம்பிக்கை கொள்ளத் தொடங்குகிறார்கள்.

போராட எழும் உழைப்பாளி மக்கள் சோஷலிச நாடுகளின் மக்களது பல்வகை ஆதரவைச் சார்ந்திருக்கும் விரிவான வாய்ப்புக்களை இப்போது பெற்றிருக்கிறார்கள். இதில் ஒரு வகை தார்மிக ஆதரவு—தொழிலாளி வர்க்கத்தின் வீரப் போராட்டத்துடன் ஆழ்ந்த ஒருமைப்பாடும் அதற்கு ஆமோதிப்பும் பாராட்டும் பரிவும் நிறைந்தது. இன்னொரு வகை நேர்முகப் பொருளியல் ஆதரவு—வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும், ஏகாதிபத்தியவாதிகளின் தான்தோன்றி நடவடிக்கைகளின் விளைவாகவும் உற்பத்தித் துறை விபத்துக்களாலும் இயற்கை உற்பாதங்களாலும் இத்தகைய பிறவற்றாலும் துன்பத்துக்கு உள்ளான உழைப்பாளி மக்களுக்கும் பணத்தாலும் உணவுப் பண்டங்களாலும் வேறு விதங்களிலும் உதவுவது.

ஆளும் ஏகாதிபத்திய வட்டாரங்களின் பிற்போக்குக் கொள்கைக்கு எதிராக சோஷலிச நாடுகளின் மக்கள் ஆத்திரம் பொங்கும் எதிர்ப்புக் குரல் எழுப்புகிறார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகளும் வேறு முற்போக்கு நிறுவனங்களும் முற்போக்குள்ள ஊழியர்களும் தொல்லைப்படுத்தப்படுவதையும், தொழிலாளர்களுக்கும் பொதுவாக ஜனநாயகத்துக்கும் கேடு செய்யும் சட்டங்களையும் உழைப்பாளி மக்கள் ஒடுக்கப்படுவதையும் அவர்கள் வன்மையாக எதிர்க்கிறார்கள்.

சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு முற்போக்குச் சக்திகளுக்கு ஆதரவு அளிப்பதும் ஏகாதிபத்தியப் பிற்போக்குச் சக்திகளைக் கண்டனம் செய்வதும் முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சி மீது சந்தேகம் இன்றிச் சாதகமான பாதிப்பு விளைக்கின்றன. தற்போதைய சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கம் பெற்றுள்ள மிகப் பெரிய பரப்புக்கும் ஒழுங்கமைப்புக்

கும் முக்கியக் காரணங்களில் ஒன்று இது ஆகும். பல முதலாளித்துவ நாடுகளில் மார்க்சியக் கட்சிகள் தொழிலாளர் இயக்கத்துக்குத் தலைமை தாங்கியுள்ளன. சோஷலிச நாடுகளது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அனுபவத்தை இவை விரிவாகப் பயன்படுத்துகின்றன, புரட்சி இயக்கம் பற்றிய மிக முக்கியப் பிரச்சினைகள் குறித்து அவற்றுடன் இடைவிடாமல் கருத்துப் பரிமாற்றங்கள் செய்து கொள்கின்றன.

### உலக சோஷலிசமும் தேசிய விடுதலை இயக்கமும்

சோஷலிச நாடுகள் காலனியாட்சி முறையின் சமரசப் படுத்த முடியாத எதிரிகள். ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களது தேசிய விடுதலைப் போராட்டத்தின் மிக மிக ஒத்திசைந்த ஆதரவாளர்கள். அவற்றின் தேசிய சம உரிமைக்கும் அரசு சுதந்திரத்திற்கும் ஆதரவு அளிப்பவர்கள். ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்கத்தை எதிர்த்தும் சுதந்திரத்திற்காக மக்கள் இனங்கள் நடத்தும் போராட்டத்தை எல்லா வகையிலும் ஆதரித்தும் செயலாற்றி வரும் சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு தேசிய விடுதலை இயக்கத்தின் ஏற்றத்துக்கும் ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பு தகர்ந்து சிதறுவதற்கும் விறல் மிக்க காரணியாக விளங்குகிறது.

சோவியத் யூனியனின் வடிவிலும், சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் வடிவிலும் விசுவாசமுள்ள நண்பன், நம்பகமான கூட்டாளி தங்களுக்குக் கிடைத்திருப்பதை ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் சொந்த அனுபவத்தின் பேரில் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுடைய விடுதலை இயக்கத்தைத் தடையின்றி நசுக்குவது ஏகாதிபத்தியவாதிகளுக்கு முன்பு முடிந்தது. இப்போதோ, உலக சோஷலிசத்தின் அதிகரித்து வரும் வலிமையை அவர்கள் மேலும் மேலும் அடிக்கடி கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. சுதந்திரம் பெறுவதற்கு மட்டும் இன்றி, பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் சமாதான, முன்னேற்றப் பாதையைப் பின்பற்றவும் மக்கள் இனங்களுக்குச் சொல்லாலும் செயலாலும் உதவி வருகிறது உலக சோஷலிசம். ஆயுதந்தாங்கிய உதவியையும் அது விலக்காகக் கருதுவதில்லை.

விடுதலை பெற்ற மக்களின் அமைதி நிறைந்த உழைப்

யையும் அரசுரிமையையும் சுதந்திரத்தையும் காத்து நிற்கும் தேசியப் படைகளை வலுப்படுத்துவதற்கு விடுதலை பெற்ற நாடுகளுக்கு உலக சோஷலிசம் உதவி வருகிறது. இந்த நாடுகள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை வெற்றிகரமாக எதிர்த்து நிற்பது இதனால் சாத்தியம் ஆகிறது.

தேசியப் பொருளாதாரத்தை நிறுவவும் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் கல்வியையும் பண்பாட்டையும் வளர்க்கவும் புதிதாக அரசுரிமை பெற்ற நாடுகளுக்கு சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் உதவி வருகின்றன. காலனியாட்சி முறையிடமிருந்து மரபுரிமையாகப் பெற்ற பின்தங்கிய நிலையைப் போக்கிக் கொள்ளவும் அன்னிய ஏகபோகங்களின் ஒடுக்குமுறையிலிருந்து முடிவாக விடுதலை பெறவும் இவ்வாறு அவை வாய்ப்பு அளிக்கின்றன. வளர்ச்சி அடைந்து வரும் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார பரஸ்பர உதவி கவுன்சில் நாடுகள் பொருளாதார, தொழில்நுட்ப உதவி அளித்து வருகின்றன என்று சொல்வதே போதுமானது.

சோஷலிச நாடுகள் கட்டுமானத்துக்கு உதவுவதோடு நில்லாமல், சாதகமான நிபந்தனைகளின் பேரில் பற்றுக் கடன்களும் ரொக்கக் கடன்களும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்குக் கொடுப்பதன் மூலம் நிதியுதவியும் அளித்து வருகின்றன. பொருளாதாரம், விஞ்ஞானம், பண்பாடு, தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் தேசிய அலுவலர்களைப் பயிற்றுவதில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு விலை மதிக்க முடியாத உதவியை சோஷலிச நாடுகள் அளித்து வருகின்றன. சோஷலிச நாடுகளுடன் இளம் சுதந்திர அரசுகள் நடத்திவரும் பரஸ்பர லாபகரமான வர்த்தகம் இவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

சோஷலிச நட்புமண்டல நாடுகள் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்குத் தன்னலம் அற்ற பல வகையான உதவி அளித்து வருகின்றன. சர்வதேசப் பொருளாதார உறவுகளின் புதிய, சோஷலிசத் தன்மையை, சோஷலிச உலகுக்கு மட்டுமே இயல்பான உயர்ந்த சர்வதேசியக் கடமையையும் அனைத்துலக ஒருமைப்பாட்டையும் காட்டுகிறது இந்த உதவி.

சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் தங்

கள் தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின் உழைப்பினுல் பெறப்பட்ட சாதனங்களேயும் வளங்களேயும் அரசியல், பொருளாதாரச் சுதந்திரத்தின் பொருட்டுப் போராடி வரும் மக்கள் இனங்களுக்கு உதவுவதற்காக அனுப்பி வருகின்றன.

முழுமையான அரசியல், பொருளாதாரச் சுதந்திரத்திற்காக வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் போராட்டத்துக்கு ஆதரவு அளித்து வருகிற சோவியத் யூனியன், அரசினர் துறையைச் சேர்ந்த முக்கியமான பொருளாதாரக் கிளேகளே முதன்மையாக வளர்ப்பதில் இந்தியாவுக்கு உதவி வருகிறது. இவ்வாறு செய்கையில் சோவியத் யூனியன் தனது ஒத்துழைப்பால் நிறுவப்படும் தொழிலகங்களின் உடைமை உரிமையிலோ, நிர்வாகத்திலோ, வருவாயின் பங்கீட்டிலோ எவ்விதப் பங்கையும் கோருவதில்லே. இந்திய நிறுவனங்களே இவற்றின் முழுமையான உடைமையாளிகளாக விளங்குகின்றன.

சோவியத் யூனியனின் ஒத்துழைப்பால் இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் எழுபதுக்கு மேல் பெரிய இலக்குகள் இந்திய நிலத்தில் கட்டப்பட்டுள்ளன, அல்லது கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை ஏற்கெனவே இயங்கி, நாட்டின் வளர்ச்சியிலும் அதன் பொருளாதார ஆற்றல் வளத்தை மேலும் வலுப்படுத்துவதிலும் கணிசமான பங்களிப்பு நிகழ்த்தி வருகின்றன. இந்தியாவுடன் சோவியத் யூனியனின் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிலேயான தன்மை கொண்டிருக்கிறது, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

எவற்றின் கட்டுமானத்திலும் விரிவாக்கத்திலும் இந்தியாவுக்கு சோவியத் யூனியனின் ஒத்துழைப்பு கிடைத்ததோ, இன்னும் கிடைத்து வருகிறதோ, அந்த இலக்குகளாக விளங்குகின்றன பொருளாதாரத்தின் பிரதானத் துறைகளேச் சேர்ந்த பெரிய தொழிலகங்கள். இரும்பு வகை, இரும்பற்ற உலோகத் தொழில், பெட்ரோலியம் எடுப்பதற்கும் சுத்திகரிப்பதற்குமான தொழில், மின்னுக்கம், நிலக்கரித் தொழில், இயந்திர நிர்மாணம், மருந்துத் தொழில் முதலியன இவற்றில் அடங்கும். பெட்ரோலியத்துக்கும் எரிவாயுவுக்குமான தேட்டம் சோவியத், இந்திய நிபுணர்கள் மற்றும் நிறுவனங்

களின் நெருங்கிய ஒத்துழைப்பில் நடத்தப்படுகிறது. நிலக்கரித் தொழிலில் கணிசமான வருங்கால வாய்ப்புக்கள் தென்படுகின்றன. மொத்தம் ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி டன் நிலக்கரி தோண்டி எடுப்பதற்கு உதவும் சுரங்கங்கள் சோவியத் யூனியனின் ஒத்துழைப்புடன் திட்டமிடப்படத் தொடங்கியுள்ளன. கல்கத்தாவில் மெட்ரோ—அதாவது தரையடிச் சுரங்க ரெயில் பாதை—நிறுவுவதிலும் சோவியத் யூனியன் உதவி வருகிறது.

அரசினர் துறையில் பெரிய புதிய தொழிலகங்களின் கட்டுமானம் இவ்விரு நாடுகளது ஒத்துழைப்பின் வருங்கால வாய்ப்புகள் உள்ள ஒரு திசை ஆகும். ஒத்துழைப்பின் இன்னொரு திசை உற்பத்திக் கூட்டுறவு. இதன் வளர்ச்சி, நிறுவப்படும் தொழிலகங்களின் உற்பத்திப் பொருள்களுக்கு நிலையான சந்தையை உருவாக்கும் அதே சமயத்தில் சோவியத் யூனியனின் தேசியப் பொருளாதாரத்துக்கு இன்றியமையாத சரக்குகள் கிடைக்க வகை செய்யும்.

சோவியத் யூனியனும் இந்தியாவும் மூன்றுவது நாடுகளில் தொழில்துறை இலக்குகளைக் கூட்டாக நிறுவுவது ஒத்துழைப்பின் புதிய வடிவமாக விளங்கும். உதாரணமாக, சோவியத் தொழில்நுட்ப உதவியுடன் பல்கேரியா, யுகோஸ்லாவியா, ஹங்கேரி, இலங்கை, துருக்கி, கியூபா ஆகிய நாடுகளில் நிறுவப்படும் தொழிலகங்களுக்கு இந்தியத் தொழில் நிலையங்கள் சில வகை உலோகத் தொழில் சாதனங்களையும் பிற சாதனங்களையும் 1976ல் கையெழுத்தான ஒப்பந்தங்களின் படி சப்ளை செய்யும்.

இந்தியத் தேசிய அலுவலர்களைப் பயிற்றுவதில் சோவியத் யூனியன் உதவி வருகிறது. பல சோவியத் உயர் கல்வி நிலையங்களின் ஒத்துழைப்பால் நிறுவப்பட்ட பம்பாய் இயந்திர நுட்ப இயல் கல்லூரி இந்தக் காரியத்தில் முக்கியமான இடத்தை வகிக்கிறது. இதில் பயின்று தேர்ந்தவர்கள் தேசியத் தொழில்துறையின் பல்வேறு கிளைகளில் வெற்றிகரமாக உழைத்து வருகிறார்கள். உயர் கல்வியும் நடுத்தரக் கல்வியும் பெற்ற சுமார் 20 ஆயிரம் இந்திய நிபுணர்களும் உயர் தேர்ச்சி பெற்ற சுமார் 80 ஆயிரம் தொழிலாளர்களும் சோவியத் யூனியனின் ஒத்துழைப்பால் ஏற்கெனவே பயிற்றப் பெற்றுள்ளனர்.

கால் நூற்றாண்டுக் கால ஒத்துழைப்பின் போது இரு நாடுகளுடையவும் விஞ்ஞானத் தொடர்புகள் வளர்ந்து வலுவாகி இருக்கின்றன. சமாதானச் செயல்களில் அணுவாற்றலின் பயன்பாடு, கணக்கீட்டுப் பொறி இயல், மின்னணு இயல், விண்வெளி ஆராய்ச்சி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு விரிவாக வளர்ந்துள்ளது. சோவியத் தானியங்கி நிலையங்களால் பூமிக்கு எடுத்துவரப்பட்ட சந்திரத் தரையின் மாதிரிகளை விஞ்ஞானப் பரிமாற்றம் என்ற வகையில் சோவியத் யூனியன் இந்திய விஞ்ஞானத்தின் பிரதிநிதிகளிடம் கொடுத்தது. முதலாவது இந்தியத் துணைக்கோள் ஆரியபட்டா விண்வெளியில் ஏவப்பட்டது சோவியத், இந்திய விஞ்ஞானிகளின் விஞ்ஞான தொழில்நுட்பப் பெரு வெற்றியாகத் திகழ்ந்தது.

சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடந்து வரும் ஒத்துழைப்பின் பயன்களைத் தொகுத்துரைத்த இந்தியத் தொழில் வட்டாரங்களின் செய்தித்தாள் அண்மையில் பின்வருமாறு எழுதியது: ''இந்த ஒத்துழைப்பு இந்தியாவுக்கு ஜீவாதார முக்கியத்துவம் கொண்டது. சோவியத் யூனியனின் உதவியால் நிறுவப்பட்ட தொழிலகங்கள் மொத்த உலோகத் தொழில் சாதனங்களில் 80 சதவிகிதமும், கனரக மின் இயந்திரங்களில் 60 சதவிகிதமும், 35 சதவிகிதம் இரும்பும் 70 சதவிகிதம் பெட்ரோலியமும், பெட்ரோலிய சுத்திகரிப்பு உற்பத்திப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதியும், மின் ஆற்றலில் ஐந்தில் ஒரு பகுதியும் இப்போது நாட்டுக்கு அளித்து வருகின்றன.''

சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையே 10-15 ஆண்டுக் காலத்துக்குக் கணக்கிடப்பட்ட நீண்டகாலப் பொருளாதார, வர்த்தக, விஞ்ஞான-தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான செயல்திட்டமும் மருத்துவ விஞ்ஞானத் துறையிலும் உடல்நலப் பாதுகாப்பிலும் ஒத்துழைப்புக்கான சோவியத்-இந்திய ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டன.

தேசிய எல்லைப் பிரதேசங்களின் பொருளாதார, பண்பாட்டுப் பின்தங்கிய நிலையைப் போக்குவதில் சோஷலிச நாடுகள் காட்டிய உதாரணமும் முதன்மையாக சோவியத் யூனியன் பெற்ற அனுபவமும், இந்தப் பிரதேசங்கள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தை ஒரு புறம் விட்டு முன்

னேறி சோஷலிசப் பாதையில் அடி வைத்ததும் புதிதாக அரசுரிமை பெற்ற நாடுகளுக்கு சோஷலிச நாடுகள் எல்லாத் துறைகளிலும் அளித்து வரும் உதவியும் தேசிய விடுதலைப் புரட்சிகள் ஆழமாவதைச் சாத்தியம் ஆக்குகின்றன. தேசியப் பணிகள் ஒத்திசைந்த முறையில் நிறைவேற்றப்படும் போது இந்த நாடுகளில் நவீனப் பொருளாதாரம் உருவாகிறது, தொழிலாளி வர்க்கம் அமைகிறது, அதன் நிறுவன, கொள்கை வாத ஒற்றுமை வளர்கிறது, தேசிய இனங்களின் முற் போக்குச் சக்திகள் திண்ணமாக ஒன்றிணைவது நிகழ்கிறது, இந்தக் காரணங்களால் இவை முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதைக்குப் பரிணமிப்பதற்கு வேண்டிய பொரு ளியல், சமுதாய முதனிலைகள் தோன்றுகின்றன. சில நாடு கள் சோஷலிசத் திசையில் முன்னேறும் போக்கை இப்போதே மேற்கொண்டுள்ளன.

**உலக சோஷலிசமும் சமாதானப் போராட்டமும்**

நம் காலத்தின் மிக முக்கியப் பிரச்சினையான போரும் சமாதானமும் பற்றிய பிரச்சினையின் தீர்வு மீது சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு ஏற்படுத்தி வரும் பாதிப்பு மகத்தானது. போர்களின் பொருளாதார அடிப்படையான தனியார் சொத்துரிமை சோஷலிச சமூகத் தில் அகற்றப்பட்டு விட்டது. யுத்தங்களிலும் பிற மக்கள் இனங்களையும் அரசுகளையும் சூறையாடுவதிலும் அடிமைப் படுத்துவதிலும் அக்கறை உள்ள சமூகச் சக்திகள் அங்கே இல்லை. சோஷலிச சமூகத்தின் இந்த இயல்பிலிருந்தே பிறக் கிறது சமாதானப் போராட்டம். சமாதானத்திற்காகவும் சமாதான சகவாழ்வுக்காகவும் விடாப்பிடியான போராட்டத்தை சோஷலிச நாடுகள் நடத்தி வருவதன் காரணம் இதுவே. கம்யூனிசத்தைக் கட்டி அமைப்பதற்குச் சாதகமான வெளி நிலைமைகளை ஏற்படுத்துவது, சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் வளர்ச்சியையும், தேசிய விடுதலை இயக்கம், தொழி லாளர் இயக்கம் ஆகியவற்றின் வளர்ச்சியையும், ஏகா திபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தையும் முடிவாகப் பார்க்கையில் அதன் மீது எல்லாப் புரட்சிச் சக்திகளுடைய வும் வெற்றியையும் சாத்தியம் ஆக்குவது, உலக சமாதானத் தைக் காப்பது—இதுவே சோவியத் யூனியனுடைய வெளி நாட்டுக் கொள்கையின் உள்ளடக்கம் ஆகும். சோவியத்

யூனியனது அரசியல் சட்டத்தின் நான்காம் அத்தியாயத்தில் சோவியத் அரசின் சமாதானப் பற்றுள்ள வெளிநாட்டுக் கொள்கை சட்ட பூர்வமாக உறுதியாக்கப்பட்டிருக்கிறது, சர்வதேச ஒத்துழைப்பு, மக்கள் இனங்களது பாதுகாப்புக் கான போராட்டம் என்ற கோட்பாடு அறிவிக்கப்பட்டிருக் கிறது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பீரங்கி வெடிகள் வெகு காலத்துக்கு முன்பே முழக்கத்தை நிறுத்தி விட்டன. ஆனு லும் ஏகாதிபத்தியவாதிகளுடைய சூழ்ச்சிகளின் காரணமாக ஒரு போது ஓர் இடத்திலும் மறு போது வேறு இடத்திலும் வட்டாரப் போர்கள் எனப்படுபவை, அதாவது குறித்த இடங்களுக்கு உட்பட்ட போர் நெருப்புக்கள் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் உலக யுத்தம் மூள்வதற்கான அபாயத்தைத் தனக்குள் அடக்கி இருக்கிறது. அதனுல்தான் சோவியத் யூனியன் இந்த அபாயகரமான நெருப்புக்களை மூண்டதுமே அணைத்து விட முயல்கிறது, அரசுகளுக்கு இடையே எழும் விவாதத்துக்கு இடமான பிரச் சினைகள் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்படுமாறு செய்ய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. அதே சமயம், ஏகாதிபத்தியவாதிகளதும் அவர்களுடைய துணைவர்களதும் ஆக்கிரமிப்புத் தாக்குதல்களை எதிர்க்க மக்கள் இனங்களுக்கு அது உதவி வருகிறது.

சோ.யூ.க. கட்சியின் 24வது காங்கிரசில் சமாதானச் செயல்திட்டம் முன்வைக்கப்பட்டது. கட்சியின் 25வது காங் கிரசிலோ, சமாதானத்திற்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கு மாகவும் மக்கள் இனங்களது விடுதலைக்கும் சுதந்திரத்துக்கு மாகவும் மேற்கொண்டு போராட்டம் நடத்துவதற்கான செயல்திட்டம் முன்வைக்கப்பட்டது. கெடுபிடி நிலையின் தளர்ச்சியைத் தொடர்வதற்கும் ஆழப்படுத்துவதற்குமான செயல்திட்டம், ஆயுத உற்பத்திப் போட்டியை நிறுத்து வதற்கான போராட்டம் குறித்து சோ. யூ. க. கட்சியின் 26வது காங்கிரசால் ஏற்கப்பட்ட செயல்திட்டம் அவற்றின் வளர்ச்சியாக விளங்குகிறது.

தரை மேலும் காற்றிலும் நீருக்கு அடியிலும் அணுக்கரு ஆயுத சோதனைகளைத் தடை செய்வது, வெகுஜனநாச ஆயுதங் கள் உள்ள கலங்களை விண்வெளிக் கோளப் பாதையில்

செலுத்தாமல் இருப்பது, அணுக்கரு ஆயுதங்களைப் பரப்பாமல் இருப்பது ஆகியவை குறித்த ஒப்பந்தங்கள் சோவியத் யூனியனின் முன்முயற்சியால் கையெழுத்தாயின. அமைதிப் பற்றுள்ள மக்களுடைய உற்சாகமான ஆமோதிப்பும் ஆதரவும் இவற்றுக்குக் கிடைத்தன.

சமாதானத்துக்காகவும் சமாதான சகவாழ்வுக்காகவும் விடாப்பிடியாகப் போராடி வரும் சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு உலகில் சமாதானப் பற்றுள்ள எல்லாச் சக்திகளதும் கவர்ச்சி மையமாகவும் விளங்குகிறது. பிற்போக்குச் சக்திகளுக்கும் யுத்தச் சக்திகளுக்கும் எதிராக சமாதானச் சக்திகளையும் முற்போக்குச் சக்திகளையும் அது திரட்டி ஒன்று படுத்துகிறது. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு முயற்சிகளின் வழியில் பெருத்த தடையாக அது விளங்குகிறது.

சமாதானப் பாதுகாப்புக்காகப் பண்பாட்டு ஊழியர்களின் அனைத்துலகக் காங்கிரஸ் 1946ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நடந்தது. சமாதான ஆதரவாளர்களின் ஒழுங்கமைந்த இயக்கத்துக்கு இது அடி கோலியது.

சமாதான ஆதரவாளர்களின் முதலாவது அனைத்துலகக் காங்கிரஸ் 1949ம் ஆண்டு வசந்தத்தில் நடந்தது. காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிரந்தரக் கமிட்டி பெயர் பெற்ற ஸ்டாக்ஹோம் வேண்டுகோளை 1950 மார்ச்சில் விடுத்தது. அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்காகப் போராடும்படி நல்லெண்ணமுள்ள எல்லா மனிதர்களையும் அறைகூவி அழைத்தது இந்த வேண்டுகோள். சுமார் 60 கோடிப் பெயர் இந்த வேண்டுகோளில் கையெழுத்து இட்டார்கள்.

1950 நவம்பரில் நடந்த சமாதான ஆதரவாளர்களின் இரண்டாவது அனைத்துலகக் காங்கிரசில் உலக சமாதானக் கவுன்சில் அமைக்கப்பட்டது. பிரான்சு நாட்டின் பிரபல விஞ்ஞானியும் சமூக ஊழியருமான பிரெடெரிக் ஜொலியோ கியூரி இதன் முதல் தலைவர் ஆனார்.

உலக சமாதானக் கவுன்சிலின் தற்போதைய தலைவர் ரமேஷ் சந்திரா பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக இந்திய மக்கள் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஊக்கத்துடன் பங்காற்றினார். நாடு சுதந்திரம் பெற்றபின் சமாதான ஆதரவாளர்களின் தேசிய இயக்கத்தையும், பின்னர் ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் ஒருமைப்பாட்டு இயக்கத்தையும் உருவாக்கு

வதில் பெரும் பங்கு கொண்டார். 1955ல் ரமேஷ் சந்திரா அனைத்து இந்திய சமாதானக் கவுன்சிலின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சமாதான ஆதரவாளர்களுடைய மிகப் பெரும் வெகுஜன தேசிய இயக்கங்களில் ஒன்றின் தலைவர் ஆனார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளதும் பிற ஏகாதிபத்திய வல்லரசுகளதும் ஆளும் வட்டாரங்களால் மூட்டி விடப்பட்ட ''பனிப்போரின்'' துன்பக் காலப் பகுதியாக ஐம்பதுக்களும் அறுபதுக்களின் தொடக்கமும் மக்களுடைய நினைவில் பதிந்துள்ளன. புதிய உலக யுத்தம் மூளும் ஆபத்தைத் தவிர்ப்பது யாவற்றிலும் முக்கியப் பணி—மெய்யாகவே மனித குலம் அனைத்துக்கும் உரிய பணி—ஆகி விட்டது. சமாதான ஆதரவாளர்களின் உலக இயக்கத்தில் இணைந்திருந்த எல்லா நாடுகளையும் கண்டங்களையும் சேர்ந்த நல்லெண்ணமுள்ள மனிதர்கள் அனைவரும் இந்தப் பணியின் நிறைவேற்றத்துக்கு உதவ முடிவு செய்தது இயல்பே. சர்வதேசக் கெடுபிடி நிலைமையைத் தளர்த்துவது, அரசுகளுக்கு இடையே உறவுகளை முறைப்படுத்துவது என்று கொள்கை முன்னேற வகை செய்த மிக முக்கியக் காரணிகளில் இந்த இயக்கமும் ஒன்றாக விளங்கியது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

1966ம் ஆண்டில் ரமேஷ் சந்திரா உலக சமாதானக் கவுன்சிலின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அனைத்து உலகின் சமாதானப் பற்றுள்ள சக்திகளது எல்லா முக்கிய வெகுஜனச் செயல்களையும் ஒழுங்கமைத்து வரும் உலக சமாதானக் கவுன்சில், சர்வதேச வாழ்க்கையின் எல்லா உடனடி முக்கியப் பிரச்சினைகளையும் சமாதானப் போராட்டத்தின் தற்போதையக் கட்டத்துக்கு உரிய எல்லாப் பணிகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்படி செய்வதற்காக இந்தப் பதவியில் (1977ம் ஆண்டு முதல் உலக சமாதானக் கவுன்சில் தலைவர் பதவியில்) இருந்தவாறு அவர் நிறையப் பாடுபட்டு வருகிறார். நியூட்ரான் ஆயுதத்தைத் தடை செய்வதற்காகவும், கெடுபிடி மையங்களை அகற்றுவதற்காகவும், அரேபிய மக்களதும் சிலி, அங்கோலா, தென் ஆப்பிரிக்கா ஆகியவற்றின் மக்களதும் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும் நடந்த சர்வதேச இயக்கங்கள் இந்தச் செயல்களில் சில.

உலக சமாதானக் கவுன்சில் மிகத் துடியாகச் செயலாற்றி வருவதற்கு முதன்மையான காரணம் உலகின் எல்லா நாடுகளையும் சேர்ந்த கோடிக்கணக்கான மக்களுடைய கடு முயற்சி ஆகும். மக்கள் இனங்களுக்கு இடையே சமாதானமும் நட்பும் என்ற உயர்ந்த குறிக்கோள்களைச் செயல்படுத்த இவர்கள் விரும்புகிறார்கள். உலக சமாதானக் கவுன்சிலின் வெற்றிகளிலும் அதன் சர்வதேசச் செல்வாக்கும் மதிப்பும் அதிகரித்து வருவதிலும் அதன் தலைவரது தொண்டு மிகப் பெரிது என்பதில் சந்தேகம் இல்லை. வெகுஜனங்களின் மிகப் பெருத்த வாய்ப்புக்களிலும், நாடாளுமன்றங்களதும் அரசாங்கங்களதும் நடவடிக்கைகள் மீது பயனுள்ள பாதிப்பு நிகழ்த்த வல்ல சமாதானப் பற்றுள்ள பொது மக்கள் கருத்தின் ஆற்றலிலும் நம்பிக்கை அவரது இயல்பான பண்பு ஆகும்.

வெவ்வேறு கொள்கைவாதக் கண்ணோட்டங்களும் வெவ்வேறு அரசியல் நம்பிக்கைகளும் கொண்ட மனிதர்களை உலக சமாதானத்தைப் பாதுகாத்து வலுப்படுத்துவது என்ற விரிவான பொது ஜனநாயகக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் நெருக்கமாக இணைப்பதும் ஒற்றுமைப்படுத்துவதும் பெருத்த முக்கியத்துவம் உள்ளவை என்று கருதுகிறார் உலக சமாதானக் கவுன்சில் தலைவர் ரமேஷ் சந்திரா.

**மிக முக்கியமான சர்வதேசப் பிரச்சினைகளைச் சமாதான வழியில் தீர்க்க உதவும் பொருளியல் சக்தி சோஷலிசத்தின் தோற்றம் காரணமாக மனித குல வரலாற்றில் முதன் முதலாக உருவாகி இருக்கிறது.**

# அத்தியாயம் மூன்று

# தற்போதைய முதலாளித்துவமும் புரட்சி இயக்கமும்

தற்போதையத் தொழிலாளி வர்க்கம் ஒரே மாதிரி யானது அல்ல. சோஷலிச நாடுகளின் தொழிலாளி வர்க்க மும் முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கமும் காலனியாட்சி நுகத்திலிருந்து விடுபட்டு வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் தொழிலாளி வர்க்கமும் இதில் உள்ளன. உழைப்பாளர் பெருஞ் சேனையின் முக்கியமானவையும் எண் ணிக்கையில் பெரியவையுமான படை அணிகளில் ஒன்று முத லாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் ஆகும். மனித குலத்தை விடுவிக்கும் தனது மகத்தான பணியை நிறைவேற் றும் கடமை அதற்கு இன்னமும் எதிர்நிற்கிறது. தொழி லாளர்களது இந்தப் படை அணியின் போராட்டம் தற் போதைய முதலாளித்துவத்தின் நிலைமைகளில் விரிவாக நடந்து வருவதால், தற்போதைய முதலாளித்துவம் மார்க் சிய நோக்கில் எவ்வகையானது என்பதைக் காட்டுவது அவசியம் ஆகிறது.

## 1. உலக முதலாளித்துவத்தின் நெருக்கடி. தற்போதைய முதலாளித்துவத்தின் மனிதவிரோதத் தன்மை

தனியார் சொத்துரிமையும் சுரண்டலும் ஆதிக்கம் வகிக்கும் முதலாளித்துவ உலகம் ஆழ்ந்த பொது நெருக் கடிக்கு உள்ளாகி இருக்கிறது. இது, முதலாளித்துவத்துக்கு இயல்பான புறநிலை விதிகளின் விளைவு, அதன் தன்மையில் அடங்கியுள்ள சமரசப்படுத்த முடியாத முரண்பாடுகளது

வளர்ச்சியின் விளைவு. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி எல்லா முதலாளித்துவ நாடுகளையும், உலக முதலாளித்துவம் முழுவதையும் அடி முதல் முடி வரை ஆட்கொண்டிருக்கும் நிலைமை ஆகும். அதன் பொருளாதாரமும் சமூக அமைப்பும் அரசியலும் கொள்கைவாதமும் பண்பாடும் இதனால் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொது நெருக்கடியால் பீடிக்கப்பட்டிருக்கும் முதலாளித்துவத்திற்குச் சில நாடு களைத் தன் எல்லை வட்டத்துக்குள் வைத்திருப்பது மேலும் மேலும் கடினமாக இருக்கிறது. இவை ஒன்றன் பின் ஒன்றாக முதலாளித்துவத்திலிருந்து தொடர்பை அறுத்துக் கொண்டு சோஷலிச வளர்ச்சிப் பாதைக்கு மாறி வருகின்றன.

பொது நெருக்கடியைத் தொடங்கிவைத்தது ருஷ்யா வில் நடந்த அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றி. எல்லா வகையிலும் முயன்றும் கூட உலகின் முதலாவது சோஷலிச அரசு—சோவியத் யூனியன்—உரு ஆவதைத் தடுக்க முதலாளித்துவத்தால் முடியவில்லை. ஏகாதிபத்திய வாதிகள் இராணுவப் படையெடுப்புக்கள் நடத்தினார்கள், பொருளாதாரச் சூழடைப்பும் கொள்கைவாத அழிவு நட வடிக்கைகளும் மேற்கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய எல்லா விதத் தாக்குதல்களையும் எதிர்த்து வெற்றி கொண் டது இந்தப் புதிய அரசு. தன் உயிராற்றலையும் வெல்ல முடி யாத விறலையும் அது நிரூபித்தது.

### பொது நெருக்கடியின் புதிய கட்டம்

முதலாளித்துவத்தினது இப் போதைய நெருக்கடியின் மிக முக்கியச் சிறப்புத் தன்மை, உலக அரங்கில் சக்திகளின் ஒப்பு நிலை சோஷலிச நாடுகளின் உலக அமைப்புக்குச் சாதகமாக அடிப்படையில் மாறி இருப் பது ஆகும். சோஷலிசத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கு மாகப்போராடி வரும் சக்திகள் உலகம் முழுவதிலும் பேரள வாக அதிகரித்து வருகின்றன. தேசிய விடுதலை இயக்கத்தின் முன் ஒருபோதும் இல்லாத ஏற்றம் காரணமாக ஏகாதிபத் தியத்தின் காலனியாட்சி அமைப்பு தகர்ந்து சிதறலாயிற்று. சமாதான நிலைமைகளிலும் எதிரெதிரான சமூக அமைப்புக் கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வு நிலைமை களிலும் பொது நெருக்கடியின் இந்தப் புதிய கட்டம் தோன்றி இருப்பது குறிப்பிடத் தக்கது ஆகும்.

முதலாளித்துவத்தின் பொருளாதாரத்துக்கும் அரசியலுக்கும், அதன் கொள்கைவாதத்துக்கும் ஒழுக்க நெறிக்கும் இயல்பானது ஆழ்ந்த நெருக்கடி. அண்மை ஆண்டுகளில் முதலாளித்துவ உலகில் மூண்டிருக்கும் நெருக்கடியின் கூர்மையையும் ஆழத்தையும் முப்பதுக்களின் தொடக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடி ஒன்றுடன்தான் ஒப்பிட முடியும். உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் எல்லா முக்கிய மையங்களையும் அது ஒரே நேரத்தில் ஆட்கொண்டு விட்டது. அதிலும், இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு உருவான, உயர் வளர்ச்சி பெற்ற அரசு-ஏகபோகப் பொருளாதாரத்தில் பரவி இருப்பதாகும் இந்த நெருக்கடி. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் கடுமையான உற்பத்திக் குறைவும் வேலையின்மை அதிகரிப்பும் நாணய மாற்று, ஆற்றல் வளம், மூலப் பொருள்கள் ஆகிய துறைகளில் ஏற்பட்ட நெருக்கடிகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன. இடைவிடாமல் அதிகரித்து வரும் படைத் துறைச் செலவுகளால் சூடேற்றப்படும் பண வீக்கம் நெருக்கடி நிகழ்முறையைச் சிறப்பாகத் தீவிரப்படுத்தி இருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகளின் பரஸ்பரப் போட்டியும் ''பொதுச் சந்தையிலும்'' நாட்டோவுக்கு உள்ளும் சச்சரவுகளும் அதிகரித்துள்ளன. சர்வதேச ஏகபோக நிறுவனங்களின் மிகுந்து வரும் திறன் போட்டியை இன்னும் கடுமை ஆக்கி இருக்கிறது.

பிரதான உற்பத்திச் சக்தி ஆகிய உழைப்பாளர்களை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் முதலாளித்துவம் இல்லை. பெருந் திரளான தொழிலாளர்களை அது வேலையின்மையால் திண்டாட வைத்து, பிழைப்பு நடத்த வகை அற்றவர்கள் ஆக்கி இருக்கிறது. ஐ. நா. சங்கத்தின் அதிகார பூர்வமான புள்ளி விவரங்களின்படி வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை சுமார் 180 லட்சம். இவர்களில் ஏறத்தாழ 80 லட்சம் பெயர் அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். மனித அறிவின் சிறந்த சாதனைகளான தானியங்கி அமைப்பும் இயந்திரமயமாக்கலும் மனிதர்களது நலத்துக்குப் பயன்படுவதற்கு மாறாக, முதலாளித்துவ அமைப்பில் உழைப்பாளிக்குத் தீங்கு செய்கின்றன. லட்சோபலட்சம் ஆட்களை உற்பத்தித் துறையிலிருந்து அவை வெளியேற்றுகின்றன.

ஏகாதிபத்தியம் தனது பொருளாதார இயக்கத்தில் தடைப்பட்டு நின்று விட்டது என்று இதற்கு அர்த்தமே இல்லை என்பது கூறாமலே விளங்கும். சோஷலிச நாடுகளின் உலக அமைப்புடன் பொருளாதாரப் போட்டியில் வெற்றி பெறும் ஆசை, தற்கால விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தேவைகள், எல்லாவற்றுக்கும் மேலாகக் கடுமையான பரஸ்பரப் போட்டா போட்டி ஆகியவை உற்பத்தியைச் சீர்படுத்தவும் புத்தம் புதிய விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளைப் பயன்படுத்தவும் முதலாளிகளை நிர்ப்பந்திக் கின்றன. வளர்ச்சி அடைந்த சில முதலாளித்துவ நாடுகளில் போருக்குப் பிந்திய சில ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி வேகம் ஒப்பு நோக்கில் வெகுவாக அதிகரித்திருப் பது தற்செயல் அல்ல. நாட்பட்ட அல்லது அழிக்கப்பட்ட இயந்திர சாதனங்களை மாற்றும் கட்டாயம், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து கணிசமான மூலதன வரத்து, சேமத் தொழிலாளர்களின் பெரும் படை நிலவியது முதலியன இதற்குப் பேரளவில் உதவின. ஆனாலும் வளர்ச்சி வேகங்கள் நிலையான தன்மை கொண்டிருக்கவில்லை. முதலாளித்துவ உற் பத்தி வளர்ச்சியின் சுழல்வுப் போக்கை இவை அகற்றவில்லை. இதன்படி பொருளாதார ஏற்றக் காலப் பகுதிகளை அடுத்து உற்பத்தி மந்திப்புக் காலப் பகுதிகள் வந்து கொண்டிருக் கின்றன.

பொது நெருக்கடியின் புதிய கட்டத்தில் முதலாளித் துவத்தின் மற்ற எல்லா முரண்பாடுகளுங்கூட முன் ஒருபோ தும் இல்லாத அளவு தீவிரம் ஆகின்றன. உழைப்புக்கும் மூல தனத்துக்கும் இடையே போராட்டம் வளர்ந்து கொண்டு போகிறது. அரசு இயந்திரத்தைத் தங்களுக்கு அடிப் படுத்திக் கொண்டு விட்ட ஒரு சில ஏகபோக முதலாளிகளின் தன்னலப் போக்குக்களுடன் நாடுகளின் நலன்கள் ஆழ்ந்த முறையில் மோதிக் கொள்கின்றன. முதலாளித்துவ நாடுகளின் ஒரு சீரற்ற பொருளாதார, அரசியல் வளர்ச்சி காரணமாக, தனித் தனி முதலாளித்துவ நாடுகளுக்கும் அவற்றின் கூட்டணிகளுக்கும் இடையே முரண்பாடுகள் மேலும் கூர்மை ஆகின்றன.

ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கை நெருக்கடி மேற்கொண்டு ஆழமாவது முதலாளித்துவத்தி

னுடைய பொது நெருக்கடியினது தற்போதையக் கட்டத்துக்கு உரிய இயல்புகளில் ஒன்ருகும். எல்லாத் துறைகளிலும் அரசியல் பிற்போக்கு அதிகரிப்பதும் முதலாளித்துவச் சுதந்திரங்கள் மறுக்கப்படுவதும் அனேக நாடுகளில் பாசிச வல்லாட்சி முறைகள் நிலை பெறுவதும் இதை வெளிக்காட்டுகின்றன.

முதலாளித்துவக் கொள்கைவாதமும் ஒழுக்க நெறியும் கூட மிக ஆழ்ந்த நெருக்கடிக்கு இப்போது உள்ளாயிருக்கின்றன. சோர்வுவாதம், வருங்காலம் பற்றிய அச்சம், மாயாவாதம், விஞ்ஞானத்திலும் மனிதனுடைய ஆக்கச் சக்திகளிலும் வாய்ப்புக்களிலும் நம்பிக்கை இன்மை, முற்போக்கை மறுப்பது, கம்யூனிசத்தைப் பழிப்பது, மக்களால் வெறுக்கப்படும் கூலி அடிமை முறையையும் ஒடுக்குமுறையையும் ஆதரிப்பது—இவை முதலாளித்துவக் கொள்கைவாதத்திற்கு இயல்பான தனித்தன்மைகள். விரிவான வெகுஜனங்களை ஈர்க்க வல்ல கருத்துக்களை முன்வைக்கும் திறனை முதலாளித்துவக் கொள்கைவாதம் வெகு காலத்துக்கு முன்பே இழந்து விட்டது. வரலாற்று அரங்கிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் வர்க்கத்தின் கொள்கைவாதம் இது. ஆகவே அதன் முழுமையான முறிவு தவிர்க்க முடியாதது.

முதலாளித்துவத்தின் முரண்பாடுகள், முதன்மையாக உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள பிணக்கு, இவ்வளவு தீவிரம் ஆகி விட்ட போதிலும் மிகப் பல நாடுகளில், சிறப்பாக உயர் வளர்ச்சி பெற்ற நாடுகளில், முதலாளித்துவம் இன்னமும் நிலவி வருவது ஏன்?

இங்கே விஷயம் என்ன என்ருல், முதலாளித்துவ உற்பத்தி முறையில் உள்ள பிணக்கு புரட்சிக்கான புறநிலை வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஆனுல் வாய்ப்பு நடப்பு உண்மையாக மாறுவதற்கு இந்த வாய்ப்பைச் செயல்படுத்தத் திறன் கொண்ட சமுதாயச் சக்தி இன்றியமையாதது. பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளி வெகுஜனங்களுடன் தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சியக் கட்சியால் தலைமை ஏற்று நடத்தப்படுவதான புரட்சிகர ஒன்றிப்பே இத்தகைய சக்தி ஆகும். ஆனுல் இந்தச் சக்தி அனேக நாடுகளில் இன்னமும் முதிர்ச்சி அடையவில்லை. இது முதிர்வதற்குத் தடையாய் இருப்பவை தொழிலாளி வர்க்கத்தின் பிளவும் முதலாளி வர்க்கத்தின் அரசியல் சாமர்த்தியமும் ஆகும். முதலாளி வர்க்கம் உழைப்பாளி

களில் ஒரு பகுதியினரை முதலாளித்துவ மருட்சிகளில் சிறைப் படுத்தி வைத்திருக்கிறது, தொழிலாளர்களின் தலைமைக் குழுவினரைக் கைக்கூலி கொடுத்து வசப்படுத்த முயல்கிறது, உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையில் உள்ள முரண்பாடு களை எப்படியாவது மென்மைப்படுத்திச் சீராக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்கிறது. முதலாளித்துவத் தைக் காப்பதில், உடல் வன்முறையும் (படை, போலீசு, நீதிமன்றம், சிறை) கொள்கைவாதப் பாதிப்பும் (பள்ளி, மத நிறுவனம், அச்சக வெளியீடுகள், தொலைக்காட்சி, வானொலி முதலியன) நிகழ்த்த வல்ல மிகப் பெரிய இயந்திர மாக விளங்கும் முதலாளித்துவ அரசு ஆற்றும் பங்கும் மற்ற வற்றுக்குக் குறைந்தது அல்ல.

இவற்றோடு இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அதாவது, நேரக் குறைவு, முன்னுளையப் பின்தங்கிய நிலை, வளர்ச்சி நிலைமைகளின் சிக்கல் ஆகியவை காரணமாக சோஷ லிச நாடுகள் நபர்வாரி உற்பத்தியில் யாவற்றிலும் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளை இன்னமும் விஞ்சிவிட வில்லை. சோஷலிச நாடுகளில் புதிய சமூகத்தின் கட்டுமானம் ஓரளவு இடர்ப்பாடுகளும் தவறுகளும் இல்லாமல் நடைபெற முடியாது என்பது தானே விளங்கும். சோஷலிஸ்டு அல்லாத உலகின் உழைப்பாளிகளில் சில பகுதியினர் சோஷலிசத்துக் கான செயல்முறைப் போராட்டத்தில் ஈடுபடுவதை இந்த விஷயமும் தாமதப்படுத்தியது.

### அரசு-ஏகபோக ஒழுங்கியக்கமும் தொழிலாளி வர்க்கமும்

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமாகி இருப்ப தன் விளைவாக அதன் கொள் கைவாதிகளும் அரசியலாளர் களும் முதலாளித்துவ சமூகத்துக்கு ஒப்பனை செய்யவும் அதன் மனித விரோதத் தன்மையை மூடிமறைக்கவும் முயல் வது அவசியம் ஆகி விட்டது. அவர்களது சொற்படி, முத லாளித்துவம் தனது இயல்பை மாற்றிக் கொண்டு விட்ட தாம். சோஷலிசமும் முதலாளித்துவமும் சேர்ந்து உயர்ந்த நுகர்வுத் தரம் உள்ள ''இயந்திரத் தொழில் சமூகம்'' எனப் படுவதாக உருவாகும் நிகழ்முறை நடந்து வருகிறதாம். சோஷலிசம் போலவே தற்போதைய முதலாளித்துவ சமூகம் முழுமையாக இயக்கப்படக் கூடியது ஆகி விட்டதாம். முத

லாளித்துவ உற்பத்தியின் குறிக்கோள் மனிதனும் யாவற்றிலும் ''உயர்ந்த வெகுஜன நுகர்வுக்கு'' வகை செய்வதுமாம். முதலாளித்துவமும் சோஷலிசமும் ஒன்றையொன்று நெருங்கி வருவதற்கு இது ஒரு சான்றும்.

முதலாளித்துவத்தின் இயக்கு சக்தியாக விளங்குபவை முதலாளித்துவச் சந்தையும் போட்டி விதிகளுமே. ஒரு குறிப்பிட்ட காலம் வரை இந்தச் சக்திகள் மட்டுமே முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஒழுங்கியக்குபவையாக இருந்தன. ஆனால், ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாக வளர்ந்து, முதலாளித்துவம் பொது நெருக்கடிக் கட்டத்தில் புகுந்ததன் விளைவாக இந்த ஒழுங்கியக்கி செயலாற்றப் போதாதது ஆகி விட்டது. முதலாளித்துவத்தின் அடுத்து வரும் வளர்ச்சியை ஒழுங்கியக்குவது பற்றியோ சொல்லவே வேண்டாம். முதலாளித்துவ மறு உற்பத்தி நிகழ்முறையிலும் சமுதாய வாழ்க்கை நிகழ்முறையிலும் நேரடியாகத் தலையிடும் பொறுப்பை முதலாளித்துவ அரசுக்கு அளிப்பது ஏகபோகங்களுக்குக் கட்டாயம் ஆகி விட்டது. தனது ஒழுங்கியக்கும் (செயலைத் திட்டப்படுத்தும்) பணியை முதலாளித்துவ அரசு முதன்மையாக நிறைவேற்றுவது அரசு உடைமையின், ''அரசுப் பொருளாதாரத்தின்'' செயற்களத்திலாகும். முதலாளித்துவத் தேசிய உடைமையாக்கத்தின் விளைவான இந்த அரசு உடைமை, ஏகபோக நிறுவனங்களின் கூட்டு உடைமை தவிர வேறு இல்லை. தனக்குச் சொந்தமான தொழிலகங்கள், தொழில் துறையின், போக்குவரத்தின் முழுக் கிளைகள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் முதலியவற்றை அரசு நேர்முகமாக இயக்கி நடத்துகிறது.

அதே சமயத்தில், முதலாளித்துவ அரசின் செயல்திட்டம் வகுக்கும் பாத்திரம் முதலாளித்துவ அரசு உடைமைகளது வரம்புகளுக்குள் நின்று விடாமல், முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதிலும், சமூக வாழ்வு முழுவதிலும் ஏதேனும் ஓர் அளவில் வெளிப்படுகிறது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி, முதன்மையாக மிகை உற்பத்தி நெருக்கடி ஏற்படுவதைப் பகுதி அளவிலாவது நீக்குவதற்கான முயற்சி அதன் பிரதானக் கவலைகளில் ஒன்றாக விளங்குகிறது. நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக அரசு எடுத்துக்

கொள்ளும் நடவடிக்கைகளில் சில வருமாறு: ஏகபோக நிறுவனங்களுக்கு அரசு ஆர்டர்களை, சிறப்பாகப் படைத் துறைக்கான ஆர்டர்களை விரிவாக்குவது; மக்களின் நுகர்வுக்கான பொருள்களின் உற்பத்தியைச் செயற்கையாகச் சுணக்கப்படுத்தி, சந்தைக்குச் சரக்கு வரத்தை அதன் மூலம் குறைப்பது; கடுமையான பண இடர்ப்பாடுகளில் மாட்டிக் கொள்ளும் ஏகபோக நிறுவனங்களுக்குத் திருப்பித் தர வேண்டாத இலவச நிதி உதவி உட்பட ஏகபோகங்களுக்குப் பொருளாதார உதவி அளிப்பது; அதிகப்படிச் சரக்குகளை ஏகபோக நிறுவனங்களிடம் விலைக்கு வாங்கி அளவுமானத்துக்கு மீறிய அரசுச் சேமிப்புக்களை உருவாக்குவது முதலியன. நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பண வசதி செய்ய அரசினுல் பயன்படுத்தப்படும் அரசு வரவு செலவு நிதி வரி செலுத்துபவர்களான பரந்த உழைப்பாளி வெகு ஜனங்களின் பணத்தாலேயே பெரும்பகுதி உருவாகிறது. எனவே இந்த நடவடிக்கைகளின் பெருமளவு சுமை அவர்கள் மீதே சார்கிறது. அதே சமயம் ஏகபோக நிறுவனங்கள் ஆக உயர்ந்த லாபங்கள் பெற வகை செய்யப்படுகிறது.

அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் செய்ய வேண்டிய முதலீடுகளின் திட்டத்தை அரசு இசைவிக்கிறது, ஆர்டர்களும் பற்றுக்குறையான மூலப் பொருள்களும் பங்கிடப்படுவதையும் விலைகள் பற்றிய கொள்கையையும் மேற்பார்க்கிறது. இவற்றை எல்லாம் ஏகபோக நிறுவனங்களுக்குச் சாதகமாகவே அது செய்கிறது. அவற்றின் நன்மைக்காகவே வரி விதிப்புக் கொள்கையின் மூலம் தேசிய வருவாயை மறுபங்கீடு செய்கிறது, இயந்திர சாதனங்களைப் புதுமைப்படுத்துவதற்காகப் பற்றுக் கடன்களையும் நிதி உதவிகளையும் வினியோகிக்கிறது. முதலாளித்துவ அரசு உற்பத்தியிலும் தொழில் நுட்பத்திலும் புதிய கிளைகளை மேலும் மேலும் அடிக்கடி நிறுவுகிறது. தனியார் ஏகபோக நிறுவனங்களுக்குப் போதுமான லாப வாய்ப்புக்கள் இல்லாத தொடக்க வளர்ச்சிக் கட்டத்தில் இந்தக் கிளைகளில் முதலீடுகள் செய்யும் ஆபத்தை அது தானே மேற்கொள்கிறது. படைத் துறை உற்பத்தியையும் மிக முக்கிய விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் கண்காணிக்கிறது.

ஆயினும், அரசு-ஏகபோகச் செயல்திட்ட வகுப்பு செயற்கையானது என்றும் ஏகபோக நிறுவகர்களின் அகநிலை

விருப்பத்தின் விளைவு என்றும் எண்ணுவது சரியாகாது. வாழ்க்கைப் போக்கினுலேயே, நவீன உற்பத்தி, தொழில்நுட்பம், விஞ்ஞானம் ஆகியவற்றின் வளர்ச்சித் தேவைகளாலேயே அது வழிநடத்தப்படுகிறது. உற்பத்தியின் ஓரிடச் செறிவுத் தரம் உயர்த்தப்படுவதும், பொருள், நிதி, ஆள் வளங்கள் இணைக்கப்படுவதும், ஆராய்ச்சி, சோதனை வேலைகளது அளவுகள் விரிவாக்கப்படுவதும் தற்போதைய விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கு இன்றியமையாதவை. அரசின் ஆதரவும் உதவியும் இல்லாமல் இவற்றைச் செயல்படுத்துவதற்குத் தனியார் ஏகபோக நிறுவனங்கள் பெரும்பாலும் திறனற்றவை. அரசு-ஏகபோக ஒழுங்கியக்கத்தை ஊக்கும் மிக முக்கியக் காரணியாக விளங்குவது சோஷலிச நாடுகளின் உலக அமைப்பால் முதலாளித்துவத்துக்கு விடப்படும் பொருளாதார ''அறைகூவல்'' ஆகும். இரு அமைப்புக்களின் பொருளாதாரப் போட்டியில் தாக்குப் பிடிப்பதற்காக உற்பத்தியைத் தீவிரப்படுத்தவும் அதன் வளர்ச்சி வேகங்களை அதிகரிக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை முதலாளித்துவ அரசு தேடிய வண்ணமாக இருக்கிறது.

எனினும், முதலாளித்துவ அமைப்பில் அரசு ஒழுங்கியக்கத்தின் பாத்திரம் எவ்வளவுதான் முக்கியமாக இருந்தாலும், பொருளாதாரம் முழுவதன் விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகத்துடனும் திட்ட வகுப்புடனும் பொதுவான பண்பு எதையும் அது கொண்டிருக்கவில்லை. இத்தகைய நிர்வாகமும் திட்ட வகுப்பும் தனியார் முதலாளித்துவச் சொத்துரிமையோடு சேர்ந்து இருக்க முடியாதவை. அரசு ஒழுங்கியக்கம் ஏகாதிபத்தியத்தின் தன்மையை மாற்றுவதில்லை, சுரண்டலை ஒழிப்பதில்லை, சந்தையின் தாறுமாருன போக்கையும் போட்டிப் போராட்டத்தையும் உற்பத்தி அராஜகத்தையும் போக்குவதில்லை.

அனேக முதலாளித்துவ நாடுகளில் மிகை உற்பத்தி நெருக்கடிகள், நாணய மாற்று நெருக்கடிகள், பண வீக்கம், விலையேற்ற அதிகரிப்பு, வர்த்தக, ஏற்றுமதி-இறக்குமதி ஒப்புநிலைகள் குறித்த நெருக்கடிகள், பங்கு மார்க்கெட்டு நிலைகுலைவுகள், ஏராளமான தொழில் நிறுவனங்களின் முறிவுகள், தங்க வெளியேற்றம் முதலியவை இந்த உண்மைக்கு நம்பகமான சான்றுகளாக விளங்குகின்றன. உற்பத்திச் சக்தி

யின் ஒரு பகுதி செயலற்று இருக்கும் தீரா நோயையும் வேலையின்மையையும் போக்கவும் உற்பத்தி அதிகரிப்பின் நிலையான வேகங்களுக்கு வகை செய்யவும் ஒழுங்கியக்கம் திறனற்றதாக இருக்கிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவம் பொருளாதார ஒழுங்கியக்கத்தைச் சமுதாய ஒழுங்கியக்கத்தால் நிறைவுபடுத்துகிறது. உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையே நிலவும் உறவுகளை ஒழுங்கியக்குவதற்கு முதலாளித்துவ அரசு சிறப்பான முக்கியத்துவம் அளிக்கிறது. இவ்வாறு ஒழுங்கியக்குகையில் அது இயல்பாக முதலாளிகளுக்குச் சாதகமாக நடந்து கொள்கிறது. சமரசப்படுத்த முடியாதவையான மூலதனத்தையும் உழைப்பையும் முதலாளித்துவத்தின் வரம்புகளுக்குள் சமரசப்படுத்தவும் முதலாளித்துவச் சுரண்டல் அமைப்பை அதன் மூலம் நிலைப்படுத்தவும் முதலாளித்துவ அரசு சமுதாய ஒழுங்கியக்கத்தைச் செயல்படுத்துகையில் முயல்கிறது. ஏகபோக நிறுவகர்களின் அளவு மீறிய கோரிக்கைகளைக் குறுக்குவதும், சில அம்சங்களில் தொழிலாளர்களுக்கு விட்டுக் கொடுக்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவதும், இவ்வாறு உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள குறிப்பிட்ட பிணக்குகளை மென்மையாக்குவது அல்லது தீர்ப்பதும் சில சந்தர்ப்பங்களில் முதலாளித்துவ அரசுக்குத் தவிர்க்க முடியாதவை ஆகின்றன. நேரடி மோதலைச் சாமர்த்தியமாகத் தவிர்ப்பது, சமுதாய வாய்வீச்சு என்ற செயல் தந்திரத்தை அது விரிவாகக் கையாளுகிறது. கொள்கைவாதப் பாதிப்பு முறையின் வாயிலாக உழைப்பாளிகளை ஏகபோக நிறுவகர்களின் லாபங்களுக்காக உழைக்க வைக்கிறது.

உழைப்புக்கும் மூலதனத்துக்கும் உள்ள முரண்பாடுகள் உட்படத் தற்போதைய முதலாளித்துவத்தின் முரண்பாடுகளைப் பொருளாதார, சமுதாய ஒழுங்கியக்கம் அறவே தீர்ப்பதில்லை. மாறாக இந்த முரண்பாடுகள் நாளுக்கு நாள் அதிகக் கூர்மையும் ஆழமும் ஆகிக் கொண்டு போகின்றன.

## முதலாளித்துவம் மனிதனுக்கு எதிரானது

தற்போதைய முதலாளித்துவம் ''மக்கள் முதலாளித்துவமாக'' மாறி வருகிறது என்றும், மனிதனும் அவனுடைய தேவைகளுமே அதன் குறிக்கோளாக விளங்குகின்றன என்றும், ''அனைத்து மக்கள் வளமை

யும்'' ''உயர்ந்த நுகர்வும்'' உள்ள சமூகத்துக்கு அது முன்னேறுகிறது என்றும் முதலாளி வர்க்கக் கொள்கைவாதிகளும் அரசியலாளர்களும் சொல்லுகிருர்கள். ஆனுல், எந்த மனிதனைக் குறித்து, யாருடைய நுகர்வையும் வளமையையும் பற்றி முதலாளித்துவம் கவலை எடுத்துக் கொள்கிறது என்று தெளிவுபடுத்த அவர்கள் ''மறந்து விடுகிருர்கள்''. ஏனெனில் முதலாளித்துவத்தில் பல வகை மனிதர்கள்—உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளியான முதலாளி மனிதனும் தொழிலாளி, அலுவலன், குத்தகை விவசாயி, உழவன் என்ற உழைப்பாளி மனிதனும்—இருப்பது நன்ருகத் தெரிந்த சேதி.

பெரிய உடைமையாளர்கள் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவு. ஆனுலும் முதலாளித்துவ உலகின் உண்மைச் சொந்தக்காரர்கள் அவர்கள்தாம். முதலாளித்துவக் கொள்கைவாதிகள் கவலைப்படுவதெல்லாம் அவர்களுக்காகத்தான், அவர்களுடைய வளமைக்காகவும் உயர்ந்த நுகர்வுக்காகவும் தான். பொருளாதாரத்திலும் அரசியல், உள வாழ்விலும் மிக முக்கிய இடங்களும் பேரளவான பொருளியல், உளவியல் செல்வங்களும் பெரும் உடைமையாளர்களின் கைகளிலேயே குவிந்திருக்கின்றன. மூலதன உடைமையாளர்களுக்குத் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வரம்பு கடந்த வாய்ப்புக்கள் இருப்பது இயல்பே. இந்தத் தேவைகளோ, கட்டுக்கு அடங்காத திடீர் ஆசைகள், சபலங்களின் தன்மையை அடிக்கடி மேற்கொள்கின்றன. தற்போதைய முதலாளித்துவ உலகின் கோடீசுவரர்கள் தங்கள் ஊதாரித்தனத்தில் கடந்த கால முடிமன்னர்களையும் சிற்றரசர்களையும்கூட விஞ்சி விட்டார்கள்.

இவ்வளவு பெரும் செல்வம் எங்கிருந்துதான் கிடைக்கிறது? நேர்மையான உழைப்பினுல் இதைச் சம்பாதிப்பது நடவாது. உதாரணமாக, ராக்பெலர், மெலோன், தியூபோன் போன்றவர்களின் செல்வ நிலையை அடைவதற்கு நல்ல ஊதியம் பெறும் அமெரிக்கத் தொழிலாளி தன் சம்பளத்தை ஏறத்தாழப் பத்து லட்சம் (!) ஆண்டுகள் சேமிக்க வேண்டி வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஏகபோக நிறுவகர்களின் செல்வத்துக்கான ஒரே ஊற்றுக்கண் உழைப்பாளிகளைச் சுரண்டுவது தான். இது மனித விரோதத் தன்மை

உள்ளது, மனிதனுடைய இயல்புக்கும் வாழ்க்கையில் அவனது உயர்ந்த நோக்கத்திற்கும் இடத்துக்கும் பொருந்தாதது

மூலதனத்துடன் இடையருத, விடாப்பிடியான போராட்டம் நடத்தியதன் விளைவாக, வளர்ச்சி அடைந்த அனேக முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர்கள் தங்கள் நல் வாழ்வை ஓரளவு மேம்படுத்திக் கொண்டிருக்கிருர்கள்.

தற்போதைய முதலாளித்துவச் சமூகத்தில் தொழிலாளி வர்க்கம் வறுமைப்படுவது கிடையாது என்று முதலாளித்துவப் பொருளியலார் வலிந்துரைக்கிருர்கள். உண்மை நிலவரமோ, முற்றிலும் வேறு. முதலாளித்துவ அமைப்பில் **முழுமையான** வறுமைப்பாடு—ஏழ்மை அதிகரிப்பு—பின்வரும் தொழிலாளர்களிடையே நிலவுகிறது: காலனி ஆட்சியாளர்களால் நீண்ட காலம் சுரண்டப்பட்டு வந்த நாடுகளில் உள்ள தொழிலாளர்கள்; வளர்ச்சி அடைந்த நாடுகளில் நிலக்கரிச் சுரங்கத் தொழில் போன்று நலிந்து கொண்டிருக்கும் தொழிற்கிளைகள் அமைந்திருக்கும் சில இடங்களில் உள்ள தொழிலாளர்கள்; வேலையற்றோர், உழைக்கத் திறன் இல்லாதவர்கள், வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் முதலியோர். முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளி வர்க்கத்தின் **ஒப்புநோக்கான** வறுமைப்பாடும் நிலவுகிறது.

ஒப்புநோக்கான வறுமைப்பாடு எத்தனையோ விதங்களில் வெளிப்படுகிறது, உதாரணமாக, ஏகபோக நிறுவனங்களின் லாபங்கள் அதிகரித்துக் கொண்டு போகின்றன, ஆனல் தேசிய வருவாயில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கோ, தொடர்ச்சியாகக் குறைந்து கொண்டே போகிறது. தனியாக, அதாவது பொருள் வகையில் எடுத்துக் கொண்டு பார்த்தால், வளர்ச்சி அடைந்த அனேக முதலாளித்துவ நாடுகளில் (அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஸ்வீடன், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ் முதலியன) இந்தப் பங்கு போதிய அளவு பெரியது, எனவே உழைப்பாளிகளின் குறித்த பகுதியினர் உயர்ந்த வாழ்க்கைத் தரம் பெற இது வகை செய்கிறது. ஆனல் இந்த நாடுகளின் உழைப்பாளர்களது அதிக முக்கியமான பகுதியினரின் ஏழ்மையோடு கூடவே இந்த உயர்ந்த நுகர்வுத் தரம் நிலவுகிறது என்பதையும், ஏதாவது ஒரு காரணத்தால் தங்கள் வளர்ச்சியில் பின்தங்கி விட்ட நாடுகளின் மிகப் பெரும்பாலான மக்களது பயங்கர

வறுமையும் அரைப்பட்டினியும் எழுத்தறிவின்மையும் இருக்கும் போது உடன் நிலவுகிறது என்பதையும் மறந்து விடக் கூடாது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நீக்ரோக்கள் போலவே, மேற்கு ஐரோப்பாவின் வளர்ச்சி அடைந்த அனேக முதலாளித்துவ நாடுகளில் வெளியிலிருந்து வந்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இரங்கத்தக்க பிழைப்பு நடத்தி வருகிறார்கள். உழைத்து வயிற்றைக் கழுவும் நோக்கத்துடன், பல சந்தர்ப்பங்களில் குடும்பங்களையும் உற்றார் உறவினரையும் விட்டு விட்டுத் தாய்நாடுகளிலிருந்து வெளியேறியவர்கள் இவர்கள். பிழைக்க வந்த நாடுகளில் இவர்கள் இரக்கமற்ற சுரண்டலுக்கும் இனக் காழ்ப்புக்கும் உள்ளாகி, எல்லா வித அரசியல் உரிமைகளையும் இழந்து தவிக்கிறார்கள். யாவற்றிலும் கடினமான, ஆபத்துள்ள வேலைகளைச் செய்யும் இவர்கள், இதே உழைப்புக்கு உள்நாட்டுத் தொழிலாளர் பெறுவதைவிடக் குறைந்த ஊதியம் பெறுகிறார்கள், வறுமையிலும் இடமுடையிலும் கல்வியறிவின்மையிலும் உழல்கிறார்கள்.

கோடிக் கணக்கான வேலையற்றோர் உண்மையான மனித வாழ்வு பற்றிக் கனவு மட்டுமே காணும் நிலையில் இருக்கிறார்கள். ஏகாதிபத்தியம் இவர்களை உற்பத்தித் துறையிலிருந்து வெளியே தள்ளியதன் மூலம் உழைக்கும் திறனைக் காட்ட இவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் அடித்து விட்டது. உழைப்புத் திறனே, மனித இயல்பின் மிக மிக முக்கியமான, ஆழ்ந்த வெளிப்பாடாக விளங்குகிறது. ''உயர்ந்த நுகர்வுத் தரம் கொண்ட'' சமூகத்திலிருந்து விலக்கப்பட்டு விட்ட இந்த அப்பாவிகளுக்கு வாய்த்திருப்பவை துன்பமயமான வறுமையும் உடல் ஆற்றல்களின் தேய்வும் உள வெறுமையும் தாம்.

அதிகபட்ச லாபம் பெறும் நோக்கத்துடன் ஏகபோக நிறுவகர்கள் உழைப்பைக் கடுமை ஆக்குகிறார்கள், அதன் வேகங்களை அதிகப்படுத்துகிறார்கள். இதுவும் உழைப்பாளிக்குக் கேடு விளைக்கிறது. நேரத்துக்கு முன்பே உடம்பு தளர்ந்து முதுமை அடைகிறது, உற்பத்தி நோய்நிலை அதிகரிக்கிறது. தொழிலால் உண்டாகும் உடல் வியாதிகளும் மனக் கோளாறுகளும் அதிக எண்ணிக்கையில் ஏற்படுகின்றன. இவை உண்மையான சமுதாய விபத்து ஆகி விட்டன.

அறிவுச் செயல்களுக்கான உரிமையைத் தங்கள் ஏக போகம் ஆக்கிக் கொண்டு விட்ட ஆளும் வர்க்கங்கள் உழைப் பாளியை உள வகையில் அடிமைப்படுத்துகின்றன, கல்வியும் விஞ்ஞானமும் பண்பாடும் பெறுவதற்குரிய வழிகளை அவனுக்கு அடைத்து விடுகின்றன. தங்களுடைய சொந்த நலன்களுக்கு ஏற்ற அளவில் மட்டுமே உழைப்பாளிகளின் உள வளர்ச்சிக்கு அவை வகை செய்கின்றன. தொழிலாளர் கள், விவசாயிகளுடைய குழந்தைகளின் கல்வியைத் தொழில் பயிற்சி அளவுக்குக் குறுக்க முயல்கின்றன. தொழிலதிபர்க ளுக்காக உழைப்பது ஒன்றே அவர்களது பிழைப்பு ஆகும் படிச் செய்ய விரும்புகின்றன.

பொருளாதாரத்தைப் படைத்துறைக்கு உரியதாக்கி இருப்பது தற்போதைய முதலாளித்துவத்தின் மிக மிக விகார மான செய்கை ஆகும். ஏகாதிபத்தியத்தின் மனிதவிரோதத் தன்மை இதில் சிறப்பான தெளிவுடன் வெளிப்படுகிறது. உழைப்பாளிகளுடைய கைகளாலும் அறிவாலும் படைக்கப் பெற்ற அளப்பரும் செல்வங்கள் அவர்களுடைய வாழ்க் கையைச் சீர்படுத்துவதற்காக இன்றி, சாவும் அழிவும் விளைக் கும் அரக்க ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன் படுத்தப்படுகின்றன. ஆயுத உற்பத்திப் போட்டியில் முத லாளித்துவ உலகு மிகப் பெருந்தொகையான பணம்—ஆண்டுக்குப் பத்தாயிரங்கோடிக்கணக்கான டாலர்கள்—செல விட்டு வருகிறது. இப்பணம் சமாதான நோக்கங்களுக்காகச் செலவிடப்பட்டால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொரு ளாதார வளர்ச்சியிலும் மனிதர்களின் பொருளியல் நல் வாழ்விலும் எத்தகைய பெருத்த முன்னேற்றம் நிகழ்ந்திருக் கும் என்பதைக் காண்பது கடினம் அல்ல. ஆனால் ஏகாதிபத் தியத்தின் நிலைமைகளில் இது நடக்க முடியாது. ஏனெனில் படைத்துறைத் தொழில் ஏகபோக நிறுவனங்களின் மிகப் பெரிய, மிக நம்பகமான தொழில் ஆகும்.

நவீன விஞ்ஞான-தொழில்நுட்பச் சாதனைகள் உழைப் பாளிகளின் பொருளியல் வளத்தையும் அறிவுத் தரத்தையும் மேம்படுத்துவதற்கு முன்பு இல்லாத வாய்ப்புக்களை ஏற் படுத்தி உள்ளன. ஆனால் ஏகபோகங்களோ, மனித அறிவின் சாதனைகள் மனிதனுடைய நலன்களுக்குப் பயன்படுவதைத் தடை செய்வதோடு நில்லாமல், படுகொலைகளும் பேரழி

வும் விளைக்கும் யுத்தத்தின் பயங்கரக் கருவிகளாக அவற்றை மாற்றி மனிதனுக்கு எதிராக அவற்றை அடிக்கடி கையாளுகின்றன.

சிக்கலான, விலையுயர்ந்த நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பெரும் பகுதி ஏகபோக நிறுவனங்களிடம் குவிந்துள்ளன. இவற்றின் விளைவுகளும் ஏகபோக நிறுவனங்களுக்கே சொந்தம். ஏகபோக லாபங்களுக்கு வகை செய்யவும் சந்தைகளை வசப்படுத்தவுமே இவற்றை ஏகபோக நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன.

இவ்வாறாக, தற்போதைய முதலாளித்துவம் உழைப்பாளி மனிதனுக்கு எதிரானது. தங்கள் மனித உரிமைகளும் மனித மாண்பும் காலடியில் போட்டுத் துவைக்கப்படுவதைப் பொறுத்துக் கொண்டிருக்க உழைப்பாளிகளால் முடியாது என்பது இயல்பே. ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெறும் பொருட்டு அவர்கள் விடாப்பிடியாகப் போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டத்துக்குத் தலைமை தாங்குகிறது தொழிலாளி வர்க்கம்.

## 2. முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் புரட்சிப் போராட்டத்தின் முதன்மையான சிறப்புத் தன்மைகள்

முதலாளித்துவச் சமூகத்தில் ''வர்க்கங்கள் மறைந்து விட்டன'' என்றும் ''சமுதாய ஒருங்கிசைவு ஏற்பட்டு விட்டது'' என்றும் முதலாளித்துவ ஆதரவாளர்கள் என்னதான் பறை சாற்றினாலும், உழைப்புக்கும் மூலதனத்துக்கும் மிகப் பெரும் போராட்டம், தொழிலாளி வர்க்கத்தின் விறல் மிக்க புரட்சி இயக்கம் முதலாளித்துவ உலகில் விரிவாக நடந்து வருகிறது. இந்த இயக்கத்தின் முதன்மையான சிறப்புத் தன்மைகள் யாவை?

### வேலைநிறுத்தப் போராட்டத்தின் வீச்சு

மிகப் பேரளவான சமுதாய முன்னேற்றங்களும் உற்பத்தி உயர்வும் புத்தம் புதிய விஞ்ஞான-தொழில்நுட்பச் சாதனைகளின் விளைவாக ஏற்பட்ட ஆழ்ந்த மாறுதல்களும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த

தொழிலாளி வர்க்கத்தின் நிலே, அதன் எண்ணிக்கை, அமைவு, அதனுடைய போராட்டத்தின் நிலேமைகள், நோக்கங்கள், பணிகள் ஆகியவற்றின் மீது பாதிப்பு நிகழ்த்தாமல் இருக்க முடியவில்லே. முதன்மையாக, தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை மிகப் பெரிய அளவில் அதிகரித்திருக்கிறது. 19ம் நூற்ருண்டின் நடுவில் ஒரு கோடியாக இருந்த இந்த எண்ணிக்கை 20ம் நூற்ருண்டின் எழுபதுக்களில் அறுபது கோடி ஆகி விட்டது.

தொழிலாளி வர்க்கத்தின் அமைவும் மாறி இருக்கிறது. பொருள்வகை உற்பத்தித் துறையில் வேலே செய்யும் நிர்வாக, தொழில் நுட்ப, அலுவலக ஊழியர்களின் விகிதம், சிறப்பாக அண்மை ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது. உற்பத்தியில் இவர்களுடைய நிலேயும் பாத்திரமும் உற்பத்தி உழைப்பில் நேர்முகமாக ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுடைய நிலேயையும் பாத்திரத்தையும் நாளுக்கு நாள் அதிகமாக நெருங்கி வருகின்றன. அன்ருடப் பணித் துறையில் வேலே செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வருகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தைத் தலேமை ஏற்று நடத்துவதில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகம் ஆகிக் கொண்டு போகிறது. தொழிற்சங்கங்கள், இளேஞரதும் மாதர்களுடையவும் நிறுவனங்கள், பிற ஜனநாயக நிறுவனங்கள் ஆகியவற்றில் கோடிக் கணக்கான ஆண், பெண் தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிருர்கள்.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைப்பாளி மக்களின் போராட்டத்துக்கு வேண்டிய சூழ்நிலே இப்போது அதிகச் சாதகம் ஆகி இருக்கிறது. தனது பொது நெருக்கடி காரணமாக முதலாளித்துவம் வலிமை குன்றி இருப்பது, உலகில் சோஷலிசச் சக்திகளின் வலிமை அதிகமாகி இருப்பது, சிறப்பாக சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் புரட்சிக்குத் தூண்டும் பாதிப்பு, முதலாளித்துவ நாடுகளிலேயே புரட்சி இயக்கத்தின் சமுதாய அடித்தளம் விரிவாகி இருப்பது ஆகியவை தொழிலாளர் இயக்கத்துக்குப் புதிய வாய்ப்புக்களே உருவாக்குகின்றன. தவிரவும், முதலாளித்துவத்துக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் எதிரான போராட்டத்தில்

பெருத்த அனுபவத்தைத் தொழிலாளர் இயக்கமே திரட்டி இருக்கிறது. கொள்கைவாத நோக்கில் அது அதிக முதிர்ச்சி அடைந்துள்ளது. அதன் ஒழுங்கமைப்பும் போராடி முன்செல்லும் உணர்வும் சிறப்பாக அதிகரித்து இருக்கின்றன. உழைப்பாளி மக்கள் இடையே கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கும் மதிப்பும் வளர்ந்து வருகின்றன. தொழிற்சங்கங்களின் பங்கு அதிகமாகி வருகிறது.

வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், மகாநாடுகள், நாடாளுமன்றத்திலும் பத்திரிகைகளிலும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பிரசாரம் முதலிய மிக மிகப் பல வகையான சாதனங்களைத் தொழிலாளி வர்க்கம் தனது போராட்டத்தில் பயன்படுத்துகிறது.

வேலைநிறுத்த இயக்கம் முதலாளிகளுடன் தொழிலாளர்களின் போராட்டத்துக்கான சோதித்து அறியப்பட்ட பழைய சாதனம் ஆகும். தற்போது இந்த இயக்கமும் சிறப்பாக விரிவான வீச்சும் ஒழுங்கமைப்பும் பெற்றிருக்கிறது. வேலைநிறுத்தங்களில் கலந்து கொண்டவர்களுடைய எண்ணிக்கை 1971 முதல் 1980 வரையுள்ள ஆண்டுகளில் மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்து 25 கோடி ஆகி இருக்கிறது.

வேலைநிறுத்தப் போராட்டம் வெகுஜனத் தன்மையில் வளர்வதோடு நில்லாமல் அதிகச் சமயோசித சாமர்த்தியமும் பல்வகைப்பாடும் உள்ளது ஆகி வருகிறது. பொது வேலைநிறுத்தங்கள் தவிரத் தொழிலாளர்கள் கையாண்டுவரும் வேறு வகை வேலைநிறுத்தங்களாவன: முன் எச்சரிக்கை வேலைநிறுத்தங்கள்; அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரிக்கும் வேலைநிறுத்தங்கள்: இவற்றின் போது புதிய புதிய தொழிலாளர் அணிகள் வேலைநிறுத்தக்காரர்களோடு சேர்ந்து கொள்கின்றன; தொழில்துறையின் ஏதாவது ஒரு கிளையைச் சேர்ந்த அடிப்படை முக்கியத்துவம் உள்ள தொழில் நிலையத்தில் வேலைநிறுத்தங்கள்; நேரங்களில் விதம் விதமாக மாறும் வேலைநிறுத்தங்கள் (ஒன்று விட்டு ஒரு நாள், நாள்தோறும் சில மணி நேரம் முதலியன); தொழிலகத்துக்குத் தொழிலகம் ''தாவிக் கொண்டு போகும்'' வேலைநிறுத்தங்கள் முதலியன. வேலைநிறுத்தங்களின் வெவ்வேறு வடிவங்களைக் கையாள்வதனால் கணிசமான பொருள் இழப்புக்களைத் தவிர்ப்பதும் அதே சமயம் தொழிலதிபர்களை வெகுவாகக்

கட்டாயப்படுத்தித் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதும் தொழிலாளர்களுக்கு முடிகின்றன. தொழிலாளி வர்க்கத்தின் செயல் ஒற்றுமையை அதிகப்படுத்தும் போக்கு வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது மேலும் மேலும் துலக்கமாகத் தென்படுகிறது.

இவ்வாறு, வேலைநிறுத்தப் போராட்டத்தின் மிகப் பெரிய வீச்சும் ஒழுங்கமைப்பும் சமயோசித சாமர்த்தியமும் தற்போதையத் தொழிலாளர் இயக்கத்தின் முதன்மையான சிறப்புத் தன்மைகளில் அடங்கும்.

### போராட்டத்தின் பொருளாதார, அரசியல் வடிவங்களது இணைவு

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் நிலைமைகளில் பொருளாதாரக் களத்தில் நேர்முக எதிரியாகச் செயல்படுபவர்கள் தனித் தனித் தொழிலதிபர்களும் அவர்களுடைய கழகங்களும் மட்டும் அல்ல, முதலாளித்துவ அரசும் கூட. எனவே உழைப்பாளி மக்களுடைய பொருளாதாரப் போராட்டம் புறநிலையாக அரசியல் தன்மையை மேற்கொள்ளுகிறது. தூய பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டமோ, அரசியல் போராட்டத்தின் இன்றியமையாமையைத் தொழிலாளி வர்க்கம் புரிந்து கொள்ளும்படிச் செய்கிறது. ஏனென்றால் பல நாடுகளில் முதலாளித்துவ அரசு ஏகபோக நிறுவனங்களின் நலன்களுக்குத் தொண்டாற்றும் பெருத்த உடைமையாளியாக விளங்கி, அரசுத் தொழிலகங்களில் பணியாற்றும் தொழிலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியைத் தானே நேராகச் சுரண்டுகிறது. சமுதாயப் பராமரிப்பு, வரி விதிப்பு, தொழிற்சங்க நடவடிக்கைகள் முதலிய துறைகளில் உழைப்பாளிகள் முதலாளித்துவ அரசுடன் மோதிக் கொள்கிறார்கள். இந்த அரசு ஏகபோக நிறுவனங்களுடைய நலன்களைக் காக்கவே எப்போதும், எங்கும் செயலாற்றி வருகிறது என்பதை அவர்கள் காண்கிறார்கள். வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் ஆகியவற்றின் போது முதலாளித்துவ அரசின் போலீசுடனும், சில வேளைகளில் படையினருடனும் கூடக் கைகலப்புக்கள் நிகழ்கின்றன. அரசு-ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சியின் விளைவாக, வர்க்க முரண்பாடுகள் உழைப்பாளி மக்களுக்கும் ஏகபோக நிறுவனங்களதும் அரசினதும் ஒன்றித்த சக்திக்கும் இடையே ஏற்படும் முரண்

பாடுகளின் வடிவில் இப்போது வெளிப்பட்டு வருகின்றன. இதன் பயனாக வர்க்கப் போராட்டத்தின் வீச்சு முன்னிலும் விரிவாகிக் கொண்டு போகிறது, போராட்டத்தின் மையமாக விளங்கும் பிரச்சினைகளின் களம் முன்னிலும் பரந்தது ஆகிக் கொண்டு போகிறது.

எட்டு மணி நேர வேலை நாள் அமுலாக்கப்படுவது, தொழிற்சங்க நிறுவனங்களின் முதற்படியான, மிக மிகத் தொடக்கநிலை உரிமைகள் ஒப்புக் கொள்ளப்படுவது, சமுதாயப் பராமரிப்பு புகுத்தப்படுவது, எல்லாக் குடிகளுக்கும் வாக்குரிமை வழங்கப்படுவது முதலிய கோஷங்கள் வேலை நிறுத்தக்காரர்கள் விடுத்த கோரிக்கைகளில் முன்பு முதலிடம் பெற்றிருந்தன. இப்போதோ, இந்த நோக்கங்களின் நிறைவேற்றத்தோடு கூடவே, இன்னும் எவ்வளவோ அதிக முக்கியமானவையும் முதலாளித்துவத்தை எவ்வளவோ அதிக வலிவுடன் தாக்குபவையுமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகத் தொழிலாளி வர்க்கம் போராடி வருகிறது. மக்கள் அனைவருடையவும் அரசியல் உரிமைகள் விரிவாக்கப்படுவதற்காக அது பாடுபடுகிறது, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும் வளர்க்கவும் முயல்கிறது, ஆயுத உற்பத்திப் போட்டிக்கு எதிராகவும் சமாதானத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் போராடுகிறது. மிக முக்கியப் பொருளாதாரத் துறைகளைத் தேசிய உடைமை ஆக்கி அவற்றின் நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்துவதற்கான போராட்டம் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. பிற்போக்குக்கும் ஆக்கிரமிப்புக்கும் அரணாகவும் ஆயுத உற்பத்திப் போட்டிக்கும் உழைப்பாளிகளின் துன்ப நிலைக்கும் முக்கியமான பொறுப்பாளிகளாகவும் விளங்கும் முதலாளித்துவ ஏகபோக நிறுவனங்களுக்கு எதிராகத் தமது பிரதானத் தாக்குதலைத் தொடுக்கின்றன தொழிலாளி வர்க்கமும் அதன் புரட்சிகர முன்னணியான மார்க்சியக் கட்சிகளும்.

இவ்வாறு, பொருளாதாரக் கோரிக்கைகளின் பொருட்டுத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் சமுதாய, அரசியல் துறைகளில் அடிப்படை மாற்றங்களுக்காக நடக்கும் போராட்டத்துடனும் முதலாளித்துவ அமைப்பு முறைகளை அடியோடு ஒழிப்பதற்கான போராட்டத்துடனும் மேலும் மேலும் நெருக்கமாக இணைந்து கொண்டு போகிறது.

தொழிலாளி வர்க்கத்தினுடைய தற்போதையப் புரட்சி இயக்கத்தின் இன்னும் ஒரு முக்கியமான சிறப்புத் தன்மை அதன் சமுதாய அடித்தளம் விரிவடைவதும் முதலாளித்துவ ஏகபோக நிறுவனங்களுக்கு எதிராக முற்போக்குச் சக்திகளது போராட்டத்திற்கான ஒன்றித்த கூட்டணி அமைக்கும் போக்கும் ஆகும்.

ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதில் இப்போது அக்கறை கொண்டிருப்பவர்கள் நகர உழைப்பாளி மக்கள் மட்டும் அல்ல. விவசாயிகள், அறிவுஜீவிகளின் கணிசமான பகுதியினர், சிறு, நடுத்தர நகர முதலாளிகள், இளைஞர்கள், சிறப்பாக மாணவர்கள், மாதர்கள் முதலியோரும் இதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் தொழிலாளர் இயக்கத்தின் சமுதாய அடித்தளத்தைக் கணிசமாக விரிவாக்குகின்றன, எல்லா முற்போக்குச் சக்திகளையும் ஏகபோக நிறுவனங்களுக்கு எதிரான விறல் மிக்க ஒன்றித்த கூட்டணியாக இணைக்க வாய்ப்பு அளிக்கின்றன.

**ஜனநாயக, சோஷலிச நோக்கங்களின் பிரிக்க முடியாத தொடர்பு**

ஜனநாயகம் இல்லாமையும் அரசியல் பிற்போக்கும் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவதோடு, உழைப்பாளி மக்களின் மனித மாண்பையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் உரிமைகளையும் காலடியில் போட்டுத் துவைப்பதும் ஆகும். ஆகையினால்தான் ஜனநாயகத்துக்காகவும், ஜனநாயக சுதந்திரங்களை ஒழிப்பதற்கு ஏகபோக நிறுவகர்கள் செய்யும் முயற்சிகளுக்கு எதிராகவும், பாசிசத்தின் எந்த வகையும் மறுபடி தலைதூக்குவதற்கு எதிராகவும் மக்களின் மற்ற வகுப்பாரோடு சேர்ந்து தொழிலாளி வர்க்கம் உறுதியாகப் போராடி வருகிறது. சோஷலிசத்தின் பொருட்டுத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்துக்கும், சமாதானத்துக்காகவும் தேசிய சுதந்திரத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் நடந்து வரும் பொது ஜனநாயக இயக்கங்களுக்கும் உள்ள இணைவு தற்போதையத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியமான சிறப்புத் தன்மைகளில் ஒன்று ஆகும்.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைப்பாளி மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளில் சில வருமாறு: பொருளாதாரத் துறையின் மிக முக்கியக் கிளைகளைத் தேசிய உடைமை

ஆக்கி அவற்றின் நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்துவது; உழைப்பாளி மக்களுடைய வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவது; விவசாயிகள், சிறு, நடுத்தர முதலாளிகள் ஆகியோருடைய நலன்களை ஏகபோக நிறுவனங்களின் தான்தோன்றித்தனத்திலிருந்து காப்பது; தேசிய சுதந்திரத்துக்கான போராட்டம்; சமாதானத்துக்காகவும் பொருளாதாரமும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சமாதான நோக்கங்களுக்கு, உழைப்பாளிகளின் நலன்களுக்குப் பயன்பட வேண்டும் என்று கோரியும் போராட்டம்.

இந்தச் செயல்திட்டத்தின் நிறைவேற்றம் தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் போக்கி விடாது, முதலாளித்துவம் சோஷலிசமாக வளர்வது என்று அர்த்தப்படாது. தலைமைக் குறிக்கோளான சோஷலிசத்தை அடைவதற்குரிய வழியில் உள்ள முக்கியமான மைல் கற்கள் இவை. ஜனநாயகத்துக்கான போராட்டம் நடக்கையில் பிற்போக்குச் சக்திகளின் செல்வாக்கு குலைகிறது, சிறப்பாக ஏகபோக நிறுவனங்களின் செல்வாக்கு தகர்கிறது. இதனால் சோஷலிசப் புரட்சிக்கான பாதையும் செப்பம் ஆகிறது. ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் உழைப்பாளி மக்கள் அனுபவம் பெறுகிறார்கள், தங்களைச் சுற்றிப் பெரும்பாலான மக்களைத் திரட்டுகிறார்கள். இவ்வாறு உருவாகிறது சோஷலிசப் புரட்சியின் அரசியல் படை. அதனால் தான் ஜனநாயகத்துக்கான போராட்டம் சோஷலிசத்துக்கான போராட்டத்தின் உள்ளுறுப்பாக விளங்குகிறது.

## 3. சோஷலிசப் புரட்சி செயல்படுவதற்கான வடிவங்கள்

தற்போதைய சகாப்தம் மனித குலம் சோஷலிசத்துக்கு முன்னேறும் சகாப்தம். வெவ்வேறு நாடுகள் சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதற்குரிய திண்ணமான வடிவங்கள் குறித்த பிரச்சினை இதில் மிகப் பெருத்த முக்கியத்துவம் பெறுகிறது. இந்த வடிவங்கள் எத்தகையவை, எதைச் சார்ந்தவை?

ஆளும் வர்க்கங்கள் தங்கள் ஆட்சி அதிகாரத்தையும், உழைப்பாளிகளைச் சுரண்டத் தங்களுக்கு வாய்ப்பு அளிப்பதான உற்பத்திச் சாதனங்கள் மீது தனியார் சொத்துரிமை

யையும், தங்கள் எண்ணற்ற சலுகைகளேயும் தாங்களாகவே விரும்பி ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டா என்று வரலாற்று அனுபவம் கூறுகிறது. அதனுல் தான் சோஷலிசப் புரட்சி இன்றியமையாதபடிப் புரட்சி வன்முறையுடன், முதலாளித்துவ அமைப்பை வன்முறையால் வீழ்த்துவதுடன் இணைந்திருக்கிறது.

ஆனாலும் வன்முறை பல வகைப்படும். ஒரு வகை வன்முறை ஆயுதங்களேக் கையாள்வதுடனும் உள்நாட்டுப் போருடனும் வெளிநாட்டாரின் தலையீட்டுடனும் தொடர்புள்ளது. ஆனுல், சமாதானப் பாங்கானது என்று சொல்லக் கூடிய வன்முறை இருக்கிறது: தனியார் உடைமையைப் பறிமுதல் செய்வது அல்லது வரம்புக்கு உட்படுத்துவது, சுரண்டுவோர் வர்க்கங்களின் அரசியல் உரிமைகளே அகற்றுவது அல்லது குறுக்குவது, அவற்றை உழைக்கும்படி கட்டாயப்படுத்துவது முதலியன. இந்த இரண்டாவது வகை வன்முறை (''அமைதியான வன்முறை'') சோஷலிசப் புரட்சியில் தவிர்க்க முடியாதது. ஆயுதங்களேக் கையாளும் வகையான வன்முறையைப் பொறுத்த வரையில், குறித்த நாட்டில் உள்ள திண்ணமான வரலாற்று நிலைமைகளேயும் வர்க்கச் சக்திகளின் ஒப்பு நிலையையும் சர்வதேசச் சூழ்நிலையையும் பகுத்து ஆராயாமல் அதைப் பயன்படுத்துவது பற்றிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

''புரட்சியை ஏற்றுமதி செய்வது'' பற்றியும் ஆயுத சாதனங்களால் புரட்சியைத் ''தூண்டி ஊக்குவது'' பற்றியும் உள்ள பல வகைப்பட்ட சித்தாந்தங்களுக்கு விஞ்ஞானக் கம்யூனிசம் சமரசப்படுத்த முடியாத எதிரியாக இருந்தது, இருந்து வருகிறது. இந்த மாதிரிச் ''சித்தாந்தம்'' மார்க்சியத்துக்கு முற்றிலும் முரணுனது. ''புரட்சிகளேத் தோற்றுவிக்கும் வர்க்க முரண்பாடுகளின் தீவிரம் முதிர்வதற்கு ஏற்பவே புரட்சிகள் வளர்ச்சி அடைகின்றன என்பது மார்க்சிய விளக்கம். இந்தப் புரட்சிகளேத் ''தூண்டி ஊக்குவதை'' மார்க்சியம் எப்போதும் மறுத்து வந்திருக்கிறது.*

நம் காலத்தில் யாவற்றிலும் அதிக மனிதாபிமானமும் சிறந்த மனிதத் தன்மையும் உள்ள வர்க்கம் தொழிலாளி வர்க்கம்.

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 403 (ருஷ்யனில்).

மனித குலப் பண்பாட்டின் சாதனைகளைக் காப்பாற்றவும் பெருக்கவும், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சித் தரத்தை உயர்த்தவும், நிலவுலகின் முதன்மைச் செல்வமான மனிதர்களை, உழைப்பாளிகளைப் பேணிக் காக்கவும் அது பாடுபட்டு வருகிறது. எனவே, தங்கள் ஆதிக்கத்தை அமைதியான வழியில் முயன்று பெறவும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு அமைதியாகப் பரிணமிக்கவும் தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளிகள் எல்லோரும் விரும்புகிறார்கள்.

சோஷலிசத்துக்குச் செல்வதற்கான வழிகளின் தேர்வு ஒரு நாட்டில் வர்க்கச் சக்திகளின் ஒப்புநிலையைப் பொறுத்திருக்கிறது. உழைப்பாளிகளின் சக்திகள் முதலாளி வர்க்கத்தின் சக்திகளைத் திட்டவட்டமாக விஞ்சி இருந்து, முதலாளி வர்க்கம் எதிர்ப்பதில் பயன் இல்லை என்று கண்டு கொண்டு பாட்டாளி வர்க்கத்துக்கு ஆட்சி அதிகாரத்தை விட்டுக் கொடுப்பது மேல் எனக் கருதினால் சோஷலிசத்துக்கு அமைதியான பரிணமிப்பு நடக்கக் கூடியது தான்.

ஆனால் வரலாற்று அனுபவம் காட்டுவது என்ன என்றால், சக்திகளின் ஒப்புநிலையை நிதானமாக மதிப்பிட முதலாளி வர்க்கம் திறன் அற்றது என்பதே. மடிய விதிக்கப்பட்டவனுக்கு உரிய புகலற்ற ஆத்திரத்துடன், தனது ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் தன் வாழ்நாளை நீடிக்கவும் அது எல்லாச் சாதனங்களையும் கையாள்கிறது. இவற்றில் யாவற்றினும் முக்கியமானவை ஆயுதங்கள். தன் ஆதிக்கத்துக்கு அபாயம் வரும்போது, ஒடுக்கப்பட்டவர்கள் தன் ஆட்சி அதிகாரத்தைத் தாக்குகையில் முதலாளி வர்க்கம் ஆயுதங்களைப் பயன்படுத்துகிறது. பாரிஸ் கம்யூன் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. 1917ம் ஆண்டு அக்டோபரில் உழைப்பாளி மக்கள் பெற்ற வெற்றியை ருஷ்யாவின் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் அமைதியாக ஒப்புக் கொண்டார்களா? இல்லை, அவர்கள் விரிவான உள்நாட்டுப் போரை மூட்டி விட்டார்கள், வெளி நாடுகளைச் சேர்ந்த முதலாளிகளை உதவிக்கு அழைத்தார்கள். சோவியத் நாட்டில் முதலாளித்துவ அமைப்பை மறுபடி நிலைநாட்ட படை பலத்தால் முயன்றன இந்த வெளி அரசுகள். ஆனால் தொழிலாளி வர்க்கமும் எல்லா உழைப்பாளிகளும் முதலாளி வர்க்கத்தின் ஆயுதத் தாக்குதலைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் எதிர்த்து

முறியடித்தார்கள். தாங்களும் ஆயுதங்கள் ஏந்திப் பாட்டாளி வர்க்க ஆட்சியைக் காத்தார்கள்.

இப்போது நிலைமை மாறி விட்டது. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு சர்வதேச அரங்கில் உருவாகியுள்ள சக்திகளின் புதிய ஒப்புநிலை சோஷலிசத்துக்கு அமைதியாகப் பரிணமிப்பதற்கான வாய்ப்புக்களைக் கணிசமாக விரிவுபடுத்தி இருக்கிறது. ஐரோப்பாவையும் ஆசியாவையும் சேர்ந்த அனேக நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோஷலிசப் புரட்சிக்குப் பரிணமிப்பு அமைதியான வழியிலேயே நடந்திருக்கிறது.

முதலாளித்துவ நாடுகளைப் பொறுத்த வரையில், அவை அமைதியான வழியில் சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதற்கான வாய்ப்புக்கள், மக்களின் மிக மிக விரிவான வட்டாரங்கள் மீது தொழிலாளி வர்க்கத்தினதும் அதனுடைய மார்க்சியக் கட்சியினதும் அதிகரித்த செல்வாக்கின் விளைவாக முதன்மையாக அதிகரித்துள்ளன. இந்த நிலைமைகளில், சில நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மக்கள் நடத்தும் விரிவான இயக்கத்தை ஆதாரமாகக் கொண்டு, இரத்தப் பெருக்கு இல்லாமலும் உள்நாட்டுப் போர் இல்லாமலும் ஆட்சியைத் தன் கைகளில் எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பை முன் ஒருபோதும் இல்லாத அளவு பெற்றிருக்கிறது.

பொருத்தமான நிலைமைகள் இருக்கும் போது பாட்டாளி வர்க்கம் அமைதியாக ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வழிகளில் ஒன்றாக நாடாளுமன்றத்தைப் பயன்படுத்துவது விளங்கக் கூடும். பெரும்பான்மை மக்களைச் சார்ந்தும் சந்தர்ப்பவாதத்துடன் உறுதியாகப் போராடியும் தொழிலாளி வர்க்கம் அனேக நாடுகளில் நாடாளுமன்றத்தை உழைப்பாளி மக்களுக்குத் தொண்டாற்றும் கருவியாக மாற்றவும், பிற்போக்குச் சக்திகளின் எதிர்ப்பை முறித்து விட்டு, சோஷலிசத்துக்கு முன்னேறுவதற்கான நிலைமைகளை உருவாக்கவும் முடியலாம். நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தி சோஷலிசத்தை அடைவதற்கான வழி வர்க்கப் போராட்டத்தின் விரிவான வீச்சைச் சார்ந்துள்ள வழியாகும், அடிப்படைப் புரட்சிகர மாற்றங்களின் வழியாகும். தொழிலாளி வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் பெற்றிருக்கும் சக்தி எந்த அளவுக்குத் திண்ணமாகத் தென்படுகிறதோ, அவர்கள் வச

முள்ள போர் நடத்துவதற்கான சாதனங்களின் ஆயுதசாலை எந்த அளவுக்கு வளமானதோ, அந்த அளவுக்குத்தான் இந்த வழியின் வெற்றி சாத்தியம் ஆகும் என்பது தெளிவு. நாடாளு மன்றத் தேர்தல்களில் பெற்ற வெற்றி ஒன்றினால் மட்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் நிலையாக வைத்துக் கொள்ளவும் பாட்டாளி வர்க்கத்துக்கு இயலும் என்று எண்ணுவது பேதைமை ஆகும். நாடாளுமன்றத்தில் பெற்ற வெற்றி இந்த வெற்றியின் பயன்களை எல்லாச் சாதனங்களா லும் காக்க ஆயத்தமாய் இருக்கும் வர்க்கத்தின் உண்மை யான சக்தியால் வலுவாக்கப்படும் போதுதான் வாக்களிப் பின் விளைவுகள் முதலாளி வர்க்கத்தால் மிதித்துத் துவைக்கப் பட மாட்டா என்பதற்கு உத்தரவாதம் ஏற்படும்.

உலகின் அதிக அளவான பகுதி மீது முதலாளி வர்க்கம் இன்னமும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது, அதனிடம் ஆயுதங் கள் இருக்கின்றன, தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப் பாளி மக்களுக்கும் எதிராக அவற்றைப் பயன்படுத்த அது வல்லது, அடிக்கடி பயன்படுத்தவும் செய்கிறது என்பதை மறக்கக் கூடாது. இதற்கு மிக மிகக் கண்கூடான சான்று சிலி நாட்டின் துன்பக்கதை ஆகும். அங்கே இராணுவ பாசிஸ்டுச் சர்வாதிகாரம் மக்களின் புரட்சியைத் தொழிலாளி வர்க்கத் தினதும் முற்போக்குச் சக்திகளுடையவும் இரத்தப் பெருக் கில் மூழ்கடித்து விட்டது. ஆனாலும், சோ.யூ.க. கட்சியின் 25வது காங்கிரசில் லி. இ. பிரெஷ்னேவ் கூறியது போல, “அதற்கு இன்றியமையாத நிலைமைகள் இருந்தால் அமைதி யான வழி உட்படப் பல வித வழிகள் புரட்சிக்கு இருப்பது சாத்தியம் என்ற கம்யூனிஸ்டுகளின் முடிவைச் சிலி நாட்டின் துன்ப நிகழ்ச்சி பொய்ப்படுத்தி விடவில்லை. எனினும் புரட்சி தன்னைக் காத்துக் கொள்ளத் திறன் பெற்றிருக்க வேண்டும் என்பதை அது அழுத்தமாக நினைவுபடுத்தியது. தற்கால பாசிசத்துக்கும் வெளிநாட்டுப் பிற்போக்குக்கும் எதிராக விழிப்பாய் இருக்கும்படி அது கற்பிக்கிறது. விடுதலை, முற் போக்கு ஆகியவற்றிற்காகப் பாடுபடும் எல்லோருடனும் சர்வதேச ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும்படி அது அழைக் கிறது.”*

---

* **சோ. யூ. க. கட்சியின் 25வது காங்கிரசின் விவரங்கள்,** மாஸ்கோ, 1976, பக்கம் 30.

போராட்டத்தின் எல்லா வடிவங்களிலும் தேர்ச்சி, திண்ணமான சூழ்நிலைக்கு யாவற்றிலும் அதிகப் பொருத்த முள்ள வடிவங்களைத் திறமையாகப் பயன்படுத்துவது, ஒரு வடிவத்தின் இடத்தில் மற்றொன்றை விரைவாகவும் எதிர் பாராத விதத்திலும் கையாளும் திறன் ஆகியவை சோஷ லிசப் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றிக்குச் கட்டாயமாகத் தேவைப்படும் நிலைமைகள் ஆகும்.

## 4. தற்போதையக் கம்யூனிஸ்டு இயக்கம்

**புரட்சிச் சக்திகளின் தலைமையில்**

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தை வழி காட்டி நடத்தும் தலைமைச் சக்தியாக விளங்குகிறது சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம். நமது காலத்தில் யாவற்றிலும் அதிக எண்ணிக்கை கொண்டதும் யாவற்றிலும் விறல் மிக்கதும் ஆகும் இந்த இயக்கம். மார்க்சிய-லெனினியச் சித்தாந்தத்தை ஆயுதமாகப் பூண்ட கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் கோடானுகோடி வெகுஜனத் திரளின் நலன்களுக்கும் தன்னலம் அற்ற தொண்டு ஆற்றி வருகிறார்கள். இந்தக் காரணத்தால் வெகுஜனத் திரளின் எல்லையற்ற நம்பிக்கைக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாய் இருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் பல்வேறு நிலைமைகளில் நிலவி யும் போராடியும் வருகின்றன. வெவ்வேறு பணிகள் அவற் றுக்கு எதிர் நிற்கின்றன.

**சோஷலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள்** ஆளும் கட்சிகளாக விளங்குகின்றன. அவற்றின் தலைமையில் இந்நாடுகளின் மக்கள் முதலாளித்துவ ஒடுக்குமுறையை உடைத்து எறிந்து விட்டு, சோஷலிசத்தையும் கம்யூனிசத்தை யும் கட்டி அமைக்கும் கடினமான செயலில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள். பொருளாதாரத்தை வளர்த்து, புதிய சமுதாய உறவுகளை ஏற்படுத்தும் சிக்கலான நோக்கங்களை அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள், சோஷலிசத்தால் பெறப்பட்ட நலங்களைக் காக்க வகை செய்கிறார்கள், அதைத்

தவிர சோஷலிஸ்டு அல்லாத உலகின் மக்களுக்கு அவர்களது புரட்சிப் போராட்டத்தில் எல்லா வகையிலும் உதவி வருகிறார்கள். சோஷலிச நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகளின் ஆக்க வேலை சோஷலிசத்தின் சர்வதேச நிலையை வலுப்படுத்தி, அதன் கருத்துக்களுடைய ஈர்ப்பு ஆற்றலை உலகம் முழுவதிலும் பெருக்கி வருகிறது.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஏகாதிபத்திய ஆட்சி முறையின் கடினமான நிலைமைகளில், பல சந்தர்ப்பங்களில் துன்புறுத்தலும் பயங்கர அடக்கு முறைகளும் தாண்டவமாடும் சூழலில் மறைமுகமாக, போராடி வருகின்றன. முதலாளித்துவத்தை வெற்றி கொள்வதற்கு, சோஷலிசப் புரட்சிக்குத் தங்கள் நாடுகளின் மக்களை நடத்திச் செல்லும் பணி அவற்றுக்கு இன்னும் எதிர் நிற்கிறது.

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள் தேசிய விடுதலைப் புரட்சி நெருப்பில் தோன்றியவை. இவை மேலும் மேலும் வலு அடைந்தும், வளர்ச்சி பெற்று வரும் இளம் அரசுகளது வாழ்க்கை மீது நாளுக்கு நாள் அதிகச் செல்வாக்கு விளைத்தும், காலனியாட்சி முறைக்கும் நவீன காலனியாட்சி முறைக்கும் எதிரான போராட்டத்தின் ஊக்கத்துடன் பங்காற்றியும் வருகின்றன. தேசிய விடுதலைப் புரட்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதும், தேசிய சுதந்திரத்தை நிலைப்படுத்துவதும், முன்னேற்றம், சோஷலிசம், சமாதானம் ஆகியவற்றின் பாதையில் மக்களை நடத்திச் செல்வதும் இவற்றின் முக்கியப் பணிகள் ஆகும்.

திண்ணமான நோக்கங்களிலும் பணிகளிலும் வேறுபாடு இருப்பினும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒரே ஒன்றித்த செயலை ஆற்றி வருகின்றன: தற்கால மனித குலத்தின் இயக்கத்தை முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குச் செலுத்தி வருகின்றன.

### போர்த்தந்திரமும் செயல்தந்திரமும்

கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய கொள்கையின் சித்தாந்த அடிப்படையாக விளங்குகிறது மார்க்சியம்-லெனினியம். ஏனெனில், சோஷலிசப் புரட்சியைச் செயல்படுத்துவதும் சோஷலிச சமூகத்தை நிறுவுவதும்

எவை இல்லாமல் நடக்க முடியாதோ, அந்தப் பொது விதிகளை அது ஆராய்கிறது. சோஷலிசக் கட்டுமானத்துக்கு உரிய பொது விதிகள் ஒவ்வொரு தனி நாட்டிலும் சிறப்பான முறையில், தனி வகையில் வெளிப்படுகின்றன என்று மார்க்சியம்-லெனினியம் அதே சமயம் வலியுறுத்துகிறது. உலகு அனைத்தின் கம்யூனிஸ்டுகளும் எதன் பொருட்டுப் போராடி வருகிறார்களோ, அந்தச் செயலின் வெற்றிக்கு இந்தத் தனி வகையான நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வது இன்றியமையாத முதல் தேவை ஆகும்.

முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் திட்டவட்டமான அரசியல் கொள்கைப் போக்கை வகுத்துக் கொள்ளுகின்றன. போர்த்தந்திரத்திலும் செயல்தந்திரத்திலும் இது பருவடிவில் வெளிப்படுகிறது.

தற்போதையக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் போர்த்தந்திரம் என்பதன் பொருள், சமூக வளர்ச்சியின் வரலாற்று நோக்கில் குறித்த காலப் பகுதியில் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியச் செல் திசையும், தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் கட்சியினதும் பொது மற்றும் முக்கியப் பணிகளும் ஆகும். போர்த்தந்திரத்தைத் தீர்மானிப்பது என்றால், இயக்கத்தின் முக்கிய நோக்கத்தைத் தீர்மானிப்பதும், யாருக்கு எதிராகப் புரட்சி முயற்சிகள் செலுத்தப்பட வேண்டுமோ அந்தத் தலைமை வர்க்கப் பகைவனைத் தேடிக் காண்பதும், இந்தப் பகைவனுக்கு எதிரான போராட்டத்தில் கூட்டாளி களைத் தெரிந்து கொள்வதும் ஆகும். செயல்தந்திரத்தைப் பொறுத்த வரையில், திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலை களில் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய வடிவங்கள், முறைகள், உத்திகள் ஆகியவற்றின் தொகுப்பும் ஏதேனும் ஒரு திண்ணமான பணியின் நிறைவேற்றத்துக்காகக் கட்சி கடைப்பிடிக்கும் நடத்தைப் போக்கும் தவிர அது வேறு ஒன்றும் இல்லை. செயல்தந்திரம் பல வகையான பிரச்சினை களின் வட்டத்தை உள்ளடக்கி இருக்கிறது. இவையாவன: போராட்ட வடிவங்கள் (பொருளாதார, அரசியல், கொள் கைவாத வடிவங்கள்; அமைதியற்ற, அமைதியான வடிவங் கள்) பற்றிய பிரச்சினை; பல்வேறு வடிவங்களின் இணைப்பு பற்றிய பிரச்சினை; தாக்குதல், தற்காத்தல், பின்வாங்கல் பற்றிய பிரச்சினை; சமரசங்களையும் ஒப்பந்தங்களையும் குறித்த

பிரச்சினை; பகைவரின் பாசறையில் ஏற்படும் முரண்பாடுகளையும் பிணக்குகளையும் உராய்வுகளையும் பயன்படுத்துவது பற்றிய பிரச்சினை; பாட்டாளி வர்க்கத்தைச் சேராத வெகுஜனங்களுடன் ஒன்றித்த கூட்டணி அமைப்பது பற்றிய பிரச்சினை முதலியன. வி. இ. லெனின் எழுதினார்: ''போராட்டத்தின் பல்வேறு உத்திகளை இணைப்பதிலும், ஒன்றிலிருந்து மற்றதற்குத் திறமையாக மாறுவதிலும், வெகுஜனங்களின் உணர்வையும் அவர்களது கூட்டுச் செயல்களின் பரப்பையும் இடைவிடாமல் அதிகமாக்குவதிலும் அடங்கி இருக்கிறது மார்க்சியச் செயல்தந்திரம்...''*

செயல்தந்திரப் பணிகளைப் போர்த்தந்திர நோக்கங்களுக்கு அடிப்படுத்துவதன் அவசியத்தைக் கம்யூனிஸ்டுகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். செயல்தந்திர மாற்றம் போராட்டத்தின் புரட்சித் தன்மையைப் போக்கி விடாதபடிப் பார்த்துக் கொள்ள அவர்கள் முயல்கிறார்கள். போராட்டத்தின் புரட்சி நோக்கங்களை மறந்து விடும் வலதுசாரிச் சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராகவும், போர்த்தந்திர, செயல்தந்திரப் பணிகளைக் கலந்து குழப்புபவர்களும் திண்ணமான வரலாற்று நிலைமைகளில் வழக்கொழிந்து போன எவையேனும் போராட்ட வடிவங்களுக்குச் சார்பற்ற முக்கியத்துவம் அளிப்பவர்களுமான இடதுசாரி வகைச் சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராகவும் அவர்கள் உறுதியாகப் போராடி வருகிறார்கள்.

போர்த்தந்திரம் ஒப்புநோக்கில் நிரந்தரமானது, நிலையானது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஏதேனும் ஓர் அணி, ஏதேனும் ஒரு நாடு வளர்ச்சியின் எந்தக் கட்டத்தில் நிற்கிறது என்பதைப் பொறுத்து அது மாறுகிறது. முந்திய பணிகள் நிறைவேற்றப்பட்டு, நாடு தன் வளர்ச்சியின் புதிய கட்டத்தில் அடி வைக்கும் போது புதிய போர்த்தந்திரப் பணிகள் எதிர்ப்படுகின்றன. செயல்தந்திரத்தைப் பொறுத்த வரையிலோ, அது எவ்வளவோ அதிக இயங்கும் தன்மையும் இயக்க விரைவும் உள்ளது. வர்க்கச் சக்திகளின் ஒப்புநிலையும் குறித்த நாட்டின் வளர்ச்சிக்குரிய திண்ணமான நிலைமை

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 25, பக்கம் 57. (ருஷ்யனில்).

களும் சர்வதேசச் சூழ்நிலையும் மாறுவதற்கு ஏற்பப் போராட்டத்தின் வடிவங்களும் உத்திகளும் மாறுகின்றன.

பாட்டாளி வர்க்கத்தைச் சேராத உழைப்பாளி வெகுஜனங்களுடன், முதன்மையாக விவசாயிகளுடன், முதலாளித்துவத்தின் நிலைமைகளில் ஒன்றிப்பை ஏற்படுத்தி வலுவாக்குவது குறித்த பிரச்சினை போர்த்தந்திரத்திற்கும் செயல்தந்திரத்திற்கும் உரிய மிக முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று ஆகும்.

நிலைமைகளிலும் குறிக்கோள்களிலும் பணிகளிலும் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பொதுத் தன்மைகள் நிறைய உள்ளன. இரு வகுப்பாரும் முதலாளிகளால் சுரண்டப்படுகிறார்கள், எனவே, முதலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுபெறுவதில் இரு சாராருமே அக்கறை கொண்டிருக்கிறார்கள். தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் உறுதியாக ஒன்றுபடுவதற்குப் புறநிலையான அடிப்படையை இந்தப் பொதுமை உருவாக்குகிறது. ஆனால் இந்த ஒன்றிப்பு தானாகவே, இயல்பான முறையில் ஏற்பட்டு விடுவதில்லை. புதிய சமூக அமைப்பிற்காக, முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராடுகையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளால் ஏற்படுத்தப்படுகிறது இது. தொன்றுதொட்டு நிலவிவரும் விவசாயிப் பிரச்சினையை விவசாயிக்குச் சாதகமாகத் தீர்க்கவும், தனக்கேயோ, அல்லது சமூகம் முழுவதற்குமோ சொந்தமான நிலத்தில் தனது நலன்களுக்காக வேலை செய்யும் வாய்ப்பை விவசாயிக்கு அளிக்கவும் வல்லது தொழிலாளி வர்க்கம் மட்டுமே. ஆனால் கோடானுகோடி விவசாயி வெகுஜனங்கள் புரட்சியை ஆதரித்து அதில் தீவிரமாகப் பங்காற்றினால் தான் முதலாளித்துவத்தை ஒழிப்பதும் சோஷலிச சமூகத்தை நிறுவுவதும் தொழிலாளி வர்க்கத்துக்குச் சாத்தியம் ஆகும்.

### பொதுக் கொள்கைப் போக்கு

மார்க்சிய-லெனினியத்தைஆதாரமாகக் கொண்டும்தொழிலாளி வர்க்கத்தின் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வர்க்கப் போராட்ட அனுபவத்தைத் தொகுத்தும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் 1957லும் 1960லும் 1969லும் மாஸ்கோவில் நடந்த தங்கள் மகாநாடுகளில் தற்போதைய சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கைக் கூட்டாக வகுத்தன.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதை உள்ளடக்கமாகக் கொண்ட தற்போதையச் சகாப்தத்தின் மையத்தில் இருப்பவை சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் சோஷலிச நாடுகளின் உலக அமைப்பும் என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது பொதுக் கொள்கைப் போக்கு. சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டி அமைத்துக்கொண்டிருக்கும் நாடுகளின் மக்கள், முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்துடனும் தேசிய விடுதலை இயக்கத்துடனும் பல்வேறு ஜனநாயக இயக்கங்களுடனும் சேர்ந்து, முதலாளித்துவத்தின் வேரை அறுப்பதும் புதிய, சோஷலிச, கம்யூனிச சமூகத்தை உலகில் நிலைநாட்டுவதுமான ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிப் பெருக்காக அமைந்திருக்கிறார்கள்.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கு வர்க்கப் போராட்டத்திற்கும் சோஷலிசப் புரட்சிக்கும் உரிய கொள்கைப் போக்கு ஆகும். சோஷலிசத்துக்குப் பரிணமிப்பு, நாம் ஏற்கெனவே கூறி இருப்பது போல, வெவ்வேறு வடிவங்களில் நிகழக் கூடும் என்று கம்யூனிஸ்டுகள் எண்ணுகிறார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் காலனியாட்சி முறைக்கு எதிரிகளாக இருந்தன, இருந்து வருகின்றன. தேசிய விடுதலை இயக்கத்துக்கு அவை நிபந்தனை அற்ற ஆதரவு அளிக்கின்றன. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஜனநாயகப் புரட்சியை முடிவு வரை நடத்திச் செல்லவும் உண்மையான தேசிய சுதந்திரம் பெறவும் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையில் முன்னேறவும் அவை முயன்று பாடுபடுகின்றன.

ஏகாதிபத்தியப் பிற்போக்குக்கு எதிராகவும், உழைப்பாளி மக்களின் ஜனநாயக சுதந்திரங்களுக்கும் உரிமைகளுக்கும் ஆதரவாகவும் ஊக்கத்துடன் போராடுபவர்களாகக் கம்யூனிஸ்டுகள் எங்கும் எப்போதும் செயலாற்றி வருகிறார்கள். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, ஜனநாயகத்தின் பொருட்டு நடக்கும் எல்லா வித இயக்கத்தையும் சோஷலிசத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் முதலாளித்துவத்துக்கு எதிராக நடக்கும் பொதுப் போராட்டத்தில் தங்கள் கூட்டாளியாக அவர்கள் மதிக்கிறார்கள்.

கம்யூனிஸ்டு இயக்கம் தற்காலத்தில் எல்லாவற்றிலும்

மனிதாபிமானம் மிக்க இயக்கம் ஆகும். சமர்தானப் போராட்டத்தையும், வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வுக்காகவும் கோடானுகோடி மனிதர்களின் உயிர்களேக் காப்பதன் பொருட்டும் உழைப்பாளிகளால் படைக்கப்பட்ட பொருள், உள வகை நிதியங்களேக் காப்பதன் பொருட்டும் போராடுவதையும் தங்கள் முக்கியப் பணிகளில் சேர்ந்தவையாக அவர்கள் கருதுவது தற்செயலாக அல்ல. இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக, சமாதானப் பற்றுள்ள, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் அனைத்தின் முயற்சிகளேயும் அவர்கள் ஒன்றிணைக்கிருர்கள்.

நம் காலத்தில் கம்யூனிஸ்டு இயக்கம் முரண்பாடுகளும் இடர்களும் இல்லாமல் வளர்ச்சி அடைந்து வருகிறது என்று எண்ணுவது பெருத்த தவறு ஆகும். முதலாளி வர்க்கத்துடனும் அதன் சித்தாந்தகர்த்தர்களுடனும் நடைமுறைவாதிகளுடனும் மட்டும் இன்றி, தங்கள் சொந்த அணிகளில் உள்ள சந்தர்ப்பவாதப் போக்குகளுடனும், திருத்தல்வாதத்துடனும் வறட்டுச் சூத்திரவாதத்துடனும் ஆழ்ந்த போராட்டம் நடத்துவது பல பத்தாண்டுகளுக்கு முன் போலவே இன்றும் கம்யூனிஸ்டுகளுக்கு இன்றியமையாததாக இருக்கிறது.

மார்க்சியம் தோன்றியது 19ம் நூற்ருண்டில், இப்போதோ 20ம் நூற்ருண்டு நடக்கிறது என்பதைக் காரணம் காட்டும் திருத்தல்வாதிகள், மார்க்சியம் ''பழையதாகி விட்டது'' என்றும் அதைச் ''சீர்படுத்துவது'', ''திருத்துவது'' அவசியம் என்றும் கூறுகிருர்கள். மார்க்சியத்தைச் சீர்படுத்தும் பாவனையில் அதன் புரட்சித் தன்மையை அவர்கள் மறுக்கிருர்கள். உதாரணமாக, அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடனும் முதலாளித்துவத் தேசிய உடைமையாக்கத்துடனும் பொருளாதார வளர்ச்சியை முறைப்படுத்துவதற்கு முதலாளித்துவ அரசு செய்துவரும் முயற்சியுடனும் தொடர்பு கொண்டவையான தற்போதைய முதலாளித்துவ நடப்பியலுக்குரிய புது நிகழ்ச்சிகள் முதலாளித்துவத்தின் அடிப்படைகளே மாறி வருவதையும் முதலாளித்துவம் சோஷலிசத்தை மேலும் மேலும் நெருங்குவதையும் சோஷலிசத்துக்குள் ''ஊர்ந்து புகுவதை''யும் காட்டுவதாக அவர்கள் வலிந்து வரைக்கிருர்கள். ஆனல் தற்போதைய முதலாளித்துவத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய நிகழ்ச்சிகள் முத

லாளித்துவத்தின் முக்கிய அடிப்படையை—தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும்—எந்த வகையிலும் தொடக்கூட இல்லை. முதலாளித்துவம் முதலாளித்துவமாகவே இருந்து வருகிறது. அதை சோஷலிசமாக மாற்றுவது சோஷலிசப் புரட்சியின் மூலமும் ஆட்சியதிகாரம் உழைப்பாளிகள் கைகளில் இருக்கும் படியான அரசை நிறுவுவதன் மூலமுமே சாத்தியம் ஆகும்.

தங்களை உண்மைப் புரட்சியாளர்களாக எண்ணிக் கொள்ளும் வறட்டுச் சூத்திரவாதிகளும் இடதுசாரித் தீவிரவாதி நபர்களும் ''புரட்சிப் போரின்'' மூலம் முதலாளித்துவத்தைத் தாமதமின்றி அழித்து விட அறைகூவி அழைக்கிறார்கள். குறித்த நாட்டில் சோஷலிசத்துக்கு ஏற்ற நிலைமைகள் முதிர்ச்சி அடைந்து விட்டனவா இல்லையா, அந்த நாட்டின் மக்கள் சோஷலிசத்தை ஏற்க ஆயத்தமாய் இருக்கிறார்களா இல்லையா என்பவற்றைப் பற்றிக் கவலையே படாமல், உலகப் புரட்சியின் வளர்ச்சியை ஆயுதபலத்தால் தூண்டி விடவும் சோஷலிசத்தை மக்கள் மீது வெளியிலிருந்து சுமத்தவும் அவர்கள் விரும்புகிறார்கள். அழிவு விளைக்கும் பயங்கரமான ஆயுதங்கள் இருந்து வரும் தற்போதைய நிலைமைகளில் உலக மூலதனத்துக்கு எதிரான ''புரட்சிப் போர்'' உலகளவில் அணுக்கருப் பெருவிபத்தாகத் தவிர்க்க முடியாதபடி மாறி விடும் என்பதைக் கருத்தில் கொள்ள அவர்கள் மறுக்கிறார்கள். இந்த யுத்தத்தில் கோடானுகோடி மனிதர்கள் மாண்டு போவார்கள், முழு முழு மக்கள் இனங்களும் அரசுகளும் இருந்த சுவடு தெரியாதபடி அழிந்து விடும், மனித குலம் தனது வளர்ச்சியில் வெகு தூரம் பின்னே எறியப்படும்.

சித்தாந்த, அரசியல் பிரச்சினைகளில் கம்யூனிஸ்டுகளின் கருத்து வேறுபாடுகள் மார்க்சிய-லெனினிய, பாட்டாளி வர்க்கச் சர்வதேசியக் கோட்பாட்டு அடிப்படையிலேயே அகற்றப்பட முடியும். மார்க்சிய-லெனினியத்துக்கும், உலக சோஷலிசப் புரட்சிக் குறிக்கோளுக்கும், தொழிலாளி வர்க்கத்தினதும் உழைப்பாளி மக்கள் அனைவருடையவும் குறிக்கோளுக்கும் விசுவாசம் கடைப்பிடிப்பதே உலகு அனைத்திலும் உள்ள கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமைக்கு அடிப்படை ஆகும். சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுகளும் உண்மை

யான மார்க்சிய-லெனினியவாதிகள் அனைவரும் இந்த ஒற்றுமைக்காக விடாப்பிடியாகப் போராடி வருகிறார்கள். கம்யூனிஸ்டுகளுடைய பெரும் படையின் தேசிய, சர்வதேசியப் பணிகளைச் சரியாக இணைப்பது தற்போதைய நிலைமைகளில் சிறப்பாக ஆழ்ந்த முக்கியத்துவம் பெறுகிறது. கம்யூனிஸ்டுகளின் ஒவ்வோர் அணியும் பொதுப் பிரச்சினைகளின் தீர்வில் செயல்முறைப் பங்கு ஆற்றினால்தான் தேசியப் பணிகள் தற்போது நிறைவேறக் கூடும். மறு புறம், தேசியப் பணிகளின் நிறைவேற்றத்துக்காக, ஒவ்வொரு நாட்டின் உழைப்பாளி மக்களதும் இன்றியமையாத உடனடி நலன்களுக்காகப் போராடாமல் சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்றுவது நடவாது.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் சேர்ந்திருப்பவை சம உரிமையுள்ள, சுதந்திரமான கட்சிகள் ஆகையாலும், இந்த இயக்கத்தில் எந்த ஒரு கட்சியும் மற்றொரு கட்சியின் விஷயத்தில் ஆதிக்கம் வகிப்பதாகவோ, அடிப்பட்டதாகவோ இருக்க முடியாது ஆகையாலும், விவாதத்துக்கு இடமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழிதான், அதாவது அவை ஒன்று சேர்ந்து கூட்டாக ஆராயப்படுவதுதான் சாத்தியமானது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடையில் உள்ள கருத்து வேறுபாடுகள் எடுத்த எடுப்பில் அகற்றப்பட முடியாது என்பது கூறாமலே விளங்கும். இதற்கு நேரமும் பொறுமையும் தேவை. எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் ஒன்றுபடுத்தும் விஷயத்தின் மேல், பொதுப் பகைவனுக்கு எதிராக, ஒன்றித்த குறிக்கோளை விரைவில் அடையும் பொருட்டு சேர்ந்து ஒருங்கிசைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிகளைத் தேடுவதன் மேல் கவனத்தை நிலைநாட்டுவது அவசியம்.

சோ. யூ. க. கட்சி மத்தியக் கமிட்டி கட்சியின் 26வது காங்கிரசுக்குச் சமர்ப்பித்த விவர அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''கம்யூனிஸ்டுகளுக்கு இடையே எழும் கருத்து வேற்றுமைகள்—அவை புரட்சியாளர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் இடையே, ஒரு புறம் படைப்புத் தன்மையுள்ள மார்க்சியம், மறு புறம் வறட்டுச் சூத்திரப் போக்குள்ள குறுங்குழுக் கண்ணோட்டம், இடதுசாரித் துர்ச்

சாகசப் போக்கு ஆகியவற்றுக்கும் இடையே எழும் கோட்பாட்டு முக்கியத்துவம் உள்ள வேறுபாடுகள் அல்ல என்றுல்—தீர்க்கப்படக் கூடியவையே என்ற நோக்கை நமது கட்சி அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. கோட்பாட்டு முக்கியத்துவம் உள்ள கருத்துக்களில் சமரசங்கள் ஏற்பட முடியாது—லெனின் காலத்தில் எப்படியோ, அப்படியே இன்றும். ஆனுல் பொதுவான புரட்சிக் குறிக்கோளின் பொருட்டுக் கம்யூனிஸ்டுகள் போராடும் போது, வெவ்வேறு கண்ணேட்டங்களையும் நிலைகளையும் பொறுமையுடன் தோழமைப் பாங்கில் விவாதிப்பது அவர்களுடைய பொது நோக்கங்களுக்கு ஆகச் சிறந்த முறையில் உதவும் என்பதை நாம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம்.

சமாதானத்திற்காகவும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும் அணுவாயுதப் போரால் அழிவு விளையும் ஆபத்தை மக்கள் இனங்களுக்கு ஏற்படுத்துவதான ஆயுத உற்பத்திப் போட்டிக்கும் எதிரான ஒத்திசைந்த போராட்டம் கம்யூனிஸ்டுகளை ஒன்றுபடுத்தும் மகத்தான அடிப்படையாகவும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தை மேற்கொண்டு ஒன்றிணைப்பதற்கும் அதன் செல்வாக்கை அதிகரிப்பதற்கும் ஏற்ற விறல் மிக்க காரணியாகவும் செயல்படுகிறது.''*

---

* லி. இ. பிரேஷ்னெவ், சோ. யூ. க. கட்சியின் 26வது காங்கிரசுக்கு சோ. யூ. க. கட்சியின் மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கையும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைத் துறைகளில் கட்சியின் அடுத்துவரும் பணிகளும், மாஸ்கோ, 1981, பக்கங்கள் 23-24.

## அத்தியாயம் நான்கு

# தேசிய விடுதலைப் புரட்சி

மனிதனுல் மனிதன் சுரண்டப்படுவதை அடியோடு ஒழிப்பது, தேசிய, காலனியாதிக்க ஒடுக்குமுறை உள்பட எல்லா வகையான ஒடுக்குமுறைக்கும் முடிவு கட்டுவது என்று சோஷலிசம் பொருள்படுகிறது. உலக மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம் காலனியாட்சி முறையின் அழிவையும், ஏகாதிபத்தியத்தால் முன்பு ஒடுக்கப்பட்டிருந்த மக்கள் இனங்களின் சுதந்திரம், மறுமலர்ச்சி, வள வாழ்வு ஆகியவற்றுக்கான போராட்டத்தையும் கட்டாயமாக உணர்த்துகிறது.

### 1. ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பு சிதறுதல்

**காலனியாட்சி அமைப்பின் தகர்வு—தற்போதைய சகாப்தத்தின் சிறப்பு இயல்பு**

விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய ஒரு சில நாடுகளைச் சேர்ந்த ஏகாதிபத்தியவாதிகள் பிற நாடுகளின் கணக்கற்ற மக்களைப் பல நூற்றுண்டுகளாகச் சுரண்டி வந்தார்கள். ஆயுத பலத்தால் குருதி பெருக்கும் வன்முறையையும் ஏமாற்றையும் மிரட்டலையும் கைக்கூலியையும் நம்பிக்கைத் துரோகத்தையும் கையாண்டு, ஆப்பிரிக்க, அமெரிக்கக் கண்டங்கள் முழுவதையும் ஆசியக் கண்டத்தின் கணிசமான பகுதியையும் கைப்பற்றி, பிரமாண்டமான காலனியாதிக்க அமைப்பை அவர்கள் ஏற்படுத்திஞர்கள். மனித குலத்தின் பாதிக்கு மேற்பட்ட பகுதி மிக அண்மைக் காலம் வரை இந்த அமைப்பின் நுகத்தில் பிணிப்புண்டிருந்தது.

ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பு மனித குல வரலாற்றின் பெருந்துயர் நிறைந்த ஏடுகளில் ஒன்று ஆகும். எண்ணில் அடங்காத மனிதர்களின் அழிவு, மனிதத் தன்மை அற்ற சுரண்டல், வறுமை, பஞ்சம், நோய்கள், பண்பாடின்மை—இவையே காலனி நாடுகளின் மக்களுக்கு ஏகாதிபத்தியவாதிகள் அளித்தவை.

நாகரிகத்தையும் நவீனத் தொழில்நுட்பத்தையும் பண்பாட்டையும் புது வாழ்க்கை முறையையும் இத்தகைய பிறவற்றையும் பின்தங்கிய மக்கள் இனங்களுக்குத் தாங்கள் கொண்டு தந்ததாக ஏகாதிபத்தியக் கொள்கைவாதிகள் சொல்லி வந்தார்கள், இப்போதும் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களை இந்த மாதிரிப் பேச்சுக்களால் ஏய்க்க முடியாது. காலனியாட்சி முறையின் உண்மையான விலங்கு உருவத்தை அவர்கள்தாம் அறிவார்களே. ஏகாதிபத்தியவாதிகளுக்குக் காலனிகள் லாபகரமாக முதலீடு செய்வதற்கான களங்கள், மலிவான மூலப் பொருள்களும் உழைப்புச் சக்தியும் வழங்கும் ஊற்றுக்கள், விற்பனைச் சந்தைகள், விரிவான படைத் தாக்கு தளங்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அடிமைப்பட்ட மக்கள் இனங்களை ஒரே ஒரு நோக்கத்திற்காக—அதிகபட்ச முதலாளித்துவ லாபங்களுக்காக—சுரண்டுவதே காலனியாட்சி முறை ஆகும்.

காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த மக்கள் விடுதலைக்காகவும் தேசிய சுதந்திரத்திற்காகவும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தன்னலமின்றிப் போராடினார்கள், தொடர்ந்து போராடி வருகிறார்கள் என்பது முற்றிலும் இயல்பே.

தேசிய விடுதலை இயக்கத்துக்குப் பெருத்த ஊக்கம் அளித்தது மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி. அது ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களைத் தட்டி எழுப்பியது, போராட்டத்திற்குத் தேவையான உற்சாகத்தை அவற்றுக்கு ஊட்டியது, உலகப் புரட்சி இயக்கத்தின் பொதுப் பெருக்கில் அவற்றைச் சேர்த்தது. அக்டோபர்ப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பினது நெருக்கடி தொடங்கி விட்டது. சோவியத் யூனியன் சோஷலிசப் புரட்சியைத் தேசிய விடுதலைஇயக்கத்துடன் இணைத்தது, மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எடுத்துக்

காட்டாகவும் நம்பகமான ஆதாரமாகவும் விளங்கியது.

சோவியத் யூனியனில் சோஷலிசம் வெற்றி பெற்றதன் விளைவாக அதன் நிலப்பரப்பில் வாழும் நூறுக்கு மேற்பட்ட மக்கள் இனங்களும் தேசிய இனங்களும் சமுதாய, காலனியாதிக்க ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை அடைந்தன. இந்த வெற்றியும் சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் உருவாக்கமும் புரட்சி இயக்கத்தின் ஏற்றமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய செல்வாக்கின் அதிகரிப்பும் மக்கள் இனங்களது வெற்றிகரமான தேசிய விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தின. ஏகாதிபத்தியவாதம் பெரும்பாலான மக்கள் இனங்களைக் கொடிய காலனியாட்சி அடிமைத் தளையில் பிணித்தது என்றால், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களது விடுதலைச் சகாப்தம் சோஷலிசத்தின் தோற்றத்துடன் தொடங்கி விட்டது. தேசிய விடுதலைப் புரட்சிகளின் விறல் மிக்க பேரலை காலனியாட்சி அமைப்பை அடித்து அகற்றி, ஏகாதிபத்தியத்தின் அடிப்படைகளைப் பெயர்த்தது. முன்னால் காலனிகள், அரைக் காலனிகளின் இடத்தில் இறைமை பெற்ற இளம் அரசுகள் தோன்றின, தோன்றி வருகின்றன.

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு கழிந்த ஆண்டுகளில் பதிற்றுக் கணக்கான சுதந்திர அரசுகள் முந்திய காலனி உலகின் இடத்தில் உருவாகியுள்ளன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின்னர் தீவிரமாகத் தொடங்கியது. உலகக் காலனியாட்சி அமைப்பின் நெருக்கடி இதன் தனிச் சிறப்பாக விளங்கியது. இந்த நெருக்கடி ஆசியாவில் எல்லாவற்றிலும் துலக்கமாக வெளிப்பட்டது. வியத்நாம் மக்களின் விடுதலைக்கான போராட்டம், தங்கள் சுதந்திரத்துக்காக இந்தோனேசிய மக்கள் நடத்திய போராட்டம், பர்மாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் விறல் மிக்க வீச்சு, மலாயாவின் மக்கள் விடுதலைப் புரட்சிப் போராட்டம், பிலிப்பைனில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு ஆயுதந்தாங்கிய எதிர்ப்பு, சீன மக்களதும் கொரிய மக்களதும் போராட்டம் ஆகியவை ஆசியாவில் ஏகாதிபத்தியத்தின் நிலைகளைக் கடுமையாகக் குலைத்து விட்டன.

பாசிஸ்டுக் கூட்டணி வல்லரசுகளின் படுதோல்வி, அதில் சோவியத் யூனியனின் நிர்ணயகரமான பங்கு, ஆசியா

வில் தேசிய விடுதலை இயக்கத்தின் பொது ஏற்றம் ஆகிய வற்றின் காரணமாக இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் மேலும் மேலும் தீவிரமடைந்தது. இந்தியத் தொழிலாளர்களின் விரிவான வேலைநிறுத்த இயக்கம், தரைப் படையிலும் கடற்படையிலும் கிளர்ச்சிகள், விவசாயிகளின் வெகுஜனப் போராட்டங்கள் ஆகியவை எல்லாம் நாட்டில் விடுதலைப் போராட்டம் நாடு பரவிய தன்மையை மேற் கொண்டு விட்டதற்குச் சான்று பகர்ந்தன. அனைத்து மக்கள் எழுச்சிக்கு அஞ்சிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய யாவற்றிலும் பெரிய காலனியின் மீது ஆட்சி அதிகாரத்தை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

எல்லாவற்றிலும் பெரிய பிரிட்டிஷ் காலனியும், மக்கள் தொகையில் உலகின் இரண்டாவது நாடும், ''பிரிட்டனின் மகுட மணி'' என்று ஒரு காலத்தில் மதிக்கப்பட்டதுமான இந்தியா 1947ம் ஆண்டு ஆகஸ்டு 15ந் தேதி சுதந்திர வளர்ச்சிப் பாதையில் அடி வைத்தது.

காலனியாட்சித் தளைகளிலிருந்து இந்தியா விடுதலை அடைந்தது, தங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண் டிருந்த ஆசிய, ஆப்பிரிக்கக் காலனிகளையும் சார்பு நாடுகளை யும் சேர்ந்த மக்கள் மீது மிகப் பெரிய பாதிப்பு நிகழ்த் தியது. இந்தியா சுதந்திரம் பெற்றதனால் முதலாளித்துவ அமைப்பு அனைத்தினதும் பின்புலம் கணிசமாக நிலை குலைந்தது. இந்தக் காலனியை இழந்ததனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆசியாவில் தனது ஆதாரத் தளத்தை இழந்தது. இந்தியா உலகின் ஆகப் பெரிய சமாதானப் பற்றுள்ள பேரரசாக மாறி விட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் பல பத்தாண்டுகளாகத் தனியாணை செலுத்தி வந்த லத்தீன் அமெரிக்கா ஏகாதிபத்தியத்துடனும் காலனியாட்சி முறை யுடனும் போராட எழுந்துள்ளது. மக்கள் புரட்சி வெற்றி பெற்று விட்ட வீரக் கியூபா நாடு தேசிய விடுதலைக்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் லத்தீன் அமெரிக்க மக்கள் நடத்தி வரும் நியாயமான போராட்டத்தின் அவர் களுடைய கொடியாக விளங்குகிறது.

மக்கள் இனங்களின் புரட்சிப் போராட்டத்தில் பெரு வெற்றிகள் அண்மை ஆண்டுகளில் பெறப்பட்டன.

எதியோப்பியா, ஆப்கனிஸ்தான், நிகராகுவா ஆகிய நாடுகளில் நடந்தேறிய புரட்சிகளும் ஈரானில் மக்கள் விரோத முடியாட்சி முறை அகற்றப்பட்டதும் இதற்குக் கண்கூடான சான்றுகள். காலனியாட்சிப் பேரரசுகளுக்கு முடிவு கட்டும் நிகழ்முறை 1970க்களில் அனேகமாக நிறைவு பெற்றுவிட்டது.

**தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கியத்துவம்**

தேசிய விடுதலை இயக்கம் தற்கால வரலாற்றின் வளர்ச்சியில் மிகப் பெரிய முக்கியத்துவம் உள்ளது, சமூக முன்னேற்றத்தின் முக்கியக் காரணியாக விளங்குகிறது. தேசிய விடுதலை இயக்கம் தற்காலத்தின் ஒன்றித்த உலகப் புரட்சி நிகழ்முறையினது உள்ளுறுப்பு ஆகும்.

காலனியாட்சிப் பேரரசுகளின் இடிபாடுகள் மேல் எழுந்துள்ள இறைமை பெற்ற இளம் அரசுகளின் மக்கள் உலக அரசியலில் இப்போது ஊக்கத்துடன் பங்காற்றத் தொடங்கி இருக்கிறார்கள். புதிய உலக யுத்தம் மூளாமல் தடுப்பது, அமைதியைப் பாதுகாத்து மேலும் வலுப்படுத்துவது என்ற தற்காலத்தின் மிக முக்கியப் பிரச்சினையின் தீர்வில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சுதந்திரம் பெற்றது முதல் இந்தியா சமாதான சகவாழ்வுக்கு உரிய பஞ்சசீலக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அமைதிப் பற்றுள்ள அயல்நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. ஏகாதிபத்தியத்துக்கும் காலனியாட்சி முறைக்கும் எதிராகவும், மக்கள் இனங்களுக்கு இடையே சமாதானத்துக்கும் நட்புக்கும் ஆதரவாகவும், அணுக்கரு ஆயுதங்களின் சோதனைகளை நிறுத்துவதற்கும் இந்த ஆயுதங்களைத் தடை செய்வதற்கும் ஆதரவாகவும், ஆயுத ஒழிப்பிற்கு ஆதரவாகவும் போராடி வரும் இந்தியா உலகின் எல்லா ஜனநாயக சக்திகளுடையவும் மரியாதையைப் பெற்றிருக்கிறது. இராணுவ தளங்கள் அமைப்பது, ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட கூட்டுக்களும் கூட்டணிகளும் ஏற்படுத்துவது என்ற ஏகாதிபத்தியக் கொள்கையை இந்தியக் குடியரசு உறுதியாக எதிர்த்து வருகிறது. உலக மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் வாழும் இந்து மாகடல் பிரதேசத்தைச் சமாதான மண்டலமாக மாற்றும்

படிக்கோரி அது போராடி வருகிறது. தன் பூகோள அமைப்பு காரணமாக இந்து மாகடல் முழுவதையும் கண்காணிக்க வாய்ப்பு அளிக்கும் டியேகோ-கார்சியா தீவில் அமெரிக்க தளம் அமைக்கப்பட்டிருப்பதை இந்தியா எதிர்க்கிறது.

காலனியாட்சி முறையிலிருந்து விடுதலை பெற்றுள்ள மக்கள் சோஷலிச நாடுகளின் மக்களோடு சேர்ந்து மனித குலத்தின் மூன்றில் இரண்டு பங்காக விளங்குகிறார்கள். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களைக் கட்டுக்குள் அடக்கி வைக்க வல்ல பெரிய சக்தி ஆகும் இது.

ஏகாதிபத்தியத்தின் அரசியல், பொருளாதார, இராணுவப் போர்த்தந்திர நிலைகள் மீது வலிய அடிகளைக் கொடுத்து வருகிறது தேசிய விடுதலை இயக்கம்.

காலனியாட்சி அமைப்பின் தகர்வு விடுதலை பெற்றுவிட்ட நாடுகளுக்கு பெருத்த முக்கியத்துவம் உள்ளது ஆகும். அரசியல் சுதந்திரம் அடைந்தபின் தங்கள் பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் வளர்க்கவும் சமுதாய வளர்ச்சிப் பாதையைத் தெரிந்தெடுக்கவும் வாய்ப்பு அவற்றுக்குக் கிடைத்திருக்கிறது. விடுதலை அடைந்த சில நாடுகளின் மக்கள் முதலாளித்துவத்துடன் தொடர்பை ஒரேயடியாக அறுத்துக் கொள்ளவும் முதலாளித்துவம் அல்லாத பாதையில் முன்னேறவும் தங்கள் விருப்பத்தை வெளியிட்டார்கள்.

இவ்வாறு, தேசிய விடுதலை இயக்கமும் ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பினது தகர்வும் தற்கால மனித குலத்தின் வளர்ச்சியில் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்துக்குக் குழி பறித்து அதன் அணித்தான பின்புலங்களை அழிப்பதன் மூலம் இந்த நிகழ்ச்சி முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மனித குலம் முன்னேற உதவுகிறது. ஆகையினால்தான், காலனியாட்சி அமைப்பின் தகர்வு சோஷலிச நாடுகளது உலக அமைப்பின் உருவாக்கத்துக்கு அடுத்தபடி வரலாற்று முக்கியத்துவத்தில் இரண்டாவதான நிகழ்ச்சி என்று கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் மதிப்பிட்டன.

**நவீன காலனியாட்சி முறையின் அபாயம்**

பெரும்பாலான காலனி நாடுகளும் சார்பு நாடுகளும் அரசியல் சுதந்திரம் பெற்று விட்ட போதிலும், விடுதலை அடைந்த மக்கள் இனங்கள் தாங்கள்

அபாயமற்ற நிலையில் இருப்பதாக் உணர முடியவில்லை. ஏகாதி பத்தியவாதிகள் காலனியாட்சி முறையை மீண்டும் உயிர்ப் பிக்க முயன்று வருகிறார்கள். இறைமை பெற்று விட்ட இளம் அரசுகளைச் சுரண்டுவதைத் தொடர்வது மட்டும் இன்றித் தீவிரப்படுத்தவும் அவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். ஏகாதிபத்தியம் தேசிய விடுதலை இயக்கத்தின் முதல் எதிரி யாக இருந்து வருகிறது. எனவேதான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தங்கள் உண்மை விடுதலைக்காகவும் சுதந்திரத்திற் காகவும் போராட உலகின் விடுதலைப் பற்றுள்ள மக்கள் இனங் கள் முழு உறுதி பூண்டிருக்கிறார்கள். காலனியாதிக்க ஒடுக்கு முறையின் புதிய வடிவங்களை எதிர்த்து, நவீன காலனியாட்சி முறையை எதிர்த்துப் போராடுவது ஆப்பிரிக்க, ஆசிய, லத் தீன் அமெரிக்க மக்களின் முக்கியப் பணி ஆகும்.

நவீன காலனியாட்சி முறை என்பது, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் மீது தங்கள் ஆதிக்கத்தை நிலையாக வைத் திருப்பதையும் அவற்றை அரசியல் நோக்கில் அதிகத்திலும் அதிகமாகக் கண்காணிப்பதையும் பொருளாதாரத் துறை யில் அதிகத்திலும் அதிகமாகச் சுரண்டுவதையும் நோக்க மாகக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகள் எடுத்துவரும் பொரு ளாதார, படைத்துறை உள்பட அரசியல், கொள்கைவாத நட வடிக்கைகளின் தொகுப்பு ஆகும். காலனியாட்சி நுகத்திலி ருந்து விடுபட்டுவிட்டது, அல்லது தங்கள் விடுதலைக்காகப் போராடி வருகிற மக்கள் இனங்களுக்கு எதிராக ஏகாதி பத்தியவாதிகளின் பொருளாதார, படைத்துறை அரசியல், கொள்கைவாத ஆதிக்க விரிவாக்கமே நவீன காலனியாட்சி முறையாக விளங்குகிறது.

ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் லத்தீன் அமெரிக் காவையும் சேர்ந்த பெரும்பாலான நாடுகள் அரசியல் சுதந் திரம் பெற்று விட்ட போதிலும் அவற்றில் பல ஏகாதிபத்திய வல்லரசுகளைப் பொருளாதாரத் துறையில் இன்னமும் சார்ந் திருக்கின்றன. இந்த நாடுகளின் தொழில் நிலையங்களில் கணிசமான பகுதியும் இயற்கை வளங்களின் மிகப் பெரும் பாகமும் அயல்நாட்டு ஏகபோக நிறுவனங்களின் கைகளில் குவிந்திருக்கின்றன. இந்தக் காரணத்தால், பொருளாதாரத் துறையில் தங்களைச் சார்ந்த நாடுகளைச் சுரண்டுவதன் மூலம் பேரளவான லாபங்களை முன் போலவே பெறுவது இந்த நிறு

வனங்களுக்கு முடிகிறது. இந்த லாபங்கள் நூறு கோடிக் கணக்கான டாலர்களில் மதிப்பிடப்படுகின்றன.

வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு ஏகாதிபத்தியவாதிகள் வழங்கும் பொருளாதார ''உதவி''யிலும் நவீன காலனியாட்சி முறை வெளிப்படுகிறது. இந்த ''உதவி'' தன்னலம் அற்றது அல்லவே அல்ல. முற்றிலும் திட்டவட்டமான நோக்கத்திற்காக அது வழங்கப்படுகிறது. உதவி பெறும் நாடுகளில் தங்கள் பொருளாதார நிலைகளைப் பாதுகாத்து வலுப்படுத்திக் கொள்ளவும் இந்நாடுகளின் பொருளாதார, அரசியல் வளர்ச்சியைத் தங்கள் சொந்த நலங்களுக்கு அடிப்படுத்தவும் வகை செய்யும் பொருளாதார ஒப்பந்தங்களை இவற்றின் மீது சுமத்துவதே இந்த நோக்கம். வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் தேசியத் தன்மதிப்பைக் குலைக்கும் படியான நிபந்தனைகளின் பேரில் இந்த ''உதவி'' வழக்கமாக அளிக்கப்படுகிறது. உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை மீது பாதிப்பு நிகழ்த்தும் கருவியாக அது பயன்படுகிறது. உதவி பெறும் நாடுகளில் பெருத்த எண்ணிக்கையில் பொருளாதார, நிதித் துறை ''ஆலோசகர்கள்'' வைத்துக் கொள்ளப்படுவதற்கு ''உதவி'' பற்றிய ஒப்பந்தங்களில் அடிக்கடி வகை செய்யப்படுகிறது. இவர்கள் ஏகாதிபத்தியத்தின் நவீன காலனியாட்சிக் கொள்கையைப் பரப்புபவர்களாக விளங்குகிறார்கள்.

விடுதலை பெற்று விட்ட மக்கள் இனங்களுக்கு எதிரான போராட்டத்தில் ஏகாதிபத்தியவாதிகள் வளர்ச்சி அடைந்து வரும் அரசுகளின் உள் விவகாரங்களில் நேர்முகப் படைத் துறைத் தலையீடு செய்வதற்குக் கூடத் தயங்குவதில்லை.

முற்போக்கு, சோஷலிசம், சமாதானம் ஆகியவற்றின் சக்திகளுக்கு எதிராகக் கொள்கைவாத ஆக்கிரமிப்பு நவீன காலனியாட்சிவாதிகளின் நடவடிக்கைத் தொகுப்பில் கணிசமாக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளைச் சுரண்டுவதைத் தொடரவும் தீவிரப்படுத்தவும் முயன்று வரும் ஏகாதிபத்தியவாதிகளின் தொண்டில் ஈடுபடுத்தப்படுகிறது பிற்போக்கு முதலாளித்துவக் கொள்கைவாதம்.

மக்கள் இனங்களது ஆன்மிகத் தன்னுணர்வின் வளர்ச்சியைத் தடைப்படுத்தவும், அவற்றின் உணர்வில் முன்னணிக்

கருத்துக்கள் புகுவதற்கு இடையூறு செய்யவும், இவ்வாறு தேசிய விடுதலை இயக்கத்தைக் கொள்கைவாத ஆயுதம் அற்றது ஆக்கவும் முதலாளி வர்க்கக் கொள்கைவாதிகள் எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள். காலனியாட்சிச் சூறையாடலையும் வன்முறையையும் பற்றிய வெட்கக் கேடான வரலாற்றைக் கண்கவர் வண்ணங்களில் தீட்டவும், இளம் தேசிய அரசுகளுடன் தங்கள் உறவுகளின் சுரண்டல் தன்மையை மூடி மறைக்கவும், காலனியாட்சி அடிமைத்தனத்திலிருந்து என்றென்றைக்கும் விடுதலை பெறும் பொருட்டு இந்த நாடுகளின் மக்கள் செய்யும் முயற்சிகளுக்கு இடையூறு செய்யவும் அவர்கள் முயல்கிறார்கள். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் தங்கள் விதியைச் சுதந்திரமாகத் தாமே தீர்த்துக் கொள்ளத் திறன் அற்றவர்கள் என்றும் அவர்களை நாகரிகம் உள்ளவர்கள் ஆக்குவது ஏகாதிபத்தியத்தின் பணி என்றும் முன்னாள் காலனிகளுக்கும் அவற்றின் மீது ஆணை செலுத்திவந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கும் பொருளாதார, அரசியல் துறைகளில் ஒற்றுமை இருப்பதாகவும் அவர்கள் மறுபடி மறுபடி பல்லவி பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் ஒற்றுமையைக் குலைத்து அதன் மூலம் தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகள் பிற்போக்கின் சோதித்து அறியப்பட்ட ஆயுதமான **தேசியவாதத்தைப்** பயன்படுத்துகிறார்கள். முதலாளித்துவ தேசியவாதத்தை எதிர்த்துச் சமரசம் அற்ற போராட்டம் நடத்திவரும் மார்க்சிய-லெனினியச் சித்தாந்தகர்த்தர்கள் ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்களின் தேசியவாதத்தை (பெருவல்லரசு நாட்டுவெறியும் இனவெறியும்) ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுடைய தேசியவாதத்திலிருந்து வேறுபடுத்துகிறார்கள். ஒரு தேசிய இனத்தின் மேல் மற்றொன்றின் ஆதிக்கத்தை நியாயப்படுத்தும் பெருவல்லரசு நாட்டுவெறியும் இனவெறியும் சந்தேகம் இன்றிப் பிற்போக்கானது, விஞ்ஞானக் கம்யூனிசத்தால் அறவே நிராகரிக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தேசியவாதமோ ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சுதந்திரத்திற்காகப் போராடும் போக்கை உள்ளடக்கி இருக்கிறது. இது முற்போக்கானது. எடுத்துக்காட்டாக, அனேகத் தற்கால

ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் தேசியவாதம் இந்த மாதிரியானது. இதன் முற்போக்கான தன்மை ஏகாதிபத்தியத்துக்கும் காலனியாட்சி முறைக்கும் நிலப்பிரபுத்துவப் பிற்போக்குக்கும் பின்தங்கிய நிலைக்கும் எதிரான போராட்டத்தில் வெளிப்படுகிறது. இப்போராட்டத்தின் போது மக்களுடைய உணர்வு, முதன்மையாகக் கோடானுகோடி விவசாயி வெகுஜனங்களின் உணர்வு விழிப்படைகிறது.

ஆனால் தேசியவாதத்தின் ஜனநாயகத் தன்மை சீர்கெட்டுப் பெருவல்லரசு நாட்டுவெறியாகவும் இனவெறியாகவும் மாறிவிடும் அபாயம் அதில் எப்போதும் மறைந்திருக்கிறது. ஆகையினால்தான், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசியவாதத்தினது விடுதலை அளிக்கும் போக்கை ஆதரிக்கும் அதே சமயத்தில், எல்லா மானிட இனங்களையும் தேசிய இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளுடைய சர்வதேச ஒருமைப்பாட்டையும் நட்பையும் உறுதிப்படுத்துவதான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஒத்திசைந்த தரப்பாளர்களாகவும் விளங்கி வருகிறார்கள் கம்யூனிஸ்டுகள்.

## 2. தேசிய விடுதலைப் புரட்சியின் தன்மையும் இயக்கு சக்திகளும்

தேசிய விடுதலைப் புரட்சி தேசிய விடுதலைப் போராட்டத்தின் உச்சக் கட்டம் ஆகும்.

தேசிய விடுதலைப் புரட்சி உட்பட எந்தப் புரட்சியினதும் மையப் பிரச்சினையாக இருப்பது அரசு அதிகாரம் பற்றிய பிரச்சினை. அன்னிய ஏகபோக நிறுவனங்கள் அல்லது அவற்றின் கையாட்களிடமிருந்து முன்பு ஒடுக்கப்பட்டிருந்த மக்களின் தேசபக்தி உள்ள தேசியச் சக்திகளுக்கு அரசு அதிகாரம் மாறுவது தேசிய விடுதலைப் புரட்சியின் முக்கிய அடையாளம் ஆகும்.

மற்ற எந்தப் புரட்சியும் போலவே தேசிய விடுதலைப் புரட்சி குறித்த சமுதாய, பொருளாதார அடிப்படையில் தோன்றி வளர்ச்சி அடைகிறது. அது தனி வகைப் பணிகளை நிறைவேற்றுகிறது. குறித்த வகையான இயக்கு சக்திகள், அதாவது அதில் செயல்முறைப் பங்காற்றும் வர்க்கங்களும் சமுதாய வகுப்புக்களும் அதற்கு இயல்பானவை.

## தேசிய விடுதலைப் புரட்சியின் தன்மை

காலனி நாடுகளின் பொருளாதாரத்திலும் அரசியல் வாழ்விலும் பல பத்தாண்டுகளாகத் தனியாணை செலுத்தி வந்தது அன்னிய ஏகாதிபத்தியம். அரசியல் தற்சார்பும் பொருளாதாரச் சுதந்திரமும் எந்த விதத்திலும் வெளிப்படுவதை அது தடைசெய்து நசுக்கி வந்தது. அன்னிய ஏகபோக நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் முட்டுக்கட்டை போட்டு, அதற்கு ஒருச்சாய்ந்த விகாரமான தன்மையை அளித்து, இந்த நாடுகளைத் தங்கள் விவசாய, மூலப் பொருள் துணை நிலங்களாக மாற்றி விட்டன.

காலனிகளும் சார்பு நாடுகளும் ஏகாதிபத்தியத்தின் மிக அணித்தான போர்த்தந்திரச் சேமக் களங்களாகப் பணி ஆற்றின. அதன் ஆக்கிரமிப்பு முயற்சிகளில் படைத் தாக்கு தளங்களாகவும் சில சந்தர்ப்பங்களில் அவை பங்காற்றின. மலிவான மூலப் பொருள்களும் இலவச உழைப்பு ஆற்றலும் தட்டின்றிக் கிடைக்கும் ஊற்றுகவும், அளவு கடந்து லாபகரமான, விரிவான விற்பனைச் சந்தையாகவும் அவை விளங்கி வந்தன.

காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் அந்நாடுகளின் மக்களை நேர்முகமாக ஒடுக்கியும் சுரண்டியும் அவர்களுடைய அரசியல், பொருளாதார வாழ்வில் சுதந்திரத்தின் எல்லா வித வெளிப்பாடுகளையும் நசுக்கியும் வரும் சக்தியாக ஏகாதிபத்தியம் செயல்படுகிறது. இதோடு கூடவே, உள் நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கு, முதன்மையாக நிலப்பிரபுத்துவ, நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய உறவுகளைக் கடைப்பிடிப்பவர்களான பெரு நிலச் சொந்தக்காரர்களுக்கும் இனக் குழுத் தலைவர்களுக்கும் முக்கிய ஆதாரத் தூணுகவும் அது விளங்குகிறது.

இதனுல்தான் ஏகாதிபத்தியம், அன்னிய ஏகபோக நிறுவனங்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் பிரதான எதிரியாகும். இதனுல்தான் தேசிய விடுதலைப் புரட்சிகள் துலக்கமாக வெளிப்படும் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டிருக்கின்றன.

அன்னிய ஏகாதிபத்தியத்தின் அரசியல், பொருளாதார ஆதிக்கத்தை ஒழிப்பது, அரசியல் சுதந்திரமும் பொருளாதாரத் தற்சார்பும் பெறுவது, இவற்றின் மூலம் இறைமை

பெற்ற தேசிய அரசை நிறுவுவது—இதுவே தேசிய விடுதலைப் புரட்சிகளின் முதன்மைப் பணி.

நிலப்பிரபுத்துவத்தையும் நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய இனக் குழு உறவுகளையும் கடைப்பிடித்தவர்கள் காலனிகளுக்கும் சார்பு நாடுகளுக்கும் உள்ளே ஏகாதிபத்தியத்தின் பிரதான சமுதாய ஆதாரமாக விளங்கி வந்தார்கள். எனவே நிலப்பிரபுத்துவம், நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய இனக் குழு உறவுகள் ஆகியவற்றின் மீத மிச்சங்களை ஒழிக்காமல் ஏகபோக நிறுவனங்களின் ஒடுக்கு முறையை ஒழிப்பது நடவாது. ஆகையினால் தான் தேசிய விடுதலைப் புரட்சிகள் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மையும் கொண்டிருக்கின்றன. பொருளாதாரம், அரசியல் வாழ்வு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகளது மீத மிச்சங்களை ஒழிப்பது தேசிய விடுதலைப் புரட்சிகளின் இன்னொரு முக்கியப் பணி ஆகும்.

வரலாற்று நிகழ்முறையின் மெய்யான படைப்பாளர்களாக விளங்கும் விரிவான வெகுஜனங்களை ஈடுபடுத்தாமல் இவ்வளவு சிக்கலான பெரிய பணிகளை நிறைவேற்றுவது நடவாது. ஆகையால், உள் நாட்டு அரசியல் வாழ்வில் காலனியாதிக்கத்தின் மீத மிச்சங்களை அகற்றுவது, சமூக வாழ்வை ஜனநாயகப்படுத்துவது தேசிய விடுதலைப் புரட்சியின் மூன்ருவது முக்கியப் பணி ஆகும். இவ்வாறு இந்தப் புரட்சி ஜனநாயகத் தன்மை பெறும்.

ஆகவே, தேசிய விடுதலைப் புரட்சி தன்னுடைய தன்மையில் ஏகாதிபத்திய எதிர்ப்பும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும் ஜனநாயகப் பாங்கும் கொண்டிருக்கிறது. தேசிய விடுதலைப் புரட்சியின் பொது ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மைக்குக் காரணம் அது மேற்கொள்ளும் பணிகள் மட்டும் அல்ல, இந்தப் பணிகளை நிறைவேற்றப் பொறுப்பேற்கும் சமுதாயச் சக்திகளும் ஆகும்.

### தேசிய விடுதலைப் புரட்சியின் இயக்கு சக்திகள்

தேசிய விடுதலைப் புரட்சியின் இயக்கு சக்திகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னல் ஒரு விஷயத்தைக் குறிப்பிடுவது அவசியம்: காலனிகளும் சார்பு நாடுகளும் பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் வெவ்வேறு தரங்களில் இருந்தன. அவற்றில்

சிலவற்றை விவசாய இயந்திரத் தொழில் துறை நாடுகளின் வரிசையில் சேர்க்க முடிந்தது. வேறு சில சிறிதேனும் வளர்ச்சி அடைந்த இயந்திரத் தொழில் துறை அற்ற பின் தங்கிய விவசாய நாடுகளாக இருந்தன. மூன்றுமவையோ (பெரும்பாலானவை இவையே) முற்றிலும் பின்தங்கிய விவசாய நாடுகள். நிலப்பிரபுத்துவ, நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய (பண்டைக்கால) உறவுகளின் மீத மிச்சங்கள் இவற்றில் வலிவாக நிலைத்திருந்தன. இந்த வேறுபாட்டுக்கு இணங்க இந்த நாடுகளின் மக்களுடைய சமுதாய அமைவு பலவகையானது.

இருந்த போதிலும், இந்த எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கமும் விவசாயிகள் சமூகமும் தேசிய முதலாளி வர்க்கமும் (நகரச் சிறு முதலாளிகள், ஏகாதிபத்திய ஆதரவாளியான தரகு வர்த்தக முதலாளிகள்), தேசிய அறிவுஜீவிகளும் (படைச் சார்பு இல்லாதவர்களும் படைத் துறையினரும், மாணவர்களும்) நிலப்பிரபுக்களும் வெவ்வேறு எண்ணிக்கைகளிலும் தரங்களிலும் நிலவுகின்றனர்கள். ஏகாதிபத்திய ஆதரவாளியான முதலாளி வர்க்கமும் நிலப்பிரபுத்துவ உயர்படியினரும் நீங்கலாக இந்த எல்லா வர்க்கங்களும் சமூகச் சக்திகளும் அன்னிய ஏகபோக நிறுவனங்களின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கின்றன, எனவே தேசிய விடுதலைப் புரட்சியில் ஏதேனும் ஓர் அளவில் பங்காற்றுகின்றன. இந்த வர்க்கங்களிலும் சமூகக் குழுக்களிலும் ஒவ்வொன்றும் புரட்சியின் பணிகள் பற்றிய புரிவில் வேறுபடுகின்றது, தேசியப் பொதுக் குறிக்கோள்கள் தவிர தனது சொந்தச் சமுதாயக் குறிக்கோள்களையும் அதன் மூலம் அடைய முயல்கிறது.

புரட்சியின் பிரதான இயக்கு சக்திகளில் ஒன்று தொழிலாளி வர்க்கம். இதன் எண்ணிக்கை இடையறாது அதிகரித்துக் கொண்டு போகிறது. ஆனால் ஒரு விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கையும் அதன் நிறுவன ஒருமைப்பாடும் உணர்வின் தரமும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. ஆகையால் தேசிய விடுதலைப் புரட்சிகளில் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரமும் முக்கியத்துவமும் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியானவை அல்ல. சில நாடுகளில் பாட்டாளிகள் வர்க்கமாக உருவாகி, நிறுவன வடிவிலும் கொள்கைவாத நோக்கிலும் உறுதியாக ஒன்று

பட்டு இருப்பதோடு நில்லாமல், மார்க்சியக் கட்சிகளினுல் வழிநடத்தப்பட்டு, தேசிய விடுதலைப் புரட்சியில் தலைமைப் பாத்திரத்தைப் பெற்று, அது சோஷலிசப் புரட்சியாக வளர வகை செய்திருக்கிருர்கள் (ஆசியாவின் சோஷலிச நாடுகள்). வேறு சில நாடுகளில் பாட்டாளி வர்க்கம் நாட்டின் முற்போக்குச் சக்திகள் அனைத்தையும், முதன்மையாக விவசாயிகள் சமூகத்தை ஒன்றுபடுத்தும் புரட்சியின் முதன்மையான இயக்கு சக்தியாகச் செயலாற்றுகிறது. பின்னும் சில நாடுகளில் பாட்டாளி வர்க்கம் உருவாகி விட்ட போதிலும், சமூகத்தில் தலைமைப் பாத்திரத்தை இன்னும் பெறவில்லை, நாட்டின் முற்போக்குச் சக்திகளைத் தன்னைச் சுற்றிலும் இன்னும் ஒன்று திரட்டவில்லை.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது தொழிலாளி வர்க்கம் தன் அணிகளை வலுப்படுத்துகிறது, ஒழுங்கமைக்கிறது, அரசியல் அனுபவம் பெறுகிறது. அதன் வர்க்க உணர்வு வளர்கிறது, பாட்டாளி வர்க்கம் அல்லாத உழைப்பாளி வகுப்பினருடன் அதன் கூட்டு உருவாகி வலுவடைகிறது. தொழிற்சங்க நிறுவனங்கள், இளைஞர் நிறுவனங்கள் முதலிய அதன் நிறுவனங்கள் அமைந்து உறுதிப்படுகின்றன.

சுதந்திரப் போராட்ட ஆண்டுகளில் இந்தியாவின் தொழிலாளி வர்க்கம் காலனியாட்சி ஒடுக்குமுறைக்கு எதிராகத் தன்னலம் இன்றிப் போராடி, நாட்டின் விடுதலையில் கணிசமான பங்களிப்பு நிகழ்த்தியது. ஆயினும் அந்தக் காலத்துக்குப் பின் பாட்டாளி வர்க்கத்தின் பொருள் நிலைமை குறைவாகவே மாறி இருக்கிறது. நாட்டு மக்கள் தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் தங்கள் உழைப்பாற்றலை விற்றுப் பிழைக்கிருர்கள். ஆனுல் கூலி உழைப்பாளிகளுடைய பெருஞ்சேனையில் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அற்பச் சிறுபான்மையாகவே இருந்து வருகிருர்கள். சிறு தொழில் துறையுடன் தொடர்புள்ள இடைநிலை வர்க்கங்களையும் வகுப்புக்களையும் சேர்ந்த பாட்டாளி நபர்கள் நாட்டின் வாழ்க்கையில் மிகப் பெரிய பங்கு ஆற்றுகின்றனர். இந்தியப் பொருளாதாரத்தின் சிறு அளவுப் பண்ட உற்பத்தித் துறையிலும் அரை முதலாளித்துவத் துறையிலும் கூலி உழைப்பாளிகளில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியினர் ஈடுபட்டுள்ளனர். ஒழுங்கமைந்த தொழிற்சங்க இயக்கம் இந்தியாவில்

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக நிலவி வருகிறது, ஆனல் மொத்தத் தொழிலாளர்களின் சுமார் பத்தில் ஒரு பங்கினர் மட்டுமே தொழிற்சங்கங்களில் சேர்ந்திருக்கிருர்கள். தொழிலாளர்களின் கணிசமான பகுதியினர் கம்மியர்களதும் விவசாயிகளதும் விரிவான வகுப்புக்களுடன் சேர்ந்து நிறுவன அமைப்பின் உற்பத்திக் கூட்டுறவு வடிவங்களில் ஆர்வம் காட்டுகிருர்கள்.

சுதந்திரம் பெற்றதற்குப் பிந்திய ஆண்டுகளில் இந்தியத் தொழிலாளர் இயக்கம் ஜனநாயகத்திற்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் வீரப் போராட்டத்திற்கான சிறந்த உதாரணங்களேக் காட்டி இருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் பல அணிகள் பாட்டாளிகளின் போராட்டத்தின் வெவ்வேறு வடிவங்களில் தேர்ச்சி பெற்றன. அரசியல் நோக்கங்களுக்கான பொது வேலேநிறுத்தம் போன்ற சிக்கலான வடிவங்கள் இவற்றில் அடங்கும். ஆனுலும் கூலி உழைப்பாளிகளில் பெரும்பாலரின் உணர்வுத் தரம் இன்னமும் உயர்ந்ததாய் இல்லே. சாதி, மதக் காழ்ப்புக்கள் பாட்டாளி வர்க்கத்தின் பெரிய குழுக்களது சமுதாய மனப்பான்மை மீதும் நடத்தை மீதும் இன்னமும் பாதிப்பு நிகழ்த்துகின்றன.

இந்தியாவின் கூலி உழைப்பாளிகளுடைய வர்க்கம் வளர்ந்து விரிவடைந்து பலப்பட்டு,அரசியல்அனுபவம் திரட்டி, தொடர்ந்து போராடி வருகிறது. உள்நாட்டு, அயல்நாட்டு ஏகபோக நிறுவனங்கள் தேசிய உடைமை ஆக்கப்பட வேண்டும், காலனியாட்சி முறையின் மீத மிச்சங்கள் ஒழிக்கப்பட வேண்டும், அரசினர் துறை விரிவாக்கி வலுப்படுத்தப்பட வேண்டும், ஜனநாயகம் வளர வேண்டும் என்று அது கோரிக்கைகள் விடுத்து வருகிறது. உள்நாட்டு, வெளிநாட்டுப் பிற்போக்கை எதிர்த்தும், சமாதானத்துக்காகவும் மற்ற நாடுகளோடு ஒத்துழைப்புக்காகவும் அது மேலும் மேலும் விரிவாகச் செயலாற்றி வருகிறது.

தேசிய விடுதலேப் புரட்சிகளின் யாவற்றிலும் வெகுஜனத் தன்மை கொண்ட இயக்கு சக்தியாகவும் சில நாடுகளில் பிரதான இயக்கு சக்தியாகவும் விளங்குகிறது

**விவசாயிகள் சமூகம்.**

காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் விவசாயிகள் சமூகம் மிக மிகத் துன்ப நிலேயில் இருந்து வந்தது. நிலம்

அற்றவர்களான விவசாயிகள் அளவிட முடியாத நிலங்களின் உடைமையாளர்களாய் இருந்த பணக்கார நிலப்பிரபுக் களிடம் தளேபூட்டும் நிபந்தனேகளின் பேரில் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து விளேச்சலின் நாற்பது முதல் எண்பது சதவிகிதம் வரை குத்தகையாகச் செலுத்த வேண்டி வந்தது.

ஐம்பதுக்களில் இந்திய மாநிலங்களில் கொண்டுவரப் பட்ட நிலச் சீர்திருத்தங்கள் நிலத் தரகர்களே ஒழிப்பதை யும் குத்தகைக்காரர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதையும் குத்தகைக்காரர்களுக்கு நிலத்தின் மேல் உடைமை உரிமை வழங்குவதையும் நிலச் சொத்துக்கு உச்ச வரம்புகள் விதிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆனுலும் கிடைத்த நிலத்துக்காகப் பெரிய ஈட்டுத் தொகை களேச் செலுத்துவதற்குப் பெரும்பாலான இந்திய விவசாயி களிடம் பணம் இல்லே. ஒதுக்கீட்டு நிலத்தின் அளவு மிகப் பெரிதாய் இருந்தது. பணம் வைத்திருந்தவர்கள், அதாவது பணக்கார விவசாயிகள் மட்டுமே நிலத்தை விலேக்கு வாங்க வல்லவர்களாக இருந்தார்கள். அவர்கள் முன்னிலும் அதிக வலு அடைந்தார்கள். நடுத்தர விவசாயிகளில் ஒரு பகுதி யினரும் இவ்வாறு செய்ய முடிந்ததால் தங்கள் நிலேயைப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

நிலப்பிரபுத்துவ ஜமீன்தாரி முறை அதிகார பூர்வமாக ஒழிக்கப்பட்டு விட்டாலும் நடப்பில் விவசாயி விடுதலே அடையவில்லே. நிலச் சீர்திருத்தங்களின் விளேவாக விவசாயி களின் அடுக்கமைவு நிகழ்ந்தது. நாட்டுப்புறத்தில் பணக்கார விவசாயிகளின் வகுப்பு உருவாயிற்று. விவசாயிகளில் ஒரு பகுதியினர் நிலத்தை அறவே இழந்து விட்டார்கள். விவசாயத் தொழிலாளர்களின் அணி கணிசமாக வளர்ந்தது. சாதி முறை நாட்டில் சட்டப்படி அகற்றப்பட்டு விட்டாலும் நடப் பில் அது தொடர்ந்து நிலவி வருகிறது. தாழ்ந்த சாதிகளேச் சேர்ந்தவர்கள் விவசாயத் தொழிலாளர்களின் படையில் பெரும்பான்மையினராக விளங்குகிருர்கள். இவர்களுடைய வாழ்க்கை சிறப்பாகத் துன்பம் நிறைந்தது. விவசாயத் தொழி லாளர்களின் ஊதிய உயர்வையும் அவர்களுடைய சமுதாயத் தேவைகள், கோரிக்கைகள் ஆகியவற்றின் பூர்த்தியையும் குறித்த பிரச்சினேகள் தீர்க்கப்படவில்லே. தங்கள் ஊதிய உயர்வுக்காக அவர்கள் நடத்தும் போராட்டமும் சாதி

அடக்குமுறைகளுக்கு அவர்களுடைய எதிர்ப்பும் வளர்ந்து வருவது இந்தக் காரணங்களால் புரியக் கூடியதே.

மொத்தத்தில் நில உறவுகளின் சீர்திருத்தம் இந்தியாவில் இன்னும் முழுதாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. இந்தியாவின் திட்டக் கமிஷனுடைய புள்ளி விவரங்களின் படி, நிலம் இல்லாத விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய உபரி நிலம், நிலவும் சட்டப்படி நாட்டில் இரண்டு கோடி ஏக்கர்கள் ஆகும். ஆனால் இது வரை பகிர்ந்து அளிக்கப்பட்ட நிலத்தின் அளவு சுமார் 15 லட்சம் ஏக்கர்கள் தான்.

உற்பத்திச் சக்திகள் மேலும் விரைவாக வளர்வதற்கும் இந்திய நாட்டுப்புறத்தில் உழைப்பாளிகளின் விரிவான வட்டாரங்களுடைய பின்தங்கிய நிலையையும் ஏழ்மையையும் போக்குவதற்கும் முக்கியத் தடையாக இருப்பது இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாதது ஆகும். நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் உயர் படியினர் நீக்கப்பட்டு விட்டது நிலப்பிரபுவின் நிலச் சொத்துரிமையை அகற்ற வகை செய்து விடவில்லை. நிலம் பகுதியளவில் மறு பங்கீடு செய்யப்பட்டதால் பணக்கார விவசாயிகள் சமூகம் அதிகரிக்கவும் இந்திய நாட்டுப்புறத்தில் நிர்வாகத்தினதும் சுரண்டலினதும் முதலாளித்துவ வடிவங்கள் வளர்ந்து வலுப்படவுமே வாய்ப்பு ஏற்பட்டது.

ஆயினும், நிலவும் சட்டங்களதும் நாட்டின் அரசியல் சட்டத்தினுடையவும் வரம்புகளுக்குள் போதிய அளவு ஆழ்ந்த சமுதாய பொருளாதார மாறுதல்கள் நிகழ்த்தப்பட முடியும் என்பதைக் காட்டும் உதாரணங்கள் இந்தியாவில் உள்ளன. கேரள மாநிலத்தில் ஏற்கப்பட்டுள்ள சட்டங்களின் படி, விவசாயிகளுக்கு அரசாங்கத்தாலும் வங்கிகளாலும் கடன்கள் அளிக்கப்பட்டும், விதைகள் வடிவில் உதவி தரப்பட்டும் வருகிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவும் சமுதாயப் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வகை செய்யும் சட்டங்கள் இந்த மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டுப் பிறழ்வின்றிச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனேகமாக எல்லாக் கிராமங்களிலும் குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது, மின் வசதிகள் நிறைவுறுத்தப்பட்டிருக்கின்றன, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மருத்துவ நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அண்மை ஆண்டு

களில் அறுபதினுயிரம் நாட்டுப்புற ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. பேரளவான இந்த வேலை முழுதும் இடதுசாரிக் கட்சிகளும் ஜனநாயகக் கட்சிகளும் சேர்ந்த ஒன்றித்த கூட்டணியின் சில அரசாங்கங்களால் கடந்த ஆண்டுகளில் செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கங்களின் தலைவர்களாக இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகள் இரண்டு தடவைகள் இருந்தார்கள்.

அண்மை ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரத்தில் வர வர அதிக முக்கியப் பங்கு ஆற்றி வருவது, புதுமையானதும் விரைந்த முற்போக்குள்ளதும் பெரிதும் கருத்தை ஈர்ப்பதுமான ஒரு நிகழ்ச்சி. இது ''பசுமைப் புரட்சி'' என்று பெயர் பெற்றிருக்கிறது. விஷயம் என்ன என்ருல், விவசாயத் துறையில் முதலாளித்துவம் கணிசமான பண்பு மாற்றம் அடைந்து வருகிறது. வளர்ச்சியின் முதிர்ந்த இயந்திரத் தொழில் கட்டத்திற்கு மாறுவதற்காக நில உடைமை மூலதனம் செய்துவரும் துடியான முயற்சியே ''பசுமைப் புரட்சி'' என்பது. இந்த நிகழ்முறையின் பாதிப்பு விவசாயத்துடன் நின்றுவிடவில்லை. பொருளாதார, சமுதாய வாழ்வின் மிக முக்கியத் துறைகளில் அது உணரப்படுகிறது.

''பசுமைப் புரட்சி'' வேலை வாய்ப்பு மீது பெருத்த பாதிப்பு நிகழ்த்தி வருகிறது. வேலை வாய்ப்பு தற்போதைய இந்தியாவின் மிக ஆழ்ந்த உடனடி முக்கியத்துவம் உள்ள பிரச்சினைகளில் ஒன்ருகும். அனேகக் காரணங்களது செயல்பாட்டின் விளைவாகக் கடந்த இரண்டு பத்தாண்டுகளில் வேலையின்மை இடைவிடாமல் அதிகரித்து வந்தது, நாட்டுப்புற மக்கள் தொகை மிகுதி மேலும் மேலும் வளர்ந்து கொண்டு போயிற்று. தொடங்கியுள்ள விவசாயத் தொழில்நுட்பப் புரட்சியின் முதல் விளைவுகள் விவசாய விளை பொருள்களின் உற்பத்தியைக் கணிசமாக உயர்த்தின. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இந்த நிகழ்முறையின் முதல் கட்டம் இன்னமும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. குறுகிய அளவில் விவசாய இயந்திரங்கள் கையாளப்படுவது இதன் சிறப்பு இயல்பு ஆகும். இந்தியாவின் சுமார் ஐந்தில் நான்கு பங்கு மக்கள் தற்போதைய நாட்டுப்புறத்தில் குவிந்திருக்கிருர்கள், அங்கு நிலவும் சமுதாய முரண்பாடுகளை ஆழமாக்

கும் முக்கிய ஊக்கியாகப் ''பசுமை புரட்சி'' அணித்தான வருங்காலத்தில் செயல்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

முன்னாள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் நிலப் பிரச்சினை எல்லாவற்றிலும் கடுமையான சமுதாயப் பிரச்சினையாக விளங்குகிறது. நிலத்தின் மீது ஏகபோக நிறுவனங்களது ஸ்தல நிலப்பிரபுக்களதும் இனக்குழு மூப்பர்களதும் சொத்துரிமையை ஒழிப்பதிலும் இந்த நிலத்தில் பாடுபடவும் தன் உழைப்பின் பயன்களை அனுபவிக்கவும் வாய்ப்பு பெறுவதிலும் இவற்றில் விவசாயிகள் சமூகம் ஜீவாதார அக்கறை கொண்டிருக்கிறது. அன்னிய மூலதனத்தின் அரசியல், பொருளாதார ஆதிக்கத்துக்கும் நிலப்பிரபு வர்க்கத்தினதும் இனக் குழு மூப்பர்களுடையவும் ஆதிக்கத்துக்கும் முடிவு கட்டுவதிலும் ஆழ்ந்த நிலச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதிலும் அக்கறை கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புச் சக்தியாக விவசாயிகள் சமூகம் விளங்குவது இயல்பே.

விடுதலை அடைந்த நாடுகளில் முதலாளி வர்க்கத்தின் நிலைமை மிகுந்த முரண்பாடுகளைக் கொண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அக்கறை கொண்ட முதலாளி வர்க்கப் பிரிவு தேசிய விடுதலைப் புரட்சியில், சிறப்பாக அரசியல் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் செயல்முறைப் பங்கு ஆற்றுகிறது. அன்னிய ஏகபோகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் பொதுத் தேசிய நலன்களுக்குத் துரோகம் இழைக்கும் ஏகாதிபத்திய ஆதரவாளியும் தேசிய விரோதியுமான முதலாளி வர்க்கத்திலிருந்து இந்தப் பிரிவுக்கு உள்ள வேறுபாடு இதுவே.

இந்தியாவில் தொழிலாளி வர்க்கத்தின் பலவீனம் காரணமாகத் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமை தேசிய முதலாளி வர்க்கத்தினிடம் இருந்தது. அதன் கணிசமான பகுதிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு மனப்பான்மையால் நிறைந்திருந்தன. தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்களும் கொள்கைவாதிகளும் இந்த வட்டாரங்களிலிருந்து தோன்றினார்கள்.

தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராக விளங்கினார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. இயக்கத்தில் திரளான வெகுஜனங்களை ஈர்த்தது காந்தியின் முக்கியத் தொண்டாகவும் மக்களால் அவர் பெரிதும் போற்றப்பட்ட

தற்குக் காரணமாகவும் இருந்தது. மக்கள் அவரை ''மகாத்துமா'' என்ற பட்டப் பெயரால் அழைத்து வந்தார்கள். அவர் தோற்றுவித்த சமுதாய அரசியல், மததத்துவ போதனை காந்தியம் என்ற பெயரால் பிரசித்தமானது.

சிந்திக்கும் இந்தியர்களின் பல தலைமுறைகள் காந்தியின் தத்துவ, ஒழுக்க இயல், அரசியல் கருத்துக்களின் பாதிப்பில் உருவாயின. இவர்களில் ஒருவரான ஜவாகர்லால் நேரு இந்தியக் குடியரசின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை குறித்த முக்கியக் கோட்பாடுகளை வகுத்துச் செயல்படுத்திய வராக மதிக்கப்படுகிறார். இந்தக் கோட்பாடுகள் ''நேருவின் கொள்கைப் போக்கு'' என்று பெயர் பெற்றுள்ளன.

தேசிய முதலாளி வர்க்கத்தின் முரண்பாட்டையும் இரண்டகப் போக்கையும் கருத்தில் கொள்வது அவசியம். அன்னிய ஏகாதிபத்தியத்துடனும், ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும் உள்நாட்டுச் சக்திகளுடனும், முதன்மையாக நிலப் பிரபுத்துவ, இனக்குழு மூப்பர்களுடனும் போராடுவதில் அக்கறை கொண்ட தேசிய முதலாளி வர்க்கம் மக்களுடனும் உழைப்பாளி வெகுஜனங்களுடனும் சேர்ந்து நடை போடுகிறது, அவர்களைச் சார்ந்திருக்கிறது, தனது சொந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு அவர்களுடைய புரட்சி ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்கிறது. அதே சமயம், புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்திடமும் விவசாயிகள் சமூகத்திடமும் அது பயப்படுகிறது, ஏனென்றால், சுரண்டுவோருக்கு உரிய தனது நலன்களுக்கு ஆபத்தை அவற்றில் காண்கிறது, எனவே தனது நலன்களின் குறுகிய வரம்புகளுக்குள் புரட்சியைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கவும் அதன் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடவும் முதலாளித்துவப் பாதையில் அதைச் செலுத்தவும் அது முயல்கிறது.

இடைநிலை (சிறு முதலாளித்துவ) வட்டாரத்தினர் எனப்படுபவர்கள்—குடிசைத் தொழிலர்கள், கம்மியர்கள், சிறு, பெரும்பாலும் சில்லறை வியாபாரிகள் முதலியோர்—காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் மிகப் பெருத்த எண்ணிக்கையிலும் செல்வாக்குடனும் இருக்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சியின் பின்தங்கிய நிலையின் காரணமாக இடைநிலை வட்டாரத்தினர் பொருளாதாரத்தில் போதிய அளவு குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்றிருக்கிறார்

கள். ஏனெனில் மக்களுக்குத் தேவையான சாமான்களைத் தங்கள் சிறு தொழிலகங்களில் கணிசமான அளவில் உற்பத்தி செய்கிறார்கள். அன்றாட வாழ்க்கைப் பணிகள், சில்லறை வியாபாரம் முதலியவை அவர்களுடைய கைகளில் பெருமளவு குவிந்திருக்கின்றன. பொருளாதாரத்தில் ஆற்றும் பங்குக்கு ஏற்ப அரசியல் வாழ்க்கையிலும் அவர்களுடைய பாத்திரம் குறிப்பிடத் தக்கதாக இருக்கிறது. எனவே, இடைநிலை வட்டாரத்தினர் மேற்கொள்ளும் நிலைகளை, அவர்கள் முற்போக்குச் சக்திகளின் தரப்பில் இருக்கிறார்களா, அல்லது பிற்போக்குச் சக்திகளின் தரப்பிலா என்பதைத் தேசிய விடுதலைப் புரட்சியின் விதி ஓரளவு சார்ந்திருக்கிறது.

இந்தியாவில் நகரவாசிகளில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியினர் நடுத்தர வட்டாரத்தினர். கம்மியர்கள் நடுத்தர வட்டாரத்தினரின் ஆகப் பெரிய பிரிவினர். இவர்களில் பெரும்பாலரை அரைப் பாட்டாளிகளில் மட்டும் இன்றி, விவசாயத்தைச் சாராத தாழ்படிகளுக்கு உரிய உண்மைப் பாட்டாளி நபர்களிலும் குறித்த அர்த்தத்தில் சேர்க்கலாம்.

இன்னொரு கணிசமான பிரிவினர் கடைச் சொந்தக்காரர்களும் சிறு வியாபாரிகளும் தெரு வியாபாரிகளும் ஆவர்.

இந்தியாவில் கூலி உழைப்பாளிகளின் படையில் சிறப்பான இடம் பெற்றிருப்பவர்கள் அலுவலர்கள். பணித் துறை, வர்த்தகம், நிதித் துறை ஆகியவற்றிலும் அரசு இயந்திரத்திலும் (வர்த்தக அலுவலக, வங்கி ஊழியர்கள், பொறி இயல், தொழில்நுட்பப் பணியினர், உத்தியோகஸ்தர்கள், பள்ளி ஆசிரியர்கள், மருத்துவப் பணியினர் முதலியோர்) இவர்கள் யாவற்றிலும் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அலுவலர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை பாட்டாளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு அனேகமாகச் சமம். பெரும்பாலான அலுவலர்களுடைய எதார்த்த நிலைமைகள் பல அம்சங்களில் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலைமைகளைப் பெரிதும் ஒத்தவை. அவர்களுடைய பிழைப்புக்கான முக்கிய ஊற்று சம்பளம் தான். அதே சமயம் இந்திய நிலைமைகளில் அலுவலர்களின் தனிவகைச் சாதி அமைவு மட்டு மீறிக் கூர்மையாக உணரப் படுகிறது. அறிவுஜீவிகளில் அனேகமாகப் பாதிப் பெயர் உயர்ந்த அல்லது நடுத்தர சாதிகளைச் சேர்ந்தவர்கள். மற்ற

வர்க்கங்களுக்கும் உழைப்பாளிக் குழுக்களுக்கும் இடையே இந்தச் சாதிகள் இருபத்தைந்து சதவிகிதத்துக்கு மேல் இருப்பதில்லை.

இந்தியச் சமூகத்தில் நடுத்தர வகுப்பினர் தொழிலாளி வர்க்கத்தைக் காட்டிலும் அதிகமாக அரசியல் உணர்வு பெற்றிருக்கிறார்கள். தொழிலாளி வர்க்கம் தனது போராட்டத்தில் நடுத்தர வகுப்பினரை அடிக்கடி பின்பற்றுகிறது.

தேசிய ஜனநாயக அறிவுஜீவிகள் தேசிய விடுதலைப் புரட்சியில் கணிசமான, சில சந்தர்ப்பங்களில் தலைமைப் பாத்திரம் வகிக்கிறார்கள். விஞ்ஞான, பண்பாட்டு ஊழியர்கள், அதிகாரவர்க்கத்தின் ஒரு பகுதியினர், முற்போக்குள்ள படை அதிகாரிகள், கல்லூரி மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் முதலியவர்கள் இவர்கள். எந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கம் சுயேச்சையான சக்தியாக உருவாகாமலும் தேசிய முதலாளி வர்க்கம் பலவீனமாகவும் இருக்கின்றனவோ, அவற்றில் அறிவுஜீவிப் பிரதிநிதிகள் புரட்சிக்கும் அரசுக்கும் தலைமையை அடிக்கடி ஏற்கிறார்கள்.

தேசிய விடுதலைப் புரட்சியின் இயக்கு சக்திகள் பொதுப் படையாக இத்தகையவை ஆகும். வெவ்வேறு நாடுகளின் வரலாறுகள், சமுதாய பொருளாதார வளர்ச்சித் தரங்கள் ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகள் காரணமாக, புரட்சியில் இந்தச் சக்திகளின் ஒப்பு நிலையும் பாத்திரமும் வெவ்வேறானவை.

## 3. பொருளாதாரச் சுதந்திரம் பெறுவது புரட்சியின் முக்கியப் பணி

அரசியல் சுதந்திரம் பெறுவது, ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவது தேசிய விடுதலைப் புரட்சியின் முதலாவது, தொடக்கக் கட்டத்தின் உள்ளடக்கமாக விளங்குகிறது. வளர்ச்சி அடைந்து வரும் அனேக நாடுகளில் இந்தக் கட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்று விட்டது. அன்னிய ஏகாதிபத்திய முதலாளி வர்க்கம், உள்நாட்டு நிலப்பிரபுத்துவ அல்லது இனக்குழு மூப்பர்கள் ஆகியோரிடமிருந்து அரசு ஆட்சி அதிகாரம் நாட்டின் தேசபக்தச் சக்திகளுக்கு மாறுவது இந்தக் கட்டத்தில் நிறைவேறி விட்டது. ஆசியாவிலும்

ஆப்பிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் அரசியல் சுதந்திரம் பெறப்பட்டதும் இறைமையுள்ள தேசிய அரசுகள் உருவானதும் ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பு சிதறியதன் மிக முக்கிய அரசியல் விளைவு ஆகும்.

ஆனால் அரசியல் சுதந்திரம் பெறுவது தேசிய விடுதலைப் புரட்சியின் ஒரே பணி அல்ல. பெற்ற வெற்றிகளை நிலைப் படுத்துவதும் அன்னிய ஏகபோக நிறுவனங்களைச் சார்ந் திருப்பதற்கு ஒரேயடியாக முடிவு கட்டுவதும் அவசியம். பொருளாதாரச் சுதந்திரம் பெறுமல் இவ்வாறு செய்வது நடவாது. ஏகாதிபத்தியக் கொள்கைவாதிகள் வழக்கமாகத் "தேசிய விடுதலை பற்றிப் பேசுகிறுர்கள்... பொருளாதார விடுதலையை நிழலில் வைத்து விடுகிறுர்கள். உண்மையில் இந்தப் பின்னது தான் முதன்மையானது"* என்று எழுதினுர் வி. இ. லெனின்.

### புரட்சியின் வளர்ச்சியில் புதிய கட்டம்

காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் தங்கள் ஆதிக்கத்தை என்றைக்கும் நிலையாக வைத் திருக்கவும், தங்கள் பொருளாதார, அரசியல் அமைப்புடன் அவற்றை என்றென்றைக்கும் பிணிக்கவும் ஏகாதிபத்திய வாதிகள் முழுமூச்சாகப் பாடுபட்டார்கள். தேசியப் பொரு ளாதாரத்தை, சிறப்பாக இயந்திரத் தொழில் துறையை வளர்க்க ஒடுக்கப்பட்ட மக்கள் செய்த சிறு முயற்சிகளையும் கூட அவர்கள் நடக்காமல் தடுத்து வந்தார்கள்.

அன்னிய ஏகபோக நிறுவனங்களின் நசுக்குதலிலிருந்து தங்கள் பொருளாதாரத்தை விடுவித்துக் கொண்ட பிறகு தான் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் மக்கள் பேரள வான இயற்கை வளங்களைத் தங்கள் சொந்த நலன்களின் பொருட்டுப் பயன்படுத்த முடியும், அன்னிய ஏகாதிபத்திய வாதிகளின் லாபங்களுக்காக இன்றித் தங்களுக்காகப் பாடு பட முடியும் என்பது முற்றிலும் இயல்பானது. இவ்வாறு செய்வதற்கு ஒரு வழிதான் உள்ளது. அதுதான் சொந்தத் தேசியப் பொருளாதார வளர்ச்சிப் பாதை.

**பொருளாதாரச் சுதந்திரம் பெறுவது தேசிய விடுதலைப் புரட்சியின் வளர்ச்சியில் புதிய, இரண்டாவது கட்டத்தின் உள்ளடக்கம் ஆகும்.**

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 22, பக்கம் 187. (ருஷ்யனில்).

பொருளாதாரச் சார்புநிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கு உதவும் மிக அடிப்படையான சாதனங்களில் ஒன்று தேசிய உடைமையாக்கம், அதாவது, இயந்திரத் தொழில் நிலையங்களையும் போக்குவரத்தையும் தகவல் தொடர்புச் சாதனங்களையும் வங்கிகளையும் வர்த்தக, நகராட்சி நிலையங்களையும் பள்ளிகளையும் கல்வி நிலையங்களையும் அரசின் உடைமையாகக் கொடுத்து விடுவது ஆகும். பொருளாதாரத்தில் அரசினர் துறை உரு ஆவது தேசிய உடைமையாக்கத்தின் விளைவாக விளங்குகிறது.

இந்தியாவின் அரசினர் துறை நாட்டின் தொழில் துறை உற்பத்தியில் முப்பது சதவிகிதத்திற்கு வகை செய்கிறது. கனியச் சுரங்கத் தொழிலிலும் வங்கி, காப்புறுதித் தொழிலிலும் அதன் பங்கு 70 சதவிகிதம் ஆகும். நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, செய்தித் தாள் காகிதம், நீர்விசை, நீராவிவிசை டர்பைன்கள், கொதிகலங்கள், கப்பல்கள், ரெயில் எஞ்சின்கள், ரெயில் பெட்டிகள் ஆகியவற்றின் உற்பத்தியையும் கனியம் வெட்டி எடுக்கும் தொழிலையும் தொலைபேசிக் கருவிகள், தொலை தட்டச்சுப் பொறிகள், வானொலிப் பெட்டிகள் ஆகியவற்றின் உற்பத்தியையும் அரசினர் துறை முழுமையாக நிர்வகிக்கிறது. மின்னுக்கம், எரிவாயு உற்பத்தி, நீர் வழங்கீடு ஆகியவற்றில் அதன் பங்கு 90 சதவிகிதம் ஆகும். தனி முதலாளித்துவ நிர்வாகங்களுடன் ஒப்பீட்டில் தனது மேம்பாட்டை வர வர அடிக்கடியும் மேலும் மேலும் அதிகத் துறைகளிலும் நிரூபித்து வருகிறது அரசினர் துறை.

1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கிய ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசினர் துறையின் வளர்ச்சிக்குக் கணிசமான செலவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விடுதலை அடைந்த பல அரசுகள் தேசிய உடைமையாக்கத்தில் குறிப்பிடத் தக்க வெற்றிகள் பெற்றிருக்கின்றன. அதிலும் அன்னிய ஏகபோக நிறுவனங்களின் உடைமைகளும் உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் ஏகாதிபத்திய ஆதரவாளர்களுடைய உடைமைகளும் முதன்மையாகத் தேசிய உடைமை ஆக்கப்பட்டுள்ளன. தேசிய உடைமையாக்கமும் பொருளாதாரத்தில் அரசினர் துறை ஏற்படுத்தப்பட்டதும் பொருளாதார வாழ்வு குறித்த சில பிரச்சினைகளைத் தாமே சுதந்திரமாகத் தீர்க்கவும், அதன் மீது பாதிப்பு நிகழ்த்தவும்,

பொருளாதாரத்தின் திட்ட வகுப்பை ஒழுங்கமைக்கத் தொடங்கவும் விடுதலை பெற்ற நாடுகளின் அரசுகளுக்கு வாய்ப்பு அளித்தன. ஆட்சி அதிகாரம் தேசபக்த, ஜன நாயகச் சக்திகளின் கைகளில் இருக்கும் போது, தேசிய உடைமையாக்கம் தேசத்தின் நலன்களுக்காக, திரளான வெகுஜனங்களின் நன்மைக்காகச் செய்யப்படும் போது தான் அரசினர் துறை தேசியப் பொருளாதாரத்தின் அடிப்படை யாகத் தொண்டாற்ற முடியும்.

உயர் வளர்ச்சி பெற்ற தேசியப் பொருளாதாரம் அமைக்கும் பாதையில், இயந்திரத் தொழில் பெருக்கத்தின் பாதையில் முன் னேறினால் தான் பொருளாதாரச் சுதந்திரம் பெறுவது சாத்தியம் ஆகும்.

விவசாயம் உள்படப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் நவீனத் தொழில்நுட்ப அடிப்படையில் மாற்றி அமைக்கவும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் இயந்திரத் தொழில் பெருக்கம் வகை செய்கிறது. நாட்டின் தற்காப்பை வலுப்படுத்துவதற்கான அடித்தளமாகவும், விஞ் ஞான, தொழில்நுட்ப, பண்பாட்டு முன்னேற்றத்துக்குரிய ஆதாரமாகவும் அது பயன்படுகிறது. முன்பு இருந்த பின்தங் கிய நிலையைப் போக்குவதும் உண்மையான சுதந்திரத்தைப் பெறுவதும் இயந்திரத் தொழில் பெருக்கத்தின் மூலமே சாத்தியம் ஆகும். மக்களின் வளவாழ்வுத் தரத்தை உயர்த்துவதற்கு இன்றியமையாத நிபந்தனை இயந்திரத் தொழில் பெருக்கமே.

நிலவுடைமைப் பிரச்சினையை மக்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பதும் ஆழ்ந்த நிலவுடைமை மாற்றங்களைச் செயல்படுத்துவதும் பொருளாதாரச் சுதந்திரம் பெறுவதற்கான செயல்திட்டத் தின் உள்ளார்ந்த முக்கியப் பகுதியாக விளங்குகிறது. விடு தலை பெற்று விட்ட பெரும்பாலான நாடுகளில் யாவற்றிலும் சிறந்த விளை நிலங்கள் அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்கும் உள்நாட்டு நிலப்பிரபுக்களுக்கும் இனக் குழு மூப்பர்களுக்கும் சொந்தமாய் இருந்தன, பல இடங்களில் இப்போதும் சொந்தமாய் இருக்கின்றன என்பது தெரிந்ததே.

இந்தக் காரணத்தால், விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ, நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய உறவுகளுக்கு முடிவு கட்டுவதும், நிலத்தின் மீது நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய, நிலப்பிரபுத்துவ,

அயல் நாட்டினர் சொத்துரிமையை ஒழிப்பதும், இந்த நிலத்தில் உழைக்கும் வாய்ப்பை விவசாயிகளுக்கு அளிப்பதும் இதைப் பண்படுத்துவதில் அவர்களுக்கு உதவுவதும் நிலவுடைமைப் பிரச்சினையின் சாரம் ஆகும்.

நிலவுடைமை மாற்றங்களின் திண்ணமான வழிகள் வெவ்வேருக இருக்கக் கூடும். நிலவுடைமையின் அளவுகளை ஒரேயடியாகக் குறுக்குவதையும் பெரு நிலச் சொந்தக்காரர்களிடமும் அன்னிய ஏகாதிபத்தியவாதிகளிடமும் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களை விவசாயிகளின் பயன்பாட்டுக்காக வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட ஆழ்ந்த நிலவுடைமைச் சீர்திருத்தங்கள் அனேக நாடுகளில் செயலாக்கப்பட்டு வருகின்றன. நிலவுடைமை மாற்றங்களின் மிக மிக அடிப்படை வடிவம் விவசாயத்தைக் கூட்டுறவு முறையில் அமைப்பதாகும். விடுதலை பெற்ற சில நாடுகளில் இது தொடங்கப்பட்டு விட்டது.

நிலவுடைமைப் பிரச்சினை விடுதலை பெற்ற பல நாடுகளில் தீர்க்கப்படாமலே இருந்து வருகிறது, எனவே அதன் தீர்வு தேசிய விடுதலைப் புரட்சியின் முக்கியப் பணிகளில் ஒன்ருக விளங்குகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

சமூக, அரசு வாழ்வை விரிவாக ஜனநாயகப்படுத்தாமல், விரிவான வெகுஜனத் திரளைக் கட்டுமானத்தில் பங்காற்ற வைக்காமல், மக்களின் கல்வியையும் பண்பாட்டையும் உயர்த்தாமல் பொருளாதார வளர்ச்சி பெறுவது நடவாது.

தேசிய விடுதலைப் புரட்சியின் மிக முக்கியமான சமுதாய அரசியல் பிரச்சினைகளின் தீர்வு சமுதாயச் சக்திகளின் கடும் போராட்டத்தில் நிகழ்கிறது. புரட்சியின் முதல் கட்டமாக விளங்கும் அரசியல் சுதந்திரம் பெறுவது அன்னிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் நாட்டின் எல்லாத் தேசபக்தச் சக்திகளுடையவும் முயற்சிகளால் நிறைவேறுகிறது என்ருல், புரட்சியின் இரண்டாவது கட்டத்தினுடைய உள்ளடக்கமான பொருளாதார சுதந்திரம் பெறுவது ஏகாதிபத்தியத்துடன் போராட்டத்தில் மட்டும் இன்றி, நாட்டுக்கு உள் இருக்கும் வெவ்வேறு வர்க்கங்களதும் சமுதாய வகுப்புக்களதும் போராட்டத்திலும் நிறைவேற்றப்படுகிறது. சாராம்சத்தில் இது சமூகத்தின் அடுத்த வளர்ச்சிக்கு உரிய வழிகளையும் முறைகளையும் குறித்த போராட்டம் ஆகும்.

## 4. முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சியின் அனுபவம்

விடுதலை பெற்ற மக்களின் வளர்ச்சிப் பாதையைத் தெரிந்தெடுப்பது முக்கியமான பிரச்சினை. வெவ்வேறு வர்க்கங்களும் கட்சிகளும் இதன் வெவ்வேறு தீர்வை முன்வைப்பதால் இதைத் தீர்ப்பது சமூகச் சக்திகளின் மோதலுடனும் போராட்டத்துடனும் தொடர்பு உள்ளது. முதன்மையாகப் பெரு முதலாளிகளும் நிலச் சொந்தக்காரர்களும் உள்ளிட்ட பிற்போக்குச் சக்திகள் தங்கள் சலுகைகளையும் தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் காப்பாற்றி வைத்துக் கொள்ளும் பொருட்டு நாட்டின் வளர்ச்சியை முதலாளித்துவப் பாதையில் செலுத்த முயற்சி செய்கின்றன.

சமூகத்தின் முற்போக்குச் சக்திகள், முதன்மையாகத் தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் விவசாயிகள் சமூகமும் உண்மைச் சுதந்திரம், செழிப்பு, முன்னேற்றம் ஆகியவற்றின் பாதையில் நாட்டைச் செலுத்த முயல்கின்றன.

### மக்கள் முதலாளித்துவத்தை நிராகரிக்கிறார்கள்

விடுதலை பெற்ற நாடுகளின் மக்களுக்கு முதலாளித்துவத்தின் மேல் ஒரே வெறுப்பு. காலனியாட்சி முறையின் கொடுமைகள் அவர்களுடைய நினைவில் இன்னமும் பச்சைப் புண்ணாக உறுத்திக் கொண்டிருக்கின்றன. தங்கள் விடுதலைக்கு அவர்கள் மட்டு மீறி அதிக விலை செலுத்தி இருக்கிறார்கள். முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் என்றால் குருதி பெருகும் போர்களும் காலனியாட்சிக் கொள்ளையும் சுரண்டலும் வேலையின்மையும் பஞ்சமும் வறுமையும் என்பதை வரலாற்று அனுபவம் காட்டியுள்ளது. முதலாளித்துவத்தின் கொள்கைவாத ஆதரவாளர்களின் முயற்சிகளால் அது என்னதான் கவர்ச்சியான உடைகள் அணிந்தாலும் சரி, எந்த மாதிரி அடைமொழிகளால் (''மக்கள் முதலாளித்துவம்'', ''அனைத்து மக்கள் வள வாழ்வுச் சமூகம்'' முதலியன) அதற்குப் புகழ் மாலை சூட்டினாலும் சரி, மக்கள் முழு உறுதியுடன் அதை நிராகரிப்பதற்குக் காரணம் இதுவே.

முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை மக்கள் ஏற்கத் தக்கது அல்ல என்பதற்குச் சான்று பகர்கிறது முதலாளித்துவத்தின் பாதையைப் பின்பற்றிய, விடுதலை பெற்ற சில

நாடுகள் உள்ளாகி இருக்கும் ஆழ்ந்த நெருக்கடி. இந்தப் பாதைதான் ஏகாதிபத்தியவாதிகளதும் அவர்களுடைய தரப் பாளர்களதும் நலன்களுக்கு ஏற்றது. மக்களுக்கோ, வறுமையையும் சுரண்டலையும் தவிர வேறு எதையும் அது விட்டு வைப்பதில்லை.

மக்கள் முதலாளித்துவத்துக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் எதிராய் இருப்பது இயல்பே. ஆனால், வளர்ச் சிக்கு உரிய வேறு பாதை, **முதலாளித்துவம் அல்லாத** பாதை உண்டு, சோஷலிசத்தை நோக்கிச் செல்வது இது. இந்தப் பாதை எப்படிப்பட்டது என்பதையும் விடுதலை பெற்ற மக் களுக்கு இது எம்மாதிரி மேம்பாடுகளைத் தருகிறது என்றும் பார்ப்போம்.

முன்பு பின்தங்கி இருந்த நாடுகள் மொத்தத்தில் முத லாளித்துவக் கட்டத்தையோ அல்லது இயந்திரத் தொழில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவக் கட்டத்தையோ ஒரு புறம் விட்டு விட்டு சோஷலிசத்துக்குப் பரிணமிப்பது சாத்தியம் என்று வி. இ. லெனின் சான்றுகளுடன் நிலைநாட்டினர். அதிக வளர்ச்சி பெற்ற வேறு நாடுகளில் சோஷலிசம் தோன்றி வளர்ச்சி அடைந்ததுடன் இந்தச் சாத்தியப்பாட்டை அவர் இணைத்தார். இந்த நாடுகளின் பாட்டாளி வர்க்கம் தங்கள் பொருளாதார, அரசியல் வளர்ச்சியில் பிந்திவிட்ட மக் களுக்கு எல்லா வகையிலும் உதவக் கடமைப்பட்டது என்று அவர் கூறினர்.

பின்தங்கிய நாடுகளின் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சி பற்றிய லெனினது கருத்துக்கள் இப்போது செயல் ஆகி விட்டன. 1917ம் ஆண்டில் ருஷ்யாவில் இருந்த ருஷ்யர் அல்லாத 6 கோடி 50 லட்சம் மக்களில் மத்திய ஆசியாவின் காலனி வகைப்பட்ட எல்லைப் பகுதிகளில் வாழ்ந்த 2 கோடி 50 லட்சம் பெயர் முதலாளித்துவத்துக்கு முந்திய வளர்ச்சிக் கட்டங்களில் இருந்து வந்தார்கள். நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையும் அரைகுறைப் பண்டைக் கால உற்பத்தி முறையும் அவர்களிடையே நிலைத்திருந்தன. அவற்றோடு இனக் குழுப் பாங்கான வாழ்க்கை முறையும் நிலவியது. 60க்கு மேற்பட்ட ஆண்டுகள் கழிந்தன. சோதர மக்கள் இனங்களின், முதன்மை யாக ருஷ்ய மக்களின் உதவியால் இந்த எல்லைப் பகுதிகள் உயர் வளர்ச்சி பெற்ற இயந்திரத் தொழில்துறையும்

விவசாயமும் பண்பாடும் உள்ள சோஷலிசக் குடியரசுகளாக மாறி விட்டன. உலோக வார்ப்பு, இயந்திர நிர்மாணம், மின் இயந்திர நிர்மாணம் முதலிய நவீனத் தொழில்துறைக் கிளைகள் இந்தக் குடியரசுகளில் புதிதாக நிறுவப்பட்டுள்ளன. விவசாயமும் மாறிவிட்டது. அது கூட்டுப் பண்ணையாகவும் பெரிதும் இயந்திரமயமாக்கப்பட்டதாகவும் விளங்குகிறது. பண்பாட்டில் பின்தங்கிய நிலை அகற்றப்பட்டு விட்டது. தேர்ச்சி பெற்ற தேசிய ஊழியர்கள் தயாராகி விட்டார்கள்.

முன்பு அரைக் காலனியாக இருந்த மங்கோலியா நிலப் பிரபுத்துவப் பின்தங்கிய நிலையிலிருந்து சோஷலிசத்துக்கு முன்னேறி இருக்கிறது. சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகள் ஆகியவற்றின் உதவியால் வளர்ச்சி பெற்ற இயந்திரத் தொழில், விவசாய நாடாக அணித்தான வருங்காலத்தில் மாறி விடும் குறிக்கோளை அது வைத்துக் கொண்டிருக்கிறது.

முன்னர் பின்தங்கி இருந்தவர்களும் காலனியாட்சி முறை, சுரண்டல் ஆகியவற்றின் நுகத்திலிருந்து விடுவிக்கப் பெற்றவர்களுமான மக்கள் சோதர மக்கள் இனங்களின் உதவியால் என்ன சாதிக்க முடியும் என்பதை மத்திய ஆசிய சோவியத் குடியரசுகளின் அனுபவமும் மங்கோலியாவின் அனுபவமும் கண்கூடாகக் காட்டுகின்றன. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் உண்மையான சுதந்திரமும் முன்னேற்றமும் அடைவதற்கான வழி முதலாளித்துவம் அல்லாத பாதை என்று இந்த அனுபவங்கள் அவர்களுக்கு இப்போது படிப்பினை தருகின்றன.

முதலாளித்துவம் அல்லாத பாதை என்பது என்ன?

**முதலாளித்துவம் அல்லாத பாதையின் தன்மை**

முதலாளித்துவம் அல்லாத பாதை என்பது, வளர்ச்சியின் முதலாளித்துவக் கட்டத்தை அடையாத நாடுகள், பிற நாடுகளில் சோஷலிசம் வெற்றி அடைந்துள்ள நிலைமைகளில், மொத்தத்தில் முதலாளித்துவத்தையோ அல்லது வளர்ச்சி பெற்ற முதலாளித்துவத்தின் கட்டத்தையோ ஒரு புறம் விட்டு விட்டு சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதற்கான பாதை ஆகும்.

சோஷலிசத்துக்குப் பரிணமிப்பது சோஷலிசப் புரட்சியின் விளைவாக நிறைவேற்றப்படுகிறது என்பது தெரிந்ததே.

குறிப்பிட்ட பொருளியல், வர்க்க முதனிலைகள் (தகுந்த பொருளாதார வளர்ச்சித் தரம், வளர்ச்சி பெற்றதும் அரசியல் துறையில் செயலாற்றுவதும் மார்க்சியக் கட்சியால் வழி நடத்தப்படுவதுமான தொழிலாளி வர்க்கம் நிலவுவது முதலியன) இந்தப் புரட்சிக்குத் தேவை. இந்த முதனிலைகள் வளர்ச்சியின் முதலாளித்துவக் கட்டத்தில் வழக்கமாகப் பக்குவப்படுகின்றன. ஆகையால் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் சோஷலிசப் புரட்சிக்கு நேரடியாகப் பரிணமிப்பது சாத்தியம் ஆகும்.

முதலாளித்துவத்துக்கு முந்திய வளர்ச்சிக் கட்டத்தில் இருக்கும் நாடுகளில் உள்ள நிலைமை வேறானது. அண்மையில் இறைமை பெற்ற பெரும்பாலான அரசுகள் இத்தகையவை. சோஷலிசப் புரட்சிக்கு வேண்டிய முதனிலைகள் இவற்றில் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை. எனவே சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதற்குக் குறித்த முன்னேற்பாட்டுக்குரிய காலப் பகுதி தேவைப்படும். சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதற்கு இன்றியமையாத பொருளியல், வர்க்க நிலைமைகள் இந்தக் காலப் பகுதியில் தான் உருவாகும். முடிவான சோஷலிச அடிப்படை மாற்றங்களுக்கு வேண்டிய அணுகு வழி முழுமை பெறும் இந்தக் காலப் பகுதி முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சியின் கட்டாயமான அங்கமாக விளங்குகிறது.

இந்தத் தொடக்கக் காலப் பகுதியில் நடைபெறும் சமுதாய பொருளாதார நிகழ்முறைகள் (பொருளாதார வளர்ச்சியும் அதன் விளைவாக உழைப்பாளி மக்களுக்கு, முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்துக்குச் சாதகமாக வர்க்கச் சக்திகளின் மறு அணிவகுப்பும்) முதலாளித்துவ வளர்ச்சிக்கு இயல்பான நிகழ்முறைகளை ஓரளவு ஒத்தவை. ஆனாலும் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையின் நிலைமைகளில் இந்த நிகழ்முறைகள் எவ்வளவோ அதிக விரைவாக நடக்கின்றன. தவிரவும் முதலாளித்துவ வளர்ச்சி நிலைமைகளில் அனுபவிக்கும் துன்பங்களில் கணிசமான பகுதியிலிருந்து விரிவான வெகுஜனங்கள் (இது முக்கியமானது) தப்பி விடுகிறார்கள். அதோடு கூட, முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சியின் இந்தத் தொடக்கக் கட்டத்திலேயே, முதலாளித்துவ ஜனநாயகத் தன்மை கொண்ட மாறுதல்களுடன் சோஷலிசத் தன்மை உள்ள சீர்திருத்தங்களும் (தனியார் மூலதனமும்

சுரண்டலும் குறுக்கப்படுவது, உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதி மக்கள் கண்காணிப்புக்கும் நிர்வாகத்துக்கும் விடப் படுவது, பொருளாதாரத்தின் திட்ட வகுப்பு முதலியன) செயலாக்கப்படுகின்றன. ஆனால் அவை முடிவான முக்கியத் துவத்தை இன்னும் பெற்றிருப்பதில்லை, சமூகம் முழுவதன் சமுதாய பொருளாதார உருவத்தை அவை நிர்ணயிப்ப தில்லை.

முதலாளித்துவம் அல்லாத பாதையின் தொடக்கக் கட் டத்தில் முதலாளித்துவ ஜனநாயக மாற்றங்களுக்கும் சோஷ லிச வகைச் சீர்திருத்தங்களுக்கும் உள்ள ஒப்பு விகிதமும் சமூக வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவமும் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேருக இருப்பது புரியக் கூடியதே. அவற்றின் பொருளாதார, சமுதாய வளர்ச்சித் தரத்தையும் வர்க்கச் சக்திகளின் ஒப்பு நிலைமையையும் பொறுத்தது இந்த விஷயம். ஆனல் சோஷலிசத் தன்மை கொண்ட சீர்திருத்தங்கள் நிலவுவது, அவற்றின் ஆழமும் உருவமும் எம்மாதிரி இருந்தா லும், முதலாளித்துவம் அல்லாத வழியின் இன்றியமையாத அடையாளமாகத் திகழ்கிறது. இத்தகைய சீர்திருத்தங்கள் இல்லாதது சமூகம் வழக்கமான முதலாளித்துவப் பாதையில் வளர்ச்சி பெறுவதைக் காட்டும் சான்று ஆகும்.

முதலாளித்துவ ஜனநாயக மாற்றங்கள் மேலோங்கி இருக்கும் தொடக்கக் கட்டத்துக்குப் பிறகு தொடங்கும் புதிய கட்டம். சமூக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சோஷலிசத் தன்மை கொண்ட சீர்திருத்தங்கள் உறுதியாக வேரூன்றும் கட்டம், சோஷலிசத்துக்கு நேர்முகப் பரிணமிப்பு நிகழும் கட்டம் இது.

சோஷலிசத் தன்மை கொண்ட சீர்திருத்தங்கள் முடிவு செய்யும் முக்கியத்துவம் பெறும், முதலாளித்துவம் அல்லாத பாதை உறுதிப்படும், சமூகம் சோஷலிச வளர்ச்சிப் பாதை யில் முடிவாக அடி வைக்கும். தேசிய விடுதலைப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக வளர்வது நிகழும்.

இந்தப் புதிய கட்டம் எவ்வளவு விரைவில் தொடங்கும் என்பது பல நிலைமைகளைப் பொறுத்திருக்கும். திரளான வெகுஜனங்கள் எவ்வளவு செயலூக்கத்துடன் புரட்சியில் பங்காற்றுவார்கள், சமூக வாழ்விலும் அரசின் வாழ்விலும் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சி நிலைமைகளில் செய்யப்

பட்ட மாற்றங்கள் எவ்வளவு ஆழ்ந்தவை, தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் எவ்வளவு விரைவாக வளர்ந்து கொண்டு போகும், விவசாயிகளுடன் அதன் ஒன்றிப்பு எவ்வளவு விரைவில் வலுப்படும், புரட்சியை வழி நடத்தும் மையக் குழு உழைப்பாளிகளுடைய விருப்பங்களை வெளியிடுவதாக எவ்வளவு விரைவில் செயல்படும், விஞ்ஞான சோஷலிசத்தின் நிலைகளுக்கு மாறும் என்பவை இந்த நிலைமைகள்.

இவ்வாறு, தேசிய விடுதலைப் புரட்சி நிறைவேறுவதும் சோஷலிசக் கட்டுமானத்திற்கு வேண்டிய பொருளியல், வர்க்க முதனிலைகள் அமைவதும், பின்பு தேசிய விடுதலைப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக வளர்வதும் முதலாளித்துவம் அல்லாத பாதையின் மொத்த சமுதாய பொருளாதார உள்ளடக்கம் ஆகும்.

முதலாளித்துவம் அல்லாத பாதை தற்போதைய சகாப்தத்தில் மட்டுமே சாத்தியம் என்பதை அழுத்திக் கூறுவது அவசியம். மனித குலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிக்கும் சகாப்தம் இது. சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு இப்போது நிலவுகிறது. முதலாளித்துவம் அல்லாத பாதையில் அடி வைக்கும் நாடுகள் இந்த அமைப்பின் தன்னலமற்ற சர்வாம்ச உதவியைச் சார்ந்திருக்கின்றன.

### விடுதலை பெற்ற மக்கள் சோஷலிசத்தைத் தெரிந்தெடுக்கிறார்கள்

முதலாளித்துவப் பாதை மக்களுக்குத் துன்பம் தரும் பாதை என்பதை விடுதலை பெற்ற நாடுகளின் உழைப்பாளி வெகுஜனங்கள் தங்கள் சொந்த அனுபவத்தால் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய விடுதலைக்கும் இன்பத்துக்கும் இட்டுச் செல்லும் ஒரே வழி சோஷலிசம் தான் என்பதை அவர்கள் நாளுக்கு நாள் அதிகத் துலக்கமாக உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். விடுதலை பெற்ற நாடுகளின் நூற்றாண்டுக் காலப் பின்தங்கிய நிலையை ஒழிக்கவும், அவற்றின் பொருளாதாரமும் பண்பாடும் விரைந்த ஏற்றம் பெற வகை செய்யவும், மக்களின் பொருளியல், உளத் தேவைகளை நிறைவேற்றவும், சுரண்டலிலும் ஏழ்மையிலும் பஞ்சத்திலுமிருந்து அவர்களை என்றென்றைக்கும் மீட்கவும் வல்லது சோஷலிசம் ஒன்றுதான்.

சமூக முன்னேற்றத்தின் பொருட்டு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்த முதலாளி வர்க்கம் திறன் அற்றது என்பது புரட்சியின் ஆழ்ந்த போக்கு அதிகரிப்பதற்கு ஏற்ப மேலும் மேலும் கண்கூடாகப் புலனாகிறது. சில நாடுகளில் அரசியல் சுதந்திரத்திற்கு வகை செய்யக்கூட அதனால் முடியவில்லை. முதலாளி வர்க்கம் புரட்சித் தன்மை கொண்ட மக்களுக்கு அஞ்சுகிறது, தேசிய உடைமையாக்கத்தை எதிர்க்கிறது, நிலவுடைமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் விரிவாக ஜனநாயகப்படுத்தவும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுக்கிறது. இந்தக் காரணங்களாலேயே முதலாளி வர்க்கத்தின் கொள்கை திரளான வெகுஜனங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது, அவநம்பிக்கை ஏற்படுத்துகிறது. அன்னிய ஏகாதிபத்தியத்தை மட்டும் இன்றி உள்நாட்டு முதலாளி வர்க்கத்தையும் எதிர்த்து மேலும் உறுதியாகப் போராட இந்தக் கொள்கை வெகுஜனங்களைத் தூண்டுகிறது.

திரளான வெகுஜனங்களின் சித்தத்தையும், சோஷலிசத்தின் பால் அவர்களுக்கு உள்ள அளவற்ற கவர்ச்சியையும், இன்பம் நிறைந்த புது வாழ்வைப் பெற அவர்களுக்கு உள்ள விருப்பத்தையும் வெளியிட்டவாறு, விடுதலை பெற்ற பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் சோஷலிச வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றத் தங்கள் மக்கள் விழைவதாக அறிவித்தார்கள். முதலாளித்துவத்துக்கு எதிரான, சோஷலிசத் தன்மை கொண்ட நடவடிக்கைகள் இந்த நாடுகளில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அரசினர் துறை உருவாக்கப்படுகிறது, பொருளாதார வளர்ச்சியில் திட்ட வகுப்பு மேற்கொள்ளப்படுகிறது. அன்னிய மூலதனம் பொருளாதாரத்திலிருந்து வெளியேற்றப்படுகிறது, சுரண்டல் குறுக்கப்படுகிறது, உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலைகள் குலைக்கப்படுகின்றன. சுரண்டுவோர் வர்க்கங்கள் அரசியல் வாழ்வின் மீது தங்கள் செல்வாக்கை இழக்கின்றன. இயந்திரத் தொழில் பெருக்கத்தின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரம் உருவாகிறது, நிலவுடைமைச் சீர்திருத்தங்கள் செயலாக்கப்படுகின்றன. விவசாயிகளைக் கூட்டுறவுப் பாங்கில் ஒழுங்கமைப்பதும் இவற்றில் அடங்கி இருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கு உள்ள

சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப் படுகிறது. சோஷலிச நாடுகளுடன் பரஸ்பர நட்பு உறவுகளும் ஒத்துழைப்பும் ஏற்படுத்தப்படுகின்றன, இத்தகைய பிற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்களின் வளவாழ்வையும் பண்பாட்டையும் மேம் படுத்துவதிலும், பொது அறிவு, கல்வி, உடல்நலப் பாதுகாப்பு ஆகியவற்றை வளர்ப்பதிலும், தொழில்நுட்ப, விஞ்ஞான ஊழியர்களைப் பயிற்றி உருவாக்குவதிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தப்படுகிறது.

தேசியப் பொருளாதாரத்தை, சிறப்பாக இயந்திரத் தொழில்துறையை அமைக்கும் செயல் முறையின் போது சோஷலிசத்திற்கு வேண்டிய பொருளியல் முதனிலையான நவீனப் பொருளியல் தொழில்நுட்ப அடித்தளம் உருவா கிறது. பொருளியல் முதனிலைகள் அமைவது சோஷலிசத்தின் சமுதாய முதனிலைகளும் அதே சமயம் முதிர்வதைக் குறிக் கிறது: இயந்திரத் தொழில் துறை வளர்ச்சி அடையும் போது தொழிலாளி வர்க்கம் தோன்றி வளர்ச்சி அடைகிறது, சமூகத்தில் அதன் பாத்திரம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது, பாட்டாளி வர்க்கத்தைச் சேராத வகுப்பாருடன், சிறப்பாக விவசாயிகளுடன் அதன் ஒன்றிப்பு ஏற்பட்டு வலுவாகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் அதிகரிக்கிறது என்றுல் அது எங்கும், எப்போதும், முதலாளித்துவம் அல்லாத பாதையில் இயக்கத்தின் எல்லாக் கட்டங்களிலும் சமூகத்தின் தலைமைச் சக்தியாக விளங்குகிறது என்று அர்த்த மல்ல. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் கணிசமாகப் பெரும்பாலானவற்றில் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கை யில் குறைவாகவும் நிறுவன நோக்கிலும் கொள்கைவாத நோக்கிலும் பலவீனமாகவும் இருப்பதாலும், அரசியல் செயல் களத்தில் இப்போதுதான் அடி வைத்திருப்பதாலும், முதலாளித்துவம் அல்லாத பாதையில் முன்னேற்றத்தின் தலைமையை, சிறப்பாக அதன் தொடக்கக் கட்டத்தில், புரட்சிகர ஜனநாயகச் சக்திகள் ஏற்று நடத்துகின்றன.

விடுதலை அடைந்த நாடுகளின் வெவ்வேறு வர்க்கங்கள் சோஷலிசத்தையும் அதை அடைவதற்கான வழிகளையும் சாதனங்களையும் வெவ்வேறு விதமாகப் புரிந்து கொள்கின்றன. சில வேளைகளில் இந்தக் கருத்துக்கள் விஞ்ஞான சோஷலிசத்

துக்கு மிகவும் புறம்பாக இருக்கின்றன. ஏதேனும் ஒரு நாட்டின் வளர்ச்சியை முதலாளித்துவப் பாதையில் செலுத்த முதலாளி வர்க்கம் செய்யும் முயற்சிகளுக்கு மறைப்பாகவும் மூடுதிரையாகவும் சில சந்தர்ப்பங்களில் இந்தக் கருத்துக்கள் பயன்படுகின்றன. ஆனாலும், முதலாளித்துவத்தையும் சுரண்டலையும் ஒழிக்க வேண்டும், கூட்டு உடைமையை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை நிறுவ வேண்டும் என்ற முற்போக்கு ஆர்வம் இந்தக் கருத்துக்களில் அடங்கி இருக்கிறது. முற்போக்குள்ள இந்த உள்ளடக்கத்தை, பல்வேறு சோஷலிசச் சித்தாந்தங்களின் இந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாட்சி எதிர்ப்புப் போக்கைக் கம்யூனிஸ்டுகள் நிபந்தனை இன்றி ஆதரிக்கிறார்கள். அதே சமயம், சோஷலிசத்திற்காகப் போராடும் பல்வேறு சமுதாயச் சக்திகளில் அவர்கள் கரைந்து விடுவதில்லை. எல்லா வகையான சோஷலிச இயக்கத்திலும் விஞ்ஞான சோஷலிசத்தின் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் புகுத்த அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

**முதலாளித்துவம் அல்லாத பாதைக்குப் பரிணமிப்பைச் சாத்தியம் ஆக்கும் நிலைமைகள்**

தற்போதையச் சகாப்தத்தில் முதலாளித்துவம் அல்லாத பாதையில் முன்னேறுவதற்கு உள் நிலைமைகளும் வெளி நிலைமைகளும் வாய்ப்பு அளிக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. இத்தகைய உள்நாட்டு நிலைமைகளில் பின்வருவன அடங்கும்:

விடுதலை அடைந்த நாடுகளது சமூக முன்னேற்றத்தின் புறநிலைத் தேவைகள், சிறப்பாக, நவீன விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட சொந்த தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவதன் இன்றியமையாமை;

ஏகாதிபத்தியத்தினதும் உள்நாட்டுப் பிற்போக்கினுடையவும் நிலைகள் வலுக் குறைந்து முதலாளித்துவ எதிர்ப்பும் முற்போக்கும் உள்ள சமுதாயச் சக்திகளின், முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்தின் பலம் அதிகரிப்பது, மார்க்சியக் கட்சிகளின் செல்வாக்கு உயர்வது;

விவசாயிகள் சமூகத்துடன் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றிப்பு உருவாகி உறுதிப்படுவது, உழைப்பாளி மக்களுடைய அரசியல் செயலூக்கமும் வர்க்க, தேசியத்

தன்னுணர்வும் மேம்படுவது, அவர்களிடையே சோஷலிசக் கருத்துக்கள் பரவுவது;

தொழிற்சங்க இயக்கம், பிற ஜனநாயக நிறுவனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி உட்பட சமூக, அரசு வாழ்வில் ஜனநாயகத்தின் வளர்ச்சி;

அடிப்படையான சமுதாய பொருளாதாரச் சீர்திருத் தங்களைத் தலைமை ஏற்று நடத்தவும் அரசியல், பொருளா தாரச் சுதந்திரத்துக்கு வகை செய்யவும் முதலாளி வர்க்கத் தால் இயலாமை;

விடுதலை பெற்ற நாடுகளின் தலைவர்கள் தீவிர நிலைகளை மேற்கொள்வதும் விஞ்ஞான சோஷலிசத்துக்குப் பரிணமிப் பதும் சாத்தியம் ஆவது.

விடுதலை அடைந்த நாடுகள் சோஷலிசப் பாதையில் முன்னேறுவதற்கான வெளி நிலைமைகள் பெரிதும் சாதக மானவை. இவற்றில் பின்வருவன அடங்கும்:

சர்வதேச ஏகாதிபத்தியச் சக்திகளின் பலம் ஒரேயடி யாகக் குறைந்திருப்பதும் உலக சோஷலிசத்தின் சக்திகள் அதிகரித்துக் கொண்டு போவதும்;

பொருளாதார வளர்ச்சியிலும் மக்களின் வளவாழ்வை யும் பண்பாட்டுத் தரத்தையும் மேம்படுத்துவதிலும் சோஷ லிச அமைப்பின் வெற்றிகள்;

சோஷலிசக் கட்டுமானத்தின் வளமான அனுபவம், சிறப்பாக முன்பு பின்தங்கி இருந்த நாடுகளின் முதலாளித் துவம் அல்லாத வளர்ச்சி குறித்த அனுபவம்;

சோஷலிச நாடுகளின் உலக அமைப்புடனும் சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்துடனும் விடுதலை பெற்ற நாடுகளின் வலுப்பட்டு வரும் ஒற்றுமையும் ஏகாதிபத்தியத் துடன் பொதுப் போராட்டத்தில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் ஒற்றுமையும்.

சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் முன்பு ஒடுக்கப்பட்டிருந்த மக்கள் இனங்களுக்கு அளித்து வரும் தன்னலமற்ற சர்வாம்ச உதவி பெருத்த முக்கியத்து வம் உள்ளது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி கட்சியின் 26வது காங்கிரசுக்குச் சமர்ப்பித்த விவர அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: ''விடுதலை அடைந்த நாடுகளுடன் சோவியத் யூனியனின்

ஒத்துழைப்பை வளர்ப்பது, உலக சோஷலிசத்துக்கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் உள்ள ஒன்றிப்பை வலுப்படுத்துவது என்ற கொள்கைப் போக்கை சோ.யூ.க. கட்சி மேற்கொண்டும் ஒத்திசைந்த முறையில் கடைப்பிடித்து வரும்.''*

---

* லி. இ. பிரேஷ்னெவ், சோ.யூ.க. கட்சியின் 26வது காங்கிரசுக்கு சோ.யூ.க. கட்சி மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கை, பக்கம் 20.

# அத்தியாயம் ஐந்து

## உலகப் புரட்சி நிகழ்முறையும் சமாதான சகவாழ்வும்

தற்போதைய சகாப்தத்தில் சோஷலிசத்துக்கான போராட்டம் ஜனநாயக இயக்கங்களுடனும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் ஜனநாயகத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்குமாகவும், காலனியாதிக்கத்திலிருந்து விடுபடுவதற்காகவும் மக்கள் இனங்கள் நடத்திவரும் போராட்டத்துடனும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருக்கிறது. புதிய உலக யுத்த அபாயத்துக்கு எதிராகவும் சமாதானத்தை நிலைநிறுத்தி வலுப்படுத்துவதற்காகவும் நடந்துவரும் போராட்டம் தற்காலத்தின் முக்கியமான பொது ஜனநாயக இயக்கமாக விளங்குகிறது.

சமாதானத்திற்காகவும் வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வுக்காகவும் நடக்கும் போராட்டம் நம் காலத்தில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமாகவும் திகழ்கிறது. இந்த முக்கியமான விஷயத்தை இன்னும் நன்ருகப் புரிந்து கொள்வதற்கு யுத்தங்கள் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனையைச் சுருக்கமாகவாவது விளக்குவது அவசியம்.

### 1. நியாயமான யுத்தங்களையும் நியாயமற்ற யுத்தங்களையும் பற்றி மார்க்சிய-லெனினியம்

**யுத்தங்களின் காரணங்கள்**

யுத்தங்களின் காரணங்கள் மனிதர்களுடைய சுபாவத்திலேயே வேரோடி இருப்பதாகவும் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்ளவும் ஆயுதப் போராட்டம் நடத்தவுமான விருப்பம் மனிதர்களுக்குத்

தொன்று தொட்டே இயல்பானது என்றும் சுரண்டுவோர் வர்க்கங்களின் கொள்கைவாதிகள் நெடுங்காலமாக மக்களுக்கு உருவேற்றி வந்திருக்கிறார்கள். இவ்வளவு அபத்தமான எண்ணத்தை மக்களுக்குப் புகட்டுவதன் மூலம் யுத்தங்களுக்கும் ஆளும் வர்க்கங்களின் அறிவற்ற கொள்கையால் யுத்தம் என்னும் இரத்தக் கிடங்கில் தள்ளப்படும் மனிதர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கும் தங்களுக்கு உள்ள பொறுப்பைத் தட்டிக் கழிக்கச் சுரண்டுவோர் முயன்று வந்தார்கள், இப்போதும் முயன்று வருகிறார்கள்.

மார்க்சிய-லெனினியச் சித்தாந்தம் யுத்தங்களின் தன்மையையும் காரணங்களையும் பின்வருமாறு விளக்குகிறது. யுத்தம் எப்போதும் நிலைத்திருக்கும் நிகழ்ச்சி அல்ல, வரலாற்று நிகழ்ச்சி. ஏற்ற இறக்க சமுதாய பொருளாதார நிலைமைகளால் அது தோற்றுவிக்கப்படுகிறது. தொடக்கக் கால அமைப்பில் வர்க்கங்களோ அரசோ இருக்கவில்லை, உற்பத்தி மிகத் தாழ்ந்த வளர்ச்சித் தரத்தில் இருந்ததால் தனியார் சொத்துரிமை சாத்தியமாய் இல்லை. அந்தக் காலத்தில் போர்களும் இருக்கவில்லை. உற்பத்தியின் அடுத்து வந்த வளர்ச்சியின் விளைவாகத் தனியார் சொத்துரிமையும் வர்க்கங்களும் தோன்றின. சமரசப்படுத்த முடியாத வர்க்கங்கள் கொண்ட சமூகத்தின் இயல்பிலும் அதன் பொருளாதார அடிப்படையான தனியார் சொத்துரிமையிலும் அதன் தன்மையில் அடங்கியுள்ள தீர்க்க முடியாத முரண்பாடுகளிலும்தான் யுத்தங்களின் காரணங்கள் வேரோடி இருக்கின்றன. ''யுத்தம் தனியார் சொத்துரிமையின் அடிப்படைகளுக்கு முரணானது அல்ல, மாறாக, இந்த அடிப்படைகளின் நேரான, தவிர்க்க முடியாத வளர்ச்சியே ஆகும்''* என்று எழுதினார் வி. இ. லெனின்.

யுத்தங்கள் ஆளும் வர்க்கங்களுடைய கொள்கையின் தொடர்ச்சி ஆகும். சுரண்டுவோர் உழைப்பாளி வெகுஜனங்களை ஒடுக்குகிறார்கள், இந்த நோக்கங்களுக்காக ஆயுதங்களை அடிக்கடி கையாளுகிறார்கள். லாபங்களுக்கான வேட்டையில் அவர்கள் மற்ற நாடுகளின் மக்களை வெல்கிறார்கள், சூறையாடுகிறார்கள், அடிமைப்படுத்துகிறார்கள், ஒருவரோடு ஒருவர் இடையறாத போராட்டம் நடத்துகிறார்கள். சமூகத்தில்

* வி. இ. லெனின், நூல் திரட்டு, முதற் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கம் 298.

சுரண்டுவோர் ஆதிக்கம் வகிக்கும் வரை, உலக அரசியலின் விதியை அவர்கள் முடிவு செய்யும் வரை, குருதி பெருகும் துன்ப நிகழ்ச்சிகள் மனித குலத்தின் தவிர்க்க முடியாத துணைப் பயணியாக உடன் வந்து கொண்டிருக்கும்.

மனித குலம் தனது வளர்ச்சியில் மேலும் மேலும் முன்னே சென்றது. போர்க் கருவிகளும் இருந்த இடத்திலேயே நிற்கவில்லை. அவை நாளுக்கு நாள் அதிக அச்சமும் அதிகச் சாவும் விளைப்பவை ஆகிக் கொண்டு போயின. விளைவாக, யுத்தங்கள் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் மனித உயிர்களைக் கொள்ளை கொண்டன, மேலும் மேலும் பெருத்த அளவில் பொருள் வளங்களைச் சூறையாடின. இரண்டு உலக யுத்தங்களில் மட்டும் எத்தனை பெருந் தொகையான மனித உயிர்களும் பொருள்களும் பாழாயின என்பது தெரிந்ததே. உலக அணுவாயுத யுத்தத்தை மூளாமல் தடுக்க முடியா விட்டால் அதன் விளைவுகள் இன்னும் அதிகக் கொடுமையாக இருக்கும்.

**நியாயமான யுத்தங்களும் நியாயமற்ற யுத்தங்களும்**

நியாயமான, புரட்சி யுத்தங்களும் நியாயமற்ற, நாடு பிடிக்கும் யுத்தங்களும் உள்ளன.

சுரண்டுவோர் ஒடுக்கப்பட்டவர்களுடன் போராடுவதற்கு ஆயுதங்களைக் கையாண்டால், அவர்களுக்கு எதிராக சோஷலிசப் புரட்சி செய்ய எழும் உழைப்பாளி மக்களின் யுத்தங்கள் நியாயமானவற்றைச் சேர்ந்தவை. காலனியாதிக்கத்தை எதிர்த்து மக்கள் நடத்தும் தேசிய விடுதலை யுத்தங்கள் நியாயமானவை. ஏதேனும் ஒரு நாட்டை அன்னிய ஆக்கிரமிப்பிலிருந்து தற்காப்பதற்கான போர்களும் இத்தகைய பிறவும் நியாயமானவை. சோஷலிசம் தோன்றிய பின்னர் சோஷலிச அரசுகளையும் சோஷலிச நாடுகளின் உலக அமைப்பையும் தற்காப்பதற்கான நியாயமான யுத்தங்கள் பெருத்த முக்கியத்துவம் பெற்று விட்டன.

சோஷலிசத்தின் சாதனைகளைக் காக்கும் பொருட்டும், வாழ்ந்து தீர்ந்து விட்ட சமூக ஒழுங்குமுறைகளுக்கு எதிராகவும், சுரண்டலுக்கும் காலனியாட்சி ஒடுக்குமுறைக்கும் எதிராகவும் நடத்தப்படுபவை நியாயமான யுத்தங்கள். முற்போக்குள்ள புதிய சமூக ஒழுங்குமுறைகளை நிலைநாட்ட இவை உதவுகின்றன.

ஜெர்மன் பாசிசத்துக்கு எதிராக மாபெரும் தேசபக்த யுத்தத்தில் (1941-1945) சோவியத் மக்களின் வெற்றியும் அண்மை ஆண்டுகளில் நடைபெற்ற தேசிய விடுதலைப்போர் களும் சமூக முன்னேற்றத்துக்கு உதவவில்லையா? கட்டாயம் உதவின, ஏனெனில் அவை ஏகாதிபத்தியத்துக்கு எதிரானவை, சமூக முன்னேற்றத்துக்காகவும் சோஷலிசத்துக்காகவும் நடந்த போராட்டங்கள். சமூக முன்னேற்றத்தை இடை விடாமல் மிகுந்த உற்சாகத்துடன் ஆதரிப்பவர்களான கம் யூனிஸ்டுகள் இந்தக் காரணத்திஞல் தான் நியாயமான, புரட்சி யுத்தங்களை ஆதரித்து வந்தார்கள், இப்போதும் ஆதரித்து வருகிருர்கள்.

நியாயமற்ற யுத்தங்களாவன: சோஷலிச நாடுகளுக்கு எதிரான யுத்தங்கள்; உழைப்பாளி மக்களுக்கு எதிராகவும் புரட்சி இயக்கங்களுக்கும் ஜனநாயக இயக்கங்களுக்கும் எதி ராகவும் சுரண்டுவோர் நடத்தும் போர்கள்; பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கி விட்ட நாடுகளை அடிமைப்படுத்துவ தற்காக ஏகாதிபத்தியவாதிகள் நடத்தும் காலனியாதிக்க யுத்தங்கள்; உலகில் பொருளாதார, அரசியல் செல்வாக்கின் பொருட்டுச் சுரண்டுவோர் தங்களுக்குள் நடத்தும் யுத்தங் கள்; மேலாண்மைவாதிகளால் கட்டவிழ்த்து விடப்படும் யுத்தங்கள்.

நியாயமற்ற, நாடு பிடிக்கும் யுத்தங்களின் எதிரிகளாக விளங்குகிருர்கள் கம்யூனிஸ்டுகள். ஆஞல் அவர்களுடைய கருத்துப்படி, நாடுபிடிக்கும் யுத்தங்களுக்கு எதிரான போராட்டம் சமுதாயப் போராட்டத்துடன், சுரண்டலுக்கு எதிராக, சோஷலிசத்தின் வெற்றிக்காக நடக்கும் போராட்டத் துடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது. உலகில் சோஷலிசம் நிலை பெற்ற பிறகுதான் யுத்தங்களிலிருந்து, மனிதர்களின் படுகொலையிலும் மனித உழைப்பாலும் அறி வாலும் படைக்கப்பட்ட அளவிட முடியாத பொருள் வளங் களின் அழிவிலுமிருந்து மனித குலம் என்றென்றைக்கும் மீட்சி பெறும் என்று கம்யூனிஸ்டுகள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிருர்கள்.

சமாதானத்தையும் சமாதான சகவாழ்வையும் குறித்த கொள்கை தொடக்கத்தில் உலகின் முதலாவது உழைப்பாளி அரசான சோவியத் யூனியனுடைய அரசுக் கொள்கை

ஆயிற்று. பின்னர், சோஷலிச நாடுகளது உலக அமைப்பு உருவானதும், பிற சோஷலிச நாடுகளும் இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாயின.

## 2. சமாதான சகவாழ்வுக் கொள்கை

சமாதான சகவாழ்வு குறித்த லெனினது கோட்பாடு

வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வு குறித்த கோட்பாட்டை முன்வைத்து, சர்வாம்ச ரீதியாக ஆதாரங்களுடன் நிலைநாட்டியவர் வி. இ. லெனின் ஆவார். சோவியத் ஆட்சி அமைந்த முதல் மணிகளிலேயே, 1917ம் ஆண்டில் நடந்த சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரசில் உரையாற்றுகையில் அவர் பின்வருமாறு அறிவித்தார்: ''கொள்ளைகளையும் வன்முறைகளையும் குறிக்கும் எல்லா விவரக் கூறுகளையும் நாம் நிராகரிக்கிறோம். ஆனால், நல்ல அண்டை நாட்டாருக்கு உரிய நிபந்தனைகளும் பொருளாதார ஒப்பந்தங்களும் எவற்றில் அடங்கி இருக்கின்றனவோ, அந்த எல்லா விவரக் கூறுகளையும் நாம் மகிழ்ச்சியுடன் ஏற்கிறோம். இவற்றை நாம் நிராகரிக்கக் கூடாது.''*

சோஷலிசம் உலகம் முழுவதிலும் விரைவிலோ தாமதித்தோ வெற்றி பெற்றுத் தீரும் என்று வி. இ. லெனின் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் இந்த வெற்றி ஒரே நேரத்தில் எல்லா நாடுகளிலும் ஒருங்கே ஏற்பட முடியாது என்று அவர் எழுதினார். பொருளாதாரத் தரம், வர்க்கப் போராட்டத்தினுடைய கூர்மையின் அளவு, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் உள்ள ஒப்பு வலிமை ஆகியவற்றையும் பிற நிலைமைகளையும் பொறுத்துச் சில நாடுகள் மற்றவற்றைக் காட்டிலும் முன்னதாக சோஷலிசத்தை அடைந்து விடும். இந்த உண்மையின் அடிப்படையில் லெனின் ஒரு முடிவுக்கு வந்தார். குறித்த காலப் பகுதியின்போது சோஷலிச அரசுகளோடு கூடவே முதலாளித்துவ

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 20 (ருஷ்யனில்).

அரசுகளும் உலகில் நிலவி வரும் என்பது அந்த முடிவு. லெனின் சமாதான சகவாழ்வின் ஆதரவாளராக இருந்தார். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் தங்கள் அயல்நாட்டுக் கொள்கையில் லெனினது இந்தக் கோட்பாட்டினாலேயே வழிநடத்தப்படுகின்றன.

**சோஷலிச, முதலாளித்துவ அரசுகளின் சமாதான சகவாழ்வு மனித குல வளர்ச்சியின் புறநிலையான இன்றியமையாமை ஆகும்.** அழிவு விளைக்கும் அரக்க ஆயுதங்களும் உலகின் எந்தப் பகுதிக்கும் அவற்றைச் செலுத்துவதற்கான சாதனங்களும் இருக்கும் தற்கால நிலைமைகளில், புதிய உலக யுத்தம் மிகப் பேரளவான உயிர் நாசமும் பொருள் அழிவும் விளைக்க முடியும் என்னும் போது யுத்தத்தையும் சமாதானத்தையும் குறித்த பிரச்சினை தற்காலத்தின் முக்கியப் பிரச்சினை ஆகி விட்டது. அணுவாயுத யுத்தத்தைத் தவிர்ப்பது, அது மூளாதபடி தடுப்பது சமாதானப் பற்றுள்ள எல்லாச் சக்திகளுடையவும் பணி ஆகும்.

சமாதான சகவாழ்வு அறிவார்ந்த அடிப்படை கொண்ட உடன்வாழ்வு. பின்வரும் கோட்பாடுகளை அது உள்ளடக்கி இருக்கிறது: அரசுகளுக்கு இடையே எழும் விவாதத்துக்கு இடமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சாதனமாக யுத்தத்தைப் பயன்படுத்த மறுப்பது, இந்தப் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்ப்பது; அரசுகளுக்கு இடையே சம உரிமையும் பரஸ்பரப் புரிவும் நம்பிக்கையும், பரஸ்பர நலன்களைக் கருத்தில் கொள்ளுவதும்; உள் விவகாரங்களில் தலையிடாமை, தங்கள் நாட்டின் எல்லாப் பிரச்சினைகளையும் சுதந்திரமாகத் தீர்த்துக் கொள்ள ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் உள்ள உரிமை ஒப்புக் கொள்ளப்படுவது; எல்லா நாடுகளின் இறைமையும் பிரதேச முழுமையும் கண்டிப்பாக மதிக்கப்படுவது; முழு சமத்துவம், பரஸ்பர லாபம் ஆகியவற்றின் அடிப்படையில் பொருளாதார, பண்பாட்டு ஒத்துழைப்பின் வளர்ச்சி. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் எல்லா மார்க்சியக் கட்சிகளும் இந்த உயர்ந்த நோக்கங்களின் நிறைவேற்றத்துக்காக மிகுந்த கவனமும் சக்தியும் செலுத்திப் பாடுபட்டு வருகின்றன.

தற்காலச் சமூக வளர்ச்சியின் இயக்கு சக்திகள் குறித்த நிதானமான விஞ்ஞானப் பகுத்தாராய்வை அடிப்படையாகக்

கொண்டது சமாதான சகவாழ்வுக் கொள்கை. பொதுவான அனைத்துலகப் பொருளாதார உறவுகள் பகைமை உள்ள எந்த அரசாங்கங்கள் அல்லது வர்க்கங்களின் விருப்பத்தையும் சித்தத்தையும் தீர்மானத்தையும் விட அதிக வலிமை வாய்ந்தவை. சோஷலிச நாடுகளுடன் சமாதான உறவுகள் வைத்துக் கொள்ளும் பாதையில் முன்னேறுமாறு அவையே இவற்றைக் கட்டாயப்படுத்துகின்றன. சோஷலிசத்தைக் கட்டி அமைத்து வரும் மக்களைப் பொறுத்த வரையிலோ, சமாதானத்தை உறுதிப்படுத்துவது அவர்களுக்கு ஜீவாதார முக்கியத்துவம் உள்ளது. சோஷலிசம் என்பது படைப்பது, புதியதை நிறுவுவது. சமாதானத்துக்காகவும் அழிவு விளைக்கும் யுத்தங்களுக்கு எதிராகவும் போராடாமல் நிறுவுவதும் படைப்பதும் முடியாது. ஆகையால்தான் சமாதானமும் சோஷலிசமும் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளன.

சமாதான சகவாழ்வுக் கொள்கையை ஒத்திசைந்த முறையில் கடைப்பிடித்து வரும் மார்க்சியக் கட்சிகள், சமாதானத்திற்காக வெற்றிகரமாகப் போராடத் திறன் கொண்ட பெருத்த சக்திகள் உலகில் உருவாகி வளர்ந்து வருவதை ஆதாரமாகக் கொள்கின்றன.

இந்தச் சக்திகள் யாவை?

முதலாவதாக, சோஷலிச நாடுகளின் உலக அமைப்பும் அதனுடைய பொருளாதார, படைத்துறை விறலின் இடையறுத அதிகரிப்பும். சோஷலிச நாடுகளின் உலக அமைப்புதான் உலகில் சமாதானப் பற்றுள்ள எல்லாச் சக்திகளுடையவும் இயல்பான ஈர்ப்பு மையம் ஆகி இருக்கிறது.

இரண்டாவதாக, சமாதானப் பற்று உள்ளவையும் சோஷலிஸ்டு அல்லாதவையுமான நாடுகளின் பெரிய குழு. இவற்றில் கணிசமான பகுதியாக இருப்பவை வளர்ச்சி அடைந்து வரும் அரசுகள். இராணுவக் கூட்டணிகளில் பங்கு கொள்வதில் மறைந்திருக்கும் அபாயத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள மேலும் மேலும் அதிக எண்ணிக்கையுள்ள நாடுகள் விரும்புகின்றன. அவை கூட்டு சேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன.

1955ம் ஆண்டு ஏப்ரலில் பாண்டுங் நகரில் நடைபெற்ற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாடு காலனியாட்சி முறைக்கும் இனவெறிக்கும் எதிராக மக்கள் இனங்களது

போராட்டத்தில், சமாதானத்துக்கு ஆதரவான போராட்டத்தில் புதிய ஏட்டைத் திறந்து வைத்தது. இந்த மகாநாட்டைக் கூட்ட முன்முயற்சி எடுத்துக் கொண்ட நாடுகளில் இந்தியக் குடியரசும் ஒன்று.

கூட்டு சேராமை இயக்கம் சர்வதேச வாழ்க்கையில் பண்பு நோக்கில் புதிய நிகழ்ச்சி ஆகும். ஜவாகர்லால் நேருவின் சொற்களில், ''கூட்டு சேராமை இயக்கம், ஏதேனும் ஓர் இராணுவக் கூட்டணியில் சேர்ந்ததால் கறைப்படுத்தப் படாததும் எல்லா மக்களின் பாலும் மேற்கொள்ளப்படுவதுமான நட்புறவுக் கொள்கையைக் குறிக்கும் சொல் தொடர் ஆகி விட்டது.'' இந்த இயக்கத்தின் வலிமை இதன் ஏகாதிபத்திய எதிர்ப்பிலும் காலனியாட்சி முறை எதிர்ப்பிலும் இனவெறி எதிர்ப்பிலும் அடங்கி உள்ளது. சோஷலிச நாடுகளின் உலக அமைப்பில் சேராமல், அதனுடன் நெருங்கிய தொடர்பில் அரசியல் நோக்கில் தோன்றி வளர்ந்தது கூட்டு சேராமை இயக்கம். உலக சோஷலிசத்தோடு அதன் ஒன்றிப்பும் தற்கால ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அதன் முக்கியப் பாத்திரமுமே அதன் வெற்றிகளுக்கு வகை செய்கின்றன. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு, ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி அமைப்பு தகர்ந்து சிதறி, இறைமை பெற்ற இளம் அரசுகள் உருவாகி, இரண்டு சமுதாய பொருளாதார அமைப்புக்களின் பரஸ்பர எதிர்ப்பும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மேலும் மேலும் அதிக அளவில் பரிணமிப்பும் நிகழ்ந்து கொண்டிருந்த நிலைமைகளில் உலக அரசியல் அரங்கில் அடி வைத்ததன் விளைவாகத் தோன்றியது இந்த இயக்கம்.

கூட்டு சேராமை இயக்கத்தின் அடிப்படையாக விளங்குவது சமாதான சகவாழ்வுக் கோட்பாடு ஆகும்.

மூன்றாவதாக, சர்வதேசத் தொழிலாளி வர்க்கம்—ஏகாதிபத்தியத்துக்கும் அதன் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும் எதிராகவும் சோஷலிசத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் ஆதரவாகவும் போராடி வரும் வர்க்கம்.

நான்காவதாக, திரளான வெகுஜனங்களின் விரிவான யுத்த எதிர்ப்பு இயக்கம். யுத்தத்தையும் சமாதானத்தையும் பற்றிய பிரச்சினையை முடிவு செய்யும் பொறுப்பை இவர்கள் மேலும்

மேலும் அதிக ஊக்கத்துடன் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்கிருர்கள்.

சர்வதேச விவாதங்களைத் தீர்ப்பதற்கான சாதனம் என்ற முறையில் உலக யுத்தத்தைத் தவிர்ப்பது மனித குலத்துக்கு இப்போதே முடியும் என்ற வரலாற்றுச் சிறப்புள்ள முடிவுக்கு வருவது விறல்மிக்க இந்தச் சமாதானப் பற்றுள்ள சக்திகள் நிலவியதனுலேயே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் மற்ற நாடுகளின் மார்க்சியக் கட்சிகளுக்கும் இயன்றது.

ஏகாதிபத்தியச் சக்திகள் ஆயுத பலத்தினுல் அமைதியைக் குலேத்து, ஒரு நாட்டு மக்கள் மீது தங்கள் ஆதிக்கத்தைச் சுமத்த முயன்ருல், அந்தச் சந்தர்ப்பத்திலும் ஆயுதப் போராட்டத்துக்கு மறுப்பது என்று சமாதான சகவாழ்வுக் கோட்பாடு பொருள்படவில்லே. ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்கும், காலனி ஆட்சியாளருக்கும் காலனியாட்சி ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்களுக்கும் இடையே நிலவும் உறவுகளுக்கு இந்தக் கோட்பாடு பொருந்தாது. தங்கள் சுதந்திரத்தையும் விடுதலேயையும் காப்பதற்காகவும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பையோ ஒடுக்குமுறையையோ எதிர்த்தும் ஆயுதமேந்திப் போராடுவது ஒவ்வொரு நாட்டு மக்களுடையவும் புனித உரிமை ஆகும்.

ஏகாதிபத்தியம் மனிதத்தன்மை அற்ற தனது திட்டங்களைக் கை விடாது. இதன் பொருள் என்ன என்ருல், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புப் போக்குகளே எதிர்த்து எல்லா மக்களும் தன்னலம் இன்றிப் போராடுவதன் மூலமே வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் உள்ள அரசுகளின் சமாதான சகவாழ்வு காக்கப்படவும் உறுதி செய்யப்படவும் முடியும் என்பதாகும். சர்வதேசக் கெடுபிடி நிலேமையைத் தணிப்பதற்கான போராட்டத்திற்குச் சமாதானப் பற்றுள்ள எல்லாச் சக்திகளேயும் நிரந்தரமாக அணி திரட்டுவது தற்போதைய நிலேமைகளில் இன்றியமையாதது.

### சமாதான சகவாழ்வின் நிலேமைகளில் வர்க்கப் போராட்டம்

சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் உள்ள முரண்பாடுகளேச் சமரசப்படுத்திக் கொள்வது என்ருே, வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவது என்ருே சமாதான சகவாழ்வு அறவே பொருள்படவில்லே. மார்க்சிய-லெனினியவாதிகள்

வர்க்கப் போராட்டத்தை, முதலாளி வர்க்கத்துடன் உழைப்பாளிகளின் போராட்டத்தை ஒத்திசைந்த முறையில் எப்போதும் ஆதரித்து வந்தார்கள், ஆதரித்து வருகிறார்கள். வர்க்கங்களின் போராட்டமும் அதன் உச்ச வடிவமான சோஷலிசப் புரட்சியும் மட்டுமே முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கும் புதிய, சோஷலிசச் சமூகத்தை நிலைநாட்டுவதற்கும் உதவும் சாதனமாக விளங்குகின்றன என்று அவர்கள் கருதி வந்திருக்கிறார்கள். வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் உள்ள அரசுகளின் சமாதான சகவாழ்வு முதலாளி வர்க்கத்தின் மீது சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின், உழைப்பாளி மக்களின் போராட்டத்திற்கும் வெற்றிக்கும், உலக சோஷலிசப் புரட்சிக்கும், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மனிதகுலத்தின் வரலாற்றுச் சிறப்புள்ள பரிணமிப்புக்குமே தொண்டாற்றுகிறது.

சமாதான சகவாழ்வும் தற்காலத்தில் வலுவடைந்து வரும் கெடுபிடி நிலைமையின் தணிவும் அரசுகளுக்கு இடையில் உள்ள உறவுகள் சம்பந்தப்பட்டவை. ஆனால், 25வது கட்சிக் காங்கிரசுக்கு சோ. யூ. க. கட்சி மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கை குறிப்பது போல, ''கெடுபிடி நிலைமையின் தணிவு வர்க்கப் போராட்டம் குறித்த விதிகளை எவ்வகையிலும் நீக்கிவிடவில்லை, அதனால் அவற்றை நீக்கவோ மாற்றவோ முடியாது.''*

உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையே உள்ள முரண்பாடு முதலாளித்துவத்தின் மிக முக்கியமான முரண்பாடு ஆகும். வர்க்கப் போராட்டத்தில், தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் இதுதான் வெளிப்படுகிறது. தனது வளர்ச்சியில் இந்தப் போராட்டம் சிக்கலான பெரிய பாதையைக் கடந்து வந்திருக்கிறது. சோஷலிச இயக்கத்தின் உதயத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே தொடங்கிய போராட்டம் தொழிலாளர்களுடைய சிறு சிறு குழுக்களின் தனித் தனியான, ஒழுங்கமையாத கிளர்ச்சிகளாக இருந்தது. தற்போதோ, அது விரிவான அனைத்துலக,சர்வதேசத் தன்மை பெற்று விட்டது. இவ்வளவோடு

---

* சோ. யூ. க. கட்சியினது 25வது காங்கிரசின் விவரங்கள், பக்கம் 46.

நில்லாமல், சோஷலிச நாடுகளின் உலக அமைப்பு உருவான பிறகு இந்தப் போராட்டம் அரசுகளுக்கு இடையே உள்ள மட்டத்திற்கும் மாறி, முதலாளித்துவம், சோஷலிசம் என்னும் சமூக அமைப்புக்களின் தரத்திலும் தற்போது நடத்தப்படுகிறது, மனிதச் செயல்களின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கி இருக்கிறது.

உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையே நடக்கும் எல்லா விதமான போராட்டத்தையும் போலவே சோஷலிச, முதலாளித்துவச் சமூக அமைப்புக்களுடைய வர்க்கப் போராட்டம் சமாதான சகவாழ்வின் நிலைமைகளில் பொருளாதார, அரசியல் கொள்கைவாதத் துறைகளில் நடத்தப்பட்டு வருகிறது.

பொருளாதாரப் போராட்டம் — முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் இடையே சர்வதேச அளவில் நடக்கும் அமைதியான பொருளாதாரப் போட்டி—இரு அமைப்புக்களுடையவும் போராட்டத்தின் முக்கியக் களமாக விளங்குகிறது. உற்பத்தி, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சி வேகத்தையும் அளவையும் குறித்து சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் நடக்கும் தனிவகைப் போராட்டமே பொருளாதாரப் போட்டி ஆகும். சோஷலிசம் உழைப்பாளி மக்களின் பொருளியல், பண்பாட்டுத் தேவைகளை மேலும் மேலும் அதிக முழுமையாக நிறைவேற்ற வல்லது என்பதை இந்தப் போராட்டத்தின் போது மக்கள் தங்கள் சொந்த அனுபவத்தில் கண்டு கொள்வார்கள், சோஷலிசத்தின் ஆற்றலைத் தெரிந்து கொண்டு புதிய சமூகத்தின் வெற்றிக்காக ஊக்கத்துடன் போராடுபவர்களாக முன்வருவார்கள்.

சமாதான சகவாழ்வு சர்வதேச அரங்கில் நடக்கும் இரண்டு அமைப்புக்களின் அரசியல் போராட்டத்தையும் உள்ளடக்கி இருக்கிறது. சமுதாய, தேசிய விடுதலைக்கான போராட்டத்தின் எல்லா வடிவங்களுக்கும், ஜனநாயகத்துக்காகவும் சோஷலிசத்துக்காகவும் மக்கள் நடத்தும் போராட்டத்திற்கும் சோஷலிச நாடுகளின் தரப்பில் அளிக்கப்படும் எல்லா வகையான ஆதரவும் இதில் அடங்கும். முதலாளித்துவ நாடுகளில் சுரண்டுவோருக்கு எதிராக உழைப்பாளிகளின் போராட்டத்திற்குச் சமாதான சகவாழ்வு உதவுகிறது. முதலாளித்துவ நாடுகளில் வேலைநிறுத்த இயக்கத்தின்

வீச்சும் சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியும் இதற்குச் சான்று தருகின்றன.

தேசிய விடுதலைப் போராட்டம் விரிவாக நடப்பதற்கு ஏற்ற வாய்ப்புக்களைச் சமாதான சகவாழ்வு உருவாக்குகிறது. சமாதான நிலைமைகளில் பதிற்றுக் கணக்கான ஆசிய, ஆப்பி ரிக்க நாடுகள் காலனியாட்சிச் சார்பு நிலையிலிருந்து விடுதலை பெற்றன, கியூபாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றது. விடுதலை அடைந்து மக்கள் தேசிய மறுமலர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கான எதார்த்த வாய்ப்புக்களைச் சமாதான சகவாழ்வின் நிலைமைகளில் பெற்றுர்கள்.

இந்தியா தொன்மை வாய்ந்த நாடு. இரு நூற்றுண்டுக் கால பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திஞல் கடுமை ஆகி விட்ட கணக்கற்ற பிரச்சினைகளை அது மரபு முறையில் பெற்றது. காலனி ஆட்சியாளரின் சுரண்டலால் இந்தியா கொடும் துன் பம் உழன்றது, விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்ப முன் னேற்றம் ஆகியவற்றின் பயன்களை இழந்தது. இப்போது அந்நாடு பொருளாதார சுதந்திரத்துக்காகவும் சமூக முன் னேற்றத்துக்காகவும் பாடுபட்டு வருகிறது. உன்னதமான பணிகள் அதற்கு எதிர் நிற்கின்றன.

1961ம் ஆண்டில் மாஸ்கோ வந்திருந்த ஜவாகர்லால் நேரு கூறிஞர்: ''நாங்கள் எப்போதும் சமாதான ஆதர வாளர்களாக இருந்து வந்திருக்கிறேம். கவலைகள் நிறைந்த எங்கள் உலகத்தை யுத்தம் குலைக்குமாஞல் வருங்காலம் பற்றிய எங்கள் கனவுகள் மெய்யாகவே சிதறிப்போகும்.''

முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டம் விரி வாக நடப்பதற்கும் காலனிகளையும் சார்பு நாடுகளையும் சேர்ந்த மக்களின் தேசிய விடுதலை இயக்கம் தீவிரமாக நடப் பதற்கும் சாதகமான வாய்ப்புக்களைச் சமாதான சகவாழ்வு எந்த அளவுக்கு ஏற்படுத்துகிறதோ, அதே அளவுக்கு வர்க்கப் போராட்டத்தினதும் தேசிய விடுதலை இயக்கத்தினுடையவும் வெற்றிகள் சமாதான சகவாழ்வு வலுப்படுவதற்கு உதவு கின்றன.

### சமாதான சகவாழ்வின் நிலைமைகளில் கொள்கை வாதப் போராட்டம்

சமாதான சகவாழ்வு கொள்கை வாதத் துறையில் செயல்படுவதில்லை. கம்யூனிசக் கொள்கைவாதத்துக்கும் முதலாளித்துவக் கொள்கைவாதத் துக்கும் சமரசம் ஏற்படுத்துவது நடவாது. கம்யூனிசக் கொள்

கைவாதம் தொழிலாளி வர்க்கத்தின், உழைப்பாளி மக்களின் கொள்கைவாதம். சோஷலிசமும் கம்யூனிசமும் வெற்றி பெறுவது தவிர்க்க முடியாதது என்பதைச் சான்றுகள் காட்டி நிலைநாட்டுவதும், இந்த வெற்றியை அடைவதற்கான வழிகளைச் சுட்டுவதும், புதிய சமூகத்தின் தன்மையை வெளிப்படுத்துவதும், அதன் மேம்பாடுகளையும் வாய்ப்புக்களையும் காட்டுவதும் கம்யூனிசக் கொள்கைவாதத்தின் குறிக்கோள் ஆகும். முதலாளித்துவக் கொள்கைவாதத்தின் குறிக்கோள் வேறானது. தனியார் சொத்துரிமையும் சுரண்டலும் நிலவும் சமூகம்—முதலாளித்துவச் சமூகம்—எப்போதும் நிலைத்திருக்கும், அதை மாற்ற முடியாது என்பதைச் சான்றுகளுடன் நிலைநாட்டுவது அந்தக் குறிக்கோள்.

தற்போது முதலாளித்துவத்துடன் கடுமையான போராட்டத்தில் வெற்றி அடைந்து வருகிறது புதிய சமூகம்—சோஷலிசம். முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் நடக்கும் போராட்டம் மனிதர்களின் உணர்வில் பிரதிபலிப்பதே கம்யூனிசக் கொள்கைவாதத்துக்கும் முதலாளித்துவக் கொள்கைவாதத்துக்கும் நடக்கும் போராட்டம் ஆகும்.

கொள்கைவாதப் போராட்டம் ஒரேயடியாகக் கூர்மை அடைந்திருப்பது வரலாற்று வளர்ச்சியினது தற்போதையக் கட்டத்தின் சிறப்பியல்பு ஆகும். சோஷலிச நாடுகளின் ஒற்றுமையையும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒருமைப்பாட்டையும் குலைப்பதிலும், தற்காலத்தின் முன்னணிச் சக்திகளைப் பிரிப்பதிலும், சோஷலிச நட்பு மண்டலத்தை உள்ளிருந்து தகர்க்க முயல்வதிலும் கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரத்தின் பிரமாண்டமான இயந்திரம் அனைத்தும் இப்போது ஈடுபட்டிருக்கிறது. முதலாளித்துவக் கொள்கைவாதத்துடன் சமரசம் அற்ற போராட்டம் நடத்துவதும், உழைப்பாளிகளுக்குக் கம்யூனிச போதனை அளிப்பதும், கொள்கைவாத நடவடிக்கைகள் எல்லாவற்றையும் தீவிரப்படுத்துவதும் இந்த நிலைமைகளில் சிறப்பான முக்கியத்துவம் பெற்றுள்ளன, கம்யூனிஸ்டுக் கட்சியின் தலையாய பணிகளில் ஒன்றாக விளங்குகின்றன.

கம்யூனிசக் கருத்துக்களுடைய ஈர்ப்புச் சக்திக்கும், பரந்த உலகின் மிகப் பல்வேறு மூலைகளில் அவற்றின் பால்

காணப்படும் பெருத்த ஆர்வத்துக்கும் காரணம் இந்தக் கருத்துக்கள் மனித குல வளர்ச்சியின் தேவைகளுக்குப் பொருந்துவதும் மனிதர்களுடைய இன்றியமையாத உடனடி நலன்களுக்கு ஏற்றவையாக இருப்பதுந்தான்.

கொள்கைவாதப் போராட்டம் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டுக்குச் சிறிதும் முரண்படவில்லை. அனேக முதலாளித்துவ நாடுகளோடு சோவியத் யூனியன் கொண்டிருக்கும் மெய்யாகவே அமைதியானவையும் பரஸ்பர மரியாதையும் நட்பும் நிறைந்தவையுமான உறவுகள் காட்டும் நம்பிக்கையூட்டும் சான்று என்னவென்றால் கொள்கைவாத வேறுபாடுகள் சமாதானத்துக்கும் சமாதான சகவாழ்வுக்கும் தடையாய் இருக்கவில்லை என்பதே.

சமாதான சகவாழ்வுக் கோட்பாடு, அரசுகளுக்கிடையே நிலவும் உறவுகளது ஆழ்ந்த மனிதாபிமானம் உள்ளதும் யாவற்றிலும் அறிவுக்கு உகந்ததுமான கோட்பாடு ஆகும். இந்தக் கோட்பாட்டைக் காப்பதும், சமாதானத்தினதும் சமாதான சகவாழ்வினதும் எதிரிகள், ''பனிப் போரையும்'' சர்வதேசக் கெடுபிடி நிலைமையையும் ஆதரித்துப் பிரசாரம் செய்பவர்கள் ஆகியோருடன் இடைவிடாமல் போராடுவதும் கொள்கைவாத முனையில் நடக்கும் போராட்டத்தின் முக்கியப் பணிகளில் ஒன்று என்று கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள்.

கொள்கைவாதங்களின் போராட்டத்தில் சமரசம் ஏற்படுத்தும் முயற்சிகளைப் பொறுத்த வரையில் அவை சந்தேகமின்றிக் கட்டாயம் தோல்வி அடையும். கம்யூனிசக் கருத்துக்களுக்கும் முதலாளித்துவக் கருத்துக்களுக்கும் இடையே சமரசம் நிலவவில்லை, ஏற்படவும் முடியாது, ஏனெனில் எவற்றின் நலன்களை இவை பிரதிபலிக்கின்றனவோ, அந்த வர்க்கங்களுக்கு இடையே சமரசம் ஏற்பட முடியாது. கொள்கைவாதத்தில் சமரசம் என்பது மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிடுவது, தொழிலாளி வர்க்கத்தினுடையவும் எல்லா உழைப்பாளிகளுடையவும் ஜீவாதார நலன்களைக் கைவிடுவது என்று கம்யூனிஸ்டுகளுக்கு அர்த்தப்படும். இது முற்றிலும் அசாத்தியமானது, இதற்கு இடமே கிடையாது. முதலாளித்துவ உலகின் பிரதிநிதிகளும் கொள்கைவாதச் சமரசம் பற்றி வாயளவில் பேசினாலும் செயலளவில் தங்கள்

கொள்கைவாதக் கோட்பாடுகளைக் கைவிட அறவே தயாரா யில்லை என்று நினைக்க வேண்டும். கம்யூனிசக் கருத்துக்கள் பரவுவதைத் தடுக்கவும் அவற்றின் செல்வாக்கிலிருந்து விரிவான வெகுஜனத் திரளை வேலியிட்டுக் காக்கவும் எல்லா வித நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள்வது தற்செயலாக அல்ல. ஆகவே, கொள்கைவாதச் சமரசத்துக்கு ஏகாதிபத்தியத்தின் அரசியல்வாதிகளும் கொள்கைவாதிகளும் விடுக்கும் அழைப்புக்கள் உளமார்ந்தவையாக மதிக்கத் தக்கவை அல்ல. அவர்களுடைய சொந்தக் கொள்கைவாதத்திடம் தோல்வியை ஒப்புக் கொள்வதற்கான அழைப்பாகவே இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இயல்பாகவே மார்க்சியவாதிகளால் இதற்கு இசைய முடியாது.

கொள்கைவாதப் போராட்டத்துக்கு இடையூறு விளைக்கவும், இன்னும் அதிகமாக, அதை நிறுத்தி விடவும் செய்யப்படும் எல்லாவித முயற்சிகளும் பயனற்றுப் போவதற்கு இன்னொரு காரணம், கருத்துக்கள் மனிதர்கள் மீது பாதிப்பு ஏற்படுத்துவதற்குரிய சிறப்புத் தன்மைகளும் பரவுவதற்கான தனிப்பட்ட விதிகளும் கொண்டிருப்பதாகும். கருத்துக்களுக்கு அரசு எல்லைகள் கிடையா. இராணுவ தளங்களோ, அணு சக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களோ அவற்றைத் தடுக்க முடியாது. தற்காலத் தகவல் தொடர்புச் சாதனங்களின் காரணமாகக் கருத்துக்கள் மிகப் பெருந் தொலைவுகளைக் கடக்க வல்லவை. இந்தக் கருத்துக்கள் உண்மையானவையாக, மனிதர்களுடைய அத்தியாவசிய நலன்களுக்கு ஏற்றவையாக இருந்தால், அவை அவர்களுடைய அறிவுகளையும் நெஞ்சங்களையும் புலப்படாத விதத்தில் ஆட்கொண்டு விடுகின்றன.

கொள்கைவாதப் போராட்டம் அறிவார்ந்த முறைகளில் நடத்தப்பட வேண்டும் என்பது கூறாமலே விளங்கும். புகலின்மை, அச்சம், தன்னலம், அவநம்பிக்கை, வெறுப்பு ஆகிய உணர்வுகளை மனிதர்களின் உள்ளங்களில் தூண்டி விடுவதை நோக்கமாகக் கொண்ட ''உளவியல்'' போருக்கும் இதற்கும் பொதுவான தன்மை எதுவும் கிடையாது. கொள்கைவாதப் போராட்டம் வேறு வகையானது: அதன் முதன்மையான முறை விளக்குவது, சான்று காட்டுவது, மனித அறிவின் மீது பாதிப்பு நிகழ்த்துவது ஆகும். நிகழ்ச்சி விவரங்களையும்

எதிர்த் தரப்பின் கொள்கையையும் குறிக்கோள்களையும் திரிப்பது, அவதூறு பரப்புவது, பரஸ்பரம் அவமதிப்பது, மனித உள்ளத்தில் தீய விருப்பங்களையும் ஆவேசங்களையும் உணர்ச்சிகளையும் தூண்டி விடுவது ஆகியவற்றிலிருந்து அது விடுபட்டிருக்க வேண்டும். கொள்கைவாதப் போராட்டம் என்பது மனிதர்களுடைய அறிவுகளுக்காகவும் நெஞ்சங்களுக் காகவும் நடக்கும் போராட்டம், வன்முறையைக் கையாளாத போராட்டம், ஆயுதங்களோ அறவே தேவைப்படாத போராட்டம் ஆகும். ஆயுத உற்பத்திப் போட்டியோ, அரசுகளுக்கு இடையே உறவுகளின் சீர்கேடோ அதை நடத்து வதற்குத் தேவையே இல்லை.

கொள்கைவாதப் போராட்டம் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் இசைகிறது. சோஷலிச நாடு களுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் நடக்கும் பொருளா தாரப் போட்டிக்கோ, விஞ்ஞான-தொழில்நுட்பப் பரி மாற்றத்துக்கோ பண்பாட்டுத் தொடர்புகளுக்கோ இது முரண் படுவதில்லை. கம்யூனிஸ்டுகள் மார்க்சிய-லெனினிய நிலைகளில் உறுதியாக இருக்கிறார்கள், சோஷலிச அமைப்பின் மேம்பாடு களிலும் அதன் தவிர்க்க முடியாத வெற்றியிலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். தங்கள் குறைகளையும் அவர்கள் மறைப்பதில்லை, அவற்றை நன்றாக ஒப்புக் கொண்டு அவற்றை நீக்குவதற்குக் களைக்காமல் பாடுபடுகிறார்கள். கம் யூனிஸ்டுகள் கொள்கைவாதப் போராட்டத்தை ஆதரிக்கிறார் கள், அதற்கு அஞ்சுவதில்லை, ஏனெனில் தங்கள் செய்கை யும் கொள்கைவாதக் கோட்பாடுகளும் சரியானவை என்று நம்புகிறார்கள்.

**சமாதானப் போராட்டத்தின் முன்னணியில்**

சோஷலிச நாடுகளும் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளும் சமாதானப் போராட்டத்தின் முன்னணியில் இருக்கின்றன.

இதற்கு ஒளி வீசும் சான்றாக விளங்குகிறது மக்களினங் களின் சமாதானத்திற்கும் பாதுகாப்புக்குமான போராட்டத் தின் செயல்திட்டம். இது சோ.யூ.க. கட்சியின் 24வது காங் கிரசால் உறுதிப்படுத்தப்பட்டது. பிற சோஷலிச நாடுகளும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கமும் இதற்கு ஆதரவு அளித்தன.

தென்கிழக்கு ஆசியாவிலும் மேற்கு ஆசியாவிலும் போர் அபாய மையங்களை ஒழிப்பதற்கும், அரசுகளுக்கு இடையே நிலவும் உறவுகளில் வன்முறை கையாளப்படுவதை விடுவதற்கும், அணுக்கரு, இரசாயன, பாக்டீரிய ஆயுதங்களைத் தடை செய்யும் உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கும், ஆயுத உற்பத்திப் போட்டியை நிறுத்துவதற்கான போராட்டம் தீவிரம் ஆக்கப்படுவதற்கும் இத்தகைய பிறவற்றுக்கும் இந்தச் செயல்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. உலகின் சமாதானப் பற்றுள்ள சக்திகள் இதைச் சமாதானச் செயல்திட்டம் என்று அழைத்தன. சமாதானச் செயல் திட்டம் சோ. யூ. க. கட்சியின் 26வது காங்கிரசில் மேற்கொண்டு விரிவுபடுத்தப்பட்டது.

1975ம் ஆண்டுக் கோடையில், பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் குறித்து ஹெல்சின்கி நகரில் நடந்த அனைத்து ஐரோப்பிய மகாநாட்டின் விளைவுகள் வரலாற்றுச் சிறப்பு உள்ளவை ஆகும். ஐரோப்பிய அரசுகளின் யுத்தத்துக்குப் பிந்திய எல்லைகள் மாற்ற முடியாதவை என்பதும் இந்த அரசுகளுக்கிடையே நிலவும் உறவுகள் பற்றிய கோட்பாடுகளும் இம்மகாநாட்டின் இறுதி அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சமூக வாழ்வின் வெவ்வேறு துறைகளில் இவற்றின் ஒத்துழைப்பை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் இதில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகள் ஆகியவற்றினதும் சமாதானப் பற்றுள்ள எல்லாச் சக்திகளதும் முயற்சிகளின் பயனாக, கெடுபிடி நிலைமை தணிவதற்கான போக்குகளும் வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் உள்ள அரசுகளின் சமாதான சகவாழ்வுக்கான போக்குகளும் புலப்பட்டு வருகின்றன. ஹெல்சின்கியில் செய்யப்பட்ட உடன்பாட்டை முழு அளவில் நிறைவேற்றுவதற்கும், கெடுபிடி நிலைமையில் தணிவு நிரந்தர வடிவம் பெறுமாறு செய்யவும் அரசியல் கெடுபிடி தணிவதோடு படைத்துறைக் கெடுபிடியும் தணிய வகை செய்யவும் கெடுபிடி குறைவதற்கு நிலையான பொருளியல் அடித்தளம் அமைக்கவும் முயல்வதற்கும் தன்னால் முடிந்த எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க சோவியத் யூனியன் உறுதியாகத் தீர்மானித்திருக்கிறது.

இதற்கு நம்பிக்கையூட்டும் சான்ருக விளங்குகின்றன சோ.யூ.க. கட்சியின் 26வது காங்கிரசினது தீர்மானங்கள். சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கைச் செயல் திட்டம் கெடுபிடி நிலேயைத் தளர்த்தும் நிகழ்முறையைத் தொடர்வதற்கும் ஆழப்படுத்துவதற்குமான செயல்திட்டம், ஆயுத உற்பத்திப் போட்டியை நிறுத்துவதற்கான செயல் திட்டம் என்று அவற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சோ.யூ.க. கட்சியின் 24வது, 25வது காங்கிரசுகளின் ஆவணங்களில் வகை செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகளேச் செயல்படுத்தியதோடு கூடவே, 26வது காங்கிரஸ் முக்கிய மான புதிய யோசனேகளே முன்வைத்தது. ஐரோப்பாவில் பரஸ்பர நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகளின் பயன் பாட்டு நிலப்பரப்பை விரிவாக்குவது, இந்த நடவடிக்கை களேத் தூரக் கிழக்கில் மேற்கொள்வது, அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் பேச்சு வார்த்தைகளேத் தொடர்வது, ஐரோப் பாவில் புதிய அணுவாயுத ராக்கெட்டு சாதனங்களே நிறு வுவதை நிறுத்தி வைப்பதற்கான தவணே ஏற்படுத்துவது ஆகியவை இவற்றில் சில. உலக முற்போக்குச் சமூகப் பிரதி நிதிகள் இந்த யோசனேகள்பால் பெருத்த ஆர்வம் காட்டி இவற்றுக்கு ஆதரவு தந்தார்கள்.

# அத்தியாயம் ஆறு

# சோஷலிசம் கம்யூனிசத்தின் முதல் படி

## 1. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிக்கும் காலப் பகுதி

**பரிணமிக்கும் காலப் பகுதியின் இன்றியமையாமை**

வீட்டையோ, வேறு எதையேனும் கட்டிடத்தையோ, கட்டுபவனின் வசம் உள்ள பொருள்களைக் கொண்டே நிறுவ முடியும். அதே போல, புதிய சமூகக் கட்டிடமான சோஷலிசம் முதலாளித்துவத்திலிருந்து மனிதர்களுக்குக் கிடைக்கும் பொருள்களாலேயே உருவாக்கப்படுகிறது. முதலாளித்துவத்தின் உற்பத்தி, தொழில்நுட்பம், விஞ்ஞானம், பண்பாடு ஆகியவற்றின் சாதனைகளுடைய அடிப்படையில், மொத்தத்தில் முதலாளித்துவத்தின் நிலைமைகளில் வளர்ந்து பயிற்சி பெற்ற மனிதர்களால் நிறுவப்படுகிறது சோஷலிசம். அதே சமயம் சோஷலிசம் பண்பு வகையில் புதிய சமூகம் ஆகும்.

தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவத்தின் பொருளாதாரமும் சமூக உறவுகளும் உளப் பண்பாடும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களான அற்பச் சிறுபான்மை மனிதர்களின் நலன்களுக்குத் தொண்டு ஆற்றுகின்றன. மாறாக, சமூகச் சொத்துரிமையையும் மனிதர்களின் நட்புறவையும் பரஸ்பரப் புரிவையும் சார்ந்துள்ள சோஷலிசமோ, உழைப்பாளிகளுடைய சமூகம், உழைப்பாளிகளுக்கான சமூகம். முதலாளித்துவம் தன்னியல்பாக வளரும் சமூகம். சோஷலிசமோ, உணர்வு பூர்வமாக இயக்கப்படும் சமூகம். இயல்பாகவே, சமூக வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அடிப்படையான பண்புவகை மாற்றங்கள் நிகழ்த்தாமல் சோஷலிசத்தைக் கட்டி அமைப்பது முடியாது. ஆனால் இந்த மாற்றங்

களை நிகழ்த்துவது ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட சுரண்டு வோர் வர்க்கங்களின் கடுமையான எதிர்ப்புக்கு உள்ளாகிறது.

சுரண்டுவோரின் எதிர்ப்பைச் சமாளிக்கவும், பொருளாதாரத்திலும் சமூக உறவுகளிலும் உள வாழ்விலும் அடிப்படையான சோஷலிசத் தன்மை கொண்ட மாற்றங்கள் செய்யவும், அவற்றை உழைப்பாளிக்குத் தொண்டாற்ற வைக்கவும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிக்கும் காலப் பகுதி இன்றியமையாதது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிக்கும் காலப் பகுதியில் முதலாளி வர்க்கம் ஆட்சியிலிருந்து அகன்று விட்டிருக்கும், ஆனல் முதலாளித்துவம் இன்னமும் முற்ருக ஒழிக்கப்பட்டிராது. ஆட்சி அதிகாரத்தை இழந்த சுரண்டுவோர் வர்க்கங்கள் வெற்றி பெற்ற உழைப்பாளி வர்க்கங்களுக்கு எதிராகப் போராட்டத்தை நிறுத்தாமல் நடத்திக் கொண்டிருக்கும். சோஷலிசத் தன்மை கொண்ட ஆழ்ந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும், ஆனல் சோஷலிசம் இன்னமும் கட்டி அமைக்கப்பட்டிராது.

## சோஷலிசக் கட்டுமானத்தின் பொது விதிகளும் வடிவ வேறுபாடுகளும்

புதிய சமூகத்தை நிறுவுவதற்கான அடிப்படை விதிகள் மீற முடியாத முக்கியத்துவம் உள்ளவை என்று சோவியத் யூனியனிலும் மற்ற நாடுகளிலும் பெறப்பட்ட சோஷலிசக் கட்டுமானத்தின் அனுபவத்தின் பேரில் கூற முடியும். சோஷலிசக் கட்டுமானப் பாதையில் அடி வைக்கும் பிற நாடுகளிலும் குறிப்பிட்ட நிலைமைகளில் இந்த விதிகள் மீண்டும் செயல்படுகின்றன. இந்தக் காரணத்திஞல் அவை முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதற்கான பொது விதிகள் என்ற முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

ஆனுலும் இந்தப் பொது விதிகள் வெவ்வேறு நாடுகளில் ஒரே விதமாக வெளிப்படுவதே இல்லை. சோஷலிசத்தைக் கட்டி அமைக்கும் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளிலிருந்து வேருன, தனக்கே உரிய நிலைமைகளை—பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சித் தரம், தனது சொந்த வரலாறு, இயற்கை நிலைமைகள், இயற்கைச் செல்வ வளங்கள், வர்க்கச் சக்திகளின் ஒப்பு நிலை, மக்களின் தேசியத் தனித்தன்மைகள்

மரபுகள் முதலியவற்றைப்—பெற்றிருக்கிறது. தவிரவும், வெவ்வேறு நாடுகள் சோஷலிசக் கட்டுமானத்தை நிறைவேற்றும் போது நிலவும் சர்வதேச நிலைமைகள் ஒரே மாதிரியானவை அல்ல. இந்தக் காரணத்தால் ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் பரிணமிப்பதற்கான தனிவகைச் சிறப்புத் தன்மைகள் காணப்படுகின்றன. வி.இ. லெனின் பின்வருமாறு எழுதினார்: ''எல்லாத் தேசங்களும் சோஷலிசத்துக்கு வரும், இது தவிர்க்க முடியாதது. ஆனால் எல்லாம் முற்றிலும் ஒரே மாதிரி வர மாட்டா. ஜனநாயகத்தின் ஏதேனும் ஒரு வடிவத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு மாதிரியில், சமூக வாழ்வின் வெவ்வேறு பகுதிகளது சோஷலிச மாற்றங்களின் ஒரு வேகத்தில், ஒவ்வொன்றும் தனித் தன்மையைக் கொண்டு வரும்.''* இதனால் தெரிவது என்னவென்றால், ஒரு நாட்டில் சோஷலிசக் கட்டுமானத்தின் தனித்தன்மைகள் சோஷலிச மாற்றங்களின் சாரத்தை அல்ல, அவற்றின் வடிவங்களையும் முறைகளையும் கெடுக்களையும் வேகங்களையும் தீவிரத்தையுமே பாதிக்கின்றன என்பதே. இந்தத் தனித்தன்மைகள் பொது விதிகளை நீக்கிவிடுவதில்லை.

**தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரமும் சோஷலிசக் கட்டுமானத்தின் நிர்ணயகரமான நிபந்தனை**

சோஷலிசச் சமூகத்தைக் கட்டி அமைப்பதற்கு வேண்டிய நிர்ணயகரமான நிபந்தனை **தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரமும்** ஆகும். பாட்டாளி வர்க்க அரசு நிலவுவதும், தொழிலாளி வர்க்கமும் அதன் முன்னணியான கம்யூனிஸ்டுக் கட்சியும் தலைமைப் பாத்திரம் வகிப்பதும் சோஷலிசக் கட்டுமானத்தின் மிக முக்கிய விதி ஆகும்.

ஒரு நாட்டின் வரலாற்றுப் போக்கில் உருவாகும் திண்ணமான வளர்ச்சி நிலைமைகளைப் பொறுத்து தொழிலாளி வர்க்கத்தினதும் எல்லா உழைப்பாளிகளுடையவும் ஆட்சியின் வடிவங்கள் வெவ்வேறாக இருக்க முடியும். சோவியத்

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 123 (ருஷ்யனில்).

யூனியனில் வரலாற்றில் முதன் முதலாக உழைப்பாளி மக்களின் ஆட்சி சோவியத்துக்களின் வடிவத்தில் நிலைபெற்றது. வேறு பல சோஷலிச நாடுகளில் இது மக்கள் ஜனநாயகத்தின் வடிவத்தை மேற்கொண்டது. சோவியத்துக்களுக்கு மாருக, சில நாடுகளில் (பல்கேரியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலந்து முதலியவற்றில்) சோஷலிச அமைப்பு பல கட்சிகள் உள்ளதாகவும், மரபு வழி வந்த நாடாளுமன்ற வடிவங்களை (ஹங்கேரியாவில் அரசு மன்றம், போலந்தில் செயிம் முதலியவற்றைப்) பயன்படுத்துவதாகவும், மக்கள் (தேசியக்) கூட்டணி—அதாவது, கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் சோஷலிசக் கட்டுமானத்தைச் செயல்படுத்தும் மக்களுடைய மிகப் பல்வேறு வகுப்பினர் அடங்கிய வெகுஜன நிறுவனம்—நிலவுவதாகவும் விளங்குகிறது. தவிரவும், போர்க் குற்றவாளிகளும் அவர்களுடைய கூட்டாளிகளும் நீங்கலாக, சுரண்டுவோர் வர்க்கங்களின் பிரதிநிதிகள், உழைக்காத நபர்கள் ஆகியோருடைய அரசியல் உரிமைகளை மக்கள் ஜனநாயகம் பறித்து விடுவதில்லை.

**பொருளாதார மாற்றங்கள்**

பொருளாதாரம் சமூக வாழ்வின் அடிப்படை ஆகும். எனவே பொருளாதார மாற்றங்கள், முதன்மையாகத் தனியார் உடைமைகள் சமூக உடைமைகளாக மாற்றப்படுவது, பரிணமிப்புக் காலப் பகுதியில் நிர்ணயகரமான முக்கியத்துவம் பெறுகின்றன. சமூகச் சொத்துரிமையை நிலைநாட்டுவதற்கான மிக முக்கியச் சாதனமாக விளங்குவது சோஷலிசத் தேசிய உடைமையாக்கம் ஆகும்.

சோஷலிசத் தேசிய உடைமையாக்கம் என்பது தொழிற்சாலைகள், மின் நிலையங்கள், கடல் வழி, இருப்புப் பாதை வழிப் போக்குவரத்து, பெரிய விவசாய, வர்த்தக நிலையங்கள் முதலிய முக்கிய உற்பத்திச் சாதனங்களை முதலாளி வர்க்கத்திடமிருந்து பறித்து பாட்டாளி வர்க்க அரசின் உடைமை ஆக்குவதாகும். பெரிய தொழில் துறை, வங்கிகள், வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவற்றைத் தேசிய உடைமை ஆக்குவது சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் உள்ளது. அவ்வாறு செய்கையில் நிர்ணயகரமான நெம்புகோல்களை அரசு தன் கைகளில் எடுத்துக் கொள்கிறது. உழைப்பாளி மக்களின் நலன்களுக்கு ஏற்ப நாட்டின் பொருளாதார வளர்ச்சி மீது செல்வாக்கு செலுத்தவும், பொருளா

தாரத்தினதும் பிற சமுதாய நிகழ்முறைகளதும் நிர்வாகத்தை ஒழுங்கமைக்கவும் பொருள்களின் உற்பத்தி, கணக்கீடு, வினியோகம் ஆகியவற்றைத் திட்டத்துக்கு இணங்கச் செயல்படுத்தவும், முதலாளித்துவத்திடமிருந்து நாடு பொருளாதாரச் சுதந்திரம் பெற வகை செய்யவும் இந்த நெம்புகோல்கள் அரசுக்கு வாய்ப்பு அளிக்கின்றன.

தேசிய உடைமையாக்கத்தின் விளைவாக அனைத்து மக்கள் சொத்துரிமையை ஆதாரமாகக் கொண்ட சோஷலிச அமைப்பு முறை தோன்றுகிறது. சோஷலிச அமைப்பு முறையின் வரம்புகளுக்குள் சுரண்டல் ஒழிக்கப்படுகிறது, முதலாளித்துவச் சமூகத்துக்கு இயல்பான உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் வினியோகத்தின் தனியார் வடிவத்துக்கும் இடையே உள்ள முரண்பாடு அகற்றப்படுகிறது, வளர்ச்சியின் தான்தோன்றிப் போக்கு அடக்கப்பட்டு, இயக்கப்படும் திட்டமிட்ட வளர்ச்சி நாளடைவில் அதன் இடத்துக்கு வருகிறது. தேசிய உடைமை ஆக்கப்பட்ட தொழில் நிலையங்களில் உறுதியான பொருளாதார அடித்தளம் பாட்டாளி வர்க்க அரசுக்குக் கிடைக்கிறது. சோஷலிசத்தை நோக்கிய முன்னேற்றத்தின் அளவுக்கு ஏற்ப இந்த அடித்தளம் விரிவாகி மேலும் வலுப்படுகிறது.

திண்ணமான சூழ்நிலைகளைப் பொறுத்துத் தேசிய உடைமையாக்கம் இடையீடு இன்றி நேராகச் செய்யப்படலாம், அல்லது அனேக இடைநிலைப் பரிணமிப்புக் கட்டங்கள் வழியாகச் சுற்றி வளைத்துச் செயலாக்கப்படலாம்.

தேசிய உடைமையாக்கத்தின் இடைநிலைக் கட்டங்களில் ஒன்று அரசு முதலாளித்துவம் ஆகும். அரசு முதலாளித்துவத்தின் வடிவங்கள் வெவ்வேறாக இருக்கக் கூடும். சலுகைகள், தனித் தொழிலதிபர்களுக்குத் தொழில் நிலையங்களைக் குத்தகைக்கு விடுவது, அரசுக்கும் தனியாருக்கும் ஒரே நேரத்தில் சொந்தமான கலப்புத் தொழில் நிலையங்கள் முதலியன இவை. ஆனால் இவற்றின் சமுதாய பொருளாதார இயல்பு ஒன்றே தான்: இந்தத் தொழில் நிலையங்கள் தனியார் மூலதனத்தை முதலீடாகக் கொண்டு இயங்குபவை, ஆனால் பாட்டாளி வர்க்க அரசின் கண்காணிப்பில் இருப்பவை, அதன் கோரிக்கைகளை நிறைவேற்றுபவை, சோஷலிசக் கட்டுமானத்தின் நலன்களுக்காக அதனால் பயன்படுத்தப்படுபவை.

முதலாளித்துவத் தொழில் நிலையங்கள் மீது அவற்றில்

வேலை செய்யும் தொழிலாளர்கள், அலுவலர்கள் குழுக்களால் நடத்தப்படும் வெவ்வேறு வகையான தொழிலாளர் கண்காணிப்பும் தேசிய உடைமையாக்கத்தின் பரிணமிப்பு வடிவங்களில் ஒன்றாகும். உற்பத்தியின் ஒழுங்கமைப்பும் நிர்வாகமும், தொழிலாளர்கள், அலுவலர்களின் நியமனமும் வேலை நீக்கமும், உற்பத்தியாகும் பொருள்களின் தரமும் அவற்றின் வினியோகமும், உழைப்புக்குரிய ஊதியம் முதலியவற்றை உழைப்பாளிகள் கண்காணிக்கிறார்கள். தொழிலாளர் கண்காணிப்பு நடத்துகையில் உற்பத்தியையும் வினியோகத்தையும் நிர்வகிக்கும் நல்ல பயிற்சி உழைப்பாளிகளுக்குக் கிடைக்கிறது. நிதி வசதி செய்வது, கணக்கிடுவது முதலியவற்றிலும் அவர்கள் தேர்ச்சி பெறுகிறார்கள்.

பெருத்த நில உடைமையாளர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் சொந்தமான நிலமும் பரிணமிப்புக் காலப் பகுதியில் (முழுதுமோ, ஓரளவோ) தேசிய உடைமை ஆக்கப்படுகிறது. உதாரணமாக, சோவியத் யூனியனில் எல்லா நிலமும் தேசிய உடைமை ஆக்கப்பட்டது. அதன் பெரும் பகுதி விவசாயிகளின் நிரந்தரமான இலவசப் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டது. மற்றப் பகுதியை அரசு விவசாயப் பண்ணைகள் (சோவியத் பண்ணைகள்) அமைப்பதற்காக அரசு பயன்படுத்தியது. பிற சோஷலிச நாடுகளில் நிலத்தின் ஒரு பகுதி தேசிய உடைமை ஆக்கப்பட்டிருக்கிறது, மறு பகுதி விவசாயிகளின் உடைமையாக விடப்பட்டிருக்கிறது.

சிறு உற்பத்தியாளர்களான விவசாயிகளின் பண்ணை சீர்திருத்தப்படுவது சோஷலிச அமைப்பு முறை முழு வெற்றி அடைந்து சோஷலிசப் பொருளாதாரம் உருவாக்கப்படுவதில் கட்டாயமாக அடங்கியுள்ளது.

நாட்டுப்புறத்தில், விவசாயத்தில், சோஷலிசச் சொத்துரிமை எவ்வாறு நிலை பெறுகிறது?

குறைந்த நிலம் உள்ளவர்களும் அறவே நிலம் இல்லாதவர்களுமான விவசாயிகளும் பண்ணையாட்களும் நிலம் பெறலாம், அதிக வசதியுள்ள நில உடைமையாளர்கள் ஆகலாம் என்ற நம்பிக்கையில் ஊக்கத்துடன் புரட்சியில் பங்காற்றுகிறார்கள். வெற்றி பெறும் புரட்சி அவர்களுடைய நம்பிக்கையைப் பொய்யாக்குவது கூடாது. முந்திய பெரு நிலச் சொந்தக்காரர்களின் நிலத்தில் கணிசமான பகுதி நிலத்தைப் பண்

படுத்துபவர்களான பண்ணையாட்களுக்கும் ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கும் உடைமையாகவோ பயன்பாட்டுக்காகவோ புரட்சியின் போது பகிர்ந்து அளிக்கப்படுகிறது. விளைவாக, பண்ணைகளின் பரப்பு அதிகரிப்பதற்கு மாருக அவை முன்னிலும் சிறியவையாகத் துண்டுபடுத்தப்படுகின்றன. ஆகையினுல் தான் விவசாயத்தில் சிறு உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை புரட்சிகளுக்குப் பிறகு குறையாமல் இருப்பது மட்டும் இன்றி, மேற்கொண்டும் அதிகம் ஆகிறது.

இந்த நிலைமைகளில் நாட்டுப்புறத்தைச் சோஷலிசப் பாங்கில் சீர்திருத்துவதற்குச் சாத்தியமான ஒரே வழியாக விளங்குவது **விவசாயத்தைக் கூட்டுறவு முறையில் அமைப்பது ஆகும். நாட்டுப்புறத்தில் உள்ள தனியார் சிறு பண்ணைகள் கூட்டுறவுப் பண்ணைகள் எனப்படும் கூட்டான பெரிய பண்ணைகளாகச் சேர்கின்றன.**

உழைப்பும் முக்கிய உற்பத்திச் சாதனங்களும் பொது உடைமை ஆக்கப்படுவது கூட்டுறவுப் பண்ணைகளின் முதன்மையான சிறப்புத் தன்மை ஆகும். உழைப்பும் உற்பத்திச் சாதனங்களும் பொது உடைமை ஆக்கப்படும் அளவுக்கு ஏற்பக் கூட்டுறவுப் பண்ணைகள் வெவ்வேறு வடிவங்களை மேற்கொள்ளக் கூடும். சோவியத் யூனியனிலும் பிற சோஷலிச நாடுகளிலும் விவசாயம் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டதன் அனுபவம் கூட்டுறவுப் பண்ணைகளின் மூன்று முக்கிய வடிவங்களைத் தோற்றுவித்தது:

1. நிலத்தைக் கூட்டாகப் பண்படுத்துவதற்கான கழகம். கூட்டுறவுப் பண்ணைகளின் தாழ்ந்த, தொடக்க வடிவம் இது. உற்பத்திச் சாதனங்களும் நிலமும் இதில் பொது உடைமை ஆக்கப்படுவதில்லை. உழைப்பு மட்டுமே பொது உடைமை ஆக்கப்படுகிறது. குறிப்பிட்ட விவசாய வேலைகளைக் கூட்டாகச் செய்வதற்காக விவசாயிகள் ஒன்று சேர்கிருர்கள்.

2. உற்பத்திச் சாதனங்களும் உழைப்பும் பொது உடைமை ஆக்கப்பட்டு, நிலம் இன்னும் விவசாயிகளின் உடைமையாக இருந்து வரும் கூட்டுறவு நிறுவனம். வருவாயும் இதற்குஏற்பப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. அதன் பெரும் பகுதி உழைப்புக்குத் தக்கபடி வினியோகிக்கப்படுகிறது. சிறு பகுதி கூட்டுறவு நிறுவன உறுப்பினர்களுக்குச் சொந்தமான நிலத்தின் அளவுக்கு ஏற்பப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

3. விவசாய உழைப்பாளர் கூட்டுறவுக் கழகம். இதில் நிலமும் உழைப்பும் உற்பத்திச் சாதனங்களும் பொது உடைமை ஆக்கப்படுகின்றன, வருவாயைப் பகிர்ந்து அளிப்பதற்கான ஒரே வடிவமாக விளங்குகிறது உழைப்புக்கு ஏற்ற வினியோகம். இது கூட்டுறவு முறையில் அமைந்த பண்ணையின் அதிக உயர்ந்த வடிவம் ஆகும். சோவியத் யூனியனில் இது ''கோல்கோஸ்'' (கூட்டுப் பண்ணை) என்று அழைக்கப்படுகிறது.

கூட்டுறவு முறையில் உழைப்பும் உற்பத்திச் சாதனங்களும் பொது உடைமை ஆக்கப்படுவது தனியார் பண்ணை ஒழிக்கப்பட்டதாக அர்த்தப்படாது. வீடு, அன்றாட வாழ்க்கைத் தேவைக்கான சாதனங்கள், கால்நடைகள், தனக்கு அளிக்கப்பட்ட தனி நிலப் பகுதியில் சொந்த வேளாண்மை செய்ய உதவும் சில உழைப்புக் கருவிகள் ஆகியவை கூட்டுப் பண்ணை உறுப்பினனுக்குச் சொந்தமாய் இருக்கின்றன.

கூட்டுறவு முறை அமைப்பு விவசாய உற்பத்தியின் வளர்ச்சி மீது பெரிதும் சாதகமான பாதிப்பு விளைக்கிறது. அது பண்ணையைப் பெரிது ஆக்குகிறது, நவீன இயந்திர சாதனங்களையும் விஞ்ஞானச் சாதனைகளையும் கையாள விரிவான இடம் தருகிறது, உழைப்பு சக்தியையும் ஒன்றித்த உற்பத்திச் சாதனங்களையும் முன்னிலும் அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வாய்ப்பை உருவாக்குகிறது. தவிரவும், சோஷலிசச் சொத்துரிமை நிலை பெறுவதன் விளைவாக விவசாயமும் இயக்கப்படக் கூடியது ஆகி, அரசு அனைத்திற்கும் பொதுவான திட்ட வகுப்பினதும் தலைமையினதும் வட்டத்துக்குள் வந்து விடுகிறது. தன்னியல்பாக வளர்ந்து கொண்டு போகும் சிறு தனி நபர்ப் பண்ணைகளை உணர்வு பூர்வமாக இயக்குவதும் அவற்றின் செயல்களைத் திட்டப்படுத்துவதும் நடப்பில் அசாத்தியமானவை. கூட்டுறவு முறை அமைப்பின் விளைவாக விவசாய விளைபொருள்களின் உற்பத்தி அதிகரிக்கிறது.

சோஷலிசத் தன்மை கொண்ட இயந்திரத் தொழில் பெருக்கம், அதாவது மிக நவீன விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளின் அடிப்படையில் அமைந்த தற்காலப் பெரிய இயந்திரத் தொழில்துறையை உருவாக்குவது சோஷலிசத்தைக் கட்டி அமைப்பதற்கு, சிறப்பாக பலம் குன்றிய அல்லது போதிய

வளர்ச்சி பெருத தொழில்துறை உள்ள நாடுகளில் அதை நிறுவுவதற்கு, அசாதாரண முக்கியத்துவம் கொண்ட கட்டாய நிபந்தனையாகவும் அடிப்படையாகவும் விளங்குகிறது.

இயந்திரத் தொழில் பெருக்கம் மிகப் பெரிய சமுதாய அரசியல் முக்கியத்துவம் உள்ளது. பொருளாதாரத்தின் நிர்ணயகரமான துறையில் சமூகச் சொத்துரிமை வலுவடைவதையும் முதலாளித்துவப் பண்புக் கூறுகள் நகரிலிருந்து அகற்றப்படுவதையும் சோஷலிச அமைப்பு முறை தொழில் துறையில் வெற்றி பெறுவதையும் இது குறிக்கிறது. பெரிய தொழில்துறையின் வளர்ச்சி சமூக வாழ்க்கையில் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரமும் முக்கியத்துவமும் உயர்வதையும் மற்ற வர்க்கங்கள் மீதும் சமூக வகுப்புக்கள் மீதும் அதன் செல்வாக்கு அதிகரிப்பதையும் காட்டுகிறது. இதன் பொருள் என்ன என்ருல், இயந்திரத் தொழில் பெருக்கத்தோடு கூடவே பாட்டாளி வர்க்க அரசின் பொருளாதார அடித்தளமும் அத்துடன் அரசியல் அடித்தளமும் விரிவாகி வலுவடைகின்றன என்பதும் சோஷலிசச் சமூக சக்திகளின் நிலைகள் உறுதிப்படுகின்றன என்பதும் ஆகும்.

சோஷலிச இயந்திரத் தொழில் பெருக்கத்தின் வடிவங்களும் முறைகளும் முதலாளித்துவ இயந்திரத் தொழில் பெருக்கத்திலிருந்து அடிப்படையில் வேறுபடுகின்றன. உழைப்பாளிகளைச் சுரண்டுவதன் மூலமும் மற்ற நாடுகளின் மக்களைச் சூறையாடுவதன் மூலமும் வெல்லப்பட்ட மக்களிடமிருந்து போர்க் கப்பம் வசூலிப்பதன் மூலமும் பின்னது செயல்படுகிறது. சோஷலிச இயந்திரத் தொழில் பெருக்கமோ முதன்மையாக உள்நாட்டுச் சேமிப்புக்களைக் கொண்டு செய்யப்படுகிறது. உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்வது, பொருளாதாரம் திட்டப்படி நிர்வகிக்கப்படுவது, பொருள்களும் ஆள்வளமும் நிதி வளங்களும் அறிவார்ந்த முறையில் பயன்படுத்தப்படுவது ஆகியவற்றின் மூலம் இந்தச் சேமிப்புக்கள் பெறப்படுகின்றன.

சோஷலிச இயந்திரத் தொழில் பெருக்கத்தின் குறிக்கோள்களும் கோட்பாட்டளவில் வேருனவை. முதலாளிகளுக்கு முடிந்த வரை அதிக லாபம் கிடைக்க வகை செய்வது முதலாளித்துவ இயந்திரத் தொழில் பெருக்கத்தின் குறிக்கோள் என்ருல், உழைப்பாளிக்குத் தொண்டு புரிவது, அவ

னுடைய தேவைகளை நிறைவேற்றுவது, அவனது சர்வாம்ச வளர்ச்சிக்கு வகை செய்வது சோஷலிச இயந்திரத் தொழில் பெருக்கத்தின் இறுதியான மனிதாபிமானக் குறிக்கோளா கும்.

தேசிய உடைமையாக்கம், விவசாயம் கூட்டுறவு முறை யில் அமைக்கப்படுவது, இயந்திரத் தொழில் பெருக்கம் ஆகியவை சோஷலிச வளர்ச்சிப் பாதையை மேற்கொண்ட நாடுகளில் வெவ்வேறு விதங்களில் செயல்படுத்தப்பட்டன. சோவியத் யூனியனில் தேசிய உடைமையாக்கம் மிகக் குறு கிய நேரத்தில்—சில மாதங்களுக்குள் (1917 டிசம்பர் முதல் 1918 ஜூன் வரை)—செயலாக்கப்பட்டு விட்டது. பரிண மிப்பு வடிவங்கள், அரசு முதலாளித்துவம் அடங்கலாக, இங்கே விரிவாகப் பரவவில்லை, ஏனென்றால், முதலாளி வர்க் கம் இந்த வடிவங்களை ஏற்க விரும்பவில்லை, சோவியத் ஆட்சி யின் நடவடிக்கைகளுக்கு எல்லா வகையிலும் மறைமுகமாகக் கேடு விளைத்து வந்தது. மற்ற சோஷலிச நாடுகளில் தேசிய உடைமையாக்கம் சில ஆண்டுக் காலம் நீடித்தது. இந்த நாடு களில் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுடைய கையாட் களுக்குச் சொந்தமாய் இருந்த தொழில் நிலையங்கள் முதலில் பறிமுதல் செய்யப்பட்டன, பின்புதான் மற்றத் தொழில் நிலை யங்கள் நாளடைவில் தேசிய உடைமை ஆக்கப்பட்டன. அரசு முதலாளித்துவத்தின் வெவ்வேறு வடிவங்கள், சிறப்பாகக் கலப்புத் தொழில் நிலையங்கள், இந்த நாடுகளில் விரிவாகப் பரவின. அனேக நாடுகளில் பறிமுதலான தொழில் நிலையங் களுக்காக முன்னுள் தொழிலதிபர்களுக்கு இழப்பீடு தரப்பட் டது. சோவியத் நாட்டிலோ, இழப்பீடு அளிக்கப்படவில்லை.

வெவ்வேறு நாடுகளில் விவசாயத்தின் சோஷலிச மாற்றங்களுடைய வடிவங்களும் தனித் தனி வகையானவை. உதாரணமாக, செக்கோஸ்லொவாக்கியாவில் விவசாயக் கூட்டுறவுக் கழகங்களின் நான்கு வடிவங்கள் அமைந்துள் ளன, உற்பத்திச் சாதனங்களும் உழைப்பும் பொது உடைமை ஆக்கப்பட்ட அளவில் இவை வெவ்வேறானவை. கரும்பு, மற்றப் பயிர்கள் ஆகியவற்றின் தோட்டப் பண்ணைகள் மிக விரிவாகப் பரவி இருக்கும் கியூபாவில் பெரிய அரசுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மக்கள் பண்ணை கள். முக்கால் வாசி கரும்பு விளைச்சலும் தொழில் முறைப்

பயிர்களின் விளைச்சல் முழுவதும் மாடுகளில் பாதியும் இந்தப் பண்ணைகளுக்கு உரியவை.

### தேசிய இன உறவுகளின் சீர்திருத்தம்

தேசிய இன உறவுகளின் சோஷலிசத்தன்மை உள்ள சீர்திருத்தம் பரிணமிப்புக் காலப் பகுதியின் முக்கியப் பணிகளில் ஒன்று ஆகும். பல தேசிய இனங்கள் கொண்ட நாட்டில், ஆளும் தேசிய இனத்தோடு கூடவே அடிப்பட்டவையும் ஒடுக்கப் பட்டவையுமான தேசிய இனங்கள் இருந்த நாட்டில் இந்தப் பணியின் நிறைவேற்றம் சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் உள்ளது. எண்ணிக்கையில் பெரியவையும் சிறியவையுமான மக்கள் இனங்கள் பதிற்றுக் கணக்கில் வாழ்ந்து வந்த பழைய ருஷ்யாவில் நிலைமை இவ்வாறு தான் இருந்தது.

தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் திண்ணமான செயல்திட்டத்தை வி. இ. லெனினது தலைமையில் கம்யூனிஸ்டுக் கட்சி வகுத்தது. சமூக வாழ்வை முற்றுக ஜனநாயகப்படுத்துவது, எல்லா மானிட இனங்களதும் தேசிய இனங்களதும் உண்மையான சமவுரிமையை நிலைநாட்டுவது, சுதந்திர அரசுகளை அமைப்பது உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையைத் தேசிய இனங்களுக்கு வழங்குவது, நாட்டின் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளைச் சர்வதேசிய நோக்கில் ஒன்றுபடுத்துவது— இவையே இந்தச் செயல்திட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள். எண்ணிக்கையில் பெரியவையும் சிறியவையுமான மக்கள் இனங்கள் பால் மரியாதையும் அவற்றின் தேவைகளையும் விருப்பங்களையும் குறித்த ஆழ்ந்த கவலையும் நிறைந்திருந்த லெனினது தேசிய இனச் செயல்திட்டம் ருஷ்யாவின் பெருந்தொகையான தேசிய இனங்களைச் சேர்ந்த உழைப்பாளி மக்களை ஒன்றுபடுத்த உதவிற்று.

சோவியத் அரசாங்கத்தால் ஏற்கப்பட்ட ருஷ்யாவின் மக்கள் இனங்களது உரிமைகள் குறித்த பிரகடனம் (1917, நவம்பர் 15), தேசிய இன ஒடுக்குமுறை ஒழிக்கப்பட்டதையும் பெருந் தொகையான தேசிய இனங்களதும் மக்கள் இனங்களதும் அரசியல் சமத்துவமும் சட்ட ரீதியான சமத்துவமும் நிலைநாட்டப்பட்டதையும் அறிவித்தது. ஆயினும், தேசிய இனங்களின் விடுதலை தேசிய இன ஒடுக்குமுறையை ஒழிப்பதுடனும் அரசியல், சட்ட உரிமைகளில் தேசிய இனங்களைச்

சமப்படுத்துவதுடனும் நின்று விட முடியவில்லை. அவற்றின் நூற்றாண்டுக் காலப் பொருளாதார, பண்பாட்டுப் பின்தங்கிய நிலையைப் போக்குவது முதற்படியாக முக்கியமாய் இருந்தது. எதேச்சாதிகார ருஷ்யாவிடமிருந்து மரபு வழியில் பெறப்பட்டிருந்த பின்தங்கிய நிலையைப் போக்கும் இந்தக் கடினமான பணியையும் சோவியத் சோஷலிச அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியது. முன்பு ஒடுக்கப்பட்டிருந்த தேசிய இனங்களுக்குக் கட்டற்ற வளர்ச்சி பெறுவதற்கான உரிமையை அளித்ததோடு, பின்தங்கிய நிலையைப் போக்கவும் தேசியப் பொருளாதாரத்திலும் பண்பாட்டிலும் மிக உயர்ந்த மட்டங்களை எட்டவும் அவற்றுக்கு அது உதவியது.

தகுந்த தேர்ச்சி பெற்ற தேசிய இன அலுவர்களும் பெருத்த எண்ணிக்கை கொண்ட அறிவுஜீவிகளும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் சோவியத் குடியரசுகளில் தயாரானார்கள். பண்பாட்டுப் பின்தங்கிய நிலை நீக்கப்பட்டது. சோவியத் யூனியனின் மக்கள் இனங்கள் பொருளாதார வாழ்வில் மிக ஆழ்ந்த புரட்சியை நிறைவேற்றியதோடு மாபெரும் பண்பாட்டுப் புரட்சியையும் நிகழ்த்தின.

சோவியத் யூனியனின் எல்லாக் குடியரசுகளும் நூற்றுக்கு நூறு எழுத்தறிவு உள்ளவர்கள் கொண்டவை ஆயின. பெருத்த எண்ணிக்கையில் பள்ளிகளும் கல்லூரிகளும் விஞ்ஞான ஆராய்ச்சி மையங்களும் பண்பாட்டு நிலையங்களும் அவற்றில் நிறுவப்பட்டன. முன்பு பின்தங்கி இருந்த மக்கள் இனங்கள் பண்பு அளவில் புதிய சோஷலிசத் தேசிய இனங்களாக மாறி விட்டன. பொருளாதார, அரசியல், உளவியல் நலன்களின் பொதுமையால் இவை ஒன்றித்த சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியனாக இணைந்திருந்தன.

தேசிய இன ஒடுக்குமுறை முற்றாக ஒழிக்கப்படுவதற்கும், கட்டற்றவையும் சம உரிமைகள் உள்ளவையுமான மக்கள் இனங்கள் ஒரேஅரசாகத் தாமே விரும்பி இணைவதற்கும், தேசிய இனங்கள் உண்மையான மலர்ச்சி பெறுவதற்கும், ஒன்றோடொன்று நெருங்கிய நட்புறவு கொள்வதற்கும் ஏற்ற நிலைமைகளைச் சோஷலிசப் புரட்சி ஒன்றுதான் ஏற்படுத்துகிறது என்று சோவியத் யூனியனில் நடந்த தேசிய

இனக் கட்டுமானத்தின் அனுபவம் நம்பிக்கை ஊட்டும் விதத்தில் காட்டுகிறது.

**பண்பாட்டுப் புரட்சி** பண்பாட்டை மெய்யாக மக்களுக்கு உரியது ஆக்குவது பண்பாட்டுப் புரட்சியின் முக்கியப் பணி ஆகும். இதற்குத் தேவையானது, முதலாவதாக, எல்லா உளச் செல்வங்களையும் விஞ்ஞான, கலைச் சாதனைகளையும் மக்கள் அனைவரதும் செல்வமாக மாற்றுவது. இரண்டாவதாக, உழைப்பாளி வெகுஜனங்கள் அனைவரதும் கல்வி, பண்பாட்டுத் தரத்தை வெகுவாக உயர்த்துவது, மக்களது இயற்கைத் திறன்களுக்கும் மக்களின் படைப்பு ஆற்றல்களின் முழு வளர்ச்சிக்கும் விரிவான வாய்ப்பு அளிப்பது.

எல்லாப் பண்பாட்டு நிலையங்களையும், மனிதர்கள் மீது உளப் பாதிப்பு நிகழ்த்துவதற்கான எல்லாச் சாதனங்களையும் சோஷலிச அரசு தேசிய உடைமை ஆக்குகிறது, மக்கள் அனைவரதும் செல்வமாகச் செய்கிறது. நாடக, நடன மன்றங்கள், பொருட்காட்சிச்சாலைகள், திரைப்பட அரங்குகள், வானொலி, தொலைக்காட்சி, அச்சுப் பதிப்புக்கள் முதலியன இத்தகைய சாதனங்கள். புதிய பண்பாட்டு நிலையங்களையும் சோஷலிச அரசு நிறுவுகிறது. உழைப்பாளிகளுக்குக் கல்வியும் பயிற்சியும் அளிக்கும் பணியை அது தன் கைகளில் எடுத்துக் கொள்கிறது. பொது, சிறப்புக் கல்வி (நடுநிலை, உயர்நிலைப்) பள்ளியை அடியோடு மாற்றி அமைத்து மக்கள் கல்வி பெற ஏற்றதாக்குகிறது. மனித குலப் பண்பாட்டின் சாதனைகளைக் கற்றுத் தேறவும் தங்கள் பொது, சிறப்புக் கல்வியை உயர்த்திக் கொள்ளவும் உழைப்பாளிகளின் விரிவான வட்டாரங்களுக்கு முன் ஒருபோதும் இல்லாத வாய்ப்புக்கள் இதனாலேயே கிடைக்கின்றன.

ருஷ்யாவின் உழைப்பாளி வெகுஜனங்களோடு சேர்ந்து தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைகளில் எடுத்துக் கொண்ட போது நாட்டில் பெரும்பாலான மக்கள் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருந்தார்கள், பொதுக் கல்வியும் உயர் கல்வியும் படு வீழ்ச்சி அடைந்திருந்தன. ருஷ்யாவின் பின்தங்கிய தேசிய இன எல்லைப் பகுதிகளின் மக்களுடைய பொதுக் கல்விக்காகவும் உயர் கல்விக்காகவும் சோவியத் அரசு சிறப்பாக நிறையச் செய்தது.

**வளர்ச்சி பெற்ற சோஷலிசம்**

சோஷலிசச் சமூகம் தனது ஆக அதிக முழுமையுள்ள மலர்ச்சியை வளர்ச்சி பெற்ற சோஷலிசக் கட்டத்தில் அடைகிறது.

பொருளாதார, சமுதாய அரசியல், விஞ்ஞான தொழில் நுட்ப, உளவகைச் செயல்முறைகள் எதில் உயர்ந்த அளவு முதிர்ச்சியும் ஒற்றுமையும் அடைந்து விட்டனவோ அந்த மிகச் சிக்கலான சமுதாய உடல் போன்றது வளர்ச்சி பெற்ற சோஷலிசச் சமூகம். அதோடு கூட, இதிலே பொருளாதாரம் முதல் உளவகைப் பண்பாடுவரை எல்லாம் உழைப்பாளிக்குத் தொண்டு ஆற்றுகின்றன, அவனுடைய பொருளியல், உளவியல் தேவைகளின் நிறைவேற்றத்துக்கும் அவனுடைய சர்வாம்சச் சீர்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற நிலைமைகளை உருவாக்குவதில் ஈடுபடுகின்றன.

பொருளாதாரத் துறையில் முதிர்ச்சி பெற்ற சோஷலிசத்துக்கு இயல்பானது ஒன்றித்த திட்டப்படி வளர்ச்சி அடையும் இயக்க விரைவுள்ள உற்பத்தி. சோஷலிசச் சொத்துரிமையின் தனி ஆதிக்கம் இதன் அடிப்படை ஆகும். புத்தம் புதிய விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை ஆதாரமாகக் கொண்ட விறல் மிக்க பொருளியல் தொழில்நுட்ப அடித்தளம் உற்பத்தியின் பொருள் வகை அம்சமாக விளங்குகிறது. உயர்ந்த தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள், கூட்டுப் பண்ணையினர், நிபுணர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் அதன் மனித வகை அம்சம் ஆகும்.

மக்கள் அனைவரதும் நலன்களையும் விருப்பத்தையும் வெளியிடும் அனைத்து மக்கள் அரசு சமுதாய அரசியல் துறையில் வளர்ச்சி பெற்ற சோஷலிசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சோவியத் மக்கள் என்னும் புதிய வரலாற்றுப் பொதுமை இங்கே உருவாகி இருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின் பிரிக்க முடியாத ஒன்றிப்பும் நாட்டின் எல்லாத் தேசிய இனங்கள், மக்கள் இனங்கள் ஆகியவற்றின் நட்பும் இந்தப் பொதுமையின் அடிப்படையாக விளங்குகின்றன. வளர்ச்சி பெற்ற சோஷலிசச் சமூகத்தை நடத்திச் செல்வதும் ஒழுங்கமைப்பதுமான சக்தி கம்யூனிஸ்டுக் கட்சி ஆகும்.

மார்க்சிய-லெனினியக் கொள்கைவாதத்தின் ஆதிக்கம், ஒவ்வொருவருக்கும் அவரது திறமைகளுக்கும் முயற்சிக்கும் ஏற்ப இயலறிவும் தொழிலும் கிடைக்க வகை செய்வதான கல்வி, பண்பாட்டு வளர்ச்சியின் உயர்ந்த தரம், பொதுக் கல்வி, தொழில்துறைத் தேர்ச்சியின் இடையறுத மேம்பாடு, உளவகை, ஒழுக்க நெறி வகை, உடல் வகைச் சக்திகளின் வளர்ச்சி ஆகியவை உளவியல் துறையில் வளர்ச்சி பெற்ற சோஷலிசத்துக்கு இயல்பானவை.

வளர்ச்சி பெற்ற சோஷலிசத்தின் முக்கிய அடையாளமாக விளங்குவது சோவியத் சோஷலிச வாழ்க்கை முறை ஆகும். உண்மைக் கூட்டுத்துவமும் தோழமையும், எல்லாத் தேசிய இனங்களதும் மக்கள் இனங்களதும் ஒற்றுமையும் நட்பும் ஒத்துழைப்பும், சோவியத் மக்களை வலிமையும் நிலையுறுதியும் உள்ளவர்கள் ஆக்கும் ஒழுக்க நலமும் இந்த வாழ்க்கை முறைக்கு இயல்பானவை.

வளர்ச்சி பெற்ற சோஷலிசத்தின் மிக முக்கிய வெற்றியாகவும் பண்பாகவும் சோவியத் நாட்டில் விளங்குபவன் சோவியத் மனிதன். தீவிர தேசபக்தனுக இருந்து கொண்டே ஒத்திசைந்த சர்வதேசியவாதியாக இருந்தவனும் எப்போதும் இருந்து வருபவனுமான மனிதன் இவன்.

சோவியத் யூனியனில் வளர்ச்சி பெற்ற சோஷலிசச் சமூகத்தின் பொதுச் சித்திரம் இத்தகையது.

**சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டம்**

சோவியத் யூனியனின் நாடாளுமன்றமான சுப்ரீம் சோவியத் சோவியத் சோஷலிசக் குடியரசுகளது யூனியனின் புதிய அரசியல் சட்டத்தை 1977ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உறுதிப்படுத்தியது.

சோவியத் நாடு உருவாகி 60க்குச் சற்று மேலான ஆண்டுகளே கழிந்துள்ளன, ஆனால் இந்தக் காலத்தில் அது நூறாண்டுக்குச் சமமான பாதையைக் கடந்துள்ளது. வளர்ச்சி பெற்ற சோஷலிசம் அமைக்கப்பட்டு விட்டது, இன்றைய நிலையில் சமுதாய முன்னேற்றத்தின் ஆக உயர்ந்த தரம் எட்டப்பட்டு விட்டது.

வளர்ச்சி பெற்ற சோஷலிசச் சமூகம் அமைக்கப்பட்ட சேதிதான் புதிய அரசியல் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அனைத்து மக்கள் சோஷலிச ஜனநாயகத்தின்

வெற்றிகளும் குடிகளின் விரிவான உரிமைகளும் சுதந்திரங்களும் அவர்களுடைய கடமைகளும் சோவியத் யூனியனின் தேசிய அரசு அமைப்பும் அதிகார, நிர்வாக உறுப்புக்களின் தொகுப்பும் மற்றும் எவை எல்லாம் சேர்ந்து சோவியத் அரசின் அடிப்படைச் சட்டம் ஆகுமோ அந்த முக்கியக் கோட்பாடுகளும் இதில் காட்டப்பட்டுள்ளன.

அரசியல் சட்டத்தின் முதல் விதியில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன் என்பது நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள், எல்லாத் தேசிய இனங்களையும் மக்கள் இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிகள் ஆகியோரின் சித்தத்தையும் நலன்களையும் வெளியிடுவதான அனைத்து மக்கள் சோஷலிச அரசு.'' அரசியல் ஆட்சி அதிகாரம் முழுவதும் மக்களுக்கு உரியது. மையத்திலும் பகுதிகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்படும் உறுப்புக்களான மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் வாயிலாக அரசு ஆட்சி அதிகாரத்தை மக்கள் செயல்படுத்துகிறார்கள்.

சோவியத் சமூகத்தின் தலைமைச் சக்தியாகவும் இயக்கு சக்தியாகவும், அதன் அரசியல் அமைப்பினதும் எல்லா அரசு, சமூக நிறுவனங்களதும் மையக் கருவாகவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி விளங்குகிறது என்று கூறும் விதி அரசியல் சட்டத்தில் உள்ளது. சோ.யூ.க. கட்சி மக்களுக்காக நிலவுகிறது, மக்களுக்குத் தொண்டு புரிகிறது.

சோவியத் நாட்டினுடைய பொருளாதார அமைப்பின் அடிப்படை உற்பத்திச் சாதனங்கள் மீது சோஷலிசச் சொத்துரிமை ஆகும். சமூகச் செல்வமும் மக்களுடையவும் ஒவ்வொரு சோவியத் மனிதனுடையவும் வாழ்க்கை வசதிகளும் அதிகரிப்பதற்கு வகை செய்யும் ஊற்றாக இருக்கிறது கட்டற்ற உழைப்பு.

சோவியத் யூனியனின் பொருளாதாரம் ஒன்றித்த தேசியப் பொருளாதாரத் தொகுதி என்று அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அரசுத் திட்டங்களின் அடிப்படையிலும், தொழில் நிலையங்கள், தொழிலகக் கூட்டுக்கள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாக சுதந்திரத்துடனும் முன்முயற்சியுடனும் மையப்படுத்தப்பட்ட தலைமையை

இணைப்பதன் அடிப்படையிலும் அரசு இதை வழிகாட்டி நடத்துகிறது.

முந்திய அரசியல் சட்டத்துடன் ஒப்பிடுகையில் புதிய அரசியல் சட்டத்தில் புதிய அத்தியாயங்கள் அடங்கியுள் ளன. இவற்றில் ஒன்று சமுதாய வளர்ச்சியும் பண்பாடும் என்ற அத்தியாயம். நாட்டினரின் சமுதாய ஒருவகைப்பாட்டை அதிகரிப்பதற்கும், ஆளுமையின் ஒருங்கிசைந்த வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்குவதற்கும், மக்கள் கல்வி, உடல்நலப் பாதுகாப்பு, விஞ்ஞானம், பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதற்கும், உழைப்பு, வாழ்க்கை நிலைமைகளை மேம் படுத்துவதற்கும் அரசு உதவுகிறது என்றும், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கு ஏற்ப உழைப்புக்குரிய ஊதியத்தின் தரத்தை, உழைப்பாளிகளின் எதார்த்த வரு மானத்தை உயர்த்தும் கொள்கைப் போக்கை அது செயல் படுத்தி வருகிறது என்றும் இந்த அத்தியாயத்தில் கூறப்பட் டிருக்கிறது. சோவியத் அரசு லெனினது சமாதானக் கொள் கையை ஒத்திசைந்த முறையில் கடைப்பிடித்து வருகிறது என்றும், மக்களுடைய பாதுகாப்பு வலுவாக்கப்படுவதையும் விரிவான சர்வதேச ஒத்துழைப்பு செயலாக்கப்படுவதையும் ஆதரித்துப் போராடி வருகிறது என்றும் அறிவிக்கிறது வெளி நாட்டுக் கொள்கை என்ற அத்தியாயம். சோவியத் மக்களின் சோஷலிச வெற்றிகளையும் அமைதி நிறைந்த உழைப்பையும் சோவியத் யூனியனின் இறைமையையும் பிரதேச முழுமை யையும் பாதுகாப்பதற்கு அரசு வகை செய்கிறது என்றும் இந்த நோக்கத்துடனேயே படைகள் அமைக்கவும் அனைத்து மக்கள் கட்டாய இராணுவ சேவை ஏற்படுத்தவும் பட்டிருக் கிறது என்றும் சுட்டிக் காட்டுகிறது சோஷலிசத் தாயகத்தின் தற்காப்பு என்ற அத்தியாயம்.

அரசியல் சட்டத்தில் அடங்கியுள்ள புதிய அம்சத்தின் பிரதானப் போக்கு சோஷலிச ஜனநாயகம் விரிவும் ஆழமும் ஆக்கப்படுவது ஆகும்.

சோவியத்துக்களின் உருவாக்கத்துக்கும் வேலைக்கும் உரிய ஜனநாயகக் கோட்பாடுகள் முதன்மையாக மேற் கொண்டு வளர்வுறுத்தப்பட்டுள்ளன, சமூகத்தின் வாழ்வு குறித்த மிக முக்கியப் பிரச்சினைகளின் தீர்வில் அவற்றின் பங்கை அதிகமாக்க வகை செய்யப்பட்டுள்ளது. சோ.சோ.கு.

யூனியனை நடத்துவது குறித்த எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான சட்ட உரிமை சோ.சோ.கு.யூ. சுப்ரீம் சோவியத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. வட்டார சோவியத்துக்கள் வட்டார முக்கியத்துவம் உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதோடு, தன் நிலப்பரப்பில் உள்ள எல்லா நிறுவனங்களுடையவும் வேலையைத் தங்கள் உரிமைகளின் வரம்புகளுக்குள் கண்காணித்தும் ஒருங்கிசைத்தும் வருகின்றன. சோவியத்துக்களும் அவற்றின் உறுப்பினர்களும் செய்யப்பட்ட வேலை குறித்துக் குடிகளுக்கு முறையாகத் தகவல் தெரிவிக்கவும் வாக்காளர்களுக்கு அறிக்கை செய்யவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தேர்வு முறையிலும் மாறுதல்கள் புகுத்தப்பட்டுள்ளன. முந்திய அரசியல் சட்டத்தின் படி 23 வயது ஆனவர்கள் சோ. சோ. கு. யூனியனின் சுப்ரீம் சோவியத் உறுப்பினர்களாகவும், 21 வயது ஆனவர்கள் யூனியன் குடியரசுகளுடைய சுப்ரீம் சோவியத்துக்களின் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று இருந்தது. புதிய அரசியல் சட்டத்தின்படியோ, 21 வயது ஆன குடிகள் சுப்ரீம் சோவியத் உறுப்பினர்களாகவும் 18 வயது ஆனவர்கள் மற்ற எல்லா சோவியத்துக்களுடைய உறுப்பினர்களாகவும் இருக்கலாம்.

தொழிற்சங்கங்கள், இளங் கம்யூனிஸ்டுகள் கழகங்கள், பிற வெகுஜன சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் அதிகரித்து வரும் பங்கை அரசியல் சட்டம் பிரதிபலிக்கிறது. சட்டங்களைப் பிரேரிக்கவும் அரசியல், பொருளாதார, சமுதாய பண்பாட்டுப் பிரச்சினைகளின் தீர்வில் பங்கு கொள்ளவும் அவற்றுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. உழைப்பாளிகளின் வேலைக் குழுக்களுடைய பாத்திரம் சிறப்பாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ''அரசு, சமூக விவகாரங்கள் குறித்த விவாதங்களிலும் அவற்றின் தீர்விலும், உற்பத்தியையும் சமுதாய வளர்ச்சியையும் திட்டமிடுவதிலும், ஊழியர்களைப் பயிற்றுவதிலும் வேலைக்கு அமர்த்துவதிலும், தொழில் நிலையங்களையும் அலுவலகங்களையும் நிர்வகிப்பது, உழைப்பு நிலைமைகளையும் அன்றாட வாழ்க்கை நிலைமைகளையும் மேம்படுத்துவது, உற்பத்தி வளர்ச்சிக்காகவும் சமுதாய பண்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் பொருளியல் ஊக்கப் பரிசுகளுக்காக

வும் ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துவது ஆகியவை குறித்த பிரச்சினைகளின் விவாதங்களிலும் தீர்வுகளிலும் உழைப்பாளிகளின் வேலைக் குழுக்கள் பங்கு கொள்ளும்'' என்று அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பால், மானிட இனம், தேசிய இனம் முதலியவை குறித்த எத்தகைய வேறுபாடுகள் இருந்தாலும் சோவியத் மக்கள் சட்டத்துக்கு முன் சமமானவர்கள் என்ற பொதுக் கோட்பாடு, சோ. சோ. கு. யூனியனின் குடிமை. குடிகளின் சம உரிமை என்னும் தனி அத்தியாயத்தில் நிலைப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஒவ்வொரு குடியினதும் வாழ்க்கையின் அடிப்படைகள் குறித்த உரிமைகளின் விரிவான பட்டியல் புதிய அடிப்படைச் சட்டத்தில் அடங்கி இருக்கிறது. இவையாவன: உழைப்பு, ஓய்வு, உடல்நலப் பாதுகாப்பு, சமுதாயக் காப்புறுதி, கல்வி, உறைவிடம், பண்பாட்டுச் சாதனைகளின் பயன்பாடு, விஞ் ஞான, தொழில்நுட்ப, கலைப் படைப்பு உரிமைகள். சோவி யத் குடிகளுக்கு மனச் சான்றுச் சுதந்திரம் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. எந்த மதத்தையும் கடைப்பிடிப்பதற்கும் மத வழிபாடு செய்வதற்கும் எந்த மதத்தையும் கடைப் பிடிக்காமல் இருப்பதற்கும் நாத்திகப் பிரசாரம் செய்வதற்கு மான சுதந்திரம் இது. சோவியத் மக்களுடைய அரசியல் உரிமைகளும் சுதந்திரங்களும் அரசியல் சட்டத்தில் நிலையாக வைக்கப்பட்டு இருப்பதோடு முன்னிலும் அதிக முழுமையாக முறைப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது ஆகும். பேச்சு, அச்சக வெளியீடு, கூட்டம் கூடுதல், பொதுக் கூட் டங்களும் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்துதல் ஆகியவற்றுக்கான சுதந்திரங்கள் இவற்றில் அடங்கும். அரசு, சமூக விவகாரங்களின் நிர்வாகத்தில் பங்கு பற்றுவதற்கான உரிமை அறிவிக்கவும் இவ்வாறு பங்கு பற்றுவதற்கு உரிய வடிவங்கள் சுட்டிக்காட்டவும் பட்டுள்ளன. அரசு, சமூக உறுப்புக்களுக்கு அவற்றின் செயலை மேம்படுத்துவதற்கான யோசனைகள் தெரிவிக்கவும், அவற்றின் வேலையில் காணும் குறைகளை விமர்சிக்கவும், பதவியாளர்களின் செயல்கள் குறித்து நீதிமன்றத்தில் முறையிடவும் குடிகளுக்கு உள்ள உரிமையும், உயிரும் உடல்நலமும் உடைமைகளும் தனி நபர் சுதந்திரமும் கவுரவமும் மதிப்பும் ஆக்கிரமிக்கப்படுவதிலி

ருந்து நீதிமன்றக் காப்பு பெறும் உரிமையும் நிலையாக்கப்பட்டிருக்கின்றன. விமர்சனத்துக்காகத் தொல்லைப்படுத்துவது தடை செய்யப்பட்டிருக்கிறது.

உரிமைகளையும் சுதந்திரங்களையும் சோஷலிசச் சமூக அமைப்புக்கு எதிராக, சோவியத் மக்களின் நலன்களுக்குக் கேடு விளைக்கும் வகையில் குடிகள் பயன்படுத்த முடியாது, கூடவும் கூடாது என்ற கருத்தைப் புதிய அரசியல் சட்டம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவது அவசியம்.

உரிமைகளையும் சுதந்திரங்களையும் செயல்படுத்துவது குடிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதுடன் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளது. முழு மனதுடன் உழைக்கவும் சோஷலிச உடைமையைப் பாதுகாக்கவும் வலுப்படுத்தவும் சோஷலிசத் தாயகத்தைக் காக்கவும் தேசிய இனங்களதும் மக்கள் இனங்களதும் நட்பை வலுப்படுத்தவும் குழந்தைகளைப் பயிற்றி வளர்ப்பதில் அக்கறை எடுத்துக் கொள்ளவும் சமூக விரோத நடவடிக்கைகளைச் சமரசம் இன்றி எதிர்க்கவும் சோவியத் யூனியனின் குடிகள் கடமைப்பட்டவர்கள். சோவியத் அரசின் நலன்களைக் காக்கவும் அதன் விறலையும் செல்வாக்கையும் வலுப்படுத்த உதவவும் அவர்கள் கடமைப் பட்டவர்கள். மற்ற நாடுகளின் மக்களோடு நட்பையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதிலும் உலக சமாதானத்தை ஆதரித்து வலுப்படுத்துவதிலும் உதவி செய்வது அவர்களுடைய சர்வதேசிய கடமை ஆகும்.

அரசியல் சட்டத்தின் நீதித் துறை, நடுவர் தீர்ப்பு, அரசாங்க வழக்குரைஞரின் மேற்பார்வை என்ற அத்தியாயம் சோவியத் நீதித் துறையின் ஆழ்ந்த ஜனநாயக இயல்பை விவரமாகக் காட்டுகிறது. சோவியத் நீதித் துறை ஒருபுறம் சோஷலிச முறைமையும் சட்ட ஒழுங்கும் மேற்கொண்டு வலுப்படுவதற்கும், மறுபுறம் சோவியத் யூனியனின் குடிகளுடைய உரிமைகளும் சுதந்திரங்களும் அதிக முழுமையாகச் செயலாக்கப்படுவதற்கும் சட்டத்திற்கும் நீதிமன்றத்துக்கும் முன் அவர்களுடைய சமத்துவம் கடைப்பிடிக்கப்படுவதற்கும் உதவுகிறது.

சோவியத் யூனியனின் அரசு சட்ட அமைப்பு பற்றிய பிரச்சினைகள் அரசியல் சட்டத்தில் பெரிய இடத்தைப் பெற்

றுள்ளன. ''சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன் பல தேசிய இனங்கள் அடங்கிய ஒன்றித்த யூனியன் அரசு. தேசிய இனங்களின் கட்டற்ற சுயநிர்ணயத்தின் விளைவாகவும் சம உரிமை உள்ள சோவியத் சோஷலிசக் குடியரசுகள் தாமே விரும்பி ஒன்றுபட்டதன் விளைவாகவும் சோஷலிசக் கூட்டரசுக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவானது இந்த அரசு'' என்று அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியன் சோவியத் மக்களின் அரசு ஒருமையை உருப்படுத்துகிறது, ஒன்று சேர்ந்து கம்யூனிசத்தைக் கட்டி அமைக்கும் நோக்கத்துடன் எல்லாத் தேசிய இனங்களையும் மக்கள் இனங்களையும் உறுதியாக இணைக்கிறது. சோவியத் யூனியனது தேசிய இனங்களும் மக்கள் இனங்களும் நாளுக்கு நாள் அதிக நெருக்கமாக இணைவதன் விளைவாகக் கட்டாயம் ஆகிவிட்ட அனைத்து யூனியன் பண்புகளை மேற்கொண்டு வலுப்படுத்துவது இந்த விதியிலும் வேறு சில விதிகளிலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன், அதில் அடங்கியுள்ள தேசியக் குடியரசுகள், பிரதேசங்கள், மாவட்டங்கள், எல்லா மட்டங்களையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் ஆகியவற்றின் அதிகார வரம்புகளும் சோவியத்துக்களின் தேர்தல் முறையும் மக்கள் பிரதிநிதிகளுடைய உரிமைகளும் கடமைகளும் சோவியத் யூனியன் அமைச்சரவையின் அதிகாரங்களும் அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

சோஷலிச அரசு எவ்வாறு வளர்ந்து வருகிறது, சோஷலிச ஜனநாயகத்தின் உள்ளியல்பு யாது, அரசினதும் சமூகத்தினதும் விவகாரங்களை நிர்வகிப்பதில் விரிவான வெகுஜனங்கள் ஆற்றும் செயல்முறைப் பங்கின் வடிவங்கள் எவ்வளவு பல வகையானவை, அதன் வீச்சு எவ்வளவு பெரியது என்பதைப் புதிய அரசியல் சட்டத்தின் ஏற்பு உலகு அனைத்திற்கும் காட்டியது.

வெற்றி பெற்ற சோஷலிசத்தின் முதல் அரசு சோவியத் மக்களதும் உலகின் எல்லாப் பிற நாடுகளின் மக்களதும் நலன்களுக்கு ஏற்ப தன் அயல்நாட்டுக் கொள்கையின் தலையான கோட்பாடாக ''சமாதானம்'' என்ற சொல்லைத் தனது

கொடியில் நிலையாகப் பொறித்துக் கொண்டிருப்பதைப் புதிய அரசியல் சட்டம் நம்பிக்கை ஊட்டும் வகையில் புலப் படுத்தியது. உலக சோஷலிச அனுபவத்தின் பொதுக் கருவூ லத்திற்கு அது வளம் கூட்டி இருக்கிறது. வெற்றி பெற்ற சோஷலிசத்தின் சாதனைகள் சோவியத் யூனியனின் அடிப் படைச் சட்டத்தில் பிரதிபலித்து, சோஷலிச வளர்ச்சிப் பாதையை அண்மையில் தெரிந்தெடுத்துள்ள நாடுகளின் மக்களுக்கு உள் தூண்டல் அளிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. தங்கள் உரிமைகளுக்காகவும் முதலாளித் துவச் சுரண்டலின் ஒடுக்குமுறையிலிருந்து மீட்சிக்காகவும் முதலாளித்துவ உலகின் உழைப்பாளி வெகுஜனங்கள் நடத்திவரும் போராட்டத்தில் அவர்களுடைய தன்னம் பிக்கையை இவை அதிகப்படுத்துகின்றன.

### சோஷலிசமும் தனி மனிதனும்

சுரண்டும் தனி மனிதன், உழைக்கும் தனி மனிதன் என்ற இரண்டு வகையான தனி மனிதர்கள் முதலாளித்துவ அமைப்பில் உள்ளனர். வாழ்க்கையின் எல்லா நலங்களையும், பொருளியல், உளவியல் பண்பாட்டின் எல் லாச் சாதனைகளையும் பயன்படுத்தும் வாய்ப்பு உழைக்கும் தனி மனிதனிடமிருந்து அடிக்கடி பறித்துக் கொள்ளப்படு கிறது. சமூகம் வர்க்கங்களாகப் பிரிவுபட்டதனுல் தனி மனி தனுக்கும் சமூகத்துக்கும் இடையே எழுந்த முரண்பாடு கடைசி எல்லை வரை கூர்மை அடைகிறது. இந்த முரண்பாடு சோஷலிசப் புரட்சியின் விளைவாகத்தான் தீர்க்கப்படும். மனிதனின் ஒருங்கிசைந்த முழு வளர்ச்சிக்கும் அவனது வாழ்க்கைச் செயல்களின் பல வகை வெளிப்பாட்டுக்கும் உகந்த முதனிலைகளை சோஷலிசம் ஏற்படுத்துகிறது.

தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் ஒழித்தும் எல்லாக் குடிகளுக்கும் சமமான அரசியல், சட்டரீதியான உரிமைகளும் கடமைகளும் இருக்க வகை செய்தும் தனி மனி தனின் வளர்ச்சிக்கான அரசியல் நிலைமைகளை சோஷலிசம் ஏற்படுத்துகிறது. பால், வயது, பிறப்பு, செய்தொழில், தேசிய இனம், மதம் ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகள் சமூக வாழ்வின் மிகப் பல வகையான துறைகளில் ஒவ்வோர் உழைப்பாளியும் செயல்முறைப் பங்கு ஆற்றுவதற்கு இங்கே தடையாக இருப்பதில்லை.

பொருளாதாரத்திலும் சமுதாய உறவுகளிலும் உள வாழ்விலும் விளைக்கப்பட்டுள்ள ஆழ்ந்த மாறுதல்களின் அடிப்படையில் சோஷலிசம் பழைய சமுதாயத்தைச் சேர்ந்த தனி மனிதனுக்கு இயல்பு அல்லாத புதிய பண்புகளைத் தோற்றுவிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், சோஷலிசம் வெற்றி அடைந்ததன் விளைவாகப் புதிய சோஷலிசத் தனி மனிதன் உருவாகிறான்.

சோஷலிசம் வெற்றி பெற்று சோஷலிசத் தனி மனிதன் உருவாவதை அடுத்து, சமூகத்துக்கும் தனி மனிதனுக்கும் உள்ள பரஸ்பர உறவு அடிப்படையில் மாறுகிறது. சமரசப்படுத்த முடியாத வர்க்கங்கள் நிலவும் அமைப்புக்களின் நிலைமைகளில் தனி மனிதனும் சமூகமும் எதிரெதிராக இருப்பதன் இடத்தில், தனி மனிதனும் சமூகமும் ஒன்றுபடும் நிகழ்முறை படிப்படியாக நிறைவு பெறுகிறது. இந்த ஒன்றிப்பின் திண்ணமான புறநிலை அடிப்படையாக விளங்குகிறது சமூகச் சொத்துரிமை. சமூகத்தினதும் தனி மனதனிதும் நலன்களை இணைக்க இது வகை செய்கிறது.

தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் உள்ள ஒற்றுமை அவர்களுக்கு இடையே எழும் முரண்பாடுகளை அகற்றி விடுவதில்லை. தனி மனிதனின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றும் நிலைமையில் இல்லாத சமூகம் தேவைகளின் வளர்ச்சியை ஒரு பகுதி குறுக்குகிறது, உழைப்பின் அளவுக்கும் தரத்துக்கும் இணங்க அவற்றின் நிறைவேற்றத்துக்கு அளவுமானம் ஏற்படுத்துகிறது, மனிதர்களின் முழுமையான பொருளாதார சமத்துவத்திற்குச் சமூகத்தால் இன்னமும் வகை செய்ய முடியவில்லை என்பவற்றில் இந்த முரண்பாடுகள் வெளிப்படுகின்றன. தவிரவும், தன்னுடைய நலன்களைச் சமூக நலன்களுக்கு இணங்க வைத்துக் கொள்வதன் அவசியத்தைத் தனி மனிதன் எப்போதும் புரிந்து கொள்வதில்லை. தன்னலம் உள்ள, அளவுக்கு மீறிய கோரிக்கைகளை அவன் சில வேளைகளில் சமூகத்தினிடம் விடுக்கிறான். விளைவாக சமூகத்துக்கும் சமூகத்தின் பின்தங்கிய உறுப்பினர்களின் ஒரு பகுதிக்கும் இடையே முரண்பாடுகள் எழுகின்றன. இந்த முரண்பாடுகள் சோஷலிசத்தினுடைய வெற்றிகளின் அளவுக்கு ஏற்பத் தீர்க்கப்படுகின்றன, தனி மனிதனுக்கும்

சமூகத்துக்கும் இடையே ஒற்றுமை அவற்றுக்குள் ஒருங்கிசைவுள்ள உறவுகள் ஏற்படும் திக்கில் வளர்ச்சி அடைகிறது.

## 2. சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்துக்கு. கம்யூனிசம் உரு ஆவதில் உள்ள சிறப்புத் தன்மைகள்

சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்துக்குச் சமூகம் பரிணமிக்கிறது. எப்படி, எந்த வழிகளில் இது நிகழ்கிறது?

கம்யூனிசம் உரு ஆவதில் உள்ள முதலாவது முக்கியச் சிறப்புத் தன்மை என்ன என்றால், கம்யூனிசம் தன் சொந்த அடிப்படையில்—சோஷலிசத்தின் அடிப்படையில்—தோன்றுகிறது என்பது ஆகும். விளைவாக, சோஷலிசமும் கம்யூனிசமும் நிலைபெறுவதற்கான வழிகளும் சாதனங்களும் கோட்பாட்டு அளவில் வேறுபடுகின்றன. சோஷலிசப் புரட்சியின் விளைவாக, முதலாளித்துவத்தின் பொருளாதார, அரசியல், உளவியல் ஆதாரங்கள் அடியோடு முறிவதன் விளைவாக நிலைபெறுகிறது சோஷலிசம். கம்யூனிசமோ, சோஷலிசத்தின் பொருளாதாரமும் சமூக உறவுகளும் உளவியல் பண்பாடும் வளர்ச்சியும் செப்பமும் பெறுவதன் மூலம் நேராக சோஷலிசத்திலிருந்தே வளர்கிறது.

கம்யூனிசம் உரு ஆவதில் உள்ள இரண்டாவது சிறப்புத் தன்மை, இரண்டாவது கட்டத்துக்குச் சமூகத்தின் பரிணமிப்பு படிப்படியாக நிகழ்வது ஆகும். தேவைக்குத் தக்க வினியோகம் என்னும் கம்யூனிசக் கோட்பாட்டுக்கும் சமூகச் சுயநிர்வாகத்துக்கும் வர்க்கங்கள் இல்லாத சமூகத்துக்கும் இத்தகைய பிறவற்றுக்கும் பரிணமிப்பு ஒரேயடியாக அல்ல, படிப்படியாக நிகழ்த்தப்படும்.

கம்யூனிசத்துக்குப் பரிணமிப்பு நிகழ்வதன் படிப்படியான தன்மை விதி முறைக்கு இசைந்தது. சோஷலிச அமைப்பின் இயல்பினாலேயே அது நிர்ணயிக்கப்படுகிறது. சமூகம் கம்யூனிசத்தை நோக்கிச் செல்வதை எதிர்க்கும் வர்க்கச் சக்திகள் சோஷலிசத்தில் கிடையா. சமுதாய அதிர்ச்சிகளும் சமூக வாழ்க்கையில் திடீர்ப் புரட்சிகளும் நிகழ்வதற்கு இதனாலேயே காரணம் இருப்பதில்லை. முதலாளித்துவத்துக்கு மிகவும் இயல்பான இடைநிறுத்தங்களும் சரிவுகளும் இல்லா

மல் படிப்படியாக நிகழும் தன்மையை வளர்ச்சி மேற்கொள்கிறது.

கம்யூனிசச் சமூகத்தைக் கட்டி அமைப்பதற்கு மூன்று அடிப்படை நோக்கங்களின் நிறைவேற்றம் தேவை ஆகும். இவையாவன: முதலாவதாக, கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் நிறுவப்படுவது; இரண்டாவதாக, கம்யூனிசத் தன்மை கொண்ட சமூக உறவுகள் உருவாக்கப் படுவது; மூன்ருவதாக, புதிய மனிதனை — கம்யூனிசச் சமூகத்தை உயர்ந்த உணர்வுடன் கட்டுபவனும் அதன் குடியும் ஆன மனிதனை பயிற்றுவது. இந்த மூன்று நோக்கங்களும் தங்களுக்குள் நெருக்கமாக இணைந்தவை. சோஷலிசச் சமூகத்தைக் கம்யூனிசச் சமூகமாக மாற்றி அமைக்கும் ஒரே நிகழ்முறையின் வெவ்வேறு பக்கங்களைக் காட்டுகின்றன இவை.

இந்த நோக்கங்களையும் இவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகளையும் பற்றிப் பேசுவதற்கு முன்னால், கம்யூனிசக் கட்டுமானத்தின் நிர்வாகத்துக்கு உரிய, சமூக நிகழ்முறைகளின் நிர்வாகத்துக்கு உரிய விஞ்ஞானக் கோட்பாடுகளை ஆராய்வது அவசியம்.

# அத்தியாயம் ஏழு

# கம்யூனிசக் கட்டுமானத்தின் விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகம்

தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் சோஷலிசம் ஒழித்து விடுகிறது. சமூகச் சொத்துரிமையையும் அதன் அடிப்படையில் மனிதர்களின் சோதர ஒத்துழைப்பையும் பரஸ்பர உதவியையும் அது நிலைநாட்டுகிறது. மொத்தத்தில் சோஷலிசச் சமூகம் முதலாளித்துவத்திலிருந்து எப்படி வளர முடியாதோ அப்படியே சமூகச் சொத்துரிமை தனியார் சொத்துரிமையிலிருந்து தானே வளர முடியாது. மார்க்சியக் கட்சியாலும் சோஷலிச அரசாலும் வழிநடத்தப்படும் திரளான வெகுஜனங்களின் உணர்வு பூர்வமான, குறிக்கோளை நோக்கிச் செல்கிற நடவடிக்கைகளின் விளைவாக, சமூக நிகழ் முறைகளின் உணர்வு பூர்வமான நிர்வாகத்தின் விளைவாக உருவாகின்றன சோஷலிசமும் கம்யூனிசமும்.

## 1. சோஷலிசம்—உணர்வுபூர்வமாக நிர்வகிக்கத்தக்க சமூகம்

சோஷலிசச் சமூகம் சிக்கலான சமுதாய உறுப்பி, இயக்கமும் விரைவும் கொண்ட அமைப்பு, ஏராளமான பல விதப் பகுதிகள் அடங்கியது. வெவ்வேறு கிளைகளும் (இயந்திரத் தொழில் துறை, விவசாயம், போக்குவரத்து, தகவல் தொடர்பு முதலியன) பெருந் திரளான தனித் தனி தொழில் நிலையங்களும் (ஆலைகளும் தொழிற்சாலைகளும் கூட்டுப் பண்ணைகளும் சோவியத் பண்ணைகளும்) உள்ள பொருளாதாரம் இந்தப் பகுதிகளில் ஒன்று. வர்க்கங்களாகவும் சமுதாயக் குழுக்களாகவும் உழைப்பு மற்றும் பிற வகைக்

குழுக்களாகவும் இணைந்த மனிதர்களும் இந்தப் பகுதிகளில் ஒன்று ஆவார்கள். மனிதர்களின் பெருந்திரளான பல்வகை —பொருளாதார, வர்க்க, ஒழுக்கவியல்—உறவுகளும் பெருந் தொகையான வடிவங்கள் கொண்ட சமூகத்தின் உளவியல் வாழ்க்கையும் இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவையே. இந்த எல்லாப் பகுதிகளும் மிக நெருக்கமாக இணைந்தவை, இவை பரஸ்பரப் பாதிப்பு நிகழ்த்துபவை. அதோடு இவை தங்கள் ஒன்றிப்பிலும் பரஸ்பரத் தொடர்பிலும் சோஷலிசச் சமூகத்தை முழுமையானதாக, நிர்வாக இலக்காக உருவாக்குகின்றன. அதே சமயம் சமூகத்தின் உறுப்பான ஒவ்வொரு தனிப் பகுதியும் நிர்வகிக்கத் தக்க முழுமையான அமைப்பாகவும் விளங்குகிறது. எந்த ஒரு தொழில் நிலையமும் அலுவலகமும் கல்லூரியும் பள்ளியும் இவை போன்ற பிறவும் வெவ்வேறு தொழிற்சாலைப் பிரிவுகள், வேலைக் குழுக்கள், இலாகாக்கள், பயிற்சித் துறைகள், வகுப்புக்கள், மனிதர்கள் ஒன்று சேர்ந்துள்ள வேறு பல துணைப் பிரிவுகள் ஆகியவற்றின் திட்டவட்டமான ஒன்றிப்பே ஆகும்.

எனவே, சமூகத்தின் நிர்வாகம் மனிதர்களையும் பொருள்களையும் உள வாழ்வையும் நிர்வகிப்பதாக அர்த்தப்படுகிறது. அதிலும் நிர்வாகத்தில் முக்கியமானதாக விளங்குவது மனிதர்களின் நிர்வாகம் ஆகும். இது புரியக் கூடியதே: தங்கள் உழைப்பினுல் மனிதர்கள் சாமான்களையும் பொருள்களையும் நிறுவுகிருர்கள், தங்கள் உழைப்பிலும் வாழ்க்கையிலும் அவற்றைப் பயன்படுத்துகிருர்கள்; மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் வெவ்வேறு உறவுகள் ஏற்படுத்திக் கொள்கிருர்கள்; மனிதர்கள் உணர்வையும் கருத்துக்களையும் பெற்றிருக்கிருர்கள், பொருளியல் மதிப்புக்களோடு கூடவே உளவியல் மதிப்புக்களையும் படைக்கிருர்கள். ஆகையால், பொருள்கள், உறவுகள், கருத்துக்கள் ஆகியவற்றின் நிர்வாகம் மனிதர்களது சரியான, விஞ்ஞான முறையில் ஒழுங்கமைந்த நிர்வாகத்தைக் கணிசமான அளவு சார்ந்திருக்கிறது என்பது இயல்பே. சமூகத்தின் தனித்தன்மை கோடானு கோடி மனிதர்களின் செயல்களினுலேயே உண்மையில் அமைகிறது. எனவேதான் அவர்களுடைய செயல்களையும் அவற்றின் வாயிலாக மொத்தத்தில் சமூக நிகழ்முறைகளையும் நிர்வகிப்பது அளவு கடந்து சிக்கலானதாகவும் பொறுப்புள்ளதாகவும் இருக்கிறது.

இதே கையோடு இன்னொரு விஷயத்தை அழுத்திக் கூறி விட வேண்டும். சோஷலிசத்தில் மக்களது நிர்வாகம் என்பது முதலாளித்துவத்தைப் போலச் சுரண்டுவோரால் உழைப்பாளிகள் ''கண்காணிக்கப்படும்'' செயல் அல்ல. சோஷலிசத்தில் நிர்வாகம் என்றால், முதன்மையாக மனிதர்களுடைய பொருளாதார வாழ்க்கையும் அவர்களுடைய சமூக நடவடிக்கைகளும், கம்யூனிச உணர்வில் அவர்களுடைய பயிற்சியும் ஒழுங்கமைக்கப்படுவது ஆகும். இயல்பாகவே சோஷலிசத்தில் நிர்வாக உழைப்பு உழைப்பின் தனி வகையாக நிலைத்திருக்கிறது. ஆனால் குடிகள் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிப் பிரதிநிதிகளின் வாயிலாகவோ அல்லது சமூக நிறுவனங்களது தொகுப்பின் மூலம் நேராகவோ தாங்களே இதைச் செய்கிறார்கள். சோஷலிசச் சமூகத்தில் நிர்வாகம் உண்மையான ஜனநாயகத் தன்மை கொண்டிருக்கிறது, ஏனென்றால் உற்பத்திச் சாதனங்களின் ஒரே சொந்தக்காரர்களாகவும் அரசியல் அதிகாரத்தைச் செலுத்தும் இறைமை பெற்றவர்களாகவும் விளங்கும் உழைப்பாளி வெகுஜனங்கள் பொருளாதாரத்தையும் எல்லாச் சமுதாய நிகழ்முறைகளையும் வழிகாட்டி நடத்துவதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றுகிறார்கள்.

இவ்வளவு மிகப் பெருந் தொகையான மனிதர்களையும் இத்தனை வெவ்வேறு வகையான சமூக நிகழ்முறைகளையும் நிர்வகிப்பது, மொத்தத்தில் சமூகத்தை நிர்வகிப்பது சோஷலிசத்தின் நிலைமைகளில் ஏன் சாத்தியம் ஆகிறது? இதற்கு முதலாவது காரணம், சமூகச் சொத்துரிமை சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படையாக விளங்குவது ஆகும். அராஜகத்தையும் போட்டியையும் சந்தையின் வரம்பற்ற ஒழுங்கீனத்தையும் சமூக வாழ்க்கையிலிருந்து இது அகற்றி விடுகிறது. திட்டப்படி நிகழ்வதும் தகவுப் பொருத்தம் உள்ளதுமான வளர்ச்சி குறித்த விதி சமூகச் சொத்துரிமையின் அடிப்படையில் செயல்பட்டு, பொருளாதாரத்தையும் எல்லாச் சமூக நிகழ்முறைகளையும் திட்டத்துக்கு இணங்க, மையப்படுத்தப்பட்ட முறையில் நிர்வகிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்துகிறது, சமுதாய அமைப்பின் வெவ்வேறு பகுதிகளை இணைத்து முன்கூட்டி வரையறுக்கப்பட்டுள்ள ஒரே குறிக்கோளை நோக்கி அவற்றைச் செலுத்த உதவுகிறது.

விஞ்ஞான முறையான நிர்வாகத்தைப் பற்றிப் பேசுகையில் சமூகத்தின் பொருளாதார வாழ்க்கையினது நிர்வாகம் அடிக்கடி குறிக்கப்படுகிறது. சமூக வளர்ச்சியில் உற்பத்தி, பொருளாதாரம் நிர்ணயகரமான பங்கு ஆற்றுகிறது என்பது கூருமலே விளங்கும். ஆனுலும் சோஷலிசச் சமூகத்தின் இயல்பு பொருளாதாரத்தை மட்டும் இன்றி, சமூக வாழ்க்கையின் மற்ற எல்லாத் துறைகளேயும் அவற்றின் பரஸ்பரத் தொடர்பில் உணர்வுபூர்வமாக விஞ்ஞான அடிப்படையில் நிர்வகிக்க வாய்ப்பு அளிக்கிறது.

சோவியத் நாட்டின் வரலாற்றை, கம்யூனிஸ்டுக் கட்சியால் உணர்வுபூர்வமாக இயக்கப்படும் சோவியத் சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும் முக்கியமான எல்லேக் குறிகளேப் பார்வையிடுவதன் மூலம் இந்த உண்மையை நம்பகமாகக் காண்பது கடினம் அல்ல. உதாரணமாக, ருஷ்யாவை மின்சாரமயம் ஆக்குவதற்கான லெனினது திட்டம் வெறும் பொருளாதாரத் திட்டமாக மட்டும் இருக்கவில்லே. சமூகம் முழுவதனுடையவும், சமூக உறவுகளின் தொகுப்பு அனேத்தினுடையவும் ஆழ்ந்த பண்பு வகை மாற்றங்களுக்கான செயல் திட்டமாகவும் அது விளங்கியது. ''நாடு முழுவதையும் மின்சாரமயம் ஆக்குவதை சோவியத் ஆட்சி அதிகாரத்துடன் கூட்டினுல் வரும் மொத்தமே கம்யூனிசம்'' என்ற லெனினது வாய்பாடு, பொருளாதார நிர்வாகத்திற்கும் சமுதாய வாழ்க்கையின் நிர்வாகத்துக்கும் உள்ளார்ந்த ஒற்றுமை நிலவுவதைக் காட்டுகிறது.

சோஷலிசச் சமூகமும் அதன் திட்டப்படி அமைந்த, விகிதப் பொருத்தம் உள்ள வளர்ச்சியும் விஞ்ஞான முறையில் நிர்வகிக்கப்படுவது சமூக நிகழ்முறைகளின் தொகுப்பு முழுவதையும் உள்ளடக்குகிறது. இந்தத் தொடர்பில் திட்டப்படி அமைந்த, விகிதப் பொருத்தம் உள்ள வளர்ச்சி குறித்த விதி பொருளாதார விதியாக மட்டும் இல்லாமல், சோஷலிசத்தில் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் செயல்படும் சமூக இயல் விதியாகவும் விளங்குகிறது.

சோஷலிசச் சமூகம் புறநிலே விதிகளின் அடிப்படையில் வளர்ச்சி அடைகிறது. இந்த விதிகள் மனிதர்களால் சொந்த நலன்களுக்காகப் புரிந்து கொள்ளவும் பயன்படுத்தவும் படக்கூடும். சட்டங்கள் புரிந்து கொள்ளவும் பயன்படுத்தவும்

படுவது இன்றியமையாதது, ஏனென்றால் மனிதனுக்கு வேண்டிய திக்கில் சமூகத்தின் வளர்ச்சிக்கு அவை தாமாகவே வகை செய்வதில்லை. உதாரணமாக, நாம் சற்று முன் குறித்த, சோஷலிசச் சமூகத்தின் திட்டப்படி அமைந்த, விகிதப் பொருத்தம் உள்ள வளர்ச்சி பற்றிய விதியை எடுத்துக் கொள்வோம். வளர்ச்சியின் ஒழுங்கீனத்தின் பகுதிகள் நீக்கப் படுவதற்கும், சமுதாய அமைப்பின் வெவ்வேறு பிரிவுகளுடைய கண்டிப்பான ஒத்திசைவுக்கும், திட்டப்படியான அமைப்புக்கும் தகவுப் பொருத்தத்துக்கும் இந்த விதி தானாகவே வகை செய்வதில்லை. இவற்றுக்கான வாய்ப்பைத் தான் அது ஏற்படுத்துகிறது. ஆனால் இந்த வாய்ப்பை எதார்த்தமாக மாற்றுவதற்கு இந்த விதியைச் சரிவரப் புரிந்து கொள்வதும் திறமையாகப் பயன்படுத்துவதும் அவசியம். இவ்வாறு சோஷலிசச் சமூகத்தின் வளர்ச்சி சிக்கலான பின்னலாக, **புறநிலை விதிகளதும் அகநிலைக் காரணிகளதும் பரஸ்பரப் பாதிப்பாக** விளங்குகிறது. அதோடு, சமூகம் முன்னேறும் அளவுக்கு ஏற்ப, புறநிலை விதிகள் மேலும் மேலும் அதிக ஆழ்ந்த முறையில் புரிந்து கொள்ளப்படுவதன் விளைவாக அகநிலைக் காரணிகளின் பாத்திரம் அதிகரித்துக் கொண்டு போகிறது. மனிதர்கள் புறநிலை விதிகளை நன்றாகப் புரிந்து கொண்டு, சமூக நிகழ்முறைகளை உணர்வுபூர்வமாக முறைப் படுத்தியவாறு இந்த விதிகளைத் திறமையாகப் பயன்படுத்தும்போதுதான் சோஷலிசச் சமூகம் வெற்றிகரமாக முன்னேற முடியும்.

**மனிதர்களின் அகநிலைச் செயல்கள் புறநிலை விதிகளின் கோரிக்கைகளுக்கு இசையும்படிச்** செய்வதுதான் சமூக நிகழ்முறைகளின் விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகத்தின் முக்கியப் பணி ஆகும். சமூகத்தை விஞ்ஞானப் பாங்கில் நிர்வகிப்பது என்பதன் அர்த்தம், புறநிலை விதிகள் பற்றிய புரிவை ஆதாரமாகக் கொண்டு சமூகத்தினுடைய அல்லது அதன் தனிப் பகுதிகளின் வளர்ச்சியில் உள்ள முன்னேற்றப் போக்குகளைக் கண்டறிவதும், சமூகத்தின் இயக்கத்தை இந்தப் போக்குகளுக்கு இணங்கத் திருப்புவதும் முறைப்படுத்துவதும், ஒரு குறிக்கோளை அடைவதற்கான வழியில் உள்ள தடைகளைத் தெரிந்து கொள்வதும் இந்தத் தடைகளை உரிய நேரத்தில் அகற்றுவதும் ஆகும். சமூகத்தை விஞ்ஞான முறையில்

நிர்வகிப்பது என்பதன் பொருள் புறநிலை வாய்ப்புக்களதும் சமுதாயச் சக்திகளின் ஒப்புநிலையினதும் கண்டிப்பான கணக்கீட்டை அடிப்படையாகக் கொண்ட சரியான, நடப்பியல் கொள்கையை, பொருளாதாரத்துடனும் பொருளாதாரக் கட்டுமானத்துடனும் பிரிக்க முடியாதபடி இணைந்த கொள்கையைக் கடைப்பிடிப்பது ஆகும்.

சமூக நிகழ்முறைகளின் நடைமுறை நிர்வாகத்துக்கு நிர்வாகம் பற்றிய பிரச்சினைகள் சித்தாந்த நோக்கில் ஆராய்ந்து செப்பம் செய்யப்படுவது இன்றியமையாதது. இவ்வாறு ஆராய்ந்து செப்பம் செய்வது விஞ்ஞானக் கம்யூனிசச் சித்தாந்தத்தின் முக்கியப் பணிகளில் ஒன்று ஆகும்.

சமூகத்தின் விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகம் பற்றிய பிரச்சினைகள் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்தவாதிகளால் மட்டும் தீர்க்கப்பட முடியாது என்பது கூறாமலே விளங்கும். தத்துவவாதிகள், சமூக இயலார், பொருளியலார், புள்ளி இயலார், சைபர்னடிக்ஸ் அறிஞர்கள், கணித இயலார், நீதி இயலார், உளவியலார், பொறி இயலார், நிர்வாகிகள், விரிவான வெகுஜனங்கள் ஆகியோரின் கூட்டான முயற்சிகள் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவை. மிக மிக வெவ்வேறு துறை நிபுணர்களது கூட்டு முயற்சிகளால்தான் சமூகத்தின் விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகம் பற்றிய பொதுக் கோட்பாடுகளின் தொகுப்பைச் செப்பமாக அமைக்கவும் சமூக வாழ்க்கையின் திண்ணமான துறைகளில் இந்தக் கோட்பாடுகளை வெற்றிகரமாகப் பயன்படுத்தவும் தற்காலத் தேவைகளுக்கு இசைந்த திண்ணமான நிர்வாக வடிவங்களையும் முறைகளையும் சாதனங்களையும் உருவாக்கவும் முடியும்.

### சோஷலிசச் சமூகத்தின் நிர்வாகத்துக்குரிய அகநிலைப் பொருள்

சமூக நிகழ்முறைகளை நிர்வகிப்பதற்கு நிர்வாகத்துக்குரிய புறநிலைப் பொருள் (சமூகம் அல்லது அதன் தனித்தனிப் பிரிவுகள்) மட்டும் இன்றி, அகநிலைப் பொருளும்—அதாவது நிர்வகிக்கப்படும் அமைப்பின் எல்லாப் பிரிவுகளையும் ஒன்றிணைப்பதும் அவற்றின் செயல்களை இசைவிப்பதும் வெளி, உள் சூழ்நிலைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கு இணங்க அவற்றைத் திருத்துவதுமான தனி உறுப்பு அல்லது மையமும்—இருப்

பது அவசியம். சோஷலிசச் சமூகத்தில் நிர்வாகத்தின் இத் தகைய அகநிலைப் பொருளாக விளங்குவது அரசைச் சேர்ந்த வையும் சேராதவையும் சமூகத்துக்கு உரியவையுமான உறுப்புக்கள், நிறுவனங்களின் தொகுப்பு ஆகும்.

இந்தத் தொகுப்புக்குத் தலைமை தாங்குகிறது **மார்க் சியக் கட்சி—உழைப்பாளிகளின் போராட்ட முன்னணி.** இது இல்லா மல் கம்யூனிசக் கட்டுமானத்தின் விஞ்ஞானப் பாங்குள்ள தலைமை அசாத்தியம் ஆகும். ''நிர்வகிப்பதற்கு உரமேறிய புரட்சிக்காரர்களான கம்யூனிஸ்டுகளின் சேனை இருக்க வேண்டும், அது இருக்கிறது, அதன் பெயர் கட்சி''* என்று எழுதினார் வி. இ. லெனின். புறநிலை விதிகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி, திரளான வெகுஜனங்களின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தியும் அதை ஆதாரமாகக் கொண்டும் கம்யூனிஸ்டுக் கட்சி சமூகத்தின் பொருளாதார, அரசி யல் உளவியல் வாழ்வை வழிகாட்டி நடத்துகிறது. நாட்டினது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஒன்றித்த கொள்கைப் போக்கை அது வகுக்கிறது, இந்தக் கொள்கைப் போக்கைச் செயல்படுத்துவதில் ஒழுங்கமைப்பு, கொள்கை வாத வேலையை நடத்துகிறது. அரசு உறுப்புக்களது தொகுப் பின் வாயிலாகவும் பெருந்தொகையான சமூக நிறுவனங் களின் வாயிலாகவும் தனது தலைமைப் பாத்திரத்தைக் கட்சி செயல்படுத்துகிறது. இத்தகைய நிறுவனங்களாவன: தொழிற்சங்கங்கள், கூட்டுறவு நிலையங்கள், இளைஞர், படைப்பு மற்றும் விளையாட்டு நிறுவனங்கள்.

இந்த நிறுவனங்களின் முயற்சிகளைக் கட்சி இணைக்கிறது. இவ்வாறு செய்கையில் அது அரசு மற்றும் பிற உறுப்புக் களின் இடத்தை எடுத்துக் கொள்ளாமல், அவற்றின் முன் முயற்சியை எல்லா வகையிலும் வளர்த்து, அவற்றின் வேலை யில் முடிந்த அளவு அதிக ஜனநாயகத் தன்மை நிலவச் செய்ய முயல்கிறது. அரசு, சமூக நிறுவனங்களது தொகுப்பின் வாயி லாகக் கோடானுகோடி உழைப்பாளி வெகுஜனங்களுடன் கட்சி தொடர்பு கொண்டிருக்கிறது, வெகுஜனங்களுக்குக் கற்பிக்கிறது, அவர்களிடம் கற்கிறது. கம்யூனிசக் கட்டு

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 254 (ருஷ்யனில்).

மானத்தை நிர்வகிக்கும் மிகச் சிக்கலான பணியை மக்களுட னும் அனைத்து மக்கள் அரசுடனும் சேர்ந்து கட்சி நிறை வேற்றுகிறது.

பல்வேறு உறுப்புக்களும் அலுவலகங்களும் (பொருளா தார, திட்ட வகுப்பு, பண்பாட்டு, கல்வி அலுவலகங்களும் பிறவும்) கொண்ட அரசு இயந்திரம் சமூக நிகழ்முறைகளின் நிர்வாகத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. நிர்வாக இயந்திரத்தின் ஊழியர்களிடம் எத்தகைய உயர்ந்த கோரிக்கைகளை வி. இ. லெனின் விடுத்தார் என்பது தெரிந் ததே. அவற்றில் முதற்படியானவை கம்யூனிசக் குறிக்கோள்பால் விசுவாசமும் மக்களுக்கு முன் உயர்ந்த பொறுப்பு உணர்வும் கோட்பாடுகளில் உறுதியும் செயலறிவும் ஆகும். நடைமுறைப் பாங்கு, காரியப் பாங்கு, ஒழுங்குக் கட்டுப்பாடு ஆகிய வற்றை நிர்வாக இயந்திரத்தின் வேலையில் முதன்மையாக அவர் மதித்தார்.

நிர்வாக இயந்திரத்தின் நடவடிக்கைகளில் திட்டவட்ட மான முறைத் தொகுப்பு முக்கியமானது என்று வி. இ. லெனின் அழுத்திக் கூறி வந்தார். இதன் பொருள் முதன்மை யாக என்ன என்றால், சோவியத் இயந்திரத்தின் வேலை ஒன் றோடு ஒன்று தொடர்பு இல்லாத தற்செயலான நடவடிக் கைகளின் திரட்டாக இல்லாமல், மொத்தமாகச் சமூகம் முழுவதற்கும் அதன் தனித் தனிப் பிரிவுகளுக்கும் எதிர் நிற் கும் சூழ்நிலைகளதும் பணிகளதும் திண்ணமான நிலைமைகளை யும் தனித்தன்மைகளையும் மிகக் கண்டிப்பாகக் கணக்கில் எடுத்துக் கொண்டதன் அடிப்படையில் செப்பமாக வகுக்கப் பட்டவையும் கறாராக ஒழுங்குபடுத்தப்பட்டவையும் ஒன்றோ டொன்று இணைந்தவையுமான நடவடிக்கைகளின் ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட தொகுப்பாக விளங்குகிறது என்பது ஆகும். நிர்வாக உறுப்புக்களில் ஒவ்வொன்றினதும் செயல் கண்டிப் பாகத் தனித் துறையைச் சேர்ந்ததாக இருப்பதும் அவற் றின் ஒத்திசைவும் இரட்டிப்பு இன்மையும் தேவையற்ற இடைப் பிரிவுகள் இல்லாதிருப்பதும் இதற்கு அவ்வாறே அவசியம் ஆகும்.

நிர்வாக இயந்திரத்தினதும் ஊழியர்களதும் வேலையில் மேற்பார்வைத் தரப்புக்கும் விஞ்ஞானத் தரப்புக்கும் உள்ள ஒப்புநிலை பற்றிய பிரச்சினை வி. இ. லெனினால் தனிப்படச்

செப்பமாக ஆராயப்பட்டது. சோவியத் யூனியனில் நிர்வாக உறுப்புக்களுடையவும் தலைவர்களுடையவும் வேலையில் விஞ்ஞானத் தரப்பு வழி நடத்தப்படும் துறையில் முன்னணி விஞ்ஞான, தொழில் நுட்பச் சாதனைகளில் தேர்ச்சியையும் நிர்வாகம் பற்றிய திண்ணமான பிரச்சினைகளை விஞ்ஞான அடிப்படையில் எழுப்பவும் தீர்க்கவும் உள்ள திறமையையும் குறிக்கிறது. மேற்பார்வைத் தரப்போ என்றால், மனிதர்களை வழி நடத்தவும் முன்வைக்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்கான முயற்சியில் அவர்களை ஈடுபடுத்தி ஒழுங்கமைக்கவும் உள்ள திறமை ஆகும்.

எந்த நிர்வாக உறுப்பிலும் மேற்பார்வைத் தரப்பும் விஞ்ஞானத் தரப்பும் பொருத்தமாகச் சேர்ந்திருப்பது இன்றியமையாதது ஆகும். அதே சமயம் அலுவலகத் தலைவர் மனிதர்களைத் தம்பால் ஈர்க்கும் திறமையைப் பெரும் அளவில் பெற்றிருப்பதோடு, காரியத்தை ஒழுங்கமைக்கவும் தம் கீழ் பணி ஆற்றுபவர்களின் வேலையைச் சரி பார்க்கவும் தேவையான அளவு விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவும் கொண்டிருக்க வேண்டும். நிர்வாகத்தின் விஞ்ஞானத் தரப்பு அடிப்படையானது, ஏனெனில் விஞ்ஞானம் இல்லாமல் வேலை சரியாக ஒழுங்கமைக்கப்பட முடியாது. அதே சமயம் தலைவர் வேலையை ஒழுங்கமைக்கத் திறன் பெற்றிருப்பது மிக அவசியம்.

சோவியத் யூனியனில் அரசு இயந்திரத்தை அமைக்கையில் நிர்வாக ஊழியர்களின் தேர்வில் லெனினுடைய கோரிக்கைகள் ஒத்திசைந்த முறையில் செயல்படுத்தப்படுகின்றன. இவையாவன: சோஷலிசத்தின்பால் விசுவாசமும் அதோடு இணைந்த தெளிந்த அறிவும் நடைமுறைத் திறமையும் திடமான விஞ்ஞான, தொழில்நுட்ப ஞானமும் ஒழுங்கமைப்புத் திறனும் அடக்கமும் சோவியத் நிறுவனத்தின் வரம்புகளுக்குள் மனிதர்களின் பெரிய குழுக்களது ஒருங்கிசைந்த வேலையை ''ஆரவாரம் இல்லாமல்'' சீரமைக்கும் சாமர்த்தியமும். இந்த மாதிரி ஆட்களையே, இத்தகைய மனிதர்களை மட்டுமே ''மக்கள் உழைப்பின் தலைவர்களுக்குரிய, நிர்வாகத் தலைவர்களுக்குரிய பொறுப்பான பதவிகளில்''* நியமிப்பது நோக்கப்

* வி. இ. லெனின், நூல் திரட்டு, மூன்றும் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, பக்கம் 154.

பொருத்தம் உள்ளது என்று வி. இ. லெனின் கருதினர். ''நிர்வாக முறையை ஆழ்ந்து கற்காத கம்யூனிஸ்டுகளை''*நிபந்தனை இன்றி அகற்றி விட வேண்டும் என்று அவர் கோரினர்.

நிர்வாகத் துறை என்பது, புறநிலை எதார்த்தத்தில் நிகழும் இடையருத மாறுதல்களை, நிர்வாகத்தின் புறநிலைப் பொருளிலும் அதைச் சுற்றியுள்ள சூழலிலும் ஏற்படும் மாறுதல்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள எப்போதும் வல்லமை பெற்றிராத மனிதர்களின் அகநிலைச் செயல்களின் களம் ஆகும். முடிந்த வரை விரைவில் தவறுகளைக் கவனித்துத் திருத்துவதும் புறநிலை வளர்ச்சியின் தேவைகளுக்கு இணங்கும்படி நிர்வாகத்தைக் கொண்டுவருவதும் நிர்வாக உறுப்புக்களின் பணி ஆகும். நடைமுறை அனுபவத்தை மிக மிகக் கவனமாகவும் விவரமாகவும் ஆராய்ந்து அறிவது, செய்யப்பட்டதை விடாப்பிடியாகவும் நிதானமாகவும் எச்சரிக்கையுடனும் காரியப் பாங்கிலும் சரிபார்ப்பது, இன்னும் அதிக எச்சரிக்கையுடனும் காரியப்பாங்குடனும் தவறுகளைத் திருத்துவது, ''குறித்த உத்தியின், குறித்த நிர்வாக முறையின், குறித்த விகிதப் பொருத்தத்தின், ஆட்களது குறித்த தேர்வின், இவை போன்ற பிறவற்றின் நன்மை முழுமையாக நிரூபிக்கப் பட்ட பிறகே முன்னே போவது''**—நிர்வாகத்துக்குரிய திண்ணமான வடிவங்களையும் உத்திகளையும் முறைகளையும் பயன்படுத்துவது குறித்த லெனினுடைய அடிப்படைக் கருத்துக்கள் இத்தகையவை.

ஊழியர்களின் தேர்வு, நிறைவேற்றப்பட்ட செயல்கள் சரிபார்க்கப்படுவது, தலைமையின் கூட்டுத்துவமும் அதோடு அலுவலரின் சொந்தப் பொறுப்பும், விரிவான ஜனநாயகத் தன்மையும் விளம்பரமும், விமர்சனமும் சுய விமர்சனமும் எல்லா வகையிலும் விரிவாகச் செயல்படுவது, தேர்ந்தெடுக்கப்படும் உறுப்புக்களின் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கவும் மாற்றவும் படுவது—இவை யாவும் சோஷலிச நிர்வாக இயந்திரத்தினது சரியான செயல்பாட்டுக்கு இன்றியமையாத நிபந்தனைகள் ஆகும்.

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 44, பக்கம் 370 (ருஷ்யனில்).

** வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 42, பக்கங்கள் 285-286 (ருஷ்யனில்).

## 2. கம்யூனிசக் கட்டுமானத்திற்குரிய விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகத்தின் கோட்பாடுகள்

பொருளாதார, சமுதாய, உளவியல் நிகழ்முறைகளின் நிர்வாகத்தைச் செயல்படுத்த வேண்டி இருக்கும் உறுப்புக் களதும் தலைவர்களதும் நடவடிக்கைகளுக்கு உரிய அடிப் படை விதிகள் சோஷலிசச் சமூகத்தின் விஞ்ஞானப் பாங் குள்ள நிர்வாகத்துக்குரிய பொதுக் கோட்பாடுகளாக விளங்குகின்றன.

### புறநிலைத் தன்மையும் பருப்பொருள் தன்மையும்

சமூக நிகழ்முறைகள் புறநிலை விதிகளின் அடிப்படையில் நடக் கின்றன. சமூகத்தின் வாழ்க்கை யிலும் வளர்ச்சியிலும் உள்ள யாவற்றிலும் சாராம்சமானவற்றை வெளிப்படுத்து கின்றன இந்த விதிகள். உலகத்தின் முதலாவது சோஷலிச அரசையும் சோஷலிசக் கட்டுமானத்தையும் நடப்பில் தலைமை தாங்கி நடத்திய வி. இ. லெனின், புறநிலை விதிகளை அறியாமலும் திறமையாகப் பயன்படுத்தாமலும் நிர்வாகம் செய்வது அசாத்தியம் என்ற அடிப்படையில் செயல்பட்டார். புறநிலை விதிகளின் கோரிக்கைகளைக் கண்டிப்பாக நிறை வேற்றுவதும் எதார்த்த வாய்ப்புக்களையும் சமூகத்தின் நடப்பு நிலைமையையும் கணக்கில் எடுத்துக் கொள்வதும் விஞ் ஞானப் பாங்குள்ள நிர்வாகம் குறித்த மிக முக்கியக் கோட் பாடான புறநிலைத் தன்மைக் கோட்பாட்டில் அடங்கி உள்ளன.

புறநிலை விதிகளின் அடிப்படையிலேயே நிர்வகிப்பது சாத்தியம் என்று வலியுறுத்திய லெனின், வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தக் கூடிய கோட் பாட்டளவான திட்டங்களைப் புனைவதில் ஈடுபடாதிருக்கும்படி அதே சமயம் கோரி வந்தார். நிகழ்முறைகள், அவற்றை வெளியிடும் விதிகள் ஆகியவற்றின் பருப்பொருளான உள்ளடக்கத்தை ஆராயும்படியும், திண்ணமான சூழ்நிலைகளில் விதி எவ்வாறு செயல்படுகிறது, வெளிப்படுகிறது என்பதைக் காணும்படியும், நடைமுறைக்குச் சரியான முடிவுகள் பெறும் படியும் அவர் வற்புறுத்தி வந்தார்.

எந்த விதியும், எந்த வாய்பாடும், மிக மிகத் துல்லிய மானதும் கவர்ச்சி உள்ளதுமான வாய்பாடு கூட, திண்ண

மான வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கு உரிய குறிப்புக்களை உள்ளடக்கி இருப்பதில்லை. எந்த வாய்பாடும் இவற்றை வாழ்க்கையிலிருந்தே எடுத்துக் கொள்ள முடியும். வாழ்க்கைதான் அதை வாய்பாடுகளின் அரசிலிருந்து நடப்பு அரசுக்கு இட்டு வந்து, அதற்குச் சதையும் குருதியும் அளித்து, பருவடிவு தருகிறது, அதன் மூலம் உருமாற்றம் ஏற்படுத்துகிறது.*

லெனினுடைய இந்த அடிப்படைக் கருத்துக்கள் சோவியத் நிர்வாக இயந்திரத்தால் இப்போது சிறப்பாகக் கவனத்தில் வைத்துக் கொள்ளப்படுகின்றன, ஏனெனில் இப்போது சமூக வாழ்வு அளவிட முடியாதபடிச் சிக்கல் ஆகி இருக்கிறது, ஆதிக்கம் வகிக்கும் போக்கு என்ற முறையில் விதி திண்ணமானவையும் அடிக்கடி முரண்படுபவையுமான நிகழ்ச்சிகளுடைய திரளின் ஊடாக இப்போது வழி செய்து கொண்டு போக வேண்டி இருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் விதியின் செயல்பாட்டை உருமாற்றுகின்றன. விதியைக் கையாள்வதன் நடைமுறையில் இந்த நிகழ்ச்சிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வது கட்டாயமாகத் தேவைப்படுகிறது. உதாரணமாக, சோஷலிசச் சமூகத்தின் திட்டமிட்ட வளர்ச்சி குறித்த விதியின் செயல்பாடு பண்ட-பண உறவுகளின் சிக்கலான நிலைமைகளில் நடைபெறுகிறது. இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பொருளாதாரத்தை, சமூகத்தை விஞ்ஞானப் பாங்கில் வழி நடத்துவது அசாத்தியம். திட்டமிட்ட வளர்ச்சி குறித்த விதிக்கும் பண்ட-பண உறவுகள் பற்றிய விதிகளுக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தத்தையும், இந்த உறவுகளைத் திட்டத்தின் போக்கில் சேர்த்துக் கொள்வதற்கான வழிகளையும் சாதனங்களையும் ஆராய்ந்து அறிவதும் அதன் மூலம் அவற்றை நிர்வாக உறுப்புக்களின் வாயிலாகக் கட்டுப்படுத்துவதும் சோவியத் பொருளியலார், சமூக இயலார், ஒழுங்கமைப்பாளர்கள் ஆகியோரால் நிறைவேற்றப்பட்டு வரும் பணி ஆகும்.

நிர்வாகம் குறித்த முக்கியக் கோட்பாடான பருப்பொருள் தன்மைக் கோட்பாடு இதிலிருந்து தோன்றுகிறது. திண்ணமான நிலைமை பற்றிய திண்ணமான பகுத்தாய்வின் உதவி

---

* பார்க்க வி. இ. லெனின், போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1972, பக்கம் 10.

யாலேயே நிர்வாகத்தில் அகநிலைச் சார்பையும் வீண் மனக் கோட்டைகள் கட்டுவதையும் தான்தோன்றித்தனத்தையும் தவிர்க்க முடியும். திண்ணமாக நிர்வகிப்பது என்றால் புற நிலைப் பொருளின் உள் நிலைமை குறித்தும் அது விளைப்படும் வெளி நிலைமைகள் குறித்தும் நம்பத் தகுந்ததும் விஞ்ஞானப் பாங்கில் செப்பம் ஆக்கப்பட்டதுமான தகவலின் அடிப்படையில் நிர்வகிப்பது ஆகும். வாழ்க்கையின் எதார்த்தமான, திண்ண மான நிகழ்முறைகள் குறித்த நம்பத்தகுந்த தகவலும் அறி வும் பெற்றிருந்தால்தான் குறிக்கோளை அடையும் வழியில் நேரும் தவறுகளையும் தடைகளையும் உரிய நேரத்தில் கண்டு கொள்ளவும் அவற்றை அகற்றவும் நிர்வாகத்தைத் திருத்த வும் புறநிலை மாற்றங்களுக்கு அது பொருந்துமாறு செய்ய வும் முடியும்.

நிர்வாக உறுப்புக்கள் நம்பத்தகுந்த தகவல் பெறுவதற் கான அமைப்பிலும் தகவல் வருவதற்கான வழிகள், அதை விஞ்ஞானப் பாங்கில் செப்பம் ஆக்குவதற்கான முறைகள் ஆகியவற்றின் ஆராய்ச்சியிலும் முக்கியமான பங்கு ஆற்று கின்றன புள்ளி இயலும் திண்ணமான சமுதாய ஆராய்ச்சிகளும்.

சமூக நிர்வாகத்தில் தனித் தனி விவரங்களையும் பயன் படுத்துவது சாத்தியம் என்பது கூறாமலே விளங்கும், ஆனால் அதற்கு இந்த விவரங்கள் எடுத்துக்காட்டாகவும் சமூக நிகழ் முறைகளின் தன்மையை வெளியிடுபவையாகவும் இருப்பது அவசியம். இருந்தாலும், வழக்கமாக, புள்ளி விவரங்களின் பெருந்திரளைப் பொதுமைப்படுத்துவதன் அடிப்படையிலேயே நிர்வாகம் நடத்தப்படுகிறது. புள்ளி இயல் இல்லாமல், திண்ணமான சமுதாய ஆராய்ச்சிகள் இல்லாமல் இவ்வாறு செய்வது சாத்தியம் அல்ல.

திண்ணமான சமுதாய ஆராய்ச்சிகள் சமூக நிகழ்முறை களின் சிக்கலையும் பல்வகைப்பாட்டையும் பருப்பொருள் தன்மையையும் முழுமையாக வெளிப்படுத்த உதவுகின்றன, நிர்வாக உறுப்புக்களுக்கு நம்பத்தகுந்த தகவலைத் தந்து, குறித்த ஒரு நிர்வாக முறையின் பயனுடைமையை மதிப்பிட வும், தேவைப்பட்டால் புதிய விவரங்களுக்கும் நிகழ்ச்சிகளுக் கும் காணப்படும் போக்குகளுக்கும் ஏற்ப அதை மாற்றுவதற் குரிய சரியான வழியை வகுக்கவும் வாய்ப்பு அளிக்கின்றன. சோஷலிசச் சமூகத்தின் நிர்வாகத்தில் இந்த ஆராய்ச்சி

களின் முக்கியத்துவம் இதுவே. புள்ளி இயல் போலவே இந்த ஆராய்ச்சிகள் புதிய விதிகளைப் பொதுமைப்படுத்துவதற்கும் ஆழ்ந்து கற்பதற்கும் வேண்டிய சாதனத்தைத் தருகின்றன. இந்தப் புதிய விதிகளோ, நிர்வாக முறையைச் செப்பம் செய்யப் பயன்படுத்தப்படலாம்.

தகவல் துறையின் ஒழுங்கமைப்பு சிக்கலான பிரச்சினைகளில் ஒன்று என்பதை வலியுறுத்துவது அவசியம். இந்தப் பிரச்சினையின் தீர்வு நம் காலத்தில் சிறப்பாக முக்கியமானது, ஏனென்றால் சமூக வாழ்வின் அசாதாரணச் சிக்கல், பல்வகைப் பாடு, ஆக்கச் செயலினது வீச்சின் பெரும் பரப்பு ஆகியவற்றின் காரணமாக மிக மிக வெவ்வேறான தகவல்களின் அளவு பிரமாண்டமாக வளர்ந்து விட்டது. புத்தம் புதிய விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை, சிறப்பாக நவீனப் பொருளியல் கணித முறைகளையும் மின்னணுக் கணக்கீட்டுப் பொறிகளையும் பயன்படுத்துவதன் மூலமே பேரளவான தகவல்களைச் செப்பம் செய்வது சாத்தியம் ஆகும்.

**பயனுடைமையும் அதிகபட்சச் சாதகநிலையும்**

திட்டவட்டமான குறிக்கோளை வைத்துக் கொள்வதும் அதை அடையத் தேவையான பொருள், ஆள், நிதி வளங்களைத் தேடிப் பெறுவதும் நிர்வாகச் செயல்முறையில் கட்டாயமாக அடங்கி உள்ளன. இந்தத் தொடக்கப் பணிகளின் நிறைவேற்றம் நிர்வாகத்தின் முக்கியமான பகுதி, ஆனாலும் ஒரே பகுதி அல்ல. பெருந்திரளான சாதனங்களும் ஆள் கட்டும் நிறைய நேர வசதியும் இருந்தும் மேற்கொண்ட குறிக்கோளை உரிய கெடுவுக்குள் அடைய முடியாமல் போகலாம், அல்லது காரியம் அடியோடு கெட்டு விடலாம் என்பது நன்கு தெரிந்த சேதி. சாதனங்களும் ஆள் பலமும் நிதி வளங்களும் ஆக அதிகப் பயனுள்ள, அறிவுக்கொத்த முறையில் கையாளப்படுவதற்கு வகை செய்வதே நிர்வாகத்தின், அதி முக்கியப் பணி ஆகும். மேற்கொண்ட குறிக்கோளை முடிந்த அளவு ஆகக் குறுகிய கெடுவுக்குள், பொருள் வகைச் சாதனங்களையும் ஆள் பலத்தையும் ஆகக் குறைந்த அளவு செலவிட்டு அடைய வகை செய்வது நிர்வாகம் குறித்த இன்னும் ஒரு கோட்பாடு ஆகும். இது, **பயனுடைமை, அதிகபட்சச் சாதகநிலைக்** கோட்பாடு எனப்படும். நிர்வாகம் ''சக்தியின் அதிக

பட்சச் சிக்கனத்தையும் மக்களது உழைப்பின் அதிகபட்ச உற்பத்திகரமான பயன்பாட்டையும்'' அடைய முயல வேண்டும் என்று எழுதினார் வி. இ. லெனின்.* சிக்கனமான மேற்பார்வை செய்யும்படியும், பணத்தைத் துல்லியமாகவும் நேர்மையுடனும் கணக்கு வைக்கும்படியும், மக்கள் உடைமையைப் பாதுகாக்கும்படியும், ஒவ்வொரு மணங்கு தானியத்தையும் நிலக்கரியையும் இரும்பையும் பேணிக் காக்கும்படியும், மிக மிகக் கண்டிப்பான கணக்குத் தணிக்கையும் கண்காணிப்பும் ஏற்பாடு செய்யும்படியும் அவர் கோரி வந்தார். லெனினுடைய இந்தக் கோரிக்கைகள் இந்தக் காலத்தில் சிறப்பாக உடனடி முக்கியத்துவம் கொண்டிருக்கின்றன, ஏனெனில் இப்போது சோவியத் நாடு மிகப் பேரளவான செல்வ வளங்கள் பெற்றிருப்பதால் செட்டுப் பிடிக்கப்பட்ட வளங்களின் ஒவ்வொரு சதவிகிதமும் அதிகப்படிப் பண்ட உற்பத்திக்கும் விளைவாக மக்களது நல வாழ்வின் மேம்பாட்டுக்குமான மிகப் பெரிய ஊற்றாக விளங்குகிறது.

அதிகபட்சச் சாதகநிலைக் கோட்பாடு பொருளாதாரத்தை மட்டும் இன்றி, சமூக வாழ்வின் மற்ற துறைகளையும்—அது சமுதாய அல்லது பண்பாட்டுக் கட்டுமானமோ, விஞ்ஞான வேலையோ, கற்பித்தல் பயிற்றல் செயல்முறையோ இத்தகைய பிறவோ எதுவாயினும்—நிர்வகிப்பதற்கான கோட்பாடு ஆகும். எங்கும் மனிதர்கள் உழைக்கிறார்கள், எங்குமே பொருள்வகை, உளவகைச் செல்வங்களையும் நிதி வளங்களையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள், எனவே எல்லா விதமான சமூக நடவடிக்கையும் யாவற்றிலும் அறிவுக்கொத்த, பயன்பாடுள்ள வழியில் செய்யப்பட வேண்டும்.

வேறு எவரையும் விட அதிகமாக வி. இ. லெனின் நேரக் காரணியை உயர்வாக மதித்தார். அலுவலர்களின் நேரத்தைச் செட்டுப் பிடிக்க அவரால் முடிந்தது. பெரிய, சிறிய பணிகளின் நிறைவேற்றத்தில் நேரக் காரணியைக் கணக்கில் எடுத்துக் கொள்வது நிர்வாகத்தின் பயனுடைமைக்கு இன்றியமையாத நிபந்தனை ஆகும். அதோடு கூட, ஒரு குறித்த

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 37, பக்கம் 367 (ருஷ்யனில்).

பிரச்சினையின் தீர்வுக்கு வேண்டிய கெடுவைத் தீர்மானிப்பதற்கு, வசத்தில் உள்ள சக்திகளின் நிதானமான கணக்கீடு அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும்.

மொத்தத்தில் தேசியப் பொருளாதாரத்தையும் அதன் தனித் துறைகளையும் திட்டமிடுவது, நடப்புத் திட்ட வகுப்பு, வருங்காலத் திட்ட வகுப்பு, வெவ்வேறு திட்டங்களின் மிகக் கண்டிப்பான ஒருங்கிசைவு, உற்பத்திச் சக்திகளின் அறிவுக்கு உகந்த வினியோகம், அவற்றின் இடையறுத செவ்வைப் பாடு, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம், நிறுவனத் தொடர்புகளை ஏற்படுத்துவதும் மேம்படுத்துவதும், பயன் பாடுள்ள கணக்குத் தணிக்கையும் கண்காணிப்பும் உழைப்புக்குரிய ஊதியம் வழங்குவதற்கும் அதற்கு ஊக்கம் அளிப்பதற்குமான பொதுக் கோட்பாடுகள், பொருளாதாரத் தன்னிறைவு, லாபம், நிதித் துறை அமைப்பு—சோஷலிசக் கட்டுமானத்தின் பயன்பாடுள்ள (அதிகபட்சச் சாதகநிலையுள்ள) நிர்வாகத்துக்கு வகை செய்யும் நோக்கத்துடன் வி. இ. லெனின் சித்தாந்த ரீதியில் ஆராய்ந்து நடைமுறையில் தீர்வு கண்ட எண்ணற்ற பிரச்சினைகளின் அரை குறையான பட்டியல் ஆகும் இது.

## மனிதர்களின் நலன்களையும் தேவைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்வது

நிர்வாகப் பணி முதன்மையாக மனிதர்களை நிர்வகிக்கும் பணி, மனிதர்களுடைய உழைப்பை விஞ்ஞானப் பாங்கில் ஒழுங்கமைக்கும் பணி ஆகும். ஆனுல் மனிதர்கள் குறித்த தூண்டல்களதும் காரணிகளதும் பாதிப்பிஞல் செயல்படுகிருர்கள், உழைக்கிருர்கள், சமூகத்தின் சமுதாய அரசியல் வாழ்விலும் உளவகை வாழ்விலும் பங்கு கொள்கிருர்கள். இந்தத் தூண்டல்களையும் காரணிகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மனிதர்களைச் சரியாக நிர்வகிப்பதும் குறித்த பணியின் நிறைவேற்றத்துக்காக மனிதர்களை ஒழுங்கமைப்பதும் அசாத்தியம். மனிதர்களின் நடத்தையையும் செயல்களையும் அவர்களது படைப்புச் செயல்பாட்டையும் தூண்டும் காரணிகளில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன தேவைகள். ''ஒரு காரியத்தைச் செய்பவன், அதே சமயம் தனது தேவைகளில் ஏதாவது ஒன்றின் பொருட்டாகவும் இந்தத் தேவைக்கு உரிய உறுப்பின்

பொருட்டாகவும் அதைச் செய்யாமல் இருக்க முடியாது'' என்று எழுதினார்கள் கா. மார்க்சும் பி. எங்கெல்சும்.*

சோஷலிசத்தின் நிலைமைகளில் தேவைகளின் நிறைவேற்றத்துக்கு உரிய அளவுமானமாக விளங்குபவை உழைப்பின் அளவும் தரமும் ஆகும். எனவே, மனிதர்களை விஞ்ஞானப் பாங்கில் நிர்வகிக்கும் காரியத்தில் ஒவ்வோர் உழைப்பாளியினதும் தேவைகளின் நிறைவேற்றம் பற்றிய அளவையும் அவனது உழைப்புச் செயலின் அளவுடனும் அவனால் செலவிடப்பட்ட உழைப்பின் அளவுடனும் தரத்துடனும், சமூகச் செல்வத்தில் அவனது பங்களிப்பின் பரிமாணத்துடனும் பொருத்திப் பார்ப்பது மிக அவசியம் ஆகும். ஒருவன் நன்றாக, படைப்புத் தன்மையுடன் வேலை செய்தால் அவன் அதிக ஊதியம் பெறுவான், மோசமாக உழைப்பவனைக் காட்டிலும் அதிக அளவில் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வான். அரசுக்குச் சேதம் விளைத்தவன் பொருள்வகையில் அதற்கு ஈடு செய்ய வேண்டும், தன்னுடைய தேவைகளின் நிறைவேற்றத்தைக் குறுக்கிக் கொள்ள வேண்டும். உழைப்பாளியினது சொந்தப் பொருள்வகை அக்கறையுடைமையின் சாரம் இதுவே. சோஷலிசத்தில் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் குறித்த விதியின் தேவைகளால் நிர்ணயிக்கப்படுகிறது இது.

ஆனால், சோஷலிசச் சமூகத்தில் மனிதன் தனிமையில் அல்ல, கட்டாயமாகக் கூட்டத்தில் உழைக்கிறான். உடனுழைப்போரின் கூட்டத்தோடு சேர்ந்து உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளனாகவும் சமூக உழைப்பினது இன்னும் விரிவான பாகுபாட்டில் பங்கு கொள்பவனாகவும் அவன் விளங்குகிறான். சமூகச் செல்வத்தைப் படைப்பதில் அவனுடைய உழைப்புப் பங்களிப்பின் எதார்த்த அளவு சொந்த வேலையை மட்டும் இல்லாமல் அவனுடைய தோழர்களின், மொத்தத்தில் உற்பத்திக் குழுவினர் அனைவரதும் உழைப்புப் பங்களிப்பைச் சார்ந்திருக்கிறது. இன்னொரு வகையில் பார்க்கும் போது தனித் தொழில் நிலையம் நாட்டினுடைய பொருளாதார அமைப்பின் ஒரு கணுவாக மட்டுமே விளங்குகிறது. அந்தத் தொழில் நிலையத்தின் உழைப்பாளர் கூட்டத்தி

---

* கா. மார்க்சும் பி. எங்கெல்சும், நூல் திரட்டு, தொகுதி 3, பக்கம் 245 (ருஷ்யனில்).

னுடைய நல்வளமும் அதில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளியுடைய நல்வளமும் தேசியப் பொருளாதாரம் அனைத்தினுடையவும் வெற்றிகளைச் சார்ந்திருக்கின்றன.

உழைப்புக்கான உளவகைத் தூண்டல்களின் பங்கைக் கொஞ்சங்கூடக் குறைக்காமல், பொருள்வகை, உளவகைத் தூண்டல்களை அறிவுக்கொத்த முறையில் பொருத்தமாக இணைக்கும் படி வற்புறுத்தி வந்த வி. இ. லெனின், கம்யூனிசக் கட்டுமானத்தில் பொருள்வகைத் தூண்டலுக்குப் பெருத்த முக்கியத்துவம் அளித்தார். கம்யூனிசத்துக்குப் பரிணமிக்க வகை செய்வது "நேரடியாக உற்சாகத்தின் அடிப்படையில் அல்ல, மாபெரும் புரட்சியால் பெறப்பட்ட உற்சாகத்தின் துணையால், சொந்த நலனின் அடிப்படையில், சொந்த அக்கறையுடைமையின் அடிப்படையில், பொருளாதாரத் தன்னிறைவின் அடிப்படையில்..." சாத்தியம் என்று அவர் எழுதினார்.* சமூகத்தை விஞ்ஞானப் பாங்கில் நிர்வகிப்பதற்குத் தேவையானது துல்லியமான கணக்கீடுகளை அடிப்படையாகக் கொண்ட எடுத்துக்காட்டான திட்ட வகுப்பு மட்டும் அல்ல, செப்பமான பொருளாதாரத் தூண்டலும், சமூகம் அனைத்தினுடையவும் ஒவ்வொரு தனித் தொழில் நிலையத்தினுடையவும் ஒவ்வொரு தனித் தொழிலாளியினுடையவும் பொருளாதார நலன்களின் ஒருங்கிசைந்த ஒற்றுமையைப் பெறுவதும் ஆகும். மனிதர்களுடைய பொருளாதார நலன்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதும் அவர்களுடைய பொருள்வகைத் தேவைகளை மட்டும் இன்றி உளவகைத் தேவைகளையும் மேலும் மேலும் அதிக முழுமையாக நிறைவேற்ற உதவுவதும் ஆகிய செப்பமான பொருளாதாரத் தூண்டல் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் அதை ஆக அதிக நோக்கப் பொருத்தமான விதத்தில் ஒழுங்கமைக்கவும், பொருள், நிதி வளங்களை அறிவுக்கொத்த முறையில் செலவிடவும் தங்கள் தகுதியையும் பண்பாட்டுத் தரத்தையும் செப்பம் ஆக்கிக் கொள்ளவும் தனித் தனி தொழிலாளிகளையும் தொழிலாளர் கூட்டங்களையும் ஊக்குவிக்கிறது. இதனாலேயே உற்

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்காம் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, பக்கம் 297.

பத்தி வளர்ந்து செப்பம் அடைகிறது, தேசிய வருமானம் அதிகரிக்கிறது, மக்களின் தேவைக்காகச் செலவிடப்படும் அதன் பங்கு மிகுந்து கொண்டு போகிறது. உற்பத்தி வளர்ச்சியோடு கூடவே சமூக வாழ்வின் பிற எல்லா அம்சங்களும் வளர்ந்து செப்பம் அடைகின்றன.

**முக்கியக் கணு** ஒன்ருேடு ஒன்று தொடர்பு உள்ள ஏராளமான பணிகளின் நிறைவேற்றம் நிர்வாகத்தில் கட்டாயமாக அடங்கி இருக்கிறது. தங்கள் முக்கியத்துவத்திலும் நிகழ்ச்சிகளின் பொதுத் தொடரில் தங்களுக்கு உரிய இடத்திலும், தங்களின் நிறைவேற்றத்துக்கான முறைகளிலும் நேரத்திலும் இந்தப் பணிகள் ஒரே மாதிரியானவை அல்ல. எதன் நிறைவேற்றம் மற்ற எல்லாப் பிரச்சினைகளின் தீர்வுக்குமான திறவுகோலை அளிக்குமோ அந்த முதன்மைப் பணியை, முக்கியக் கணுவை நிகழ்ச்சிகளின் இந்தச் சங்கிலித் தொடரில் தேடிக் காண்பது இன்றியமையாதது என்று வி. இ. லெனின் கருதிஞர். அவர் பின்வருமாறு எழுதிஞர்: "புரட்சியாளஞகவும் சோஷலிசத்தின் தரப்பாளன் அல்லது பொதுவாகக் கம்யூனிஸ்டாகவும் இருப்பது போதாது, சங்கிலித் தொடர் முழுவதையும் விடாது வைத்துக் கொள்ளவும் அடுத்த கணுவுக்குப் பரிணமிப்பதற்கு உறுதியாக முன்னேற்பாடு செய்யவும் எதை முழு பலத்துடனும் பற்றிக் கொள்வது அவசியமோ அந்தச் சிறப்புக் கணுவை ஒவ்வொரு சிறப்பான சந்தர்ப்பத்திலும் கண்டு கொள்ளத் திறமை பெற்றிருக்க வேண்டும். இதில் கவனிக்க வேண்டியது என்ன என்ருல், நிகழ்ச்சிகளின் வரலாற்றுச் சங்கிலித் தொடரில் கணுக்களின் வரிசையும் அவற்றின் வடிவமும் அவற்றின் இணைவும் ஒன்றிலிருந்து ஒன்று அவற்றின் வேறுபாடும் கருமாஞல் செய்யப்பட்ட சங்கிலியில் உள்ளவை போல எளியவையோ அசட்டுத்தனமானவையோ அல்ல."* முக்கியக் கணுவைத் தெளிவாகக் காணவும் கட்சியினுடையவும் மக்களுடையவும் முயற்சிகளை அதன் மீது ஒருமுனைப்படுத்தவுமான சிறப்பான திறமையை வி. இ. லெனின் பெற்றிருந்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, மூன்ரும் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, பக்கம் 174.

தார். வர்த்தக வளர்ச்சி, இயந்திரத் தொழில் பெருக்கம், கூட்டுப் பண்ணைகளை அமைத்தல் — சோஷலிசக் கட்டுமானத்திற்கான லெனினது திட்டம் செயல்படுத்தப்பட்ட வெவ்வேறு கட்டங்களில் அதன் முக்கியக் கணுக்களாக விளங்கியவை இவை.

**ஜனநாயக மத்தியத்துவம்**

சோஷலிசச் சமூகத்தின் ஒற்றுமையும் முழுமையும், சோஷலிசப் பொருளாதாரத்தையும் மொத்தத்தில் சமூகத்தையும் உணர்வுபூர்வமாக, குறிக்கோளை நோக்கிச் செல்லும்படி நிர்வகிப்பதன் சாத்தியக்கூறும் இன்றியமையாமையும் நிலவுவதற்கு, சமூக அமைப்பினதும் சமூக உற்பத்தியுடையவும் தனித் தனிக் கணுக்கள்—தனித் தனி வட்டாரங்கள், தொழில் நிலையங்கள் முதலியன—எடுத்துக்காட்டான, விஞ்ஞான அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் நிர்வகிக்கப்படுவது அவசியம்.

இங்கே—ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் கூட்டுப் பண்ணைகளிலும் சோவியத் பண்ணைகளிலும், வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்கள் உருவாக்கப்படுகின்றன, சோஷலிச கட்டுமானத் திட்டங்கள் நேர்முகமாக நிறைவேற்றப்படுகின்றன, கோடானுகோடி உழைப்பாளி வெகுஜனங்களுடைய உழைப்பு முன்முயற்சியும் படைப்பு உள்தூண்டலும் விலைமதிப்பற்ற நடைமுறை அனுபவமும் வெளிப்படுகின்றன.

சமூகம் முழுவதன் நிர்வாகமும் அதன் தனித் தனிப் பிரிவுகளின் நிர்வாகமும் எப்படி ஒருங்கிசைகின்றன? சோஷலிசச் சமூகத்தின் இயல்புக்கு ஆக முழுமையாகப் பொருந்தக் கூடிய அடிப்படையான நிர்வாகக் கோட்பாடு யாது? நிர்வாகம் குறித்த இந்த விஞ்ஞானக் கோட்பாடாக விளங்குகிறது **ஜனநாயக மத்தியத்துவக்** கோட்பாடு. வி. இ. லெனினது நூல்களில் இந்தக் கோட்பாடு எல்லாத் தரப்புக்களிலிருந்தும் ஆராயவும் விஞ்ஞான அடிப்படையில் நிலைநாட்டவும் பட்டிருக்கிறது. ''கடிகாரப் பொறி அமைப்பின் துல்லியத்துடன் வேலை செய்யும் ஒரே பொருளாதார உறுப்பாக எல்லா உழைப்பாளிகளையும் இணைக்கும் சித்த ஒற்றுமை இல்லாவிட்டால், இருப்புப் பாதைகளோ, போக்கு வரத்தோ, பெரிய இயந்திரங்களோ, பொதுவாகத் தொழில்

நிலையங்களோ சரியாகச் செயல் புரிய முடியாது'' என்று எழுதினார் வி. இ. லெனின்.*

கம்யூனிசக் கட்டுமான நிர்வாகத்தின் அடிப்படைக் கோட்பாடு என்ற முறையில் ஜனநாயக மத்தியத்துவம் சோஷலிசத்தின் தன்மையிலிருந்தே, புறநிலையான இயல்பிலிருந்தே தோன்றுகிறது. சமூக உடைமையின் ஆதிக்கம் ஒரு புறம் ஒற்றுமையையும் முழுமையையும் மத்தியத்துவப் பாங்கையும் திட்ட அமைப்பையும் மறு புறம் சமுதாய அமைப்பின் தனித் தனிப் பகுதிகளுடைய விரிவான முன்முயற்சியையும் ஒப்புநிலைச் சுதந்திரத்தையும் கோடானுகோடி உழைப்பாளிகளின் படைப்பு ஊக்கத்தையும் உறுதிப்படுத்துகிறது.

வி. இ. லெனினது கருத்துப்படி, ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு சோஷலிசத்தின் இயல்புக்கே பொருந்தியவாறு, சமூக வாழ்வின் வெவ்வேறு துறைகளுடையவும் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களுடையவும் வட்டாரங்களுடையவும் செயல்பாட்டில் ''முழுமையான முரணின்மைக்கும் ஒன்றிப்புக்கும்'' வகை செய்கிறது, ஆனால் அதே சமயத்தில் ''வட்டாரச் சிறப்புத் தன்மைகள் மட்டும் இன்றி, வட்டார முன்முயற்சியும் வட்டாரச் செயல் தொடக்கமும் பொதுக் குறிக்கோளை நோக்கிச் செல்வதற்கான வழிகள், உத்திகள், சாதனங்கள் ஆகியவற்றின் பல்வகைப்பாடும் முழுமையாகவும் தடைகள் இல்லாமலும் வளர்வதற்கு வரலாற்றில் முதல் தடவையாக உருவாக்கப்பட்ட வாய்ப்புக்கும் இடம் அளிக்கிறது.''**

உருப்படிமயமாக்குவதுடன், ஒரே மாதிரியை நிலைநாட்டுவதுடன் இந்தக் கோட்பாட்டுக்கு எவ்விதப் பொது அம்சமும் கிடையாது. அவ்வாறே அராஜகத்திற்கும் மத்தியத்துவத்தை மதியாமைக்கும் இந்தக் கோட்பாட்டுக்கும் காத தூரம். விவரங்களிலும் வட்டாரச் சிறப்புத் தன்மைகளிலும் குறிக்கோளை அடைவதற்கான உத்திகளிலும் அணுகுமுறைகளிலும் பொதுப் பணிகளின் நிறைவேற்றத்துக்கான

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 36, பக்கம் 157 (ருஷ்யனில்).

** வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 36, பக்கம் 152 (ருஷ்யனில்).

திண்ணமான முறைகளிலும் பல்வகைப்பாட்டை அடிப்படையில், சாராம்சத்திலான ஒற்றுமை குலைப்பதில்லை, மாறாக உறுதிப்படுத்துகிறது. அதே சமயம், வட்டாரத் தனி உறுப்பின் ஒப்பு நிலைச் சுதந்திரமும் பணியின் நிறைவேற்றத்துக்கான உத்திகள், முறைகளின் பல்வகைப்பாடும் கம்யூனிசக் கட்டுமானத்தின் பொதுக் குறிக்கோள்கள், நலன்களின் வரம்புகளை மீறுவதில்லை.

அராஜகவாதமும் அராஜக-சிண்டிகலிசமும் எந்த வடிவங்களில் வெளிப்பட்டாலும் அவை எல்லாவற்றையும் எதிர்த்து விடாப்பிடியாகப் போராடிவந்தார் லெனின். சோஷலிசச் சமூகம் சுயாட்சி பெற்ற உற்பத்திக் கம்யூன்களின் குவியல் என்று கருதினார்கள் அராஜக-சிண்டிகலிசத்தின் பிரதிநிதிகள். சுதந்திரத்தையும் விடுதலையையும் ''காப்பது'' என்ற போலிக் கொடியைப் பிடித்தவாறு இவர்கள் தேசியப் பொருளாதாரத்தின் மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தையும் திட்டமிட்ட இயக்கத்தையும் எதிர்த்து வந்தார்கள். வட்டார அரசு, பொருளாதார உறுப்புக்களுடைய முழுமையான சுயாட்சிக்காகவும் மையத்திலிருந்து அவற்றின் சுதந்திரத்திற்காகவும் இவர்கள் போராடி வந்தார்கள், இவ்வாறு, சமூகத்தை மிக மிகப் பின்னுக்கு—தொழில்முறைக் கழக அமைப்புக்கும் துண்டுகளாகச் சிதறிய நிலப்பிரபுத்துவக் காலத்துக்கும் தள்ள இவர்கள் முயன்று வந்தார்கள். அதைத் தவிர வி. இ. லெனின் ''இடதுசாரிக் கம்யூனிசத்துக்கு'' எதிராகப் போராடி வந்தார். தொழிலாளிகளும் உழைப்பாளிகள் அனைவரும் சமூகத்தை அதன் எல்லாப் பகுதிகளிலும் நிர்வகிக்க வேண்டும், இந்தப் பகுதிகளின் வேலையைக் கண்காணிக்க வேண்டும், தங்கள் தொழிலின், தங்கள் ''சொந்தப்'' பொருளாதாரத் துறையின், தங்கள் தனி ஆலையின் அல்லது தொழிற்சாலையின் குறுகிய வரம்புகளுக்குள் அடைபட்டுக் கிடக்கக் கூடாது என்று அவர் வலியுறுத்தி வந்தார்.

ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை விரிவாக வகுத்து நடைமுறையில் புகுத்திய வி. இ. லெனின், கம்யூனிசக் கட்டுமானத்தின் நிர்வாகத்தில் **கூட்டுத்துவத்தையும் ஒரு நபர் தலைமையையும்** இந்தக் கோட்பாட்டின் வரம்புகளுக்குள் சேர்ப்பதற்குப் பெருத்த முக்கியத்துவம் அளித்

தார். நிர்வாகத்தில் கூட்டுத்துவத்தின் முக்கியத்தைச் சுட்டிக் காட்டிய அதே சமயத்தில், ஒப்படைக்கப்பட்ட வேலைக்குத் தலைவன் சொந்தப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று அவர் கோரினார். ''விவாதிப்பது—எல்லோரும் சேர்ந்து, பொறுப்பு ஏற்பதோ—தனி நபர்.''*

### 3. சமூக நிர்வாக அமைப்பின் செவ்வைப்பாடு — கம்யூனிசக் கட்டுமானத்தினது வெற்றிக்கு உரிய முக்கிய நிபந்தனை

சமூகத்தைத் திட்டமிட்டு மாற்றி அமைப்பதிலும் சமூக நிகழ்முறைகளை விஞ்ஞானப் பாங்கில் நிர்வகிப்பதிலும் வள மான அனுபவம் சோவியத் நாட்டில் திரட்டிக் குவிக்கப்பட் டிருக்கிறது. சோஷலிசமும் கம்யூனிசமும் கட்டப்படுகையில், சமூகத்தின் வர்க்க அமைவு மாறியதையும் தேசியப் பொரு ளாதாரத்தினதும் பண்பாட்டுக் கட்டுமானத்தினதும் பரி மாணங்கள் அதிகரித்ததையும் தொடர்ந்து நிர்வாகத்தின் உள்ளடக்கமும் நிறுவன வடிவங்களும் மாருமல் நிலைத்து நிற்கவில்லை, இடையருது செவ்வைப்பட்டுக் கொண்டு போயின.

சமூக நிகழ்முறைகளின் விஞ்ஞானப் பாங்குள்ள நிர் வாகம் கம்யூனிசக் கட்டுமானத்தின் அடிப்படைப் பணிகளில் ஒன்று என வி. இ. லெனின் எண்ணி வந்தார். விஞ்ஞானப் பாங்குள்ள நிர்வாகம் குறித்த கோட்பாடுகளை விரிவாக வகுத்ததோடு நில்லாமல் இந்தக் கோட்பாடுகளை வாழ்க்கை யில், அன்ருட நடைமுறையில் விடாப்பிடியாகப் புகுத்தியும் வந்தார் அவர். நிர்வாகச் செயலை மக்களின் உடைமையாக மாற்றி, கட்சியினதும் அரசினதும் கவனத்தின் மையத்தில் அதை வைப்பதன் மூலம் நிர்வாக முறைகளாலும் சோஷ லிசம் முதலாளித்துவத்தை வெல்ல வல்லது என்று வி. இ. லெனின் உறுதியாக நம்பினார்.

கம்யூனிசக் கட்டுமானத்தின் தற்போதையக் காலப் பகுதியில்—சோஷலிசப் பொருளாதாரத்தின் ஏற்றம், சமூக

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 44, பக்கம் 165 (ருஷ்யனில்).

உறவுகளின் செவ்வைப்பாடு, உளவகை வாழ்க்கையின் வளர்ச்சி ஆகியவை காரணமாக—நிர்வாகப் பணி அசாதாரணமாகச் சிக்கல் அடைந்து இருக்கிறது. சமூக வளர்ச்சியின் போக்குகளேயும் சமூக வாழ்வினது வெவ்வேறு பகுதிகளுடைய மிகச் சிக்கலான பின்னலேயும் பரஸ்பரப் பாதிப்பையும் விஞ்ஞானப் பாங்கில் பகுத்து ஆராய்வது இப்போது ஒருபோதும் இல்லாத அளவு இன்றியமையாதது ஆகும்.

கம்யூனிஸ்டுக் கட்சி தற்காலத்தின் தேவைகளேக் கணக்கில் எடுத்துக் கொண்டு, நிர்வாகம் பற்றிய லெனினுடைய கோட்பாடுகளேத் தொடர்ந்து வளர்வுறுத்தியும் செவ்வைப் படுத்தியும் வருகிறது. பொருளாதார, அரசியல், உட்கட்சிப் பிரச்சினைகள் குறித்த சோ. யூ. க. கட்சியின் அண்மைத் தீர்மானங்களின் ஆழ்ந்த பொருள், சோ.சோ.கு. யூனியனுடைய கட்சி, அரசு வேலேயில் உறுதியாக நிலே பெற்றுவரும் பாணியின் இயல்பான தன்மை, சமூக நிகழ்முறைகளின் நிர்வாகம் என்ற பெருஞ் செயல் முழுவதையும் விஞ்ஞானப் பாங்குள்ள, நடப்பியல் அடிப்படையில் நடத்திச் செல்லும் முயற்சியில் அடங்கி உள்ளது.

நிர்வாகத்தை மேற்கொண்டு செப்பம் ஆக்குவதற்கான நடவடிக்கைகளின் தொகுப்பு சோ.யூ.க. கட்சியின் 26வது காங்கிரசினது முடிவுகளிலும் சோவியத் அரசாங்கத்தின் தீர்மானங்களிலும் அடங்கியுள்ளது. திட்ட வேலேயின் தரத்தை உயர்த்துவது; உற்பத்தித் திறன்களின் செயல்பாட்டை விரைவுபடுத்துவதும் முதலீடுகளின் பயன்பாட்டை உயர்த்துவதும்; பொருளாதாரத் தற்சார்பை வளர்ப்பதும் பொருளாதார நெம்புகோல்கள், தூண்டுதல்களின் பாத்திரத்தை அதிகமாக்குவதும்; நிர்வாகத்தின் நிறுவனக் கட்டமைப்பைச் செவ்வைப்படுத்துவது, அதன் பொருளாயத-தொழில்நுட்ப, விஞ்ஞான அடித்தளத்தை வலுவாக்குவது; பணியாளர்களின் பயிற்சியை மேம்படுத்துவது, நிர்வாகத்தின் ஜனநாயகத் தன்மையை மேலும் விரிவாக்குவது, பொருளாதாரத்தையும் மொத்தத்தில் சமூகத்தையும் நிர்வகிப்பதில் வெகுஜனங்களின் முன்முயற்சியையும் படைப்புச் செயலூக்கத்தையும் வளர்ப்பது ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் இங்கே குறிக்கப்படுகின்றன.

சோ. யூ. க. கட்சி மத்தியக் கமிட்டி 26வது கட்சிக்

காங்கிரசுக்குச் சமர்ப்பித்த விவர அறிக்கையிலும் **1981 முதல் 1985 வரையுள்ள ஆண்டுகளிலும் 1990ம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியிலும் சோவியத் யூனியனது பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்குரிய முக்கியத் திசைகள்** என்ற அறிக்கையிலும் நிர்வாகத்தை மேம்படுத்துவது குறித்த தனிப்பட்ட பிரிவுகள் அடங்கியுள்ளன. இவற்றில் மற்றவற்ருேடு பின்வருவதும் கூறப்பட்டிருக்கிறது: ''உற்பத்தியின் அதிகரித்து வரும் அளவுகளேயும் மேலும் மேலும் சிக்கலாகிக் கொண்டு போகும் பொருளாதார உறவுகளேயும் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் தேவைகளேயும் கணக்கில் எடுத்துக் கொண்டு முதிர்ச்சி அடைந்த சோஷலிசத்தினது பொருளாதாரத்திற்கு உரிய வாய்ப்புக்களேயும் மேம்பாடுகளேயும் அதிகபட்ச அளவில் பயன்படுத்தும் நோக்கத்துடன் தேசியப் பொருளாதாரத்தின் நிர்வாகத்தை ஒத்திசைந்த முறையில் சீர்படுத்த வேண்டும்... பொருளாதார, சமுதாயத் துறைகளில் நாட்டின் வளர்ச்சி குறித்த கட்சியின் முடிவுகளே நிறைவேற்றுவதையும் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றும் நிகழ்முறையை விரைவுபடுத்துவதையும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் தேசியப் பொருளாதாரத்தின் நிர்வாகம் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.''*

---

* **1981 முதல் 1985 வரையுள்ள ஆண்டுகளிலும் 1990ம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியிலும் சோவியத் யூனியனது பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்குரிய முக்கியத் திசைகள்,** பக்கம் 85.

## அத்தியாயம் எட்டு

# பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் அமைப்பது—கம்யூனிசக் கட்டுமானத்தில் முக்கியமானது

எவற்றின் உதவியால் மனிதன் தனக்கு இன்றியமையாத வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்கிறானோ அந்தக் கருவிகளும் உழைப்புச் சாதனங்களும் சேர்ந்த தொகுப்பே பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் எனப்படுகிறது. சமூக வளர்ச்சித் தரத்தைக் காட்டும் முக்கியமான குறி ஆகும் இது.

சமூகத்தின் முன்னேற்றம் முதன்மையாக அதன் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் முன்னேற்றமே ஆகும். எனவே சோவியத் யூனியன் தற்போது தொடங்கி இருக்கும் பணியான உலகின் யாவற்றிலும் முன்னேறிய சமூகத்தின் கட்டுமானப் பணி குறித்த விளக்கம் அதன் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் சித்திரிப்பிலிருந்து, அதை அமைப்பதற்கான வழிகளிலும் சாதனங்களிலுமிருந்து தொடங்குகிறது.

### 1. கம்யூனிசத்தினுடைய பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் முக்கியத்துவம்

புதிய சமூகத்தின் முதல் கட்டமான சோஷலிசத்துக்கு உரிய பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் நவீன இயந்திர உற்பத்தி ஆகும். ஆனாலும் சோஷலிச உற்பத்தியின் நிலைமையும் தரமும் உழைப்பாளிகளின் இடையறாது அதிகரித்து வரும் பொருள்வகை, உளவகைத் தேவைகளைத் தாராள

மாக நிறைவேற்றப் போதுமானவை அல்ல. இவ்வாறு நிறை வேற்ருமல் வளர்ச்சி பெற்ற கம்யூனிசம் இருக்க முடியாது.

பொருள்வகை, வளவகைச் செல்வங்களின் செழிப்புக்கு வகை செய்யவும் மனிதர்களின் முழுமையான பொருளா தாரச் சமத்துவத்தை அடைவதற்கான நிலைமைகளை அதன் மூலம் உருவாக்கவும் கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில் நுட்ப அடித்தளம் முதன்மையாக இன்றியமையாதது. உழைப் பின் ஆக உயர்ந்த உற்பத்தித் திறனுக்கு வகை செய்வதும் பழைய உழைப்புப் பாகுபாட்டுக்கு முடிவு கட்டுவதும் உழைப் பையே உருமாற்றுவதும் கடமையிலிருந்து முதற்படியான வாழ்க்கைத் தேவையாக, மகிழ்ச்சி, உள்தூண்டல், படைப்பு ஆகியவற்றின் ஊற்ருக அதை மாற்றுவதும் இந்த அடிப் படையிலேயே முடியும்.

சோஷலிசச் சமூக உறவுகளைக் கம்யூனிச உறவுகளாக மாற்றுவதும் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக் கும் இடையிலும் நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடை யிலும் அறிவு உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடை யிலும் நிலவும் முக்கியமான வேறுபாடுகளை ஒழிப்பதும் கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் அடிப்படையிலேயே சாத்தியம் ஆகும்.

வளமான அறிவும் உயர்ந்த ஒழுக்க நெறிக் கோட்பாடு களும் செப்பமான உடல்வாகும் கொண்ட புதிய மனி தனைப் பயிற்றி வளர்ப்பது கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் அமைப்பதன் அடிப்படை யிலேயே முடியும். இது புரியக் கூடியதே. ஏனெனில், சர் வாம்ச வளர்ச்சி அடைவதற்கு ஒருவன் பொருள்வகை வசதி களை முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும், தன் உளவகைத் தேவைகளை விரிவாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும், சமூக நிர்வாகத்தில் செயல்முறைப் பங்கு ஆற்றவும் உடல், உளச் செவ்வைப்பாடு பெறவும் அவன் உற்பத்தி உழைப் பிலிருந்து நிறைய ஒழிவு நேரம் கொண்டிருக்க வேண்டும். இவ்வாருக, கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் அமைக்கப்படுவது சர்வாம்ச வளர்ச்சி பெற்ற மனிதனின் உருவாக்கம் என்ற சமூக வளர்ச்சியின் இறுதிக் குறிக்கோளை அடைவதற்கான பொருளாதார முதனிலையாக, நிபந்தனையாக விளங்குகிறது.

## 2. கம்யூனிசத்தினுடைய பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் சிறப்புத் தன்மைகளும் அதை அமைப்பதற்கான வழிகளும்

சோவியத் யூனியனில் கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் அமைக்கப்படுவது உற்பத்திச் சக்திகள் அளவில் பெருகுவதற்குள் அடங்கி விடவில்லை. உற்பத்தி நிகழ்முறையின் இயல்பிலேயே பண்பு மாற்றங்களை அது முதன்மையாகக் குறிக்கிறது. நாடு முற்ற முழுக்க மின்சாரமயம் ஆக்கப்படுவதும், அதன் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் சமூக உற்பத்தியின் தொழில்நுட்பமும் இயந்திர நுணுக்கமும் ஒழுங்கமைப்பும் செப்பம் ஆக்கப்படுவதும்; உற்பத்தி நிகழ் முறைகள் எல்லா வகையிலும் இயந்திரமயம் ஆக்கப்படுவதும் மேலும் மேலும் முழுமையாகத் தானியங்கிமயம் ஆக்கப்படு வதும்; இரசாயனம் விரிவாகக் கையாளப்படுவது; பொரு ளாதார நோக்கில் பயன்பாடுள்ள புதிய உற்பத்தித் துறை கள் எல்லா வகையிலும் வளர்ச்சி அடைவதும் புது வகை ஆற்றல்களும் பொருட்களும் பெறப்படுவதும்; இயற்கை, பொருள், உழைப்பு வளங்கள் சர்வாம்சமாகவும் அறிவுக் கொத்த முறையிலும் பயன்படுத்தப்படுவது; விஞ்ஞானம் உற்பத்தியுடன் உள்ளார்ந்த முறையில் இணைவதும் விஞ் ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம் விரைந்த வேகத்தில் நடப்பதும்; உழைப்பாளிகளின் பண்பாட்டு-தொழில்நுட்பத் தரம் உயர்வது — கம்யூனிசத்தினுடைய பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் பண்புவகைச் சிறப்புத் தன்மைகள் இவையாகும்.

உற்பத்தி எல்லா வகையிலும் இயந்திரமயமும் தானி யங்கிமயமும் ஆக்கப்படுவது தொழில்நுட்ப முன்னேற்றத் தின் மிக முக்கியப் போக்கு, கம்யூனிசத்தினுடைய பொருளி யல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் இயல்பான தன்மை ஆகும். இவை உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்து கின்றன, செய்பொருள்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி அவற்றை மலிவாக்குகின்றன, உழைப்பாளிகளைக் கடினமான உடல் உழைப்பிலிருந்து விடுவிக்கின்றன, உழைப்பின் இயல் பையே மாற்றி விடுகின்றன.

தேசியப் பொருளாதாரத்தின் எந்த ஒரு துறையின் வளர்ச்சியும் மின்னுற்றலின் பயன்பாட்டுடன் தொடர்பு கொண்டது. மின்னுற்றல் பொருளாதாரத்தின் ''ரொட்டி'' என்று அழைக்கப்படுவது காரணத்தோடுதான்.

மின்சாரமயமாக்குவது பொருளாதார வளர்ச்சியின் அச்சாணியாக விளங்குகிறது. எல்லா உற்பத்தித் துறைகளை யும் இயந்திர நுணுக்கச் செயல்முறைகளையும் மின்னுற்றல் மாற்றி அமைத்து வருகிறது. தானியங்கி இயல், மின்னணுப் பொறி இயல், சைபர்னெடிக்ஸ், இரசாயனம், மின் உலோக வார்ப்பியல், உலோகங்களை மின்னுற்றலால் பதப்படுத்து வது, மின் வெப்ப இயல் முதலியவற்றின் பயன்பாடும் வளர்ச்சியும் மின் ஆற்றலின் பயன்பாட்டை அடிப்படை யாகக் கொண்டிருக்கின்றன.

சோவியத் யூனியனில் மின் ஆற்றலின் உற்பத்தி விரைந்த வேகத்துடன் அதிகரித்து வருகிறது. 1940ம் ஆண்டில் சோவியத் யூனியனில் 4,850 கோடிக் கிலோவாட்-மணி அளவே மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்பட்டது. 1960ல் இந்த எண் 29,200 கோடியாகவும் 1970ல் 74,100 கோடி யாகவும் 1980ல் 1,29,500 கோடியாகவும் அதிகரித்தது.

எரிபொருள் எரிவதாலும் நீரின் ஆற்றலாலும் மின் ஆற்றல் உண்டாக்கப்படுகிறது. ஆனுல் எரிபொருள் சேமிப்புக் களும் நீர் வளங்களும் எவ்வளவு தான் பெரியவையாக இருந்தாலும் எல்லையற்றவை அல்ல. உதாரணமாக, நிலத்தில் இதுவரை அறியப்பட்டுள்ள சாதாரணக் கனிய எரிபொருள் சேமிப்புகள் இன்னும் இரண்டு அல்லது மூன்று நூற்ருண்டு களில் தீர்ந்து போகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆற்றலின் புதிய வகைகளைப் பெறுவதற்கான வழிகளை மனித குலம் தேடிக் கொண்டிருப்பது இயல்பே.

அணு ஆற்றலியல் நாளுக்கு நாள் அதிகத் தீவிரமாக வளர்ந்து வருகிறது. சோவியத் நாட்டில் சில பெரிய அணு மின் நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. கப்பல் இயந்திரங்களிலும் நீரை உப்பற்றது ஆக்கவும் அனேக இயந்திர நுணுக்கச் செயல்முறைகளிலும் மருத்துவத்திலும் இத்தகைய பிறவற்றிலும் அணுவாற்றல் பயன்பட்டு வரு கிறது. அணுவாற்றலை மின் ஆற்றலாக நேரே மாற்றுவதி லும் வெப்ப அணுக்கரு எதிர்விளைவுகளை இயக்குவதிலும்

சூரிய ஆற்றலைப் பயன்படுத்துவதிலும் ஆராய்ச்சிகள் வெற்றி கரமாக நடந்து வருகின்றன.

உற்பத்தி இரசாயனமயமாவது கம்யூனிசத்தினுடைய பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் முக்கியச் சிறப்புத் தன்மையாக விளங்குகிறது. புதிய செயற்கை இரசாயனப் பொருள்கள் இல்லாமல் நவீன உற்பத்தி நடவாது. நாம் குறிப்பிடுபவை பிளாஸ்டிக் களிகளும் செயற்கை ரப்பர்களும் நவீனக் கூட்டுறுப்பி இரசாயனத்தின் மற்றச் சந்ததிகளும் ஆகும். உறுதியிலும் மலிவிலும் பகட்டிலும் இவை இயற்கைப் பொருள்களை அடிக்கடி விஞ்சிவிடுகின்றன.

இரசாயனம் மூலப்பொருள் அடித்தளத்தை விரிவுபடுத்துகிறது, தொழில் துறைக்குப் புதிய பொருள்களையும், விவசாயத்தின் ஏற்றத்துக்கும் (உதாரணமாக, உரங்கள்) மக்களின் பயன்பாட்டுக்கான பண்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அவற்றின் தரத்தை உயர்த்துவதற்கும் ஆக அதிகப் பயன் உள்ள சாதனங்களையும் தருகிறது. இரசாயனமயமாக்குவது உழைப்பை எளிதாக்கவும் உழைப்புச் செலவுகளைச் சிக்கனப்படுத்தவும் வழி வகுக்கிறது. தொழில்நுட்ப நோக்கங்களுக்குப் பயன்பட்டு வந்த பேரளவான உணவுப் பண்டங்கள் இரசாயனமயமாக்குவதன் விளைவாக மிச்சப்படுகின்றன. இரசாயனமயமாக்குவதில் பெறப்பட்டுள்ள வெற்றிகள் தொழில் நுட்பத்தின் மிக முக்கியத் துறைகளின் வளர்ச்சிக்கு யாவற்றிலும் சாதகமான நிலைமைகளை உருவாக்கி வருகின்றன.

விவசாய வளர்ச்சியின் தரம் மக்களின் வள வாழ்வைக் கணிசமான அளவு வரையறுக்கிறது, எனவே, **விவசாய உற்பத்தியின்** ஏற்றம் கம்யூனிசக் கட்டுமானத்தின் உடனடியான, அதே சமயம் கடினமான பணிகளில் ஒன்ருக விளங்குகிறது.

மக்களின் உணவுப் பண்டத் தேவைகளும் தொழில் துறையின் மூலப் பொருள் தேவைகளும் இடைவிடாமல் அதிகரித்துக் கொண்டு போவதால் சோவியத் யூனியனில் விவசாயத்தை மேற்கொண்டு ஏற்றம் பெறச் செய்வது இன்றியமையாதது ஆகிறது.

விவசாயத்தை மேற்கொண்டு இயந்திரமயமும் இரசாயனமயமும் ஆக்குவது, நிலத்தை மேம்படுத்துவது, விவசாய இயலின் நவீனச் சாதனைகளை விரிவாகப் பயன்படுத்துவது,

தகுதி பெற்ற பணியாளர்களைப் பயிற்றுவது ஆகியவற்றுக்கான விரிவான திட்டம் சோவியத் நாட்டில் செயலாக்கப் பட்டுவருகிறது. இந்தத் திட்டத்தின் நிறைவேற்றம் வளர்ச்சி அடைந்து வரும் உற்பத்தித் துறையின் மூலப் பொருள் தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்வதோடு உணவுப் பண்டங்களின் செழிப்புக்கும் வகை செய்யும்.

## 3. விஞ்ஞானத்தை நேரான உற்பத்திச் சக்தியாக மாற்றுவது

கம்யூனிசத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தை உருவாக்குவதில் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்துவது பெருத்த முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்தப் புரட்சியின் தன்மை என்ன?

### விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியும் அதன் தன்மையும் முக்கியத்துவமும்

தற்போது உலகம் முழுவதிலும் நடைபெற்று வருகிறது விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி. தானியங்கி இயல், வானொலி மின்னணு இயல், தொலைப் பொறி இயக்க இயல் ஆகியவற்றின் பெருத்த வெற்றிகளுடனும் அணு ஆற்றலின் பயன்பாட்டுடனும் விண்வெளி வசமாக்கப்பட்டதுடனும் சைபர்னெடிக்ஸ், இரசாயனம், உயிரியல் ஆகியவற்றின் சாதனைகளுடனும் தொடர்பு கொண்டது இந்தப் புரட்சி.

சோஷலிசம், முதலாளித்துவம் என்ற வெவ்வேறு சமூக அமைப்புக்களில் இந்தப் புரட்சி நடந்தேறி வருகிறது. சமூக வளர்ச்சி குறித்த விதிகளும் சமூக உற்பத்தியின் குறிக்கோளும் இந்த அமைப்புக்களில் கோட்பாட்டு நோக்கில் வெவ்வேறானவை ஆகையால் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் சமூக பொருளாதார விளைவுகளும் வருங்கால வாய்ப்புக்களும் கூட வெவ்வேறானவை.

அதி நவீனமான விஞ்ஞான-தொழில்நுட்பச் சாதனைகளின் அடிப்படையில் உற்பத்தியைச் செவ்வைப்படுத்தாமல் இருக்க முதலாளியால் முடியாது, ஏனெனில் அப்படி இருந்தால் கொடுமையான போட்டிப் போராட்டத்தில் அவன் சீரழிந்து போவான். ஆகவே, விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம் முதலாளித்துவத்திலும் கூடப் புறநிலை இன்றியமை

யாக விளங்குகிறது. ஆக அதிக வளர்ச்சி அடைந்த நாடுகளைச் சேர்ந்த முதலாளிகள் உற்பத்தி விறலை அதிக மாக்கவும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் செய் பொருள்களின் தரத்தை மேம்படுத்தவும் இத்தகைய பிற வற்றுக்காகவும் நவீன விஞ்ஞான, தொழில் நுட்பச் சாதனை களைத் திறமையாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஆனாலும் முதலாளித்துவத்தின் நிலைமைகளில் விஞ் ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஆழ்ந்த முரண்பாடு களைக் காணாமல் இருக்க முடியாது: ஒரு புறம் உற்பத்தி எல்லை இல்லாமல் விரிவடையும் போக்கைக் காட்டுகிறது, மறு புறம் மக்களின் வாங்கும் சக்தி வரம்புக்கு உட்பட்டது, வெளிச் சந்தைகளில் விற்பனை போட்டிப் போராட்டம் காரணமாக இடர்ப்படுகிறது. சந்தையின் குறுகிய வாய்ப்பு உற்பத்தி விரிவை வரம்புக்கு உள் குறுக்குகிறது. தானியங்கி முறையும் மற்ற நவீன விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளும் கையாளப்படுவது வேலையற்றோர் படையை மேலும் பெரி தாக்கி வாங்கும் திறனை இன்னும் அதிக அளவில் குறுக்கு கிறது. முதலாளித்துவத்தில் நிலவும் ஒழுங்கீனம், அராஜ கம், போட்டி ஆகியவை விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத் திலும் வர்த்தக இரகசியத்தைத் தோற்றுவித்து, விஞ்ஞான-தொழில்நுட்ப ஒத்துழைப்பை அதனால் கடினம் ஆக்கு கின்றன. இவை எல்லாவற்றுக்கும் காரணம், முதலாளித் துவத்தில் உற்பத்தி, விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியின் நோக்கம் லாபம், ஆதாயம் என்பதே. உழைப்பாளிகளின் நிலைமை மோசமாவதற்கும் வேலையின்மைக்கும் உழைப்புத் துறையிலிருந்து மனிதன் வெளியேற்றப்படுவதற்கும் அதன் மூலம் மனிதத் திறமைகள் வளர்வதற்கான வாய்ப்புக்கள் தடைப்படுவதற்கும் காரணம் இதுவே.

சோஷலிசத்தின் நிலைமைகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சி வாய்ப்பு முற்றிலும் வேறானது. சோஷலிசம் சமூக உற்பத்திச் செயல்முறையைச் சமூகத்தின் எல்லா உறுப்பினருடையவும் சர்வாம்ச வளர்ச்சிக்காகத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கிறது. எனவே சோஷலிசமும் கம்யூனிசமும்தான் விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை மனிதர்களுக்குக் கேடாக அன்றி மனிதனது நன்மைக்காகப் பயன்படுத்துகின்றன. விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி

யின் சாதனைகளின் பயன்பாடு சோஷலிசத்தில் படைப்புக்கும் தொழிலாளியின் சர்வாம்ச வளர்ச்சிக்கும் சாதகமான நிலைமைகளை உருவாக்க உதவுகிறது.

கம்யூனிசக் கட்டுமானம் நிகழ்கையில் விஞ்ஞானம் உற்பத்தியுடன் மேலும் மேலும் நெருக்கமாகச் சேர்கிறது. உற்பத்தியோ, விஞ்ஞானத்தின் சாதனைகளை நாளுக்கு நாள் அதிக விரிவாகப் பயன்படுத்துகிறது. விஞ்ஞானம் மேலும் மேலும் முழு அளவில் நேர்முகமான உற்பத்திச் சக்தியாக மாறிக் கொண்டு போகிறது, உற்பத்தியோ, விஞ்ஞானத்தின் இயந்திர நுணுக்க உருவம் ஆகி வருகிறது.

இயற்கை வளங்களை விரிவாகவும் பயன்படும் வகையிலும் மனிதனுக்குத் தொண்டாற்றச் செய்யவும், இயற்கை விதிகளையும் சமூக வளர்ச்சி விதிகளையும் தெரிந்து கொண்டு பயன்படுத்தவும் விஞ்ஞானம் உதவுகிறது. உற்பத்தியுடனும், மக்களின் படைப்பு உழைப்புடனும், கம்யூனிசக் கட்டுமான நடைமுறையுடனும் விஞ்ஞானம் நாளுக்கு நாள் அதிக நெருக்கமாக இணைந்து வருகிறது. கா. மார்க்சின் சொற்கள் பலித்து வருகின்றன. புதிய சமூகத்தில் பெரிய இயந்திரத் தொழில் துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப, உண்மையான செல்வத்தை—பொருள்வகை, உளவகை இரண்டையும் சேர்ந்த செல்வத்தை—உருவாக்குவது ''விஞ்ஞானத்தின் பொதுத் தரத்தையும் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தையும் அல்லது இந்த விஞ்ஞானம் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படுவதையும்'' பொறுத்திருக்கும் என்று அவர் எழுதினர்.*

விஞ்ஞானத்தினதும் உற்பத்தியினதும் பரஸ்பரப் பாதிப்பையும் கம்யூனிசத்துக்கான பொருளாதார முதனிலைகளை உருவாக்குவதில் விஞ்ஞானத்தின் பங்கையும் விவரமாகப் பார்வையிடுவோம்.

**விஞ்ஞானத்தின் வருங்காலம் உற்பத்தியின் வருங்காலம்**

விஞ்ஞானம் நேர்முகமான உற்பத்திச் சக்தியாக மாறுவதன் அர்த்தம் உற்பத்திக் கருவிகளையும் பொருள்வகை நலங்களை உற்பத்தி செய்யும் மனிதர்களையும் போல விஞ்ஞானம் உற்பத்திச் சக்திகளின் ஒப்புநோக்கில் சுதந்திரமான மூன்றுவது

* கா. மார்க்சும் பி. எங்கெல்சும், நூல் திரட்டு, தொகுதி 46, பாகம் II, பக்கம் 213 (ருஷ்யனில்).

அம்சம் ஆகிவிடுவது அல்ல. தான் எவற்றில் பொருள்வகை உருவம் பெறுகிறதோ, அந்த உற்பத்திக் கருவிகள் மூலமாக வும், விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்று அதன் சாதனைகளை உற் பத்தியில் பயன்படுத்தும் மனிதர்கள் மூலமாகவும் விஞ்ஞானம் உற்பத்திச் சக்தியின் பாத்திரத்தைப் பெறுகிறது.

உற்பத்தியுடன் உள்ளார்ந்த தொடர்பு இல்லாத நவீன விஞ்ஞானத்தைக் கற்பனை செய்ய முடியாது. உற்பத்தித் துறை விஞ்ஞானத்துக்கு மிக மிகச் சிக்கலான இயந்திரங்களை யும் கருவிகளையும் வழங்குகிறது, விஞ்ஞான இயந்திரங்களைக் கட்டி அமைக்கவும் பயன்படுத்தவும் தேவையான பொறியர் களையும் தொழில்வினைஞர்களையும் தொழிலாளர்களையும் அளிக்கிறது, விரிவான சோதனைத் தளத்தை விஞ்ஞானத் திற்குத் தருகிறது. நவீனத் தொழில்துறையால் நிறுவப் பட்ட மிகைத் திறன் உள்ள முடுக்கி இயந்திரங்களும் மிகச் சிக்கலான மற்றக் கருவிகளும் சாதனங்களும் இல்லாமல் அணுக் கருவின் மர்மங்களை அறிவது இயலாது. மின்னணு நுண் ணோக்காடிகளும் விண்வெளி ராக்கெட்டுகளும் வானொலித் தொலைநோக்கிகளும் எளியவையும் சிக்கலுள்ளவையுமான வேறு மிகப் பல அறிதல் கருவிகளும் இல்லாமல் தற்காலத்து விஞ்ஞானத்தைக் கற்பனை செய்ய முடியாது. இந்த எல்லாக் கருவிகளும் மனிதர்களுடைய விஞ்ஞானச் செயலோடு கூடவே உற்பத்திச் செயலினதும் விளைவு ஆகும்.

விஞ்ஞானத்தின் புரட்சி விளைக்கும் பாதிப்பு காரணமாக புதிய உற்பத்தித் துறைகள் தோன்றுவது மட்டும் இல்லாமல், மரபு வழி வந்த ''பழைய'' துறைகளும் அடிப்படையான உருமாற்றம் பெறுகின்றன. உலோக வார்ப்புத் தொழிலை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். கனியங்களிலிருந்து உலோகங்களை எடுக்கும் செயல்முறையே முன்பு உலோக வார்ப்பு என்பதாக அர்த்தம் செய்து கொள்ளப்பட்டது. இப் போதோ இது உலோகம் பற்றிய மிகச் சிக்கலான விஞ்ஞான மும் ஆகும். நவீன உலோக வார்ப்புத் தொழில் துறை இந்த விஞ்ஞானம் இல்லாமல் நடக்க முடியாது. இரும்பு, எஃகு, தேனிரும்பு, இரும்பற்ற உலோகங்கள் ஆகியவை உற்பத்தி யில் பயன்படும் உலோகங்களின் பெரும் பகுதியாக முன் போலவே விளங்கி வருகின்றன. ஆனாலும் யுரேனியம், தோரி யம், பெரிலியம், செசியம் போன்ற ''புதிய'' உலோகங்கள்

இப்போது உற்பத்தியில் ஆதிக்க இடங்களைப் பெற்று விட்டன. பயன்படும் உலோகங்களின் மொத்த அளவில் இவற்றின் விகிதம் பெரிதல்ல என்றாலும், இவை இல்லாமல் அணு மின்னுக்க இயலோ, வானொலி மின்னணு இயலோ, ராக்கெட் இயந்திர இயலோ அசாத்தியம் ஆகும். இந்த உலோகங்கள் மிகத் தூய நிலையில், கலப்பு அனேகமாக அறவே இல்லாத போது தான் பயன் அளிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உலோகங்களைப் பெறுவது வழக்கமான உலோக வார்ப்பு அல்ல, விஞ்ஞானத்துடன் பிரிக்க முடியாதபடி இணைந்த உலோக வார்ப்புத் தொழில்.

விஞ்ஞானத்துக்கும் உற்பத்திக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பேசுகையில் இந்தத் தொடர்பைப் பயன் முறையில் புரிந்து கொள்ளக் கூடாது. உடனடியான உற்பத்திப் பயனை விஞ்ஞானிகளிடம் கோரக் கூடாது. நடப்பு நாளை மட்டும் இன்றி அடுத்து வரும் நாட்களையும் காணவும் வருங்காலத்துக்காகச் சேமிப்புப் பணி ஆற்றவும் விஞ்ஞானம் கடமைப் பட்டது. விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் புதிய பாதைகள் சமைக்கும் மிக முக்கியமான சித்தாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அதன் பொறுப்பு. இந்தப் பிரச்சினைகளில் சில உணர்ந்து அறியக் கூடிய லாபங்களை உடனே தர மாட்டா. ஆனால் விஞ்ஞானத்தின் தேட்டங்கள் எந்த அளவுக்கு உடனடி முக்கியத்துவம் உள்ளவையோ அந்த அளவுக்கு இந்த லாபங்கள் கணிசமானவையாக இருக்கும். உதாரணமாக, அணு ஆற்றல் விஷயத்தில் நேர்ந்தது இது தான். இது கண்டுபிடிக்கப்பட்டதற்கு அரை நூற்றாண்டு கழித்தே நடைமுறையில் இதைப் பயன்படுத்த மனிதன் தெரிந்து கொண்டான்.

## 4. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் நிலைமைகளில் மனிதன்

சமூக உற்பத்தியில் மனிதனுடைய இடமும் பாத்திரமும் மாறுவதில் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சமுதாயத் தன்மை துலக்கமாக வெளிப்படுகிறது.

வரலாற்று வளர்ச்சியின் எல்லாக் கட்டங்களிலும் மனிதனும் இயந்திரமும் பொருள் உற்பத்தியில் ஒன்றான முழுமை

யாகச் செயலாற்றி வந்தார்கள். மனிதன் இல்லாவிட்டால் இயந்திரம் உயிர் அற்றது. இயந்திரம் இல்லாவிட்டால் மனிதன் வலு அற்றவன். சேர்ந்து அவர்கள் ''மனித-இயந்திரத்'' தொகுப்பாக அமைகிறார்கள். இந்தத் தொகுப்பின் வரம்புகளுக்குள் அதன் மனித, இயந்திரப் பகுதிகளின் செயல்களுடைய மறு வினியோகம் நிகழ்கிறது.

மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் இடையே பரஸ்பரப் பாதிப்பு திண்ணமான வரலாற்றுத் தன்மை உள்ளது, சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் உற்பத்தி உறவுகளைச் சார்ந்தது. சமுதாய உறவுகளின் சிக்கலான வலையில் பின்னப்பட்டிருக்கிறான் மனிதன். இயந்திரத்துடன் அவனுடைய பரஸ்பரப் பாதிப்பை முடிவில் தீர்மானிப்பவை இந்த உறவுகளே. இந்தப் பரஸ்பரப் பாதிப்பில் மனிதனுடைய பங்கு இயந்திரத்தின் நெம்புகோல்களைக் கைகளால் இயக்கும் உடற்செயலுக்குள் அடங்கி விடுவதில்லை. கைகளால் இயக்கும் இந்தச் செயல் இன்றியமையாத விதத்தில் சமுதாய வண்ணம் பெறுகிறது.

முதலாளித்துவ உற்பத்தியிலும் சோஷலிச உற்பத்தியிலும் பயன்படும் இயந்திரங்கள் தொழில்நுட்ப நோக்கில் ஒரே மாதிரியானவை, ஆனால் வெவ்வேறு சமூகங்களில் அவை பெறும் சமுதாயத் தன்மை ஒரே மாதிரியானது அல்ல. இதன் காரணம் என்ன என்றால், முதலாளித்துவத்தின் நிலைமைகளில் இயந்திரங்கள் தனியார் உடைமையாக இருக்கின்றன, சோஷலிசத்திலோ அவை சமூக உடைமையாக விளங்குகின்றன என்பதுதான். முதலாளித்துவத்தில் ''மனித-இயந்திரத்'' தொகுப்பில் முதல் இடம் பெறுவது இயந்திரம். மனிதன் அதன் இணைப்பு மட்டுமே. உற்பத்தி வேகத்தைக் குறையாமல் வைத்திருப்பதும் அதிகப்படுத்துவதும், போட்டிப் போராட்டத்தில் வெல்வதும், ஆக உயர்ந்த ஆதாயத்துக்கு வகை செய்வதுமே முதலாளியின் முதன்மைக் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக முதலாளி தொழில் நுட்பத்தையும் இயந்திரங்களையும் செவ்வைப்படுத்துகிறான், ஆனால் மனிதனைப் பற்றிக் கவலையே படுவதில்லை.

சோஷலிசச் சமூகத்தில் ''மனித-இயந்திரத்'' தொகுப்பில் முதன்மை பெற்றிருப்பவன் மனிதன். அவன் தொழில் நுட்ப நோக்கில் இயந்திரத்தை ''இயக்குபவன்'' மட்டும்

அல்ல, மற்ற உழைப்பாளிகளோடு சேர்ந்து அதன் சொந்தக் காரன், உடைமையாளன். ஆகையால்தான் சோஷலிசத்தில் தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றிய கவலே மனிதனைப் பற்றியும் அவனுடைய அறிவு, உடல் செவ்வைப்பாட்டைப் பற்றியும் எடுத்துக் கொள்ளப்படும் கவலேயோடு இணைந்திருக்கிறது.

தானியங்கி அமைப்பின் ஏற்றம் காரணமாக மனிதன் அசாதாரணச் சிக்கல் வாய்ந்த உற்பத்தித் தொகுப்புக்களின் பகுதி ஆகி வருகிறான். இந்த நிலைமைகளில் எதிர்ப்படும் பணி உற்பத்திச் செயல்முறைகளிலிருந்து மனிதனை முற்ற முழுக்க விடுவித்து விடுவதும் அவனுடைய இடத்தில் இயந்திரத்தையே எங்கும் பயன்படுத்துவதும் அல்ல, ஏனெனில் இது நடவாது. இயந்திரத்துடன் பரஸ்பரப் பாதிப்புக்கு மனிதனுடைய அறிவு, உடல் வாய்ப்புக்களுக்கு ஏற்றவையும் ஆக அதிக நோக்கப் பொருத்தம் உள்ளவையுமான வடிவங்களைத் தேடிக் காண்பதுதான் நிறைவேற்ற வேண்டிய பணி ஆகும். தானியங்கி அமைப்புள்ள உற்பத்தியின் நிலைமைகளில் மனிதன் உற்பத்திச் செயல்முறை மீது மறைமுகமாக, குறியீட்டுப் பொறிகள், இயக்கு பொறிகள் ஆகியவற்றின் வாயிலாகப் பாதிப்பு நிகழ்த்துவதால், இந்தப் பொறி அமைப்புக்களுடன் தான் மனிதனுடைய பரஸ்பரப் பாதிப்புக்கு யாவற்றிலும் அதிகமாக அறிவுக்கு இசைந்த வடிவங்களை முறைப்படுத்துவது சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் பெறுகிறது. இயந்திர அமைப்பாளர்களுக்கு மதிப்பிட முடியாத உதவி செய்து வருகிறது சைபர்னெடிக்ஸ். அதிகபட்சச் சாதக நிலையுள்ள இயந்திரத் தொகுப்புக்களை உருவாக்குவதோடு, சிக்கலான தானியங்கி அமைப்புக்களை இயக்குவதற்கான முறைகளை வகுப்பதும் மனிதனுடைய வாய்ப்புக்களுக்கும் திறமைகளுக்கும் பொருந்துபவையான இயக்கு சாதனங்களை அமைப்பதும் இதன் மீது சார்ந்திருக்கின்றன.

### இயந்திரம் மனிதனுடைய இடத்தைப் பெற்று விடுமா?

தானியங்கி இயலும் சைபர்னெடிக்சும் வளர்ச்சி அடைந்து விட்டதை அடுத்து மனிதனுடைய உடல் செயல்களோடு கூடவே அறிவுச் செயல்களும் இயந்திரங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இயந்திரங்கள் கணக்கீடுகள் செய்கின்றன, பொறி அமைப்புக்களையும் மிகச்

சிக்கலான இயந்திர நுணுக்கச் செயல்முறைகளையும் இயக்கு கின்றன, ஒரு மொழியிலிருந்து மறு மொழியில் பெயர்க் கின்றன, சதுரங்கமும் டிராப்ட்சும் ஆடுகின்றன, செய்யுள்கள் புனையவும் இசை அமைக்கவும் கூடச் செய்கின்றன. இந்த இயந்திர மொழிபெயர்ப்புக்களும் செய்யுள்களும் இசைப் படைப்புக்களும் மனிதனுடைய படைப்புக்களிலிருந்து ஒப்பிட முடியாத அளவு தொலைவில் இருக்கின்றன என்று சொல்லவே வேண்டியதில்லை. ஆனால் சில விஷயங்களில் இயந் திரம் மனிதனுடைய சிந்தனைத் திறன்களை விஞ்சி விடுகிறது. மனிதனைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவு (பத்து, நூறு யிரக் கணக்கான மடங்கு) விரைவாக இயந்திரம் சிக்கலான கணக்கீடுகளைச் செய்கிறது. புள்ளி இயல் முறையில் மிகப் பெருத்த எண்ணிக்கையுள்ள மாற்றுக்களை ஆராய்ந்து பொது மைப்படுத்த அது வல்லது. இவ்வளவு நிறைய மாற்றுக்களை மனத்தில் வாங்கிக் கொள்ள யாவரிலும் கூர்ந்த அறிவாளி யின் மூளை கூட வல்லதல்ல. இவ்வாறு பிறவும். எங்கே போவது மனிதனுக்கு ஒன்று ஆபத்தானதோ (உதாரணமாக, அணுக்கருச் செயல்முறைகளையும் பற்பல இரசாயனச் செயல் முறைகளையும் ஆராய்வது), அல்லது அசாத்தியமானதோ (தொலைதூர விண்வெளிப் பரப்பின் ஆராய்ச்சியில்) அங்கே செயலாற்ற இயந்திரத்தால் முடிகிறது.

இது போதாதென்று, தம்மையே பயிற்றிக் கொள்ளும் தானியங்கிகள் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. இவை மனிதனுடைய நேர்முக உதவி இல்லாமலே முடிவுகள் எடுக் கின்றன, செயல்களை நிறைவேற்றுகின்றன, வெளிப் பாதிப்பு களுக்குப் பொருத்தமான பதில்களைத் தாமே உருவாக்கு கின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால், அவற்றின் செயல் கள் வெளி உலகைப் புலன்களால் அறிவதுடன் பொருத்த மான விதத்தில் இணைந்துள்ளன. தங்களைத் தாங்களே செப் பனிட்டுக் கொள்ளவும் பழுதுபட்ட பகுதிகளை மாற்றவும் வல்ல தானியங்கிகளை நிறுவுவதில் குறிப்பிடத்தக்க முன் னேற்றம் பெறப்பட்டுள்ளது. சைபர்னெடிக்ஸ் உண்மையில் இப்போது முதல் அடிகள் தான் எடுத்து வைக்கிறது என் பதையும் மனிதச் சிந்தனையில் செயல்களைத் திரும்பச் செய்ய அதற்கு உள்ள வாய்ப்புக்கள் மெய்யாகவே அபாரமானவை என்பதையும் இதே கையோடு குறிப்பிட்டு விட வேண்டும்.

தர்க்க பூர்வமான செயல்களை நிறைவேற்றும் இயந்திரங்களை நிறுவுவதில் சைபர்னெடிக்ஸ் பெற்ற வெற்றிகளின் அடிப்படையிலேயே இந்த இயந்திரங்கள் சிந்தனை செய்பவை, எண்ணம் இடுபவை என்று குறிக்கப்பட்டன. இயந்திரங்கள் சிந்திக்கும் திறன் உள்ளவை என்று கூறிய சில சைபர்னெடிக்ஸ் இயலாரும் சமூக இயலாரும், சிறப்பாக எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் மனிதனுடைய சிந்தனைத் திறன்களை எல்லா அம்சங்களிலும் விஞ்சக் கூடியதும் மனிதனுடைய எல்லாச் செயல்களையும் தான் ஏற்றுக் கொண்டு முடிவில் மனிதனுடைய இடத்துக்குத் தானே வந்து விடக் கூடியதுமான இயந்திரத்தை உருவாக்க முடியும் என்று ஏற்கெனவே சொல்லத் தொடங்கி விட்டார்கள். அவர்களுடைய கருத்துப்படி, உலகில் மனிதனுடைய சகாப்தத்தின் இடத்தில் ரொபாட்டுக்களின் சகாப்தம் வந்து விடும். உதாரணமாக, பிரிட்டிஷ் சமூக இயலார் பீட்டர் கிளீட்டர் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறார். சைபர்னெடிக் இயந்திரங்கள் செப்பமடைய அடைய, இந்த இயந்திர ரொபாட்டுக்களின் சமூகம் ''வன்முறையும் குருதிப் பெருக்கும் இன்றி'' நாளடைவில் மனித குலத்தின் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு நிலவுலகில் மனிதர்களின் சுவடே இல்லாமல் அடியோடு அழித்து விடும் என்று ரொபாட்டுகளின் சகாப்தம் என்னும் தமது நூலில் அவர் கூறுகிறார்.

மனித குலத்தின் வருங்கால வாய்ப்பு மெய்யாகவே இவ்வளவு இருள் நிறைந்ததா? நிச்சயமாக இல்லை.

முதன்மையாக, மனிதனது தனிச் சிறப்பான பண்பு ஆகிய சிந்தனைத் திறனை சைபர்னெடிக் இயந்திரங்கள் பெற்று விடும் என்று சொல்வதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. இயந்திரம் மனிதன் போன்று சிந்திப்பது கிடையாது. அவனுக்கு இயல்பான சில தர்க்கச் செயல்களை வெறுமே காப்பி அடிக்கிறது, மாதிரியாகக் கொள்கிறது, அதிலும் முறையான தர்க்க அமைப்புக்கு இணங்கக் கூடியவற்றை மட்டுமே. முறையான தர்க்க, கணித அமைப்புக்கு இணங்கக் கூடிய சிந்தனைச் செயல்களின் வட்டம் இடையறாமல் விரிவடைந்து கொண்டு போவது விஷயத்தின் சாரத் தன்மையை மாற்றி விடவில்லை. சிந்தனையானது, உயிரியல், சமுதாயப் பரிணாமத்தின் உயிருள்ள விளைவான மூளையின் மூலக் கூறாக இருந்தது,

இருந்து வருகிறது, தன் இயல்பில் சமுதாயத் தன்மை கொண்டதாக இருந்தது, இருந்து வருகிறது. இயந்திரமோ, யாவற்றிலும் செப்பமான இயந்திரம் கூட, மனிதனுல் நிறுவவும் இயக்கவும் படும் உயிரற்ற பௌதிக-இரசாயனப் பண்டமாக இருந்தது, இருந்து வருகிறது.

மனிதனுல் சிந்திக்க முடியும், இயந்திரம் இல்லாமல் சிந்திக்க முடியும். இயந்திரத்தாலோ, மனிதன் இல்லாமல் தர்க்க முறையான செயல்கள் மட்டும் இன்றித் தூய இயந்திர ரீதியான செயல்களையும் கூடச் செய்ய முடியாது. மனிதனுல் தரப்பட்ட வேலைத்திட்டத்தின்படி இயந்திரம் "சிந்திக்கிறது", மனிதனுல் முன் கூட்டித் தனக்கு விதிக்கப்பட்ட செயல்களை நிறைவேற்றுகிறது. தம்மையே பயிற்றிக் கொள்பவையும் திருத்திக் கொள்பவையுமான தானியங்கிகளும் இதற்கு விலக்கு அல்ல. ஒரே வேறுபாடு என்ன என்றுல், அவற்றில் செலுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் சாதாரணத் தானியங்கிகளில் செலுத்தப்படுபவற்றைக் காட்டிலும் அதிகப் பொதுத் தன்மை கொண்டது என்பதே. இந்த வேலைத் திட்டத்தில் அடிப்படை விதிகள் மட்டுமே அடங்கி உள்ளன. வெளியிலிருந்து வரும் தூண்டல்களுக்கும் தானியங்கியின் எதிர்ச் செயல்களுக்கும் இடையே தொடர்பு இந்த விதிகளின்படி ஏற்படுத்தப்படுகிறது, தானியங்கிக்கு இந்தச் செயல்களில் ஓரளவு சுதந்திரம் அளிக்கப்படுகிறது.

சில விஷயங்களில் மனிதனை விஞ்சி விடும் இயந்திரம், எதார்த்தத்தைத் தன் உழைப்பால் மாற்றி அமைக்கவும் நிறுவவும் படைக்கவும் உள்ள திறமையில் மனிதனுக்கு எவ்வகையிலும் இணையாக வல்லதல்ல. உணர்ச்சிகள், எண்ணங்கள், அனுபவங்கள், அக்கறைகள், தேவைகள் ஆகியவற்றின் ஆழத்திலும் பல்வகைப்பாட்டிலும் வியப்பூட்டுவதான வரிசை—ஒரு வார்த்தையில் சொன்னுல், மனிதனுக்கு இயல்பான உயர் வெளிப்பாடுகள் எல்லாம்—இயந்திரத்துக்கு இயல்பானதல்ல என்பதைப் பற்றி நாம் இப்போது பேசவில்லை. மகிழவும் வருந்தவும், இன்பம் துய்க்கவும் துன்பம் அனுபவிக்கவும், அன்பு செய்யவும் வெறுக்கவும், உண்மையான அழகு விதிகளுக்கு இணங்கப் படைக்கவும் மனிதன் வல்லவன். இயந்திரமோ, இந்தத் திறன்கள் அற்றது. மனிதனுல் படைக்கப்பட்ட அது அவனுடைய சித்தத்தைக் குருட்டுத்

தனமாக நிறைவேற்றுகிறது. சாதாரணப் பொறி அமைப்புக் கள் மனிதனுடைய கைகளதும் தசைகளினதும் திறனை மிகப் பேரளவாக எப்படிப் பெருக்கினவோ, அப்படியே ''சிந் திக்கும்'' பொறி அமைப்புக்கள் மனித அறிவின் வாய்ப்புக் களையும் திறமைகளையும் விரிவாக்குகின்றன. ஆனாலும், தோண்டி இயந்திரம் மனிதனுடைய கையைப் போல் வேலை செய்தாலும் உண்மையான மனிதக் கரத்தின் இடத்தை எப் படிப் பெற்று விடவில்லையோ, அப்படியே இந்த இயந்திரங் களால் மனிதனுடைய இடத்தை, மனித மூளையினுடைய இடத்தை ஒருபோதும் பெற முடியாது.

''சிந்திக்கும்'' இயந்திரங்களின் செவ்வைப்பாட்டில் கோட்பாட்டு நோக்கில் எவையோ வரம்புகள் இருப்பதாக வும் மனித மூளையின் சைபர்னெடிக் மாதிரி (மாதிரி தான், போலி தான்!) அமைக்கப்பட முடியாது என்றும் இதற்கு அர்த்தம் இல்லவே இல்லை. அப்படிச் சொல்லுவது அறி யொணுமைக் கொள்கையின் நிலையை மேற்கொள்வது, மனித மூளையின் சக்தியில் அவநம்பிக்கை காட்டுவது ஆகும். ஆயினும், மின்னணு மூளை உருவாக்கப்பட்டாலுங் கூட, மனிதனுடைய இடத்தைப் பிடித்துக் கொள்வதற்காக அல்ல, ஒரே மாதிரி யான, அலுப்பு ஊட்டுகிற மூளைச் செயல்களிலிருந்து மனித அறிவை விடுவிப்பதற்காகவே உருவாக்கப்படும்.

பெருங் கவிஞர்களின் தரத்துக்குச் செய்யுள்கள் எழுத வல்ல தானியங்கியை அமைப்பது கோட்பாட்டு நோக்கில் சாத்தியம் என்று சுட்டிக்காட்டிய சோவியத் கணித இயலார் அகாதமீஷியன் அ. ம. கல்மகோரவ் ஒரு விஷயத்தை அழுத்திக் கூறினுர். அதாவது, இந்த மாதிரித் தானியங்கியை நிறுவுவது, கவிஞர்கள் எதார்த்தத்தில் வளரும் சமூகத்தி னுடைய பண்பாட்டு வாழ்க்கையின் வளர்ச்சி அனைத்திற்கும் மாதிரி அமைப்பதைக் காட்டிலும் எளிது அல்ல. இவ்வாறு அமைப்பதோ நடப்பில் அசாத்தியம்.

பிரச்சினையின் இந்த அம்சத்தின் மீது, மனித மூளையின் மாதிரியை அமைப்பது கோட்பாட்டு நோக்கில் சாத்தியம், ஆனல் அதை எதார்த்தத்தில் அமைப்பது அனேகமாக முடி யாது என்ற விஷயத்தின் மீது கவனம் செலுத்தாமல் இருக்கக் கூடாது. இல்லாவிட்டால் சைபர்னெடிக்ஸ் இயலாரின்

''துணிகரமான'' புனைவுகோள்கள் படுமட்டமான பகற் கனவுகள் ஆகி விடும்.

இல்லை, மனித குலத்துக்கு இயந்திரம் அபாயம் விளைக்கவில்லை. நிலவுலகில் தன் இடத்தை ''அறிவுள்ளவையும்'' அச்சமூட்டுபவையுமான இயந்திரங்களுக்கு மனிதன் விட்டுக் கொடுத்து விட மாட்டான்.

### மனிதனிடம் இயந்திரத்தின் கோரிக்கைகள்

மனிதனுடைய ஒத்திசைந்த வளர்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்கியுள்ள தானியங்கி இயல், ஒத்திசைந்த வளர்ச்சியும் பெருத்த நூலறிவும் பல்துறை இயலறிவும் அன்றாடப் படைப்புத் தேட்டமும் உள்ளவனாக அவன் விளங்க வேண்டும் என்று கோருகிறது. எனவே, சோஷலிசத்தின் நிலைமைகளில் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றமும் தனி மனிதனின் முன்னேற்றமும் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளன. உயர் வளர்ச்சி பெற்றதும், எடுத்துக்காட்டாக ஒழுங்கமைந்ததும், விஞ்ஞான, தொழில் நுட்ப அதி நவீனச் சாதனைகளை அடிப்படையாகக் கொண்டதும், தானியங்கி முறையில் நடப்பதுமான உற்பத்தி, தொழிலாளியின் குறுகிய தனித் தேர்ச்சியுடனும், ஒரே தொழிலில் அவனது ஈடுபாட்டுடனும், குறுகிய தொழில் பற்றைத் திருப்தி செய்வதற்காக மற்ற எல்லா மனிதத் திறமைகளையும் பலி கொடுக்கும் ஒருதலைச் சார்பான வளர்ச்சியுடனும் சோஷலிசத்தில் ஒன்றாக நிலவ முடியாது.

நவீன, அதிலும் கம்யூனிசப் பாங்குள்ள உற்பத்தியின் கோரிக்கைகளை முழு அளவில் நிறைவேற்றுவது சர்வாம்சக் கல்வி கற்ற மனிதனால் மட்டுமே முடியும்.

ஆனால் கல்வி கற்ற மனிதன் என்று தற்காலத்தில் யாரைக் கருதுவது? இந்த மனிதன் வருங்காலத்தில் எப்படிக் காணப்படுவான்?

தற்காலத்தில் கல்வி கற்றவனாக இருப்பதன் அர்த்தம் விஞ்ஞானத்தின் அடிப்படைகளில் தேர்ச்சி பெற்றிருப்பதும், அதன் மிக முக்கியச் சாதனைகளை அறிந்திருப்பதும், அவற்றை உற்பத்தியில் கையாளத் திறன் பெற்றிருப்பதும், மிக முக்கிய உற்பத்திகளின் தொழில்நுட்பத்தையும் இயந்திர நுட்பத்தையும் அறிந்திருப்பதும் ஆகும். கல்வி கற்ற மனிதனை, தேர்ச்சியாளனை உருவாக்குவது தொலைதூர வருங்காலப்

பணி அல்ல. இன்றே, சோஷலிசத்தின் நிலைமைகளில் அது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி நிகழ்முறை, உற்பத்தியிலும் வாழ்க்கையிலும் விஞ்ஞானம் புகுவது ஒரு சீராக இல்லாமல் பாய்ச்சல்களில் நடக்கிறது. நேற்று முன்னணியில் இருந்தது இன்று பழையது ஆகி விட்டது. இன்று அத்தியாவசியமாக இருப்பதோ, நாளை இன்னும் புதியதற்கு இடத்தை விட்டுக் கொடுத்து விடலாம். தேர்ச்சியாளனின் பயிற்சி குறித்த அதிகரித்த கோரிக்கைகளை இவை எல்லாம் வெளியிடுகின்றன. விஞ்ஞானம், தொழில்நுட்பம், உற்பத்தி ஆகியவை சம்பந்தமான அதி முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேர்ச்சியாளன் ஆயத்தமாய் இருக்க வேண்டும். சித்தாந்த, சிறப்பு அறிவியல்களின் பொதுமையை அடிப்படையாகக் கொண்ட விரிவான சர்வாம்சப் பயிற்சி பெற்றிருந்தால்தான் அவனுல் இது முடியும். பௌதிக-கணிதச் சித்தாந்த அறிவை விரிவுபடுத்திக் கொள்வது, பொதுச் சித்தாந்தத்தை ஆதாரமாகக் கொண்ட இயந்திர நுணுக்கச் செயல்முறைகளில் தேர்ச்சி—தேர்ச்சியாளர்களின் பயிற்சிக்கான பாதை இது ஆகும். இத்தகைய தேர்ச்சியாளர்களின் தேவை விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அளவுக்கு ஏற்ப அதிகரித்துக் கொண்டு போகிறது.

தற்கால சோஷலிச உற்பத்தியின் நிலைமைகளில் உற்பத்தியிலும் அதற்கு இணங்கத் தேர்ச்சியாளர்களின் பயிற்சியிலும் இயற்கை விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவியல்களின் பங்கு நாள்தோறும் வளர்ந்து கொண்டு போகிறது. ஆனுல் இயற்கை விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வெற்றிகளில் ஒரேயடியாக ஈடுபடுவதால் தொழில் வினைஞர்களும் இயற்கைச் சோதனையாளர்களும் சமூக இயலையும் இயந்திர விஞ்ஞானத் தொடர்பற்ற கலைகளையும் கற்பதில் சில வேளைகளில் அசட்டை காட்டுகிறார்கள்.

உண்மையிலோ, தற்கால விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் நிர்வகிப்பதற்கும் அவற்றை உழைப்பாளிகளுக்குத் தொண்டாற்ற வைப்பதற்கும் தொழில்நுட்பப் பயிற்சி மட்டும் பெற்றுல் போதாது, தத்துவத்திலும் உணர்ச்சிகளிலும் ஒழுக்கநெறியிலும் பயிற்சி பெற வேண்டும். விஞ்

ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் நிலைமைகளில் வேலை செய்ய ஒருவனைப் பயிற்றுவதற்கு அவனுடைய உலகக் கண்ணோட்டத்தையும் உயர்ந்த ஒழுக்கநெறியையும் வளர்க்க வேண்டும், அவனுடைய உள், உடல் பண்புகளைச் செவ்வைப் படுத்த வேண்டும், அவனுடைய உள்ளத்தின் மிக நுண்ணிய தந்திகளை மீட்ட வேண்டும், அவனுக்குள் மறைந்திருக்கும் மிகப் பல வகையான படைப்பு ஆற்றல்களைத் தட்டி எழுப்ப வேண்டும். சமூக இயல்களும் இயந்திர விஞ்ஞானத் தொடர் பற்ற அறிவியல்களும் இந்த உயர்ந்த நோக்கத்தை நிறை வேற்ற உதவுகின்றன. புது மனிதனையும் அவனது உள உலகையும், மற்ற மனிதர்களுடன், சமூகத்துடன், உழைக்கும் மனிதகுலத்துடன் அவனுடைய உறவுகளையும் உருவாக்கு வதில் இவை நேர்முகமான பாதிப்பு விளைக்கின்றன.

### மனிதனும் இயந்திரங்களும் இயற்கையும்

உழைப்பாளி நிறையச் சாதனைகள் புரிந்திருக்கிறான், இயற்கையிடமிருந்து நிறைய எடுத்துக் கொண்டிருக்கிறான், அதனிடமிருந்து வருங்காலத்தில் இன்னும் நிறைய எடுத்துக் கொள்வான். இயற்கையின் சேமிப்புக்கள் உண்மையிலேயே அள்ள அள்ளக் குறையாதவை. உதாரணமாக உலக மாகடலை எடுத்துக் கொள்வோம். அதிகப்படியான உணவுப் பண்ட, எரிபொருள், கனிய, இரசாயன வளங்களின் பிர மாண்டமான ஊற்றாக விளங்குகிறது அது. மீன்களும் திமிங் கிலங்களும், எண்ணற்ற மெல்லுடலிகளும் ஓட்டு மீன்களும் பிற முதுகெலும்பில்லாப் பிராணிகளும் அளவிட முடியாத கால்நடைத் தீவனச் சேமிப்புக்களும் அடங்கியவை மாகட லின் உணவுப் பண்ட வளங்கள். பெட்ரோலியம், எரிவாயு, இரும்பு, மாங்கனீசியம், கொபால்டு, நிக்கல், செம்பு, கதிரியக் கம் உள்ளவையும் ஊடு பரவுபவையும் அரியவையுமான தனிமங்கள் முதலியன கடற் படுகையின் செல்வங்கள். கடல் நீரில் உள்ள இரசாயன வளங்கள் அநேகமாக முடி வற்றவை. வெவ்வேறு வகையான உப்புக்கள், புரோமைன், அரியவையும் ஊடு பரவுபவையுமான தனிமங்கள் முதலி யவை அதில் உள்ளன. கடலின் ஏற்றவற்றங்கள் மலிவான ஆற்றலின் ஊற்றுக்கள். ஆழமான புவிக் கருக்களில் உள்ள செல்வங்களையும் சூரிய ஆற்றலையும் இயற்கையின் வேறு பல

வளங்களையும் தனக்குத் தொண்டாற்றச் செய்வது மனிதனது நோக்கம் ஆகும்.

இயற்கை மனிதனுடைய நண்பன், ஆனால் தன்னிடம் அநாகரிகமாக நடந்து கொள்வது இயற்கைக்குப் பிடிக்காது. இயற்கை வளங்களை அறிவார்ந்த முறையில் சிக்கனமாகப் பயன்படுத்துவது, இயற்கையின் பால் கவனமுள்ள நட்பார்ந்த போக்கு விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின், சமூகம் முழுவதன் முன்னேற்றத்தின் கட்டாயமான நிபந்தனை ஆகும். ஆனாலும் தொழில்நுட்பத்தையும் உற்பத்தியையும் வளர்க்கையில், புதிய தொழிற்சாலைகளும் ஆலைகளும் சாலைகளும் பாலங்களும் குடியிருப்பு வீடுகளும் அமைக்கும் போது, நமது இந்தப் பெரிய நண்பனை, நம்முடைய இயற்கையை நாம் எவ்வளவு அடிக்கடி மறந்து விடுகிறோம்! இயற்கை இப்போது வாழ்ந்திருக்கும் நமக்கு மட்டும் சொந்தமானது அல்ல, வருங்கால மனிதர்களுக்கும், அடுத்து வரும் தலைமுறைகளுக்கும் சொந்தமானது என்பதை நாம் மிக அடிக்கடி மறந்து விடுகிறோம். நமது புவியின் இயற்கை, புவியினரான நம்மை உலகுக்கு அளித்திருக்கிறது. நமக்கு வேண்டியவற்றை எல்லாம் அது நமக்குத் தந்தது, தருகிறது, எப்போதும் தந்து கொண்டிருக்கும். மனிதனது சிந்தனையால் உயிரூட்டப் பெற்று அவனது கையால் உருமாற்றம் பெற்ற இயற்கை— இந்த அற்புதமான காடுகளும் மலைகளும், எல்லையற்ற வயல்களும், தெளிந்த நீர்க்கடல்களும் ஏரிகளும், மிகத் தூய நீரோடைகளும் ஆறுகளும்—இவையே உணவும் தொழில்துறைக்கு வேண்டிய பொருள்களும், மிகக் கடினமான செயல்களுக்குப் பிறகு மனிதர்கள் ஓய்வு கொள்வதற்கான ஈடற்ற இடங்களும். இயற்கை மனிதனை உயர்த்துகிறது, அவனுடைய சிந்தனையைத் தட்டி எழுப்புகிறது, படைப்பு உள்தூண்டலின் ஊற்றாக விளங்குகிறது. வருந்தத்தக்கது என்ன என்றால் சில மனிதர்கள் இயற்கையைப் பயன்பாட்டு நோக்கிலேயே பார்க்கிறார்கள் என்பதே. அவர்களுடைய கருத்துப்படி காடு என்பது மூலப் பொருள்களும், எரிபொருள்களும் கட்டிடங்களும் தட்டு முட்டுச் சாமான்களும் உடைகளும் இவை போன்ற பிறவும்; ஓடைகளும் ஆறுகளும் ஏரிகளும் மின் ஆற்றல் ஊற்றுக்கள், போக்குவரத்துப் பாதைகள், தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கும் நீர்நிலைகள், மற்றும்... சாக்கடை

நீரையும் உற்பத்திக் கழிவுப் பொருள்களையும் விடுவதற்கான வடிகால்கள்.

மனிதனுடைய விஞ்ஞான-தொழில்நுட்பச் செயல்களே இயற்கைக்குப் பகையானவை என்றும் அவற்றை நிறுத்த வேண்டி வரும் என்றும் இதற்கு அர்த்தம் அல்ல. தனக்குப் பின்னே பாழ் நிலத்தை விட்டுச் செல்லும் அழிவுப் போக்கை இயற்கையின் பால் கடைப்பிடிப்பது சோஷலிசத்திற்கு எப்படி ஒவ்வாததோ, அப்படியே ''கறைபடாத இயற்கைக்குத் திரும்புவோம்!'' என்ற பண்டைக்கால இயற்கை வழிபாட்டு முழக்கமும் அதற்குப் புறம்பானது. இயற்கை நம்முடைய ''உறுப்பற்ற உடல்'' என்றால் இந்த ''உடலைத்'' திறமையுடன் இயக்கவும் தனக்குத் தீவிரமாகத் தொண்டாற்ற வைக்கவும் கற்பதும் அதற்குத் தீங்கு செய்யாமல் இருப்பதோடு நில்லாமல் சொந்த உடலைப் போல அதைப் பேணுவதும் நமது பணி ஆகும். இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதோடு கூடவே, இழைக்கப்படும் சேதத்துக்கு ஈடு கட்டுவதும், கேடான விளைவுகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதும், புதிய தொழில்நுட்பச் சாதனைகளின் சாத்தியமான எல்லா வகைகளிலுமிருந்து இயற்கை நிகழ்முறைகளுக்கு அதிகபட்சம் இசைந்தவற்றைத் தெரிந்தெடுப்பதும் நமது பணி ஆகும். விலை மிக்க மீன் இனங்களின் செயற்கையான வளர்ப்பு, காப்பிடங்கள், உயிரின, தாவரப் பண்ணைகள், காடு வளர்ப்பு, இயந்திரத் தொழில் நிலையங்களில் தூய்மைப்படுத்தும் கட்டுமானங்கள்—இவற்றின் மூலம் சோஷலிசச் சமூகத்தில் மனிதன் இயற்கையைக் காத்தும் மீட்டமைத்தும் வருகிறான். இயற்கைக்குத் தீங்கு நேராமல் தடுக்கவும் அதை மீட்டமைக்கவும் வலுப்படுத்தவுமான செயல்களுக்குப் பயனுள்ள சாதனங்களை விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றமே வழங்குகிறது.

புவிக் கோளத்தின் உயிர் மண்டலம் அனைத்தையும் தனது நலங்களின் பொருட்டு ஒன்றித்த அமைப்பாக நிர்வகிக்கும் பிரச்சினை மனித குலத்துக்கு முன் எழுந்திருக்கிறது. இந்தப் பணியின் நிறைவேற்றம் எந்த ஓர் அரசின் ஆற்றல்களுக்குள்ளும் அடங்குவது அல்ல. மனிதனதும் இயற்கையினதும் பரஸ்பரப் பாதிப்பின் புவி அளாவிய தன்மை காரணமாக, உலகின் வளங்கள் யாவற்றையும் மனிதகுலம் முழு

வதன் நன்மைக்காகவும் பேணிக்காப்பதற்கு எல்லா நாடு களும் கண்டங்களும் ஒன்றித்துப் பாடுபடுவது இன்றியமை யாதது ஆகி விட்டது.

## 5. கம்யூனிசமும் உழைப்பும்

சுரண்டலுக்கு ஒரேயடியாக முடிவு கட்டி விட்ட உழைப் பாளி மக்கள் நிலப்பிரபுவுக்காகவும் முதலாளிக்காகவும் இன்றித் தங்களுக்காக, தங்கள் சமூகத்துக்காக வேலை செய்யும் வாய்ப்பை சோஷலிச அமைப்பில் முதன் முதலாகப் பெற்றார்கள். விளைவாக, உழைப்பின் பால் மனிதர்களுடைய போக்கில் பெருத்த மாறுதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

மனிதர்களின் உழைப்புச் செயல்களது முக்கியத்துவம் வருங்காலக் கம்யூனிசச் சமூகத்தில் இன்னும் மிகுதியாக அதி கரிக்கும்.

கம்யூனிசமும் உழைப்பும் பிரிக்க முடியாதவை. கம்யூ னிசத்திலும் உழைப்பு மனித குலத்தின் எல்லாச் செல்வங் களதும் ஊற்றாக விளங்கி வரும். உழைக்கத் திறன் கொண்ட ஒவ்வொருவனும் உழைப்பான், பொருளியல், உளவியல் செல்வங்களின் இடையறாத அதிகரிப்புக்கு வகை செய்வான். சோஷலிசம் போலவே கம்யூனிசம் மனிதர்களை உழைப்பிலி ருந்து அல்ல, அவர்களுடைய உழைப்பு சுரண்டப்படுவதி லிருந்து விடுவிக்கும். கம்யூனிச அமைப்பில் உழைப்பும் அதன் நிபந்தனைகளும் அதன் பால் மனிதர்களின் போக்கும் சாராம் சத்தில் மாறிவிடும். அது கம்யூனிசத் தன்மையுள்ள உழைப்பு ஆகி விடும்.

மார்க்சியவாதிகளின் கருத்துப்படி, கம்யூனிசத் தன்மை யுள்ள உழைப்பு என்பது என்ன?

**கம்யூனிசத் தன்மையுள்ள உழைப்பு என்ற கருதுகோள்**

கம்யூனிசத் தன்மையுள்ள உழைப்பு என்பது எல்லோருக் கும் பொதுவான, சுயவிருப்பத் தைச் சார்ந்த, சுரண்டலி லிருந்து விடுபட்ட உழைப்பு; சமூகச் சொத்துரிமையையும் அதி நவீனத் தொழில்நுட்ப அடித்தளத்தையும் ஆதாரமாகக் கொண்டது; உயர்ந்த உற்பத்தித் திறன் உள்ள, விஞ்ஞானப்

பாங்கில் ஒழுங்கமைக்கப்பட்ட உழைப்பு; உடல், அறிவு முயற்சிகளை உறுப்பமைவில் இணைப்பதான படைப்புத் தன்மையுள்ள உழைப்பு; அளவுமானங்கள் இல்லாத உழைப்பு; மனிதத் திறமைகளின் முழு அளவில், ஊதியம் அற்ற உழைப்பு; ஆதி முதல் வாழ்க்கைத் தேவையாக விளங்கும் உழைப்பு.

கம்யூனிசத் தன்மையுள்ள உழைப்பின் அம்சங்கள் சோஷலிசத்தின் நிலைமைகளிலும் காணப்படுகின்றன. சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளிலேயே ருஷ்யாவின் உழைப்பாளிகள் கம்யூனிச சுபோத்னிக்குகளை ஏற்படுத்தி, சமூகத்துக்குப் பயன்படும் வேலையை ஓழிவு நேரத்தில் இலவசமாகச் செய்தார்கள். வி. இ. லெனின் கம்யூனிச சுபோத்னிக்குகளை உயர்வாக மதித்தார். உழைப்பின் பால் புதிய, கம்யூனிசப் போக்கின் கருக்கள் என்று அவற்றைக் கருதினார். சோஷலிசப் போட்டி விரிவாக நடப்பதற்கு சுபோத்னிக்குகள் அடி கோலின. சோவியத் சமூகத்தின் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் இந்தப் போட்டி மேலும் மேலும் புதிய வடிவங்களைப் பெற்றது.

''உழைக்காதவனுக்கு உணவு இல்லை'' என்ற விதி சோஷலிசச் சமூகத்தில் பெரும்பாலான சோவியத் குடிகளுடைய வாழ்க்கைச் சட்டம் ஆகி விட்டது. அவர்களில் பலர் தங்கள் திறமைகளுக்கு ஏற்ப உழைக்கிறார்கள். உவப்பான வேலை இல்லாமல், உழைப்பு இல்லாமல் வாழ்க்கையை அவர்கள் கற்பனை செய்வதே இல்லை. உழைப்பு அவர்களுக்கு மகிழ்ச்சி ஊற்றாக, வாழ்க்கைத் தேவையாக விளங்குகிறது.

திறமைகளும் இயல்பான ஆர்வமும் உண்மையான ஈடுபாடும் செயல்பற்றும் செயலின் வெற்றிக்குக் கட்டாயமாகத் தேவைப்படும் நிபந்தனையாகும், உழைப்பின் பால் படைப்புத் தன்மை வாய்ந்த, உண்மையில் புதுமை புனைவோனுக்கு உரிய போக்கிற்கான நிபந்தனையாகும். மிகப் பெருத்த எண்ணிக்கை கொண்டு சோவியத் குடிகளுக்கு இயல்பானது இந்தப் போக்கு. ஆனாலும் சோஷலிச அமைப்பில் தொழில், வேலை இடம் ஆகியவற்றின் தேர்வு பொருள்வகை நோக்கங்களால், தன் உழைப்புக்கு அதிக ஊதியம் பெறும் ஆசையால் சில வேளைகளில் செய்யப்படுகிறது. தனி மனிதனின் பொருள் வகை அக்கறை குறித்த கோட்பாடு சோஷலிச அமைப்பில்

உற்பத்தி வளர்ச்சிக்கான தூண்டுதலாக விளங்குகிறது. சரியாகப் பயன்படுத்தப்படும் போது இது சமூக நலன்களுடன் இசைவாகப் பொருந்துகிறது. ஆனால் அதிகமாகச் சம்பாதிக்கும் ஆசை மட்டுமே ஒருவனை வழிநடத்தினால், தன் உழைப்பில் அவன் ஈடுபாடு கொள்ளாவிட்டால், மனதுக்குப் பிடித்த வேலையில் ஈடுபடும் போது தரக் கூடியதைக் காட்டிலும் குறைவாகவே அவன் சமூகத்துக்குத் தருகிறான்.

கம்யூனிச அமைப்பில் ஒவ்வொருவரும் தமது திறமைகள் ஆக முழுமையாக வெளிப்படும் துறையில், எனவே சமூகத்துக்கு ஆக அதிகமான நன்மை செய்யத் தம்மால் முடியக் கூடிய துறையில் ஈடுபாட்டுடன் வேலை செய்வார். யாவற்றிலும் செப்பமான, தானியங்கி முறையில் அமைந்த உற்பத்தியையும் உழைப்பாளிகளுடைய உணர்வின் உயர்ந்த தரத்தையும் அடிப்படையாகக் கொண்ட கம்யூனிசச் சமூகம் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு எல்லோருக்கும் சமமான நிலைமைகளை உருவாக்குவதோடு, ஒவ்வோர் உழைப்பாளியின் திறமைகளையும் ஆக முழுமையான, நோக்கப் பொருத்தம் உள்ள விதத்தில் பயன்படுத்துவதற்கு யாவற்றிலும் அதிகச் சாதகமான வசதிகளையும் ஏற்படுத்தும். எல்லா மனிதர்களும் எப்போதும் திறமைகளுக்கு ஏற்ப உழைப்பார்கள். சோ.யூ.க. கட்சியின் செயல்திட்டத்தில் இவ்வாறு சொல்லப் பட்டிருக்கிறது. ''கம்யூனிசச் சமூகத்தில் மனிதனால் உழைக்காமல் இருக்க முடியாது. அவனது உணர்வோ, சமூகக் கருத்தோ, அவனை அப்படி இருக்க விடாது. திறமைக்கு ஏற்ற உழைப்பு சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுடையவும் வழக்கம், முதலாவது வாழ்க்கைத் தேவை ஆகி விடும்.''

### கம்யூனிச உழைப்புப் பிரிவினை

தனியார் சொத்துரிமையையும், சுரண்டலையும் ஒழித்து விட்ட சோஷலிசம் முதலாளித்துவ உழைப்புப் பிரிவினையின் அடிப்படையை அகற்றி விட்டது. நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும், மூளை உழைப்பாளர்களுக்கும் உடல் உழைப்பாளர்களுக்கும் இடையே உள்ள எதிர்நிலை இதில் அடங்கும். சோஷலிசத்தில் உழைப்புப் பிரிவினை சுரண்டலிலிருந்து விடுபட்ட உழைப்பாளர்களின் ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி என்ற வடிவத்தில் செயல்படுகிறது. அதே சமயம், இயந்திரத் தொழில் துறை உழைப்புக்கும்

விவசாயத் துறை உழைப்புக்கும் இடையிலும் மூளை உழைப் பாளர்களுக்கும் உடல் உழைப்பாளர்களுக்கும் இடையிலும் கணிசமான வேறுபாடு சோஷலிசத்திலும் இருந்து வருகிறது.

குறித்த வகையான உழைப்புப் பிரிவினை கம்யூனிசச் சமூகத்தின் நிலைமைகளிலும் நிலவும், ஏனெனில், பொருள் வகை உற்பத்தி இருக்கும் போது உழைப்புப் பிரிவினையும் இன்றியமையாதது ஆகும். கா. மார்க்ஸ் இப்படி எழுதினார்: ''குறித்த விகிதங்களில் சமூக உழைப்பினது பிரிவினையின் இந்த இன்றியமையாமை சமூக உற்பத்தியின் குறித்த வடிவத்தினால் எவ்வகையிலும் அழிக்கப்பட முடியாது என்பது தானே கண்கூடானது. அதனுடைய வெளிப்பாட்டின் வடிவம் மட்டுமே மாறக் கூடும்.''

கம்யூனிசத்தின் நிலைமைகளில் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே உள்ள உழைப்புப் பிரிவினை மறைந்து விடும், ஏனெனில் விவசாயத் துறை உழைப்பு தொழில்துறை உழைப்பின் ஒரு வகையாக மாறிவிடும். மூளை உழைப்பாளர்களுக்கும் உடல் உழைப்பாளர்களுக்கும் இடையில் உள்ள உழைப்புப் பிரிவினை மறைந்து விடும், ஏனெனில் அவர்களுக்கு இடையில் நிலவும் கணிசமான வேறுபாடு அகன்று விடும். ஆயினும், வெவ்வேறு உற்பத்தித் துறைகளுக்கும் தனித் தனித் தொழில் நிலையங்களுக்கும் இடையில் உள்ள உழைப்புப் பிரிவினையும் பிரதேச உழைப்புப் பிரிவினையும் இருந்து வரும்.

தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் உழைப்பின் தன்மையில் ஏற்படும் மாறுபாடு, ஓழிவு நேரம் அதிகரிப்பதுடன் தொடர்புள்ள சர்வாம்சப் பல்தொழில் நுட்பக் கல்வி, பொதுப் பண்பாட்டு உயர்வு ஆகியவை உழைப் பாளியின் உற்பத்தி வடிவத்தைச் சாராம்சத்தில் மாற்றி விடும். உழைப்பாளி ஏதேனும் ஒரு குறுகிய தொழிலுடன் பிணைந்திருக்கும் கட்டாயம் அகன்று விடும். தொழிலைக் கட்டின்றித் தேர்ந்தெடுக்கவும் உழைப்பாளர்கள் தங்கள் செயலை மாற்றிக் கொள்ளவும் தேவையான நிலைமைகள் உருவாக்கப் படும். ஆனால் தொழில்களுக்கு இடையில் உழைப்புப் பிரிவினையை, சமூகத்தின் உறுப்பினர்களுடைய குறித்த வகையான தனித் தேர்ச்சியை இது நீக்கிவிடாது.

கம்யூனிச அமைப்பில் சமூகத்தின் தனித் தனி உறுப்பி

னர்களுக்கு இடையே ஓரளவு உழைப்புப் பிரிவினை இருந்து வரும், ஆனால் தனது வர்க்கச் சார்புள்ள சமுதாய இயல்பை அது அறவே இழந்து விடும். அது தூய உற்பத்தித் தன்மையை, தொழில் தன்மையை மேற்கொள்ளும், பொருள்வகை உற்பத்தித் துறையில் உழைப்பாளிகள் தங்கள் செயலை மாற்றிக் கொள்ள வாய்ப்பு அளிக்கும்.

**உழைப்புக்குத் தூண்டுதல்கள்**

சோஷலிச அமைப்பில் உற்பத்தி உழைப்புக்கான போராட்டத்தின் ஆயுதக் கிடங்கில் உள்ளன உழைப்புக்கான பொருள்வகை, உளவகைத் தூண்டல்கள்.

தங்கள் உழைப்புக்குப் பொருள்வகைக் கைம்மாறு பெறுவதில் உழைப்பாளிகளின் தனி மனித, கூட்ட (குழுவைச் சார்ந்த) மற்றும் சமூக அக்கறையின் வடிவத்தைப் பொருள்வகைத் தூண்டல்கள் மேற்கொள்கின்றன. கூட்ட அல்லது சமூக அக்கறைகள் உழைப்பாளர் கூட்டத்தின் (தொழிற்சாலை, கூட்டுப் பண்ணை முதலியவற்றின்) அல்லது சமூகம் முழுவதன் பொருளியல் நலன்களுடன் தொடர்புள்ளவை. இவற்றுக்கு மாறாக, தனி மனிதப் பொருள்வகை அக்கறை வாழ்க்கைச் சாதனங்களின் குறித்த பங்கைத் தனது உழைப்புக்காகப் பெறுவதற்கு ஒவ்வொரு தனி உழைப்பாளியும் செய்யும் முயற்சியை வெளியிடுகிறது. தனது உழைப்புக்காகக் கிடைக்கும் பங்கு உழைப்பின் அளவையும் தரத்தையும், அதன் உற்பத்தித் திறனையும் பொறுத்தது என்ற புரிவுடன் தொடர்பு கொண்டது இந்த முயற்சி.

தேவைப் பண்டங்களின் செழிப்பைச் சமூகம் இன்னும் எட்டவில்லை என்பதும் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையேயும் திறமையுள்ள உழைப்புக்கும் திறமை அற்ற உழைப்புக்கும் இடையேயும் கணிசமான வேறுபாடுகள் இன்னும் இருந்து வருவதுமே சோஷலிச அமைப்பில் பொருள்வகைத் தூண்டலின் இன்றியமையாமைக்குக் காரணங்கள். இந்த நிலைமைகளில் உழைப்புக்கு ஒரே சமமான ஊதியத்துக்குப் பரிணமிப்பது சமூக உற்பத்தியின் வளர்ச்சிக்குக் கேடு விளைக்கும், சோம்பேறித்தனத்தையும் அண்டிப் பிழைக்கும் மனப்பான்மையையும் தோற்றுவிக்கும்.

சோஷலிசத்தின் நிலைமைகளில் தனி மனித அக்கறை சமூக நலன்களுக்கு எதார்த்தத்தில் முரண்படுவதில்லை,

ஏனென்றால் இங்கே உழைப்பு சமூகச் சொத்துரிமையை அடிப் படையாகக் கொண்டது, உழைப்பின் விளைவுகள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுடையவும் வளவாழ்வுக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் வகை செய்வதை நோக்கமாகக் கொண்டவை. ஒருவன் தனக்காக வேலை செய்யும் போது சமூகம் முழு வதற்காகவும் வேலை செய்கிறான் என்பதையும் சமூகத் தின் வளவாழ்வே தனது சொந்த வளவாழ்வும் ஆகும் என்பதையும் ஒவ்வோர் உழைப்பாளியும் புரிந்து கொண்டிருக் கிறான்.

பொருள்வகைத் தூண்டுதல் உழைப்புச் செயலை ஊக்கு வதற்கான ஒரே நோக்கம் அல்ல. சோஷலிசத்தின் நிலைமை களில் உழைப்பவன் பாட்டாளியோ பண்ணைக் கூலியோ அல்ல, தனது நாட்டின் சொந்தக்காரன், புதிய சமூகத்தை நிறுவுபவன். உழைப்புக்குப் பொருள்வகை ஊக்கப் பரிசு கிடைப்பது மட்டும் இன்றி, உளத் திருப்தியும் அவனுக்கு முக்கியமானது. ஆகையால்தான் கம்யூனிசக் கட்டுமானத் தில் வெற்றிகள் பெறப்படும் அளவுக்கு ஏற்ப உழைப்புக்கான உளவகைத் தூண்டல்கள் மேலும் மேலும் அதிக முக்கியத்து வம் பெற்று வருகின்றன. தோழர்களுடையவும், வேலைக் குழுவினுடையவும் சமூகம் முழுவதினுடையவும் மதிப்பு, மக் களுக்கு முன் கடமையும் பொறுப்பும், உழைப்பின் விளைவு களால் திருப்தி, உழைப்புப் பெருமிதமும் தொழிலாளியின் கவுரவம் பற்றிய உணர்வும் படைப்பு மகிழ்ச்சியும், உழைப் பினாலும் அதன் விளைவுகளாலும் ஏற்படும் அழகுணர்ச்சி சார்ந்த இன்பம் ஆகியவை உளவகைத் தூண்டல்களில் அடங்கும்.

பொருள்வகை, உளவகைத் தூண்டல்களின் இணைவு சோஷ லிச அமைப்பில் உழைப்புக்குத் தூண்டுவதில் முக்கிய மானது. பொருள்வகை, உளவகைத் தூண்டல்கள் ஒன்று சேரும் போது தான், பரஸ்பரம் செயல்படும் போதுதான், ஒரு புறம், மனிதர்களின் உழைப்புச் செயலூக்கத்தை இடையறாமல் அதிகப்படுத்தும் ஊற்றாகவும் சமூகச் செல்வ அதிகரிப்பின் ஊற்றாகவும், மறு புறம், மக்களுடைய வளவாழ்வின் உயர்வுக்கும் உழைப்பாளியின் சர்வாம்ச வளர்ச்சிக்கும் அவனது உயர்ந்த உளப்பாங்கின் உருவாக்கத் திற்குமான ஊற்றாகவும் விளங்கும்.

**படைப்புத் தன்மையுள்ள உழைப்பு தனி மனித வளர்ச்சியின் அடிப்படை**

சமூக வாழ்க்கையின் அடிப்படையாக இருப்பவை பொருள் வகை உற்பத்தியும் உழைப்பும் ஆகும். வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யவும் உழைக்கவும் உள்ள திறமை மனிதனுடைய முதன்மையான, நிர்ணயகரமான திறமையாக விளங்குகிறது. உழைப்பதற்கு உள்ள திறமையே மனிதனுடைய மற்ற எல்லாத் திறமைகளும் ஒன்று பாக்கி இல்லாமல் உருவாகவும் வளரவும் ஏற்ற அடிப்படையாகத் திகழ்கிறது. இது புரியக்கூடியதே, உழைப்பே மனிதனை உருவாக்கியது. உழைப்பே மனிதனுக்கு உணவும் உடையும் உறையுளும் அளித்தது. இயற்கையின் உற்பாதச் சக்திகளிடமிருந்து அவனுக்குப் பாதுகாப்பு தந்ததோடு, அவற்றை வெல்லவும் தனக்கு அடிப்படுத்தவும் மனிதனுக்கு உதவிற்று. உழைப்பில் மனிதன் அடையாளம் காண முடியாதபடி மாறி விட்டான், நம் உலகின் உருவத்தை மாற்றி விட்டான். உழைப்புச் செய்முறையிலேயே உருவாயிற்று மனிதனுடைய கை—கட்டுவதற்கும் படைப்பதற்குமான அவனுடைய அற்புதக் கருவி.

''செவ்வைப்பாட்டின் எந்த உயர் தரத்தில் ரஃபயேலின் ஓவியங்களையும் தர்வால்த்செனின் உருவச்சிலைகளையும் பகனீனியின் இசையையும் மாய வித்தையால் போல உருவாக்க மனிதக் கரத்தால் முடிந்ததோ, அந்தத் தரத்தை அது எட்டியது'' உழைப்பின் துணையாலேயே என்று எழுதினார் பி. எங்கெல்ஸ்.* இசை நுணுக்கத்தை உணரும் மனிதனுடைய செவிப் புலனும், இயற்கையின் வியப்பூட்டும் அழகைப் புரிந்து கொள்ளத் திறன் வாய்ந்த அவனுடைய கண்ணும், அவனது நுட்பமான சுவையுணர்வும் பிற அறிபுலன்களும் உழைப்பிலேயே தோன்றி வளர்ச்சி அடைந்தன. உழைப்புச் செயல்முறையிலேயே மனிதன் சிந்திக்கவும் பேசவும் உள்ள திறமை என்னும் வியப்பூட்டும் ஆற்றலைப் பெற்றான்.

ஆனால் மனிதனுடைய ஆளுமைத் தரத்தின் மீது உழைப்பின் உருவாக்கும் பாதிப்பு சமுதாய பொருளாதார நிலைமை

---

* பி. எங்கெல்ஸ், இயற்கையின் இயக்க இயல், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 281.

களையும் சமூகத்தில் நிலவும் உழைப்புப் பிரிவினையையும் உழைப்பிற்கான தொழில்நுட்பச் சாதன வசதியையும் ஒழுங்கமைப்பையும் பொறுத்திருக்கிறது.

சோஷலிசத்தின் வெற்றிகள், கம்யூனிச உழைப்பின் உருவாக்கம், அதன் சாதன வசதிகளதும் பண்பாட்டினதும் ஏற்றம் ஆகியவற்றின் அளவுக்கு ஏற்ப, புது மனிதனின் உருவாக்கத்தில் உழைப்பின் பங்கு நாளுக்கு நாள் மிகுந்த அளவில் அதிகரித்துக் கொண்டு போகிறது. கம்யூனிச உழைப்பின் உருவாக்கம் சர்வாம்ச வளர்ச்சி பெற்ற தனிமனிதனின் உருவாக்கத்துக்கு அடிப்படையாக அமைகிறது.

ஏன் அப்படி?

முதலாவதாக. கம்யூனிச உழைப்பு ஆகச் செவ்வையான விஞ்ஞான-தொழில்நுட்ப அடித்தளத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. செயலின்பால் படைப்புத் தன்மையுள்ள போக்கையும் பல்வகையான அறிவியல்களில் தேர்ச்சியையும் உயர்ந்த பண்பாட்டு, தொழில்நுட்பத் தரத்தையும் இது மனிதனிடம் கோருகிறது. கம்யூனிசத்தின் நிலைமைகளில் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்துக்கு எல்லைகள் கிடையாததால் மனிதனுடைய அறிவுத் தரங்களின் வளர்ச்சிக்கும் அவனுடைய சிறப்பு, பொதுக் கல்விப் பயிற்சிக்குமான சாத்தியக்கூறுகளும் வரம்பற்றவை.

இரண்டாவதாக. கம்யூனிச உழைப்பின் நிலைமைகளில் மனிதன் ஒரே தொழிலுடன் நிரந்தரமாகப் பிணைந்திருக்கும் நிர்ப்பந்தம் இல்லாததால் தனது நலன்களுக்கு ஏற்பச் செயலை மாற்றிக் கொள்ளவும் தொழிலைத் தெரிந்தெடுக்கவுமான சாத்தியக்கூறு மனிதனுக்குக் கிடைக்கும். சிறப்பு, பொதுக் கல்வியறிவைச் செவ்வைப்படுத்திக் கொள்ளக் குறைவற்ற முக்கியத்துவம் உள்ள தூண்டுதலாகும் இது.

மூன்றாவதாக. கம்யூனிச உழைப்பின் உயர்ந்த ஒழுங்கமைப்பு, உழைப்பு உறவுகளின் கூட்டுத் தன்மை, தனி மனிதனதும் சமூகத்தினதும் நலன்களின் ஒருங்கிசைந்த ஒற்றுமை ஆகியவை தனி மனிதனின் உயர்ந்த ஒழுக்கநெறிப் பண்புகளை—சமூகக் கடமை உணர்வு, சமூகச் செல்வத்தைப் பெருக்குவதில் அக்கறை, உழைப்புப் பற்று, நேர்மை ஆகியவற்றை—உருவாக்கும் முக்கியக் காரணியாக விளங்கும்.

நான்காவதாக. உழைப்புச் செயல்முறை, நிலைமைகள்,

விளைவுகள் ஆகியவற்றின் அழகியல் கவர்ச்சி உயர்ந்த அழகுணர்ச்சிகளும் சிந்தனைகளும் செயல்களும் மனிதனிடம் உருவாக உதவும்.

கம்யூனிச அமைப்பில் நிலவும் உயர்ந்த உற்பத்தித் திறன் வாய்ந்த உழைப்பு அதிகபட்ச ஒழிவு நேரத்தை உழைப்பாளிகளுக்குத் தரும். அறிவு, உடல் திறன்கள் எல்லாவற்றையும் வளர்த்துக் கொள்ள உழைப்பாளிகளுக்கு இன்றியமையாதது இந்த ஒழிவு] நேரம். சுரண்டுவோர் சமூகத்தில் உழைப்பாளியால் கனவு கூடக் காண முடியாத பெருஞ் செல்வம் ஆகும் பேரளவான ஒழிவு நேரம்.

ஒழிவு நேரத்தையும் வேலை செய்யாத நேரத்தையும், அதாவது நேர்முக உற்பத்தி வேலையிலிருந்து விடுபட்ட நேரத்தையும் ஒன்றுக எண்ணிக் குழப்பிக் கொள்ளக் கூடாது. மனிதன் வேலை செய்யாத நேரத்தின் ஒரு பகுதி ஏதாவது ஒரு விதத்தில் அவனுடைய உற்பத்திச் செயலோடு தொடர்பு உள்ளது. உதாரணமாக, வேலை இடத்தை அடைவது, திரும்பி வீடு சேர்வது, முறை வேலையை ஒப்புக் கொடுப்பது முதலியவற்றுக்குச் செலவிடப்படும் நேரம்] இத்தகையது. வேலை செய்யாத நேரத்தின் இரண்டாவது பகுதி அன்றுட வாழ்க்கை பற்றிய கவலையிலும் குழந்தைகளை மேற்பார்ப்பதிலும் செலவாகிறது. மூன்ருவது பகுதி உடலின் இயற்கைத் தேவைகளை நிறைவேற்றுவதில் (சாப்பிடுவது, தூங்குவது, குளிப்பது முதலியன) கழிகிறது. மனிதன் உற்பத்திச் செயல்களையும் குடும்பக் கடமைகளையும் நிறைவேற்றி, உடல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்ட பிறகு மிஞ்சுகிற நேரமே உண்மையில் ஒழிவு நேரம் ஆகும்.

சோஷலிச அமைப்பில் ஒழிவு நேரம் சமூக நடவடிக்கைகளில் ஈடுபட உழைப்பாளிகளுக்கு வாய்ப்பு அளிக்கிறது. இதன் மூலம் அரசுச் செயல்களை நிர்வகிக்கும் அனுபவத்தைப் பெறுவது அவர்களுக்குச் சாத்தியமாகிறது. கம்யூனிசச் சமூகத்தில் இந்த அனுபவம் மிகவும் இன்றியமையாதது ஆகும். விஞ்ஞான, தொழில்நுட்ப, கலைப் படைப்பில் ஈடுபடும் வாய்ப்பு, உடற்பயிற்சியிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடும் வாய்ப்பு, சுறுசுறுப்பான ஓய்வு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு முதலியனவும் ஒழிவு நேரத்தில் உழைப்பாளிகளுக்குக் கிடைக்கின்றன. உற்பத்தியில் மட்டும் இன்றி அதற்கு

வெளியிலும் தங்கள் செயலை மாற்றிக் கொள்ளுவதற்குச் சாதகமான நிலைமைகளை ஒழிவு நேரம் மனிதர்களுக்கு ஏற்படுத்தித் தருகிறது. விஞ்ஞானம், கலை, விளையாட்டுக்கள் முதலியவற்றில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை அது ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லோருக்கும் அளிக்கிறது.

வேலை நாளைக் குறுக்குவதன் மூலமும் வேலை இல்லாத நேரத்தை அதிக அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவதன் மூலமும் உழைப்பாளிகளின் ஒழிவு நேரத்தை அதிகப்படுத்துவது பற்றிக் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் இடையறாத கவலை எடுத்துக் கொள்கின்றன. இருப்பிடங்களை ஆக அதிக நோக்கப் பொருத்தமாக வினியோகிப்பது, போக்கு வரத்துச் சாதனங்களின் வேலையை மேம்படுத்துவது ஆகியவற்றின் உதவியால் வேலை இடத்துக்குப் போய் வருவதற்கு ஆகும் நேரம் குறைக்கப்படுகிறது; குறைந்த உற்பத்தி விளைப்பதும் மிகக் கடினமும் ஆன வீட்டு வேலையில் செலவாகும் நேரம் அதை இயந்திரமயம் ஆக்குவதாலும் அறிவுக்குகந்த ஒழுங்கமைப்பாலும் குறைக்கப்படுகிறது; அன்றாடப் பணி நிலையங்கள், கடைகள், சாப்பாட்டு விடுதிகள் ஆகியவற்றுக்குப் போய் வருவதற்கு ஆகும் நேரம் அவற்றின் வலைப்பின்னலை விரிவுபடுத்துவதன் வாயிலாகவும் வேலையைச் சீர்படுத்துவதன் வாயிலாகவும் குறைக்கப்படுகிறது; குழந்தைகளை மேற்பார்ப்பதில் ஆகும் நேரம் குழந்தை நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதால் குறைக்கப்படுகிறது. இவ்வாறு மிச்சமாகும் நேரங்கள் ஒழிவு நேரச் சேமிப்புக்களை அதிகம் ஆக்குகின்றன.

## அத்தியாயம் ஒன்பது

# புதிய சமூகத்தின் மனிதன்

மார்க்சியவாதிகளின் கருத்துப்படி வருங்கால மனிதன்—கம்யூனிசச் சமூகத்தின் மனிதன்—எப்படி இருப்பான்? முதன்மையாக அவன் உயர் கல்வி பெற்ற உழைப்பாளியாகவும், விஞ்ஞானங்களின் அடிப்படைகளில் தேர்ச்சி பெற்றவனுகவும், பொருள்வகை வளங்களே, கம்யூனிச அமைப்பின் செழிப்பை உருவாக்குபவனுகவும் இருப்பான். சமூகக் காரியங்களை நிர்வகிக்கத் திறன் கொண்ட ஊக்கமுள்ள சமூக ஊழியன் அவன். விஞ்ஞானக் கண்ணேட்டம் உள்ளவன், தேசபக்தன், சர்வதேசியவாதி. கலைகளின் அடிப்படைகளை அறிந்தவன், பொருள்வகை வளங்களை மட்டும் இன்றி உளவகைச் செல்வங்களையும் படைக்க வல்லவன். உயர்ந்த ஒழுக்கநெறிக் கோட்பாடுகளும் உடல் செவ்வைப்பாடும் உள்ளவன்.

சுருங்கச் சொன்னுல், கம்யூனிசச் சமூகத்தின் மனிதன் வாழ்க்கை வெளிப்பாட்டின் பல்வகைப்பாடு அனைத்தையும், வற்ருத படைப்புத் திறமைகளையும் பெற்றிருப்பவன். முக்கியமாக, சமூகத்தின் நன்மைக்காகவும் விளைவாக தன் சொந்தநன்மைக்காகவும் இந்தத் திறமைகளைப் பயன்படுத்த வல்லவன். முதலாளித்துவத்தின் அடிப்படையும் குறிக்கோளுமான பொருள்வகைச் செல்வம் எதற்கு இடத்தை விட்டுக் கொடுக்குமோ, அந்த உண்மைச் செல்வம் இந்த மனிதனே.

புதிய மனிதனின் இந்தச் சீரிய பண்புகள் தாமாகவே தோன்றி விட மாட்டா என்பது சந்தேகத்துக்கு இடமற்றது. கம்யூனிசக் கட்டுமானச் செயல்முறையின் போது இவை உருவாகும். எந்த வழிகளில் இது நிகழும்?

# 1. புதிய மனிதனின் உருவாக்கத்துக்கான நிபந்தனைகள்

கம்யூனிசமும் தனி மனிதனின் மலர்ச்சியும் ஒன்றை ஒன்று நீக்கி விடுவதாகவும், தனியார் சொத்துரிமையும் கட்டற்ற தொழில் முயற்சியும்தாம் தனி மனிதனுடைய வளர்ச்சிக்கு நம்பகமான ஆதாரமாக விளங்குவதாகவும் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் எதிரிகள் சான்று காட்ட முயல்கிறார்கள். ஆனால் இம்மாதிரி வலிந்துரைகளின் வெட்டித்தனம் முழுவதையும் முதலாளித்துவத்தின் நடைமுறை அனுபவம் காட்டி விட்டது. எனவே, முதலாளித்துவத்தின் சில கொள்கைவாத ஆதரவாளர்கள் மறு கோடிக்குப் போய் விட்டார்கள். நம்முடைய தொழில்நுட்ப யுகத்தில் தனி மனிதனுடைய செவ்வைப்பாட்டைப் பற்றிப் பேசுவதே அர்த்தம் அற்றது என்றும், இயந்திரங்களின் பெரு விறலால் நசுக்கப் பட்டு மனிதன் இப்போது மெதுவாக, ஆனால் மீளவகை இன்றி ''மடிந்து கொண்டிருப்பதாகவும்'' அவர்கள் வலிந்துரைக்கிறார்கள்.

''மனிதன் மடிந்து கொண்டிருக்கிறான்''—இது உழைப்பின் முதலாளித்துவ நிலைமைகளுக்கே பொருந்தும். சுரண்டல், வன்முறை, கொள்ளை ஆகியவற்றால் முதலாளித்துவம் அளவிட முடியாத செல்வ வளங்களைத் திரட்டிக் குவித்திருக்கிறது. மதத்தையும் வெடிகுண்டையும் இழிவான பாலுணர்ச்சியையும் மனிதனுக்குள் அளவு மீறித் திணித்து உண்மை மனிதத்தன்மையை அவனிடமிருந்து அது பறித்து விட்டது. தனி மனிதனும் மனித குலமும் சமுதாய நோக்கில், சோஷலிசப் பாங்கில் புத்துயிர் பெறுவதைக் கண்டு முதலாளித்துவம் நெருப்பைக் கண்டது போல அஞ்சி நடுங்குகிறது. முதலாளித்துவச் சமூகத்தில் தனி மனிதனுடைய நெருக்கடி முதலாளித்துவத்தின் நெருக்கடியே தவிர பொதுவான தனி மனிதனின் நெருக்கடி அல்ல, மனித குலத்தின் நெருக்கடி அல்ல. தற்காலச் சமூக நிகழ்ச்சிகளைத் திரித்துக் கூறும் முதலாளித்துவ வஞ்சகர்கள் முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது என்று உணர்ந்து கொண்டு, இன்பமுள்ள வருங்காலம் பற்றிக் கனவு காண்பதும் அதற்காகப் போராடுவதும் வீண் என்றும், எல்லாவற்றையும் பொசுக்கி விடும்

அணுவாயுதப் போர் நெருப்பில் இல்லாவிட்டால் புதிய இயந்திரங்களின் நசுக்குதலால் மனிதன் எப்படியும் மடிந்து போவான் என்றும் உழைப்பாளிகளுக்கு நம்பிக்கை ஊட்ட முயன்று வருகிருர்கள்.

உழைப்பாளியின் உணர்வில் நஞ்சேற்றுவதும், அவனுடைய உண்மையான மனிதத்தன்மையையும் முதன்மையாக அவனுடைய வருங்கால நாட்டத்தையும் அழிப்பதும், அவனுடைய போராட்ட ஆர்வத்தையும் புது வாழ்வு பெறும் விருப்பத்தையும் நசுக்குவதும், சோஷலிச மனிதனையும் சோஷலிச அமைப்பையும் கம்யூனிச அமைப்பையும் அவதூறு செய்வதுமே இவர்களுடைய நோக்கம் என்பது தெளிவு.

சோஷலிச எதார்த்தத்தைப் பொறுத்த மட்டில், முதலாளித்துவத்தின் ஆன்மிகத் தந்தையருக்கு அதைப் பற்றி அக்கறை இல்லை. அந்த எதார்த்தம் கூறுவது என்ன என்ருல், சோஷலிசப் பொருளாதாரம் அமைக்கப்பட்டு, சமுதாய உறவுகள் செவ்வைப்பட்ட அளவுக்கு ஏற்ப,சோஷலிச அமைப்பின் தனி மனிதன் சமரசப்பட முடியாத வர்க்கங்கள் நிலவிய சமூகத்தினிடம் மரபு முறையில் பெற்ற கேடுகளிலிருந்து படிப்படியாக விடுபட்டு, தன் அறிவைக் கூர்மை ஆக்கிக் கொள்கிருன், தன் உள, உடல் பாங்கைச் செவ்வைப்படுத்திக் கொள்கிருன் என்பதாகும்.

கம்யூனிசக் கட்டுமானத்திலும் கூட்டு உழைப்பிலும் உழைப்பாளிகள் ஊக்கத்துடன் பங்காற்றும் போதும், உற்பத்தியிலும் அன்ருட வாழ்க்கையிலும் புதிய சமூக உறவுகள் வளர்ச்சி அடையும் போதும் சோஷலிச அமைப்பில் சமூக வாழ்க்கை முறை முழுவதனுலும் உருவாக்கப்படுகிறது கம்யூனிச உணர்வு. இது கடினமான செயல், ஏனென்ருல் பழைய வழக்கங்களின் விடாப்பிடியான ஆற்றலையும் பகைக் கொள்கைவாதத்தின் செல்வாக்கையும் வெற்றி கொள்ள வேண்டி வருகிறது.

பொருளாதாரக் கட்டுமானத்தின் வெற்றிகள், சமூக உறவுகளின் உருமாற்றத்தில் பெறப்படும் வெற்றிகள் ஆகியவற்றின் அடிப்படையில் புது வகைத் தனி மனிதனின் உருவாக்கம் நடைபெறுகிறது. பொருளாதாரத்தையும் சமூக உறவுகளையும் மாற்றிப் புத்துரு அளிக்கும் மனிதர்கள் தங்

களையும் தங்கள் அறிவு, ஒழுக்கநெறிப் பாங்கையும் மாற்றிக் கொள்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சி, கம்யூனிசச் சமூக உறவுகளதும் பண்பாட்டினதும் உருவாக்கம் ஆகியவை புதிய மனிதனது உருவாக்கத்துக்குப் புறநிலை அடிப்படையாக அமைகின்றன. ஆனால் இந்த நிலைமைகள் தாமே ஒவ்வொரு மனிதனுடைய உணர்விலும் கம்யூனிசக் கோட்பாடுகளும் கருத்துக்களும் வெற்றி பெற வகை செய்து விடுவதில்லை. உழைப்பாளிகளது கம்யூனிசப் பயிற்சியை ஒத்திசைந்த வகையில் முறையாக நடத்துவது இன்றியமையாதது ஆகும்.

**பயிற்சியின் முக்கியக் கோட்பாடுகள்**

வாழ்க்கையுடனும் கம்யூனிசக் கட்டுமானத்தின் திண்ணமான பணிகளுடனும் வெகுஜனங்களின் நடைமுறை அனுபவத்துடனும் பயிற்சி வேலையின் தொடர்பு புது மனிதனுடைய பயிற்சி குறித்த முக்கியக் கோட்பாடு ஆகும்.

சோஷலிசப் பொருளாதாரம் எதார்த்தமான, விஞ்ஞான அடிப்படை கொண்ட முறையில் நிர்வகிக்கப்படுவதும் சமூக அமைப்பின் எல்லாப் பகுதிகளிலும் சமுதாய உறவுகள் விஞ்ஞானப் பாங்கில் ஒழுங்கமைக்கப்படுவதும் கம்யூனிசப் பயிற்சியின் வெற்றிக்கான அதி முக்கிய நிபந்தனை ஆகும். பருப்பொருள் தன்மையும் விஞ்ஞானப் பாங்கும் புறநிலைத் தன்மையும் உண்மையும் துல்லியமும் ஒழுங்கமைப்பும் கம்யூனிசப் பயிற்சியின் முக்கியக் கோட்பாடுகள் ஆகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் காரியப் பாங்குள்ள வேலை முறை புது வகைத் தனி மனிதனின் உருவாக்கத்துக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துகிறது. தனி மனிதனுடைய உள உலகையும் அவனுடைய நலன்களையும் எண்ணங்களின் போக்கையும் உணர்ச்சிகளையும் சோவியத் அரசு மிகக் கவனமாகக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. இது இயல்பானதே, ஏனென்றால் புதிய சமூகம் உருவாக்குபவன் கோட்பாட்டளவான அருவ மனிதன் அல்ல, பல்வகைப்பட்ட உயிர் வெளிப்பாடுகள் கொண்ட, உயிருள்ள, திண்ணமான மனிதன்.

மனிதனைப் பயிற்றுவது அவனுடைய அறிவை மட்டும் இன்றி உணர்ச்சிகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் கூட உரு

வாக்குவதாகும், ஏனெனில் மனிதன் ஆழ்ந்த உணர்ச்சிகளும் உள்ளக் கிளர்ச்சிகளும் கொண்டவன். அன்பு செய்வது, வெறுப்பது, மகிழ்வது, வருந்துவது முதலியன அவனுக்கு இயல்பானவை. சமூகக் கருத்துக்களைத் தனி மனிதன் புரிந்து கொள்வதில் அவனுடைய உணர்ச்சிகளும் உள்ளக் கிளர்ச்சிகளும் உள்ள பகுதி ஆற்றும் பங்கு குறைவானது அல்ல. "...மனிதனுடைய உள்ளக் கிளர்ச்சிகள் இல்லாமல் மனிதனின் உண்மைத் தேட்டம் ஒருபோதும் இருந்ததில்லை, இருக்கவில்லை, இருக்கவும் முடியாது" என்று எழுதினார் வி. இ. லெனின்.* எனவே, தன் உணர்ச்சிகளை இயக்கவும் பயனுள்ள உள்ளக் கிளர்ச்சிகளைப் பயிற்றி வளர்க்கவும் அவற்றைத் தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் நன்மை தரும் விதத்தில் செலுத்தவும் மனிதனைப் பழக்குவது மிக முக்கியமானது.

**கம்யூனிசப் பயிற்சிக்கான சாதனங்கள்**

சோவியத் ஆட்சிக் காலத்தில் பயனுள்ள பயிற்சி அமைப்பு சோ. சோ. கு. யூனியனில் உருவாகியுள்ளது. குடும்பமும் பள்ளியும் நடுத்தரச் சிறப்புக் கல்வி நிலையங்களும் உயர் கல்வி நிலையங்களும் கட்சிப் போதனை அமைப்பும் அச்சக வெளியீடுகளும் வானொலியும் தொலைக்காட்சி முதலியனவும் இந்த அமைப்பில் அடங்கியவை.

உதாரணமாகக் குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். குடும்பம் முக்கியமான சமூகச் செயலை நிறைவேற்றுகிறது. அது மனித இனத்தைத் தானே பெருக்குவதோடு, இளம் தலைமுறையைப் பயிற்றி வளர்க்கவும் செய்கிறது. குழந்தையின் உடலும், அவனுடைய உள உலகும், சுற்றுச் சூழலுடன் அவனுடைய தொடர்பும், நடத்தையும் செயல்களும் நடவடிக்கைகளும் எல்லாவற்றுக்கும் முன்னால் குடும்பத்திலேயே உருப் பெறுகின்றன. மனித வாழ்க்கையின் தொடக்கக் கோட்பாடுகளைச் சின்னஞ்சிறு குடிமகன் இங்கேதான் முதன் முதலில் தெரிந்து கொள்கிறான், நல்லதையும் கெட்டதையும் வேறு பிரித்து அறியத் தொடங்குகிறான், நல்லது செய்யவும் கெட்டது செய்யாமல் இருக்கவும் கற்கிறான்.

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 25, பக்கம் 112 (ருஷ்யனில்).

கம்யூனிசப் பயிற்சியின் முக்கியப் பகுதியாகத் திகழ்கிறது பள்ளி. விஞ்ஞானத்தின் அடிப்படைகளை அது மனிதனுக்குப் போதிக்கிறது, இயற்கை மற்றும் சமூகத்தின் மர்மங்களை உட்புகுந்து அறிய அவனுக்கு வாய்ப்பு அளிக்கிறது, உலகக் கண்ணோட்டத்தையும் ஒழுக்கநெறிப் பாங்கையும் உருவாக்குகிறது, விரிவான பல்தொழில்நுட்பக் கல்வி அளிக்கிறது, சமூகத்துக்குப் பயன்படும் வகையில் உழைக்க இளைஞன் அல்லது மங்கையை அதன் மூலம் பயிற்றுகிறது, கல்வியை மேற்கொண்டு தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

கம்யூனிசப் பயிற்சியில் சோவியத் உயர் கல்வி முறையின் முக்கியத்துவம் பெரியது. தங்கள் தொழில் பற்றிய அறிவோடு கூடவே, புதிய மனிதனைப் பயிற்றும் வேலையை நடத்த வல்லவர்களான மனிதர்களுக்கு உரிய விஞ்ஞானப் பாங்குள்ள, மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டமும் பெற்ற தேர்ச்சியாளர்களை உருவாக்குவதில் உயர் கல்வி முறை மிகப் பெருத்த அனுபவம் திரட்டி இருக்கிறது.

கட்சிப் போதனை அமைப்பு லட்சோபலட்சம் பேருக்கு உரிய உண்மையான மார்க்சிய-லெனினியப் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின் ஆகியோரின் நூல்களையும் சோ. யூ. க. கட்சிச் செயல்திட்டம், கட்சிக் காங்கிரசுகளின் தீர்மானங்கள், முக்கியமான கட்சி ஆவணங்கள் ஆகியவற்றையும் கம்யூனிஸ்டுகளும் கட்சிச் சார்பு அற்றவர்களும் கட்சிப் போதனை அமைப்பில் பயில்கிறார்கள். இவர்கள் சித்தாந்தத் தேர்ச்சி பெறுவதுடன் பொருளாதாரத்தையும் உற்பத்தி வளர்ச்சியையும் பற்றிய பிரச்சினைகளையும் ஆராய்ந்து அறிகிறார்கள். ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் சோவியத் பண்ணைகளுக்கும் எதிர்ப்படும் திண்ணமான நடைமுறைப் பணிகளுடன் இந்தப் பயிற்சி நெருக்கமாக இணைக்கப்படுகிறது. மனிதனுடைய சாலச் சிறந்த பயிற்சி ஆசானாக விளங்குகிறது உழைப்புக் குழு, ஆலை, தொழிற்சாலை, கூட்டுப் பண்ணை. தனி மனிதன் மீது ஆக அதிகப் பயன் விளைக்கும் பாதிப்பு நிகழ்த்தவும் ஒழுக்கநெறி உறவுகளின் பண்பாட்டை வளர்க்கவும் கம்யூனிச ஒழுக்கநெறியை நிலைநாட்டவும் வல்லது உழைப்புக் குழுதான்.

## 2. உளப் பண்பாடும் தனி மனிதனின் வளர்ச்சியும்

மனிதன் சமுதாயச் சூழலின் பாதிப்பினுல் உருவாகிருன். இந்தச் சூழலில் பொருள்வகைக் காரணிகள் மட்டும் இன்றி உளவகைக் காரணிகளும் அடங்கியுள்ளன. தனி மனிதனைப் பயிற்றுவதில் இவை ஆற்றும் பங்கு குறைந்த முக்கியத்துவம் உள்ளதல்ல. விஞ்ஞானம், கல்வி, கலை, இலக்கியம், சமூகத்தில் மேலோங்கியுள்ள ஒழுக்கநெறி ஆகியவை, சுருங்கச் சொன்னுல், சமூகத்தின் உளப் பண்பாடு உளவகைக் காரணிகளைச் சேர்ந்தவை புதிய வார்ப்பில் அமைந்த மனிதனை, பண்பாட்டு-தொழில்நுட்பத் தரத்தில் உயர்ந்த உழைப்பாளி-அறிவாளியை உருவாக்குவதற்கான முக்கிய நிபந்தனை ஆகும் கம்யூனிசப் பண்பாட்டின் வளர்ச்சி.

பண்பாட்டின் சாதனைகள் தனி மனிதனின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பதற்காக சோஷலிசம் பண்பாட்டை விரிவான வெகுஜனங்களின் செல்வம் ஆக்கிற்று. அறிவுப் பிரசார, கல்வி அமைப்பு, விஞ்ஞானம், கலை, இலக்கியம் ஆகியவை சோஷலிசச் சமூகத்தில் உழைப்பாளிக்குத் தொண்டாற்றுகின்றன, அவனுடைய திறமைகளையும் மேதைகளையும் வளர்க்க உதவுகின்றன.

சோஷலிசச் சமூகத்தில் அறிவுப் பிரசார, கல்வி அமைப்பு அறிவியல்களில் தேர்ச்சி பெற உதவுகிறது. பெருந்திரளானவர்களுக்குப் பயன்படுவது இதன் இயல்பு ஆகையால், தனித் தனி மனிதர்களுடையவோ மனிதர்களின் குழுக்களுடையவோ அல்ல, கோடானு கோடி உழைப்பாளிகளின் அறிவுகளை இது உருவாக்குகிறது. சோவியத் யூனியனில் நடுத்தரப் பள்ளியிலும் சரி, உயர் கல்வி நிலையத்திலும் சரி போதனை இலவசமாக அளிக்கப்படுகிறது. சோஷலிசத்தில் போதனை, கல்வி முறை வாழ்க்கையுடன், நடைமுறைச் செயல்களுடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது. தொழிலாளி, விவசாயி இளைஞர்களுக்காக மாலைநேர, தபால் முறைப் பள்ளிகளும் நடுத்தரச் சிறப்புக் கல்வி நிலையங்களும் உயர் கல்வி நிலையங்களும் சோவியத் யூனியனில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழில்நுட்பப் பயிற்சி முறையும் புதிய தொழில்களில் பயிற்சி அளிக்கும் முறையும் நேரே உற்பத்தி உழைப்

பின் போதே தகுதியை உயர்த்திக் கொள்வதற்கான முறையும் வளர்ச்சி அடைந்து வருகின்றன.

தனி மனிதனுடைய முன்னேற்றத்துக்கு உதவும் உளப் பண்பாட்டு முக்கியமுள்ள அம்சமாக விளங்குகிறது கலை. கலையை மக்களுக்கு உரிய செல்வம் ஆக்கிய சோஷலிசம் தனி மனிதனின் தொண்டில், அவனுடைய சர்வாம்ச வளர்ச்சிக்கு உதவும் பணியில் அதை ஈடுபடுத்தி இருக்கிறது. சோஷலிசக் கலையின் உயர்ந்த கொள்கைப் பற்றும் ஒழுக்கநெறிப் பற்றும் உண்மையான மனிதாபிமானமும் தனி மனிதனுடைய அரசியல், உலகக் கண்ணோட்ட, ஒழுக்கநெறிப் போக்குகளை உருவாக்க உதவுகின்றன. உலகப் பண்பாட்டின் சிறந்த மரபுகளைப் பேணிக் காக்கும் அதே சமயத்தில் சோஷலிசக் கலை புரட்சி எதார்த்தத்தைப் பிரதிபலிப்பதற்கான புதிய வழிகளையும் சாதனங்களையும் தேடிய வண்ணமாய் இருக்கிறது, வாழ்க்கை உண்மையையும் நன்மை நம்பிக்கையையும் உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கிறது.

## 3. விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டமும் பகைக் கொள்கைவாதத்துடன் போராட்டமும்

விஞ்ஞானப் பாங்குள்ள மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டம் என்பது உலகைப் பற்றிய—இயற்கையையும் சமூகத்தையும் அவற்றின் வளர்ச்சி விதிகளையும் அவற்றை அறிவதற்கும் மாற்றி அமைப்பதற்குமான வழிகளையும் பற்றிய—கருத்துக்களின் முரண்பாடு இல்லாத முழுமையான தொகுப்பு ஆகும். இது எதார்த்தத்தைப் பிரதிபலிப்பதற்கான தனிப்பட்ட வடிவம். தன்னைச் சுற்றியுள்ள இயற்கை, சமூகச் சூழலின் பால் மனிதனது போக்கை இது வெளியிடுகிறது. விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டத்துக்கு அடிப்படையாக விளங்குவது ஓர் ஆழ்ந்த சமூகத் தேவை—தன்னைச் சுற்றியுள்ள எதார்த்தத்தில் திசை அறிவதற்கு மனிதனுக்கு உள்ள தேவை, அதைத் தெரிந்து கொள்ளவும் மாற்றி அமைக்கவுமான தேவை.

விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டம் இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் ஆகும், ஏனெனில் உலகின் பொருள் தன்மையை ஒப்புக் கொள்வதிலிருந்து,

அதன் இடையருத மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஒப்புக் கொள்வதிலிருந்து அது தோன்றுகிறது. அது கம்யூனிச உலகக் கண்ணோட்டம் ஆகும், ஏனெனில் கம்யூனிசத்தின் உயர்ந்த குறிக்கோள்களுக்கான போராட்டத்துடன் அது பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது. சோஷலிசத்துக்காகவும் கம்யூனிசத்துக்காகவும் தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளிகள் அனைவரும் நடத்திய போராட்டத்தின் அடிப்படையில் அது தோன்றி இருக்கிறது. உழைப்பாளிகளின் போராட்டத்துக்குச் சித்தாந்த அடிப்படையாக விளங்கும் மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டம் சுரண்டலிலிருந்தும் எல்லா விதமான ஒடுக்குமுறையிலிருந்தும் விடுபடுவதற்கான வழியை, முழுமையான பொருளாதார, சமுதாயச் சமத்துவத்துக்கான வழியை, உண்மையில் இன்பமான வருங்காலத்துக்குச் செல்லும் வழியைக் காட்டும் திசைகாட்டியாகவும் அதே சமயத்தில் திகழ்கிறது.

### விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டத்தின் உருவாக்கம்

சோஷலிசத்தின் நிலைமைகளில் விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டம் ஆதிக்கம் வகிக்கிறது. சமூகத்தின் முன்னணியில் உள்ள, ஆக அதிக உணர்வு பெற்ற பகுதியாக இருக்கும் கணிசமான எண்ணிக்கை கொண்ட மனிதர்களுக்கு உரியதாக அது விளங்குகிறது. கம்யூனிசக் கட்டுமானத்தின் நிலைமைகளிலோ, சமூகத்தின் எல்லா உழைப்பாளர்களும் விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டம் பெற்றிருப்பதற்கான புறநிலை இன்றியமையாமை ஏற்படுகிறது.

தத்துவ, பொருளியல், சமுதாயக் கருத்துக்களின் முரணற்ற தொகுப்பான மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டம் உருவாகிறது. ஆகையால், அதைப் பெற்றிருப்பதன் அர்த்தம் மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைக் கருத்துக்களைப் பயின்று தேர்வதும் நேர்முக நடைமுறைச் செயல்களில் அவற்றைப் படைப்புத் தன்மையுடன் பயன்படுத்துவதும் ஆகும்.

விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டம் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைச் சார்ந்தது ஆதலால் மார்க்சிய-லெனினியத் தத்துவம்—இயக்கவியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமும்—அதன் உரு

வாக்கத்துக்கு நிர்ணயகரமான முக்கியத்துவம் உள்ளது. இயற்கையிலும் சமுதாய வாழ்விலும் ஏற்படும் பல்வகை நிகழ்ச்சிகளை அணுகுவதற்கான முறையை மார்க்சியத் தத்துவமே மனிதனுக்கு அளிக்கிறது. மனிதன் தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளைச் சரியாக மதிப்பிடவும், வாழ்க்கையிலும் சமூகத்துக்கு முன்னுள்ள பணிகளின் நிறைவேற்றத்திலும் தனது இடத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப நடந்து கொள்ளவும் இதன் மூலம் மார்க்சியத் தத்துவம் உதவுகிறது. உலகத்தின் பால் மனிதனுடைய போக்கை உருவாக்கும் தத்துவம் செயல் புரியவும் மனிதனுக்கு அதே சமயம் கற்பிக்கிறது, உலகை அறிந்து கொள்வதும் மாற்றி அமைப்பதும் சாத்தியம் என்ற நம்பிக்கையை அவனுக்கு ஏற்படுத்துகிறது.

விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டத்தில் தேர்ந்திருப்பதன் அர்த்தம் மார்க்சிய-லெனினியப் பொருளாதாரச் சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்றிருப்பதாகும். மனிதச் செயல்பாட்டின் நிர்ணயகரமான துறை ஆகிய பொருள்வகை உற்பத்தித் துறையின் இயக்க விதிகளை வெளிப்படுத்தும் இந்தச் சித்தாந்தம் பொருளாதார வாழ்க்கையை ஒழுங்கமைக்கவும் சமூக உறவுகளின் பல்வகைப்பாடு முழுவதையும் தன்னுடைய நலன்களுக்குத் தக்கவாறு அந்த அடிப்படையில் மாற்றி அமைக்கவும் மனிதனுக்கு உதவுகிறது.

விஞ்ஞானக் கம்யூனிசச் சித்தாந்தமும் மனிதனுக்கு அவனுடைய நடைமுறைச் செயல்களில் மதிப்பிட முடியாத உதவி அளிக்கிறது. வருங்காலச் சமூகத்தின் காட்சியை வெளிப்படுத்துவது மட்டும் இன்றி அதை நிறுவுவதற்குத் திண்ணமான வழிகளையும் இந்தச் சித்தாந்தம் காட்டுகிறது.

இயற்கை விஞ்ஞானத்தின் மிக முக்கியச் சாதனைகள் விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டத்தின் இன்றியமையாத அம்சமாக விளங்குகின்றன. இந்தச் சாதனைகள் உலகக் கண்ணோட்டத்தின் இயற்கை விஞ்ஞான அடிப்படையாக அமைகின்றன, இயற்கையின் வளர்ச்சி விதிகளை வெளிப்படுத்துகின்றன, இயற்கை நிகழ்முறைகளைத் தனக்கு அடிப்படுத்தவும் பேரளவான செல்வ வளங்களைத் தனக்குத் தொண்டாற்ற வைக்கவும் மனிதனுக்குத் திறன் அளிக்கின்றன. மார்க்சியம்-லெனினியமும் இயற்கை விஞ்ஞானமும் ஒன்றோடொன்று பிரிவின்றி இணைந்திருக்கும் போது தான்

எதார்த்தம் பற்றிய கருத்துக்களின் விஞ்ஞானப் பாங்குள்ள தொகுப்பைத் தருகின்றன.

விஞ்ஞானப் பாங்குள்ள உலகக் கண்ணோட்டத்தில் தேர்ந்த மனிதன் முதலாளித்துவக் கொள்கைவாதத்துடன் போராடும் வாய்ப்பைப் பெறுகிறான். சோஷலிசத்துடன் பொருளாதாரப் போட்டியில் தோல்வி மேல் தோல்வி அடைந்து வரும் ஏகாதிபத்தியம் சோஷலிசத்தின் கொள்கைவாத நிலைகள் மீது தீவிரமான தாக்குதல் தொடுத்து வருகிறது. உழைப்பாளி வெகுஜனங்களை முதலாளித்துவக் கருத்துக்களின் தளையில் பிணித்து வைத்திருப்பதும், அதே சமயம் சோஷலிச அமைப்பைப் பழி தூற்றுவதும், கம்யூனிசக் கருத்துக்கள் மீதும் சோஷலிச நாடுகளின் கொள்கை மீதும் அவநம்பிக்கை ஏற்படுத்துவதும் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் கொள்கைவாதத் தாக்குதலின் நோக்கங்கள் ஆகும்.

திரளான வெகுஜனங்களை ஈர்க்கவும் அவர்கள் மீதுள்ள கம்யூனிசக் கருத்துக்களின் பாதிப்பைக் குறைக்கவும் வல்ல கருத்துக்கள் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தினிடம் இல்லாததை எப்படியாவது மூடி மறைப்பதற்கு ஏகாதிபத்தியச் சித்தாந்தவாதிகள் முழு மூச்சாகப் பாடுபட்டு வருகிறார்கள்.

சர்வதேசக் கெடுபிடி தளர்த்தப்பட்ட நிலைமைகளில், வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் உள்ள நாடுகளுக்கு இடையே பொருளாதார, விஞ்ஞான-தொழில்நுட்ப, பண்பாட்டு ஒத்துழைப்பு வளர்ச்சி அடைந்ததன் விளைவாக, முதலாளித்துவக் கொள்கைவாதத்துடன் போராட்டத்துக்கான சில நிலைமைகள் மாறி விட்டன, மனிதர்களதும் செய்திகளதும் பரிமாற்றம் விரிவடைந்தது இதற்கு முதன்மையான காரணம். இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளவும் பகைமைப் பிரசாரத்தைத் தீவிரப்படுத்தவும் சோஷலிசத்தின் எதிரிகள் முயன்று வருகிறார்கள்.

சோவியத் யூனியனால் இதை ஒத்துக் கொள்ள முடியாதது இயல்பே. செய்திகள், மனிதர்களின் பரிமாற்ற விரிவாக்கத்தை ஆதரிக்கும் அதே சமயத்தில் சோவியத் சட்டங்களும் பழக்க வழக்கங்களும் மதிக்கப்பட வேண்டும் என்று அது கோருகிறது. தனது உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு மற்றவர்கள் செய்யும் முயற்சிகளை அதனால் பொறுக்க முடியவில்லை. செய்திகளதும் மனிதர்களதும் பரிமாற்றம்

மக்கள் இனங்களின் பரஸ்பரப் புரிவுக்கும் அனுபவத்தையும் உளப் பண்பாட்டுச் செல்வங்களையும் பரிமாறிக் கொள்வதற்கும் துணை செய்ய வேண்டும் என்று சோவியத் யூனியன் கருதுகிறது.

## 4. உழைப்புப் பயிற்சியும் ஒழுக்கநெறிப் பயிற்சியும்

விஞ்ஞானப் பாங்குள்ள கம்யூனிச உலகக் கண்ணோட்டத்தில் தேர்ந்திருப்பதன் அர்த்தம் எதார்த்தத்தின் வளர்ச்சி விதிகளை அறிந்திருப்பது மட்டும் அல்ல, இயற்கையையும் சமூகத்தையும் நடைமுறையில் மாற்றி அமைக்க இந்தச் சட்டங்களைப் பயன்படுத்தத் திறன் பெற்றிருப்பதும் ஆகும். எதார்த்தத்தை மாற்றி அமைப்பதோ, மனிதனுடைய ஆக்கத் தன்மை கொண்ட உழைப்புச் செயலின் போதே சாத்தியம்.

**பயனுள்ள எல்லா வகை உழைப்புக்கும் மதிப்பு**

சமூகத்துக்குப் பயனுள்ள எல்லா வகையான உழைப்புக்கும், அது உடல் உழைப்பு ஆனாலும் சரி, மூளை உழைப்பு ஆனாலும் சரி, மதிப்பு காட்டுவதற்கு சோஷலிசச் சமூகம் பயிற்சி அளிக்கிறது. மனிதர்களின் உற்பத்திச் செயலில் மூளை உழைப்பையும் உடல் உழைப்பையும் இணைப்பது, உழைப்பின் தன்மையை மாற்றுவதிலும் புது மனிதனை உருவாக்குவதிலும் சோ.யூ.க. கட்சியின் பொதுக் குறிக்கோள் ஆகும்.

சோஷலிசம் தனி மனிதனின் உழைப்பைப் பட்டினியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து, கட்டற்றதும் படைப்புத் தன்மை உள்ளதும் ஆக்கி இருக்கிறது. விரிவான பாதைகளும் மிக மிகப் பல்வேறான வாய்ப்புக்களும் மனிதனுக்கு முன்னே இருக்கின்றன. இந்தப் பாதைகள் எண்ணற்றவை, இந்த வாய்ப்புக்கள் மிக மிகப் பெரியவை ஆகையால் எதைத் தெரிந்தெடுப்பது என்று மனிதன் சில வேளைகளில் திகைக்கிறான். இந்த உண்மை சிறப்பாக இளைஞர்களுக்குப் பொருந்துவது ஆகும். எனவே, மனிதனுடைய சொந்தப் பண்புகளையும் மனப் போக்குக்களையும் கருத்தில் கொண்டு அவனுக்கு, சிறப்பாக இளைஞனுக்குச் சமூகமே ஏன் உதவக் கூடாது? குடும்

பம் இதற்காக உழைக்கிறது, பள்ளியும் தொழிலாளர் குழுவும் இதைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்கின்றன.

**கம்யூனிச ஒழுக்கநெறி**

கம்யூனிச ஒழுக்கநெறிப் பயிற்சி என்பது மனிதனுடைய நடத்தை, அவனுடைய பழக்க வழக்கங்கள், அவனது இயல்பின் தன்மைகள் ஆகியவற்றை இந்த ஒழுக்கநெறிக் கோட்பாடுகளுக்கு இணங்க உருவாக்குவது ஆகும். மிகப் பெரும்பாலான மனிதர்களின்—உழைக்கும் மனித குலம் முழுவதின்—நலன்களையும் ஆதர்சங்களையும் வெளியிடும் நியாயமான, உயர்ந்த ஒழுக்கநெறியே கம்யூனிச ஒழுக்கநெறி. இந்த ஒழுக்கநெறி வெற்றிடத்தில் தோன்றுவதில்லை: மனித குலத்தினது ஒழுக்கநெறி முன்னேற்றத்தின் சிறந்த சாதனைகளை அது மரபு வழியில் பெற்றிருக்கிறது.

ஒழுக்கக் கேடுகளுடன் நடத்திய போராட்டத்தின் போது மனிதர்கள் வகுத்தவையும் பல நூற்றாண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாக வழங்கி வந்து கொண்டிருப்பவையுமான மனிதகுலம் அனைத்துக்கும் பொதுவான எளிய ஒழுக்கநெறிச் சட்டங்களை அது ஏற்றுக் கொண்டிருக்கிறது. சமூக ஒழுங்கை ஆதரிப்பது, சமூக அமைதியைக் குலைப்பவர்களிடமிருந்து மனிதர்களுடைய உயிர்களையும் உடல் நலத்தையும் பாதுகாப்பது, வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை காட்டுவது, மாதர்களைக் கவனித்துக் கொள்வது, நோயாளிகளுக்கும் இயற்கை விபத்துக்களால் துன்புற்றவர்களுக்கும் உதவி செய்வது முதலியன ஒழுக்கநெறிக்கு உகந்தவையாகத் தொன்று தொட்டு மதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஒழுக்கநெறியின் இந்த அடிப்படை விதிகளுக்குப் புறம்பாக நிலவச் சமூகத்தால் முடிந்திராது, வளர்ச்சி அடையவோ அறவே முடிந்திராது.

தனது சமுதாயத் தன்மையில் கம்யூனிச ஒழுக்கநெறி தற்காலத்தின் ஆக அதிக முன்னணிப் புரட்சிகர வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தின் ஒழுக்கநெறியாக விளங்குகிறது. சோஷலிசத்துக்காகவும் சமூக முன்னேற்றத்துக்காகவும் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தால் அதற்கு விதிக்கப்பட்ட நடத்தை குறித்த திட்டவட்டமான சட்டங்களின் தேவை காரணமாக உருவாயிற்று இந்த ஒழுக்கநெறி.

**புது மனிதனுக்குரிய ஒழுக்கநெறியின் அடிப்படைக் கோட்பாடுகள்**

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சிச் செயல்திட்டத்தில் வாய்பாடுகளின் வடிவில் தரப்பட்டுள்ள கம்யூனிசத்தைக் கட்டி அமைப்பவனுக்குரிய ஒழுக்கநெறி விதித் தொகுப்பு கம்யூனிச ஒழுக்கநெறியை வெளியிடுகிறது. புதிய, கம்யூனிசச் சமூகத்தை நிறுவுபவன் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகளின் தொகுதியே இந்த ஒழுக்கநெறி விதித் தொகுப்பு.

பின்வரும் முக்கியமான ஒழுக்கநெறிக் கோட்பாடுகள் இந்தத் தொகுப்பில் அடங்கி உள்ளன:

கம்யூனிசக் குறிக்கோளின்பால் விசுவாசம், சோஷலிசத் தாயகத்தின் மேல் அன்பு;

சமூகத்தின் நன்மைக்காக நேர்மையான உழைப்பு; உழைக்காதவனுக்கு உணவு இல்லை;

சமூகச் செல்வத்தைப் பேணிக் காப்பதிலும் பெருக்குவதிலும் ஒவ்வொருவரதும் அக்கறை;

சமூகக் கடமை பற்றிய உயர்ந்த உணர்வு, சமூக நலன்களுக்குக் கேடு செய்பவர்கள்பால் சகிப்பின்மை;

கூட்டுத் தன்மையும் தோழமையுள்ள பரஸ்பர உதவியும்; ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும்;

மனிதர்களுக்கு இடையே மனிதாபிமான உறவுகளும் பரஸ்பர மதிப்பும்; மனிதன் மனிதனுக்கு நண்பன், தோழன், சோதரன்;

சமூக வாழ்விலும் தனி வாழ்விலும் நேர்மையும் உண்மையும் ஒழுக்கத் தூய்மையும் எளிமையும் அடக்கமும்;

குடும்பத்தில் பரஸ்பர மரியாதை, குழந்தைகளைப் பயிற்றி வளர்ப்பதில் அக்கறை;

அநீதி, சோம்பல், நேர்மையின்மை, பதவி வேட்கை, பணத்தாசை ஆகியவற்றைச் சகியாமை;

சோ. சோ. கு. யூனியனின் எல்லா மக்கள் இனங்களதும் நட்பும் சோதரத்துவமும், தேசிய இன, மானிட இனப் பகைமைபால் சகிப்பின்மை;

கம்யூனிசம், சமாதானம், மக்கள் இனங்களின் விடுதலை ஆகியவற்றின் பகைவர்களிடம் சமரசமின்மை;

எல்லா நாடுகளின் உழைப்பாளிகளுடனும் எல்லா மக்கள் இனங்களுடனும் சோதர ஒருமைப்பாடு.

சோஷலிசச் சமூகத்தில் மனிதர்களின் நடத்தை குறித்த விதிகளையும், நன்மை, தீமை, கவுரவம், நீதி, அநீதி ஆகியவை பற்றிய அவர்களுடைய எண்ணங்களையும் இந்தக் கோட்பாடுகளே வரையறுக்கின்றன.

### சோவியத் தேசபக்தியையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்தையும் வளர்த்தல்

தேசபக்தி, அதாவது தாய்நாட்டின் மீது அன்பு வரலாற்றுத் தன்மை கொண்டது. சமூகத்தின் வர்க்க இயல்பு மாறுவதற்கு ஏற்ப இந்த உணர்வு மாறி வருகிறது. தேசபக்தியை உண்மையில் கடைப்பிடிப்பவை உழைப்பாளி வர்க்கங்களே ஆகும். இந்த வர்க்கங்களைச் சேர்ந்தவர்களே தாய்நாட்டின் நலன்களைப் பாதுகாப்பவர்களாகவும் அதன் சுதந்திரத்தை ஆதரிப்பவர்களாகவும் எப்போதும் இருந்தார்கள், இருக்கிறார்கள். ஏனென்றால் சுதந்திரத்தை இழப்பதன் பொருள் சொந்த நாட்டுச் சுரண்டுவோரால் மட்டும் இன்றி அயல் நாட்டுச் சுரண்டுவோராலும் அடக்கி ஒடுக்கப்படுவது ஆகும். உழைப்பாளிகளின் தாய்நாட்டுப் பற்று சுரண்டுவோர் வர்க்கங்கள் மீதுள்ள வெறுப்புடன் இணைந்திருக்கிறது. சுரண்டலிலிருந்து விடுபடவும் தன் சொந்தத் தாயகத்தைப் பெறவுமான விருப்பமே சமரசப்பட முடியாத வர்க்கங்கள் கொண்ட சமூகத்தின் நிலைமைகளில் உழைப்பாளிகளுடைய தேசபக்தியின் முக்கியப் பண்பு ஆகும்.

சோவியத் யூனியன் வளமுள்ள தேசபக்தி மரபுகள் உள்ளது. நாட்டை அடிமைப்படுத்தி இருந்த அன்னியருக்கு எதிராகப் பல நூற்றாண்டுகள் நடந்த போராட்டத்தில் உருவானவை இந்த மரபுகள். புரட்சியும் சோஷலிசமும் உழைப்பாளிகளுக்கு உண்மையான விடுதலை பெற்ற தாயகத்தை அளித்தன. ஆகையினால் தான் சோவியத் தேசபக்தியில் தாய்நாட்டின் மீதுள்ள பற்று சோஷலிச, சோவியத் அமைப்பின் மீதுள்ள அன்புடன் ஒன்றாக இணைந்திருக்கிறது.

தேசிய இனப் பெருமை, சொந்தத் தேசிய இனப் பண்பாட்டின் மேலும் மரபுகளின் மேலும் மொழியின் மேலும் உள்ள அன்பு பல தேசிய இனங்கள் கொண்ட அரசான சோவி

யத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன் மேல் உள்ள அன்புடனும் விசுவாசத்துடனும் ஒன்றுக இணைந்திருப்பது சோவியத் தேசபக்தியின் முக்கியமான சிறப்பு ஆகும். எல்லையற்ற நிலப்பரப்புக்களும் நீர் நிறைந்த ஆறுகளும் மக்களும் கொண்ட ருஷ்யா சந்தேகமின்றி ருஷ்யனுடைய தனிப்பட்ட அன்புக்கு உரியது; மிகத் தொன்மை வாய்ந்த நாகரிகங்களில் ஒன்றின் வளர்ப்புப் பண்ணையான ஜார்ஜியா, அதன் மலைகள், பிரசண்டமான ஆறுகள், வெதுவெதுப்பான கடல் ஆகியவை ஜார்ஜியனின் நெஞ்சுக்கு இனியவை; உக்ரேனியனுக்கோ உக்ரேனிய ஸ்தெப்பி நிலமே சந்தேகமின்றி எல்லாவற்றிலும் சிறந்ததாகத் தோன்றும். இவ்வாறே பிற மக்கள் இனங்களும். ஆனல் சோவியத் தாய்நாட்டின் நலன்கள், அதன் நிகழ்காலமும் இன்னும் அதிகமாக அதன் இன்பமயமான வருங்காலமும் ருஷ்யனுக்கும் ஜார்ஜியனுக்கு உக்ரேனியனுக்கும் சோவியத் யூனியனின் பதிற்றுக் கணக்கான பிற மக்கள் இனங்களுக்கும் எல்லாவற்றையும் விட விலைமிக்கவை, எல்லாவற்றிலும் இனியவை. அதனுல்தான் உள்நாட்டுப் போர்க் காலத்தில் அவர்கள் எல்லோரும் தோளோடு தோள் சேர்ந்து அயல்நாட்டினரின் தலையீட்டையும் உள்நாட்டுப் பிற்போக்காளர்களின் தாக்குதல்களையும் எதிர்த்து முறியடித்தார்கள், முதல் ஐந்தாண்டுத் திட்டங்களின் பிரமாண்டமான கட்டுமானப் பணிகளை ஒன்று சேர்ந்து நிறைவேற்றினுர்கள், நாட்டின் பொருளாதார விறலை உருவாக்கினுர்கள், 1941—1945ல் நடந்த மாபெரும் தேசபக்த யுத்தத்தில் ஜெர்மானிய பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களை எதிர்த்து ஒன்று சேர்ந்து வீரப் போர் புரிந்தார்கள்.

பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்துடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருப்பது சோவியத் தேசபக்தியின் முக்கியச் சிறப்பு ஆகும். தேசிய இன, மானிட இனக் காழ்ப்புகளும் முதலாளித்துவத் தேசியவாதமும் பெருவல்லரசு நாட்டு வெறியும் சோவியத் மக்களுக்குப் புறம்பானவை. சோஷலிசத் தாய்நாட்டின் மீது அவர்கள் கொண்டிருக்கும் அன்பு எல்லா சோஷலிச நாடுகள் மேலும் உள்ள அன்புடனும் எண்ணிக்கையில் பெரியவையும் சிறியவையுமான மற்ற எல்லா மக்கள் இனங்களின் பாலும் உள்ள மரியாதையுடனும் பிற நாடுகளின் உழைப்பாளிகளோடு அவர்கள் கொண்டிருக்கும்

சோதர வர்க்க ஒருமைப்பாட்டுடனும் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது.

**ஒழுக்கநெறியும் அறிவியல்களும்** ஒழுக்கநெறிக்கும் அறிவியல்களுக்கும் உள்ள தொடர்பு முதலாளித்துவ ஒழுக்கவியல் சிந்தனையிலேயே காணப்பட்டிருந்தது. ஆனால் இந்தத் தொடர்பின் தன்மையைத் தெளிவுபடுத்தவும், எல்லா வகையான அறிவியலும் ஒழுக்கநெறிச் செவ்வைப்பாட்டுக்கு இட்டுச் செல்கிறதா, எல்லா வகையான ஒழுக்கநெறி வெற்றியும் அறிவின் ஆற்றலை உறுதிப்படுத்துகிறதா என்பதைப் புரிந்து கொள்ளவும் முதலாளித்துவ ஒழுக்கவியலுக்கு முடியவில்லை. இது தற்செயல் அல்ல, ஏனெனில் முதலாளித்துவச் சமூகத்தில் அறிவியல்கள் பெரும்பாலும் ஆதாய ஊற்றுக்களாக இருக்கின்றன. ஆதாயமும் தன்னலமுமோ, மனிதர்களின் ஒழுக்கநெறி உணர்வை விகாரப்படுத்துகின்றன. ஆகவே, அங்கே விஞ்ஞானம் ஒழுக்கச் செவ்வைப்பாட்டிலிருந்து ஒரு புறம் ஒதுங்கி, ஓரளவு அதற்கு எதிராக நிற்கிறது.

அறிவியல்களை ஒழுக்கச் செவ்வைப்பாட்டின் கருவியாக மாற்றுவது சோஷலிசப் புரட்சியின் முக்கியமும் சிக்கலுமான பணிகளில் ஒன்றாகும்.

மனிதனுடைய அன்றாட நடவடிக்கைகளிலும் செயல்களிலும் நடந்து கொள்வதற்கான திசையைக் காட்டும் கருவியாக அறிவியல்கள் பயன்படுகின்றன. அதே சமயம், மனிதகுல முன்னேற்றத்துக்கு உதவுபவையான அறிவியல்களையே கற்றுத் தேரும்படிக் கம்யூனிச ஒழுக்கநெறியின் உயர்ந்த கோட்பாடுகள் கோருகின்றன, இன்னும் முக்கியமாக, இந்த அறிவியல்களை மனித குலத்தின் தீமைக்காக இன்றி நன்மைக்காகச் சரியான விதத்தில் பயன்படுத்தும்படி அவை உழைப்பாளர்களுக்குக் கற்பிக்கின்றன. அறிவியல்களுக்கும் ஒழுக்கநெறிக்கும் உள்ள ஒற்றுமை இதிலேயே வெளிப்படுகிறது.

## 5. அழகியல் பயிற்சி

அழகியல் பண்புகள், சுவைகள், கலையிலும் வாழ்க்கையிலும் நேர்த்தியானதைப் புரிந்து கொள்ளவும் படைக்கவும்

அழகு விதிகளுக்கு இணங்க வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உள்ள திறமை ஆகியவை சர்வாம்ச வளர்ச்சி பெற்ற மனிதனுக்குக் கட்டாயமாக வேண்டியவை ஆகும்.

அழகியல் பயிற்சி என்பது முதன்மையாக மனிதனுடைய கலையுணர்ச்சிகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் பயிற்றுவது ஆகும். கலையில் உள்ளக் கிளர்ச்சி அம்சம் சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் உள்ளது. உண்மைக் கலைப் படைப்புக்களுக்கு இயல்பான ஆழ்ந்த கொள்கைப் பற்றும் அறிவுக் கூர்மையும் வாய்ந்த தன்மையைக் கவர்ச்சி உள்ளதாகவும் சிறப்பாகப் புரியக் கூடியதாகவும் செய்வது உள்ளக் கிளர்ச்சி வண்ணப் பொலிவே ஆகும். எனவே அழகியல் பயிற்சி என்பது அறிவையும் உணர்ச்சிகளையும், உணர்ச்சிகளின் மூலம் அறிவைப் பயிற்றுவது ஆகும். கலைச் செல்வங்களைப் படைக்கவும் அவற்றைப் பயன்படுத்தவும் திரளான உழைப்பாளி வெகுஜனங்களுக்குச் சாதகமான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரும் சோஷலிசச் சமூகத்தில் அழகியல் பயிற்சி சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் உள்ளது. தவிரவும், கம்யூனிசக் கட்டுமானத்தின் வெற்றிகளது அளவுக்கு ஏற்ப, சமூக வாழ்வில் அழகியலின் பாத்திரமும் கலையினதும் இலக்கியத்தினதும் பாத்திரமும் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டு போகும்.

அழகியல் சுவைகளை ஊட்டும் முக்கியச் சாதனமாக விளங்குகிறது கலை. இயற்கையின் அழகையும் அதில் நடைபெறும் நிகழ்முறைகளின் லயத்தையும் ஒருங்கிசைவையும் அற்புத வண்ணங்களதும் ஒலிகளதும் செழிப்பையும் கலை பிரதிபலிக்கிறது. மனிதன், மனித உறவுகள் ஆகியவற்றின் அழகுக்கும் மனித உழைப்பின் அழகுக்கும் அது புகழ் பாடுகிறது. ஒரு கலைப் படைப்பு எந்த அளவுக்கு ஒளியும் கலைப் பாங்கும் கொண்டிருக்கிறதோ, கொள்கைவாத உள்ளடக்கத்துக்கும் செவ்வைப்பாடுள்ள கலை வடிவத்துக்கும் இடையே உள்ள தொடர்பு அதில் எந்த அளவுக்கு உள்ளார்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மனிதன் மேல் கலையின் அழகியல் பாதிப்பு கணிசமாக இருக்கிறது. மனிதனுடைய கலை மேதை பெற்ற ஆக அதிக மதிப்புள்ள வெற்றியாக விளங்குகிறது எதார்த்தவாதம். விரிவான வெகுஜனத் திரளுக்கு அழகியல் பயிற்சி அளிப்பதற்கான, வெகுஜனங்களைக் கலைப்

படைப்புக்குப் பழக்குவதற்கான நம்பத்தக்க சாதனம் எதார்த்தவாதமே, சிறப்பாக சோஷலிச எதார்த்தவாதமே ஆகும்.

பொழுதுபோக்குக் கலை அழகியல் பயிற்சியில் நாளுக்கு நாள் அதிக முக்கியத்துவம் பெற்றுக் கொண்டு போகிறது. கலைச் செல்வங்களைப் புரிந்து கொள்ளும் திறமையை மட்டும் இன்றி, இந்தச் செல்வங்களைப் படைக்கும் திறமையையும் விரிவான வெகுஜனங்கள் இதன் உதவியால் தங்களிடம் உருவாக்கிக் கொள்ளுகிறார்கள்.

கலைப் படைப்புக்களை உருவாக்கும் திறமையைச் சமூகத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் பெற்று விடுவதனால் கலை அழிந்து விடும் என்றோ, மனிதர்களின் மற்ற வகைச் செயல்களில் கரைந்து விடும் என்றோ எண்ணுவது முற்றிலும் சரி ஆகாது. மனிதச் செயல்களின் தனியான வகையாகவும் அழகியல் பயிற்சிக்கான முக்கியச் சாதனமாகவும் கலை கம்யூனிச அமைப்பிலும் இருந்து வரும். கம்யூனிசத்தின் நிலைமைகளில் கலைப் படைப்பு தொழில்முறைக் கலைஞர்களின் பொறுப்பாக மட்டும் இருக்காது. திரளான மனிதர்கள், எல்லா மனிதர்களுமே அதில் ஈடுபடுவார்கள், ஏனென்றால் அழகியல் திறமைகள் உட்பட எல்லாத் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பை ஒவ்வொருவரும் பெறுவார்.

## 6. உடல் செவ்வைப்பாடு

புது மனிதனை உருவாக்கும் செயல்முறை அவனுடைய உடல் செவ்வைப்பாடு இல்லா விட்டால் நடவாது. உடல் செவ்வைப்பாடு உள்ளவன் முதன்மையாக உடல்நலம் உள்ள மனிதன். மனிதனது உழைப்புச் செயலுக்கும் சமூகச் செயலுக்கும் இன்றியமையாத முதல் தேவை உடல், உள ஆரோக்கியம் என்பது தெரிந்ததே. பலவகையான மனிதப் பண்புகள் அனைத்தையும், வேலைத் திறமையையும் இயற்கையின் அழகை அனுபவிக்கும் திறமையையும் தன்னைச் சூழ்ந்துள்ள எதார்த்தத்தை உள்ளக் கிளர்ச்சியுடன் புரிந்து கொள்ளும் திறமையையும் பெற்றிருக்க வல்லவன் உடல்நலம் உள்ள மனிதனே. ஆரோக்கியத்தின் தேவை மனித உடலுக்கு ஏற்படும் யாவற்றிலும் முதலான, யாவற்றிலும் கட்டாயமான

தேவை ஆகும். காற்றையும் உயிரையுமே போல மனிதனுக்கு இன்றியமையாதது ஆரோக்கியம்.

கம்யூனிச அமைப்பிலும் ஓரளவு உடல் முயற்சிகள் உழைப்புக்குத் தேவைப்படும், பெருத்த நரம்பு இறுக்கங்களைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். ஆனாலும் நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சியின் போக்கு காரணமாக உற்பத்திச் செயல்முறையில் உடல் உழைப்பின் விகிதம் இடையறாமல் குறைந்து கொண்டு போகிறது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாகச் சென்ற ஒரு நூற்றாண்டில் தசைச் சக்தியின் தேவை பதினைந்திலிருந்து மூன்று சதவிகிதமாகக் குறைந்து விட்டது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். உழைப்புச் செயல்முறையில் உடல் அசைவுகளின் இயல்பான தேவை நாளுக்கு நாள் குறைந்த அளவிலேயே நிறைவேற்றப் படுகிறது. நோய்கள் அதிகரிப்பதற்கும் இள வயதிலேயே உடல் முதுமை அடைவதற்குமான அபாயம் இதனால் அதிகமாகிக் கொண்டு போகிறது.

மீளும் வழி என்ன? உடற்பயிற்சியையும் விளையாட்டுக்களையும் வெகுஜனங்களிடையே வளர்ப்பதுதான் வழி. வேண்டிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட உடற்பயிற்சி மனிதனுடைய வேலைத் திறமை மீது மிகவும் சாதகமான பாதிப்பு விளைக்கிறது. உடல் முயற்சிகளின் பற்றாக்குறையை, சிறப்பாக குறைந்த இயக்கம் உள்ள வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, இது நிறைவுபடுத்துகிறது.

குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் உடற்பயிற்சி அளிப்பது சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் உள்ளது. ஏனென்றால் இளம் வயதில் தான் மனித உடல் உருவாகிறது, ஒரு சில இயற்கைக் குறைபாடுகளை நீக்கிக் கொள்ளும் வாய்ப்பு இந்த வயதில் தான் இருக்கிறது. உடல் செவ்வைப்பாடு உள்ள மனிதனைப் பயிற்றுவது இள வயதில் தான் முடியும். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்திட்டத்தில் பின்வரும் பணி விதிக்கப்பட்டிருப்பது காரணத்தோடு தான்: ''உடல், உள ஆற்றல்களின் ஒருங்கிசைந்த வளர்ச்சி கொண்டதும் உடல் உறுதி வாய்ந்ததுமான தலைமுறையை மிகச் சிறு பிள்ளைப் பிராயத்திலிருந்து தொடங்கிப் பயிற்றுவதற்கு வகை செய்ய வேண்டும்.''

சோவியத் யூனியனில் ஐந்து கோடிப் பெயருக்கும் மேல்

முறையாக உடற்பயிற்சி செய்து வருகிறார்கள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விளையாட்டுக்கள் விரிவாக வளர்ச்சி அடைந்திருக்கின்றன. உடற்பயிற்சியிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவது சோவியத் மனிதனின் வழக்கம், அவனுக்குப் பிடித்த செயல் ஆகி, அவனுடைய வாழ்க்கையிலும் உழைப்பிலும் அன்றாட நடப்பிலும் இடம் பெற்று விட்டது. மனிதனுடைய உடல், உள, ஒழுக்கநெறிப் பண்புகளைச் சேர்ந்தாற் போலப் பயிற்றுவது தனி மனிதனின் செவ்வைப்பாட்டுக்கும் அவனது சர்வாம்ச வளர்ச்சிக்குமான பாதை ஆகும்.

## 7. கம்யூனிசமும் தனி நபர் சுதந்திரமும்

தனியார் சொத்துரிமையும் சுரண்டலும் ஒழிக்கப்படுவதும் சமூகச் சொத்துரிமை நிலைபெறுவதும் தனி நபர் சுதந்திரத்தின் இன்றியமையாத நிபந்தனையும் அடிப்படையுமாக விளங்குகின்றன. எங்கே பெரும்பாலான மனிதர்களின்—உழைப்பாளிகளின்—நிலைமை சிறுபான்மையினரான சுரண்டுவோரின் குறுகிய தன்னலங்களைச் சார்ந்திருக்கிறதோ, எங்கே திரும்பத் திரும்ப ஏற்படும் நெருக்கடிகளும் வேலையின்மையும் உழைப்பாளிகளைத் தற்செயலின் விருப்பத்துக்கு அடிப்படுத்துகின்றனவோ, அவர்களுடைய வருங்கால நம்பிக்கையைப் பறிக்கின்றனவோ, அந்தச் சமூகத்தில் தனி நபர் சுதந்திரம் இருக்க முடியுமா? எப்போது உற்பத்திச் சாதனங்கள் விஷயத்தில் எல்லா மனிதர்களும் சமமான நிலையில் இருக்கிறார்களோ, அரசை நிர்வகிப்பதற்குச் சம உரிமை பெற்றிருக்கிறார்களோ, வேலை செய்யவும் கற்கவும் ஓய்வு கொள்ளவும் சம உரிமை பெற்றிருக்கிறார்களோ, எப்போது அவர்கள் குறிக்கோள்களின் உருமையால் ஒன்றுபட்டிருக்கிறார்களோ, எப்போது சமூகத்தின் கவலைகளும் செயல்களும் அவர்களுடைய சொந்தக் காரியங்கள் ஆகின்றனவோ, அப்போது தான் தனி நபரின் பண்புகள் சுதந்திரமாக வெளிப்படுவதற்கு ஏற்ற எல்லா நிலைமைகளும் உருவாகின்றன.

சமூகத்திலிருந்து, மனிதனின் வளர்ச்சிக்கும் அவனது தேவைகளின் நிறைவேற்றத்துக்கும் அவனுடைய திறமைகளதும் மேதைகளதும் வெளிப்பாட்டுக்கும் சமூகம் எந்த மாதிரி நிலைமைகளை ஏற்படுத்துகிறது என்பதிலிருந்து தனி நபர் சுதந்திரத்தைப் பிரிக்க முடியாது.

தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் ஒழித்து விட்ட சோஷலிசம் தனி நபருக்குப் பொருளாதார விடுதலை அளிக்கிறது, சந்தை ஒழுங்கீனத்திலும் நெருக்கடிகளிலும் வேலையின்மையிலும் வறுமையிலும் வருங்காலம் பற்றிய அச்சத்திலுமிருந்து தனி நபரை விடுவிக்கிறது. சோஷலிசம் மனிதனுடைய உழைப்பை விடுதலை பெறச் செய்கிறது. சுரண்டுபவர்களுக்காக இன்றித் தனக்காக, தன்னுடைய சமூகத்துக்காக உழைக்கும் வாய்ப்பை, உழைப்பின் வாயிலாகவும் அதன் அடிப்படையிலும் தனது பொருள்வகை, உளவகைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பை வரலாற்றில் முதன் முதலாக அது மனிதனுக்கு அளிக்கிறது. சோஷலிசம் விரிவான சமுதாயச் சுதந்திரங்களைத் தனி மனிதனுக்கு அளிக்கிறது. இவையாவன: அரசு அதிகார உறுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கவும் தேர்ந்தெடுக்கப்படவுமான உரிமை, சமூக விவகாரங்களின் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் உரிமை, கல்வி பெறவும் ஓய்வு கொள்ளவும் முதுமையில் அல்லது நோய்ப்படும் போது சமுதாயப் பராமரிப்பு பெறவும், பொருள்வகை உளவகை உற்பத்தியின் எல்லாத் துறைகளிலும் படைப்புச் செயலுக்கான வாய்ப்பு பெறவும் உரிமை. சோஷலிசம் தனி நபரை உளப் பாங்கில் விடுதலை பெறச் செய்கிறது. பல்வேறு வகையான கருத்துமுதல்வாதக் காழ்ப்புக்களிலிருந்து விடுபெறத் தனி நபருக்கு அது உதவுகிறது, உளப் பண்பாட்டின் எல்லாச் சாதனைகளையும் பயன்படுத்தவும், விஞ்ஞான, கலைப் படைப்பில் ஊக்கத்துடன் பங்காற்றவும் தனி நபருக்கு அது வாய்ப்பு அளிக்கிறது. தான் சமூகத்துக்கும் வேலைக் குழுவுக்கும் புறம்பானவன் என்று தனி நபர் சோஷலிசத்தின் நிலைமைகளில் எண்ணுவதில்லை. தனி நபரின் சுய வெளியீட்டுக்கும் அவனுடைய திறமைகள் வெளிப்பட்டு வளர்ச்சி அடைவதற்கும் சாதகமான நிலைமைகள் சோஷலிசத்தில் ஏற்படுத்தப்படுகின்றன.

### கம்யூனிசம் மனிதாபிமானத்தின் உருவம்

உழைப்பாளிகளின் தனி நபர் சுதந்திரத்துக்கு வகை செய்து தனி நபரின் சர்வாம்ச வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா நிலைமைகளையும் ஏற்படுத்தும் கம்யூனிசம் பாட்டாளி வர்க்க மனிதாபிமானத்தின் நடைமுறைச் செயல்பாடாக விளங்குகிறது.

கோட்பாட்டளவான மனிதனின் வழிபாட்டை நிராகரித்து விட்டு விஞ்ஞானக் கம்யூனிசம் மனிதாபிமானக் கருத்தை நடைமுறை அடிப்படையில் நிலைநாட்டியது. மனிதனை உருவாக்குவதில் சமுதாய நிலைமைகளின் நிர்ணயகரமான பங்கைக் காட்டிய விஞ்ஞானக் கம்யூனிசம் அவனது உண்மையான விடுதலைக்கு உரிய வழியை—தனியார் சொத்துரிமையையும் சுரண்டலையும் புரட்சியின் மூலம் ஒழித்து விட்டுப் புதிய, சோஷலிச மற்றும் கம்யூனிசச் சமூகத்தை நிறுவும் வழியைப்—புலப்படுத்தியது. தனி நபரின் சுதந்திரத்திற்கும் சர்வாம்ச வளர்ச்சிக்கும் வகை செய்யும் நோக்கத்துடன் புரட்சி மூலம் சோஷலிசத்தை நிலைநிறுத்துவதில் தான் சோஷலிச மனிதாபிமானத்தின் சாரம் அடங்கி இருக்கிறது.

பாட்டாளி வர்க்க, சோஷலிச மனிதாபிமானம் உழைக்கும் மனிதன் பால் அன்பையும் நம்பிக்கையையும் மரியாதையையும் பிரகடனம் செய்வதோடு மனித மாண்பையும் உண்மையான மனிதத் தன்மையுள்ள சமூக உறவுகளையும் காப்பதாகவும் அறிவிக்கிறது.

சோஷலிச உற்பத்தி மனிதனுடைய பொருள்வகை, உளவகைத் தேவைகளை நிறைவேற்றும் பணியைச் செய்கிறது. மனிதர்களின் ஒருமனப்பாடும் பரஸ்பர உதவியும் நிலவும் உற்பத்தி உறவுகள் சமூகச் சொத்துரிமையின் அடிப்படையில் இங்கே நிலை பெறுகின்றன. வேறு எந்தச் சமூகத்திலும் இல்லாத அளவு உழைப்பை உயர்த்துகிறது சோஷலிசம். சமூகத்தில் மனிதனுடைய இடத்தையும் மதிப்பையும் தீர்மானிக்கும் சாதனமாக விளங்குகிறது உழைப்பு. உளப் பண்பாட்டின் சாதனைகளை சோஷலிசம் மனிதனுடைய தொண்டில் ஈடுபடுத்துகிறது, விரிவான சமுதாய உரிமைகளை அவனுக்கு வழங்குகிறது.

உழைக்கும் மனிதன் மேல் அன்பும் மரியாதையும், சுரண்டல் மேலும் சுரண்டுவோர் மேலும் உழைப்பாளியின் தனித்தன்மை வெளிப்படத் தடையாய் இருப்பவை எல்லாவற்றின் மேலும் வெறுப்பும் இணைந்திருப்பது சோஷலிச மனிதாபிமானத்தின் முக்கியமான சிறப்பு ஆகும். சமூக ஒழுங்கமைப்பின் அடிப்படையாக, அஸ்திவாரமாக விளங்கும் மனிதாபிமானமும் மனிதத் தன்மையும் ஒவ்வொரு மனிதனுடையவும் நடத்தையின் பொதுப் பண்பாகப் படிப்படியாக

மாறி வருகின்றன, மிக மிகச் சிக்கலான சமூக உறுப்பின் மூலை முடுக்குகள் எல்லாவற்றிலும் புகுந்து வருகின்றன, சர்வாம்சமான நடைமுறை ஆகி வருகின்றன.

## கம்யூனிசம் மனித குலத்தின் ஒளி மிக்க வருங்காலம்

சமாதானம், உழைப்பு, விடுதலை, சமத்துவம், சோதரத்துவம், இன்பம் ஆகியவற்றை மனித குலத்துக்குக் கம்யூனிஸ்டுகள் பிரகடனம் செய்கிறார்கள்.

சமாதானச் சமூகம் முதலாளித்துவம் யுத்த அபாயம் நிறைந்தது. நடப்பு நூற்றாண்டின் முற்பாதியில் ஏகாதிபத்தியவாதிகள் மனித குலத்தை உலக யுத்த இரத்த வெள்ளத்தில் இரண்டு தடவைகள் ஆழ்த்தினார்கள்.

மக்கள் இனங்களுக்கும் அரசுகளுக்கும் இடையே நிலவும் உறவுகளில் புதிய சகாப்தத்தை சோஷலிசம் தொடங்கி வைத்திருக்கிறது. பரஸ்பர நம்பிக்கையும் மரியாதையும், பிரதேச முழுமை, பொருளாதார, அரசியல் சுதந்திரம், பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றின் சகாப்தம் இது.

ஏகாதிபத்தியவாதிகள் புதிய உலக யுத்தத்தை மூட்டி விடும் வழியில் உள்ள பெருத்த தடையாக நிற்கும் பொருள் வகை, அரசியல் சக்தியாக விளங்குகிறது சோஷலிசம். மனித குலம் கம்யூனிசத்துக்குப் பரிணமித்ததுமோ, நிலையான சமாதானம் ஏற்பட்டு விடும். உலக மாந்தர்கள் தங்கள் வருங்காலம் பற்றிய கவலையிலிருந்து என்றென்றைக்கும் விடுபட்டு விடுவார்கள்.

உழைப்புச் சமூகம் முதலாளித்துவம் உழைப்பைத் தாங்க முடியாத கட்டாயக் கடமையாக, வயிற்றுப்பாட்டுக்கான சாதனமாக மாற்றி விட்டது. பட்டினி பற்றிய அச்சம் முதலாளிக்காக முதுகு ஒடிய உழைக்கவும், தன் உடல், உளச் சக்திகளைக் கடைசித் துளி வரை செலவிட்டுப் பாடுபடவும் தொழிலாளியைக் கட்டாயப் படுத்துகிறது.

மனிதச் செயலின் எந்தத் துறையில் வேண்டுமானாலும் உழைக்கவும் படைக்கவும் உழைப்பாளிகளுக்கு விரிவான உரிமை அளிக்கிறது சோஷலிசம். சுரண்டலை அடியோடு ஒழித்து விட்டு, நிலப்பிரபுவுக்காகவோ முதலாளிக்காகவோ இன்றித் தங்களுக்காக, தங்கள் மக்களுக்காக, தங்கள் சமூகத்துக்காக வேலை செய்வதற்கான முழு வாய்ப்பை உழைப்பாளி மக்கள் இங்கே பெறுகிறார்கள். விஞ்ஞானம், தொழில் நுட்பத்தின் அதி நவீனமான சாதனைகளை அடிப்படையாகக் கொண்ட உழைப்பு கம்யூனிசச் சமூகத்தில் உண்மையாகவே கட்டற்றதாகவும் படைப்புத் தன்மை உள்ளதாகவும் மனிதனுடைய முதலாவது வாழ்க்கைத் தேவையாகவும் மாறி, அவனுடைய சர்வாம்சமான, ஒருங்கிசைந்த வளர்ச்சியின் அடிப்படையாகப் பணியாற்றும்.

### கம்யூனிசம் என்பது விடுதலை

முதலாளித்துவச் சமூகத்தின் விடுதலையைப் பற்றி முதலாளித்துவக் கொள்கைவாதிகள் நிறையப் பேசுகிறார்கள். கட்டற்ற தொழில் முயற்சிக்கும் சந்தையில் கட்டற்ற வியாபாரத்துக்கும் உள்ள உரிமையுடன் இந்த விடுதலை தொடர்பு கொண்டது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் சந்தையில் கட்டற்ற வியாபாரம் என்பது வெறும் மருட்சி, ஏனென்றால் தொழிலதிபனும் சரி, தொழிலாளியும் சரி, கண்ணற்ற இன்றியமையாமைக்கு—கட்டற்ற தொழில் முயற்சி நிலவும் சமூகத்துக்கு இயல்பான அராஜக, போட்டிச் சட்டங்களுக்கு—அடிப்பட்டிருக்கிறார்கள்.

உண்மையான விடுதலை பெறுவதற்கான எதார்த்த வாய்ப்பு சோஷலிச அமைப்பில் தான் ஏற்படுகிறது. சமூகச் சொத்துரிமையின் ஆதிக்கமும் சமரசப்படுத்த முடியாத வர்க்க முரண்பாடுகளின் நீக்கமும் சந்தையின் ஒழுங்கீனத்தைப் போக்கி விடுகின்றன, சமூகத்தின் பொருளாதார, அரசியல், பண்பாட்டு வாழ்க்கையை உணர்வு பூர்வமாக வழிகாட்டி நடத்தும் வாய்ப்பை மனிதர்கள் பெறுகிறார்கள். சமூகம் மேற்கொண்டு முன்னேற முன்னேற, தனி மனிதனின் சுதந்திரம் மேலும் மேலும் விரிவும் பல்வகைப்பாடும் அடைந்து கொண்டு போகிறது. இயற்கைச் சக்திகள் மேலும் சமூக நிகழ்முறைகள் மேலும் அவனுடைய ஆதிக்கம் அதி

கரிக்கிறது. தனது சொந்த நலன்களையும் விருப்பங்களையும் உயர்ந்த சமூகக் குறிக்கோளுடன் இணைக்க—தானே விரும்பி, உணர்வுபூர்வமாக இணைக்க—மனிதன் கற்றுக் கொள்கிறான்.

சமத்துவச் சமூகம்

முதலாளித்துவம் என்பது முதன்மையாக ஆழ்ந்த பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகும். இதில் சமூகத்தின் சிறு பகுதி பேரளவான நிதியங்களை உடைமையாகப் பெற்றிருக்கிறது, ஆடம்பரங்களில் மூழ்கிக் கிடக்கிறது. உலகின் எல்லாச் செல்வ வளங்களும் எதன் உழைப்பால் உண்டாக்கப்படுகின்றனவோ அந்தப் பெரிய பகுதியோ, மிக மிக அடிப்படையான தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளச் சில வேளைகளில் திறனற்றதாய் இருக்கிறது. பிரமாண்டமான பொருள், வளச் செல்வங்களை முதலாளித்துவம் உருவாக்கி இருக்கிறது. ஆனால் அவற்றை நியாயமாகப் பகிர்ந்து அளிக்க, எல்லோருக்கும் உரியவை ஆக்க அதனால் முடியவில்லை. உற்பத்திச் சாதனங்களை உடைமையாகப் பெற்றிருப்பவர்கள் அரசியல் அதிகாரத்தையும், மனிதர்களுடைய மூளைகள் மீது பாதிப்பு நிகழ்த்துவதற்கான அச்சக வெளியீடுகள், வானொலி, தொலைக்காட்சி, இலக்கியம், கலை முதலிய சாதனங்களையும் தங்கள் கைகளில் திரட்டிக் குவித்துக் கொண்டு, தங்கள் பொருளாதார ஆதிக்கத்தையும் அரசியல் அதிகாரத்தையும் நிலைநிறுத்திக் கொள்ளவும், பொருளாதார, சமுதாய ஏற்றத் தாழ்வை நிரந்தரம் ஆக்கவும் அவற்றைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதே சமயம் மிகப் பெரும்பாலரான மனிதர்கள் அனேகமாக அரசியல் உரிமைகள் அற்றவர்களாக இருக்கிறார்கள். தங்களது சித்தத்தை வெளியிட அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிப்பது கிடக்கட்டும், அதன் மீது ஆழ்ந்த செல்வாக்கு செலுத்தக் கூட வாய்ப்பு இல்லாதவர்களாக இருக்கிறார்கள் இவர்கள்.

மனிதர்களுடைய முழுமையான பொருளாதார, சமுதாய சமத்துவத்தைக் கம்யூனிசம் நிலைநாட்டும். இங்கே சமூகத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் தம் திறமைக்கு ஏற்ப உழைப்பார், தேவைகளுக்கு ஏற்பப் பொருள், உளச் செல்வங்களைப் பெறுவார். கற்கவும் அறிவியல்களிலும்] பண்பாட்டிலும் தேர்ச்சி பெறவும் எதார்த்தமான வாய்ப்புக்கள் அவருக்குக்

கிடைக்கும். கம்யூனிச அமைப்பில் வர்க்கங்கள் இருக்க மாட்டா. மூளை வேலை செய்பவர்கள், உடல் உழைப்பாளர்கள் என்று சமூக உறுப்பினர் பிரிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். அரசின் இடத்தில் இங்கே சமூகச் சுயநிர்வாகம் வரும், சமூகத்தின் செயல்களையும் அதன் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியையும் நிர்வகிக்கும் சமமான வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்.

**சோதரத்துவச் சமூகம்**

மனிதர்களுக்கும் மக்கள் இனங்களுக்கும் இடையே சோதரத்துவத்தை முதலாளித்துவம் மறுக்கிறது. வேறு வகையாக இருக்கவும் முடியாது, ஏனென்ருல் முதலாளித்துவத்தின் அடிப்படையாக இருப்பது தனியார் சொத்துரிமை. இது மனிதர்களைப் பிரிக்கிறது, அவர்களைப் பகைவர்கள் ஆக்குகிறது, மூலதனத்தின் புனிதத்திலும் புனிதமான குறிக்கோள் ஆகிய லாபத்துக்கான போராட்டத்தில் போட்டியாளர்களாகச் செய்கிறது. கடைக்கோடித் தன்னலமே முதலாளித்துவ ஒழுக்கநெறியின் அடிப்படைக் கோட்பாடு ஆகும்.

கம்யூனிசச் சமூகத்தின் சமூகச் சொத்துரிமை உழைப்பாளர்களை ஒன்றுசேர்க்கும். சமூக வாழ்க்கையின் மிக மிக வெவ்வேருன பிரச்சினைகளின் தீர்வில் அவர்களுடைய ஒற்றுமைக்கும் ஒருங்கிசைந்த பரஸ்பரப் பாதிப்புக்கும் அது வழி வகுக்கும்.

கம்யூனிசச் சமூகத்தின் ஆக உயர்ந்த மனிதாபிமானம் மனிதர்களுக்கு இடையே நிலவும் சோதர உறவுகளில் மட்டும் இன்றி, எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளர்களின் சோதர ஒருமைப்பாட்டிலும், பெரியவையும் சிறியவையுமான எல்லா அரசுகளுடைய மக்கள் மீதும் உள்ள மரியாதையிலும் வெளிப்படும். தேசிய இனங்களின் தனிப்பாட்டையும் மக்கள் இனங்களுக்குள் பகைமையையும் பரப்பும் கொள்கைவாதமான தேசியவாதத்துடன் கம்யூனிசம் ஒருங்கே நிலவ முடியாது. உழைப்பாளி மக்களின் நட்பையும் சோதரத்துவத்தையும் வலியுறுத்தும் கம்யூனிசம், தேசிய இன, மானிட இனப் பகைமையின் பாலும் உழைப்பாளிகளது பிரிவுபாட்டின் பாலும் சகிப்பின்மையைக் கடைப்பிடிக்கும்.

**இன்பச் சமூகம்**

சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் உண்மையான இன்பத்துக்கு வகை செய்வது முதலாளித்துவத்திஞல் முடியாது.

எதில் வருங்காலம் இல்லையோ, எதில் மனிதனுக்கு ஒவ்வோர் அடியிலும் தோல்வியும் தற்செயல் விபத்துக்களும் எதிர்ப் படுகின்றனவோ, நம்பிக்கை இன்மையும் சோர்வு மனப்பான் மையும் வரப் போவது குறித்த அடக்க முடியாத அச்சமும் எங்கே மனித வாழ்க்கையில் இடைவிடாமல் உடன் வரு கின்றனவோ, அந்தச் சமூகத்தில் மனிதன் இன்பமுள்ளவனாக இருக்க முடியாது. எது தன் எல்லா உறுப்பினர்களுக்கும் போதுமான பொருள்வகை வசதிகள் அளிக்க வகை அற்றதோ, எதில் கட்டாய உழைப்பு மேலோங்கி இருக் கிறதோ, பொருள்வகை, உளப் பண்பாட்டுச் செல்வங்களை அனுபவிக்கவும், தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வும், தனக்கும் மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியும் நன்மையும் உண்டாகும் விதத்தில் அவற்றைப் பயன்படுத்தவும் மிகப் பெரும்பாலானவர்களால் எதில் முடியவில்லையோ, அந்தச் சமூகத்தில் இன்பம் உள்ளவனாக இருக்க மனிதனால் முடியாது.

சோஷலிச, கம்யூனிசச் சமூகத்தில் மனிதனுடைய நிலைமை வேறானது. மனிதன்தான், அவனுடைய நலன்களும் தேவைகளும் அவனுடைய சர்வாம்ச வளர்ச்சியும் செவ்வைப் பாடுமே சமூகத்தின் முதன்மையான, ஒரே குறிக்கோளாக விளங்குவதால் கம்யூனிச அமைப்பில் மனிதன் இன்பம் அடை வான். தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் உழைக்கவும், உலகப் பண்பாட்டுக் கருவூலத்தில் தனக்கு உரிய பங்களிப்பு நிகழ்த்தவுமான வாய்ப்பு, தனக்கு முன் உயர்ந்த குறிக் கோளை வைத்துக் கொண்டு அதை முயன்று அடைவதற்கான வாய்ப்பு, பொருள்வகை வறுமையால் இருள் படியாத, ஒளியுள்ள வருங்காலத்தில் நம்பிக்கை, தன் உடல், உளத் திறமைகளைச் செவ்வைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு, இயற்கைச் சக்திகளையும் சொந்தச் சக்திகளையும் அடக்கி ஆள்பவன் தானே என்ற உணர்வு—இவற்றிலேயே மனித னுடைய உண்மை இன்பம் முதன்மையாக அடங்கி இருக்கிறது. மேலும் மேலும் கோடானுகோடி மனிதர்களின் அறிவுகளையும் உள்ளங்களையும் கம்யூனிசம் ஆட்கொண்டு வருவதற்குக் காரணம் இதுவே. உலகின் வெவ்வேறு பகுதி களில் மேலும் மேலும் புதிய மனிதர்கள் கம்யூனிச ஆதர வாளர்களாகவும் அதன் பொருட்டுப் போராடுபவர்களாக வும் முன்வந்து கொண்டிருப்பதற்குக் காரணம் இதுவே.

வாசக நேயர்களுக்கு

*இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்*னேற்றப் பதிப்பகம் *மகிழ்வுடன் காத்திருக்கிறது.*

*கடிதங்களைத் தயை செய்து* "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41. பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ-ரூம்

136. மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80. மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.



வீ. கி. அபஞசியெவ்

வீக்தர் கிரிகோரியெவிச் அபஞசியெவ் (பிறப்பு 1922) — சிறந்த சோவியத் அறிஞர், சமூக ஊழியர், சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவையின் உறுப்பினர், பிராவ்தா செய்தித்தாளின் தலைமை ஆசிரியர், தத்துவம், சமூக இயல், விஞ்ஞானக் கம்யூனிசம் ஆகியவை பற்றிய விரிவான பிரச்சினைகள் குறித்து நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருப்பவர். விஞ்ஞான அடிப்படையில் சமூக நிர்வாகம், விஞ்ஞானக் கம்யூனிசம், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும் நிர்வாகமும் கல்வியும், தத்துவஞானத்தின் அடிப்படைகள் ஆகிய அவரது நூல்கள் அயல் மொழிகளில் பல முறை பெயர்க்கப்பட்டுள்ளன.

விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் குறித்த பிரச்சினைகளையும், சோஷலிசப் புரட்சி சம்பந்தமான பிரச்சினைகளையும், சோவியத் நாட்டில் சோஷலிச, கம்யூனிசக் கட்டுமானத்தின் அனுபவத்தையும் தற்காலக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தின் போர்த்தந்திரத்தையும் செயல் தந்திரத்தையும் இந்த நூலில் ஆசிரியர் பகுத்து ஆராய்கிறார்.

இந்தப் பதிப்புக்காக இந்நூல் ஆசிரியரால் செப்பம் செய்து விரிவாக்கப்பட்டுள்ளது.